ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 1 ஏப்ரல் 1938 கதிர் 9

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	(தலையங்கம்)	1
உலகத்தில் என்ன நடக்கிறது?	(கார்ட்டூன்கள்)	12
மகனே! உன் கடமையைச் செய்!	வ. பார்த்த சாரதி	16
அந்திப்பரிதி (பாட்டு)	"பாலபோதநர்"	22
ஆஸ்திரியா	—	23
ஹரிபுரா காங்கிரஸ்—சில தோற்றங்கள்	ராமேசநாத் கௌதமர் B. A.,	26
பிழைக்கும் வழி	ஏ. மதுரம்	29
ஜெர்மனியின் கூக்குரல் நியாயமா?	—	33
ருமேனியாவில் நெருக்கடி ஏற்பட்டதேன்?	தே. ஏகாம்பரம்	39
இத்தலியின் கைங்கரியம் என்ன?	எச். போர்ஷ்	44
இந்தியாவிற்கு—(சரோஜனி தேவியின் பாடல்)	மொழி பெயர்த்தவர்—சொ.	46
கனகாவின் கடிதங்கள்	"சரசா"	47
வீர பத்தினி	ஸ்ரீ. ஸ்ரீ. ஆச்சாரியா	49
புராதன இந்தியா	ச. மு.	56

இறந்தோர் நகை—(ஹரீந்திர நாத் சட்டோபாத்யாயா)

மொழி பெயர்த்தவர்:—பொ. திரிகூட சுந்தரம்

M. A., B. L., 58

அடுத்த சர்வாதிகாரிகள் யார்? பா. 59

பர்மாவின் முக்கிய ஜாதிகள் கு. கோ. கிருஷ்ணன்

B. Sc., (Hons) 63

பூலோகத்தின் முடிவு காலம் எப்பொழுது? "விஞ்ஞான போதகர்" 65

ஆல்ப்ரெட் வெப் "ஒரு காங்கிரஸ் வாதி" 74

பொதுவுடமை இயக்க வளர்ச்சி — 75

அறுபத்து நான்கு கலைகள் "கலா ரஸிகன்" 76

அசோகன் சாஸனங்கள் "மௌத்கல்யன்" 81

நமது அரசியல் டைரி — 86

விசுவ விசித்திரம் (படங்கள்) 94

நமது நிருபர்களுடன்— — 97

துலாக்கோல் (புஸ்தக விமரிசனம்) 101

புக்கர் வாஷிங்டனுடைய கல்வி ஸ்தாபனம் ரா. ராமசுப்பு 105

அன்றுட உலகம் 108

ஜோதி

சுடர் 1 ஏப்ரல் 1938 கதிர் 9

ஏப்பம்

ஹிட்லர், ஆஸ்திரியாவை ஓசைப்படாமல் விழுங்கிவிட்டான். ஜீரணித்துவிட்டதற்கறிகுறியாக ஏப்பமும் விட்டுவிட்டான். ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு இப்படி திடுக்கிடக்கூடிய சம்பவம் எதுவுமே நடைபெறவில்லையென்று அரசியல் கணித சாஸ்திரிகள் கூறுகிறார்கள்; ஆச்சரியமும் படுகிறார்கள். ஆனால் இதைக் கண்டு நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஹிட்லருடைய நீண்ட நாள் கனவு பூர்த்தியாயிற்று. அவ்வளவுதான். இதை ஹிட்லரே, வியன்னாவில்தான் செய்த பிரசங்கத்தில் கூறுகிறான். ஆஸ்திரியாவை, ஜெர்மனியுடன் சேர்த்துவிட வேண்டுமென்ற எண்ணம் இன்று நேற்று உற்பத்தியானதல்ல. 1924-ம் வருஷத்திலேயே, ஹிட்லர், சிறையிலிருந்தபோது ஆஸ்திரியா மீது கண் போட்டிருக்கிறான். சிறைவாசத்தின்போது சுய சரிதை என்ற பெயர் வைத்துக்கொண்டு தன்னுடைய லட்சியம், தன் மனத்திலே அப்பொழுது தோன்றிய எண்ணங்கள் முதலிய அனைத்தையும் ஒரு நூலாக இவன் வெளியிட்டிருக்கிறான். இதற்கு 'எனது போராட்டம்' என்று பெயர். ஜெர்மானியர் அனைவரையும் ஒன்று திரட்ட வேண்டுமென்பதற்காக ஹிட்லர், அந்தச் சிறைவாசத்தில் போராட்டத்தைத் தொடங்கிவிட்டான். அந்தப் போராட்டத்தின் ஒரு முனைதான் ஆஸ்திரியா. இதில் வெற்றி கண்டுவிட்டான்.

லட்சிய புருஷர்களுக்குச் சிறைவாசம் நன்மையைத்தான் தருகிறது. சிதறிப் போயிருக்கிற தங்கள் எண்ணங்களையெல்லாம் அப்பொழுதுதான் இவர்கள் ஒன்று திரட்டுகிறார்கள். சிறையினின்று வெளி வந்த பிறகு இந்த எண்ணத்தின் திரட்சியை அநுபவ சாத்தியம் என்கிற புடத்திலே வைக்கிறார்கள். இதன் பரிணாமம் சிலருக்குப் பொன்னாகிறது; சிலருக்குக் கரியாகிறது. சோக்ரதன், சிறையிலிருந்த போதுதான், அருமையான தத்துவ ஞானத்தை உபதேசித்தான். திலகர், மாந்தலே சிறையில்தான் கீதைக்குப் பாஷ்யம் எழுதினார். பண்டித ஜவஹர்லால் நேரு நைனி காராக்கிருகத்திலேதான் உலக சரித்திரத்தை வரைந்தார். லாண்ட்ஸ்பர்க் ஜெயிலில் இருந்தபோதுதான்,

ஹிட்லர், 'எனது போராட்டம்' என்ற நூலை எழுதி, தனது வாழ்க்கையில் இன்னின்னவற்றைச் சாதிக்க வேண்டு மென்று திடப் படுத்திக் கொண்டான்.

ஒரு விஷயத்தை இங்குத் தெளிவு படுத்திக் கூறிவிட விரும்புகிறோம். ஹிட்லர் ஒரு லட்சிய புருஷன் என்பது நம்முடைய அபிப்பிராயம். அவனுடைய லட்சியம் நமது திருஷ்டியில் குறுகியதா யிருக்கலாம்; சில சமயங்களில் நமக்கு அது தீங்கு விளைப்பதாகவும் இருக்கலாம்; அதை நாம் எதிர்த்துப் போராடவும் செய்யலாம். ஆனால் அவனுக்குரிய மதிப்பை நாம் கொடுத்துத் தானாக வேண்டும். நமது சத்ருவாயிருந்தாலும் அவனை இடுப்பின் கீழ் இடிக்க நாம் தயாரா யில்லை.

'இங்கிலாந்திலுள்ள நாம், நமது எண்ணங்கள் உலகமனைத்துக்கும் பொதுவானவை என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். நமது கருத்துக்களுக்கு மாறுபடுகிற பிற நாட்டுத் தேசியத் தலைவர்களைக் குறை கூற முற்படுகிறோம். கருப்புச் சட்டை யணிந்த முஸோலினியை துச்சமாக நினைத்தோம். லெனினைப் பார்த்துக்கூட பரிகாசச் சிரிப்புச்சிரித்தோம். ஆனால் அந்தச் சிரிப்பு, நமது உதட்டில் பயமாக இறுகிக்கொண்டு விட்டது. ஒற்றைத் துணியுடுத்திவந்த காந்தியை சரியான மனிதரல்லவென்று எண்ணினோம். டிவேலராவை, பூரணப் பைத்தியக்காரர் என்று நினைத்தோம். போகப் போகத்தான் இவர்களைப்பற்றி நாம் சரியாகத் தெரிந்துகொண்டோம். ஹிட்லர், பெரிய மனிதனோ இல்லையோ, அதை எதிர்காலந்தான் சொல்ல முடியும். ஆனால் அவன்மீது எய்யப்பட்ட பரிகாச அம்புகள், குறி தவறிவிட்டன என்பதை நாம் நிச்சயமாகச் சொல்ல முடியும்.'

ஸ்ரீ எச். பவிஸ் கிரீன் வுட் (H. Powys Greenwood) என்ற ஆங்கில அறிஞர் கூறிய மேற்கூறிய வார்த்தைகளே நமக்கு ஆதாரம். ஆகவே, ஹிட்லரை ஒரு லட்சிய புருஷன் என்ற மதிப்புக் கொடுத்தே அவனுடன் போராட விரும்புகிறோம்.

ஹிட்லர், ஆஸ்திரியாவிலேதான் பிறந்தவன்; ஆஸ்திரியாவின் தலைநகரமான வியன்னாவில்தான் தன் வயிற்றுப் பிழைப்புக்கு வழி தேட ஆரம்பித்தான். ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன் இணைத்துவிட வேண்டுமென்று சங்கற்பம் செய்து கொண்டதும் ஆஸ்திரியாவிலேதான்.

'ஜெர்மன்—ஆஸ்திரியா, ஜெர்மனிக்குத்தான் திரும்பி வரவேண்டும். இதனால் பொருளாதார சம்பந்தமான சில தீமைகள் உண்டானாலும், இது சம்பவித்தே ஆக வேண்டும். ஜெர்மானிய ஜனங்களையெல்லாம் ஒரு ராஜ்யத்திற்குள் ஒன்று திரட்டாமல், குடியேற்ற நாடுகள் வேண்டுமென்று கோருவது சரியல்ல.'

ஃ ஃ ஃ

'ஜெர்மானிய சமூகம் சாசுவதமாக இருக்க வேண்டுமானால், ஆஸ்திரியாவின் அழிவு அவசியம்.'

ஃ ஃ ஃ

'ஆஸ்திரியாவின் மீது எனக்கு ஆழ்ந்த துவேஷமிருந்தது.'

ஃ ஃ ஃ

இவை ஹிட்லருடைய சுய சரித்திரத்திலிருந்து எடுக்கப்பட்ட சில வாக்கியங்கள். இவற்றிற்கு நாம் எவ்வித

வியாக்கியானமும் கூற வேண்டுவதில்லை.

ஆஸ்திரியாவின் வட பாகத்திலிருந்தவர்களில் பெரும்பாலோர் ஜெர்மானியர். இந்தப் பிரதேசத்திலிருந்த ஜெர்மானியருக்கும் ஜெர்மானியரல்லாதாருக்கும் எப்பொழுதுமே பிணக்கு இருந்து வந்திருக்கிறது. 1933ம் வருஷம் ஹிட்லர், ஜெர்மனியில் மூன்றாவது ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்து சர்வாதிகாரியான பிறகு, ஆஸ்திரியாவில் நாஜி இயக்கத்தை வலுக்கச் செய்தான். 1933ம் வருஷம் டாக்டர் டால்பஸ், ஆஸ்திரியாவின் சான்ஸலராக வந்ததும் இந்த இயக்கத்தை நசுக்கத் தொடங்கினான். அப்பொழுது இத்தலி, பிரான்ஸ், கிரேட் பிரிட்டன் ஆகிய நாடுகள் அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தின. அது முதற்கொண்டே, ஹிட்லர் உறும ஆரம்பித்து விட்டான். தேகாரோக்கிய நிமித்தம் ஆஸ்திரியாவுக்குச் செல்லும் ஒவ்வொரு ஜெர்மானிய யாத்திரிகரும் ஆயிரம் மார்க்கு யாத்திரை வரி, ஜெர்மானிய அரசாங்கத்திற்குச் செலுத்தி அநுமதிச் சீட்டுப் பெற்றுக் கொண்டுதான் செல்லவேண்டும் என்று உத்திரவு போட்டான். இதனால் ஆஸ்திரிய அரசாங்கத்தின் வருமானம் சுருங்க ஆரம்பித்தது. இதற்காக, மற்ற வல்லரசுகளின் துணையை நாடினான் டால்பஸ். ஆனால் 1934ம் வருஷம், நாஜிகளாலேயே இவன் கொலை செய்யப்பட்டான். இதற்கு முன்னமே, அதாவது 1931ம் வருஷத்திலேயே, வெளி நாட்டுப் பொருள்களை ஏற்றுமதி இறக்குமதி செய்யும் விஷயத்திலும், உள்நாட்டு வியாபாரப் போக்குவரத்திலும், ஆஸ்திரியாவும் ஜெர்மனியும் சேர்ந்து ஒரு சுங்க வரி முறையை அநுஷ்டிக்க வேண்டுமென்று ஆஸ்திரியாவில் ஒரு பலத்த முயற்சி செய்யப்பட்டது. ஆனால் அப்பொழுது பிரான்ஸ் இதனை எதிர்த்து நின்றது. ஜெர்மனியும் ஆஸ்திரியாவும் ஒன்று சேருவதில் ஐரோப்பிய வல்லரசு எதற்குமே சம்மதமில்லை. ஹிட்லருக்கும் முஸோலினிக்கும் இப்பொழுது நெருங்கிய உறவு ஏற்பட்டிருப்பதும், ஆஸ்திரியாவை ஜெர்மனி சேர்த்துக் கொண்டு விட்டதையும் கண்டு ருஷ்யாவுக்கும், மற்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் ஒரு திகிலையும் கசப்பையும் உண்டுபண்ணியிருக்கின்றன வென்பதில் என்ன ஆச்சரியம்?

ஜெர்மனியின் ஆஸ்திரிய ஆக்ரமிப்பைப்பற்றி நாம் ஆராய்கிறபோது, மற்றொரு முக்கியமான விஷயத்தையும் கவனிக்க வேண்டும். அதுதான் ஜெர்மனியின் அந்நிய நாட்டுக் கொள்கை. ஹிட்லர், தன் சுய சரிதத்தில், ஆரிய ஜாதியின் புனிதத் தன்மையைப்பற்றி அடிக்கடி வலியுறுத்திப் பேசுகிறான். உலகத்திலுள்ள எல்லா ஜெர்மானியரும் (ஆரியரும்) ஒரு நாட்டவராக வேண்டுமென்பது இவனது நீண்ட நாள் அவா. யுத்தத்தின் விளைவாக இழந்துபோன குடியேற்ற நாடுகளைத் திரும்பப் பெறுவதில் கூட ஹிட்லருக்கோ அவனுடைய சகாக்களுக்கோ அவ்வளவு அக்கறையில்லை. ஆனால் ஜெர்மானியர் வசிக்கும் நாடுகள் அனைத்தும் ஜெர்மானியக் கொடி நிழலில் ஒன்று பட்டு விட வேண்டுமென்பதுதான் முக்கியம். ஜெர்மானியரல்லாத—அதாவது ஆரியரல்லாத யூதர்கள் ஜெர்மனியிலிருந்தும்—இப்பொழுது ஆஸ்திரியாவிலிருந்தும்—விரட்டியடிக்கப் படுவதற்கு மூல காரணம், ஜெர்மானிய ஜாதியின் புனிதத் தன்மையையும் ஒற்றுமையை

யும் காப்பாற்ற வேண்டு மென்ற நோக்கந் தான். 'ஜெர்மானிய ராஜ்யத்திலே எல்லா ஜெர்மானியர்களும் அடங்கி யிருக்க வேண்டும்' என்று ஹிட்லர், தன் சுய சரிதத்தின் ஓரிடத்தில் கூறுகிறான். ஜெர்மானியர்கள், ஐரோப்பாவில் எங்கெங்கு ஒரு சமூகத்தினராக இருக்கிறார்க ளென்று பார்ப்போம். ஆஸ்திரியாவில் 6,500.000 பேர்; ஜெக்கோ-ஸ்லோவேகியாவில் 3,300,000 பேர்; போலந்தில் 884,000 பேர்; டான்ஸிக்கில் 400,000 பேர்; லிதுனியாவில் 29,000 பேர்; ஹங்கேரியில் 478,000 பேர்; யூகோ ஸ்லேவியாவில் 513,000 பேர்; டென்மார்க்கில் 40,000 பேர்; இத்தலியில் 300,000 பேர்.

இவற்றில் இத்தலியைத் தவிர மற்ற நாடுகளில் ஜெர்மானிய ஆதிக்கம் எங்கு ஏற்பட்டு விடுமோ என்று மேற்படி சிறிய நாடுகள் அஞ்சுமானால் அதில் ஆச்சரியப் படுவதற் கொன்று மில்லை யல்லவா?

ஆஸ்திரியா மீது ஹிட்லருக்கு நீண்ட நாட்களாகக் கண் இருந்து வந்திருக்கிறது. 1934ம் வருஷம் டாக்டர் டால்பஸ் கொலை செய்யப் பட்ட காலத்திலேயே, ஜெர்மானிய ஆதிக்கம் ஆஸ்திரியாவில் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்பொழுது இத்தலியின் செல்வாக்கு ஆஸ்திரியாவில் அதிகமா யிருந்ததனால், ஹிட்லரின் கை ஓங்க வில்லை. பின்னர் டாக்டர் ஷுஸ்னிக் ஆதிக்கத்திற்கு வந்த பிறகு, எப்படியோ ஒரு தினுசாக ஆஸ்திரியா, ஒரு சுதந்திர நாடு என்ற பெயரைக் காப்பாற்றிக் கொண்டு வந்தான். ஆனால் ஹிட்லர், ஜெர்மனியில் நாளுக்கு நாள் தன் பலத்தைப் பெருக்கிக் கொண்டு வந்தான். ஜெர்மன் ராணுவத்தையும் தன் கைக்குள் அகப்படுத்திக் கொண்டான். ஆஸ்திரியாவை விழுங்கி விடுவதற்கு அடிப்படையாகத்தான் இந்த சந்நாகங்களை யெல்லாம் இவன் செய்துவந்திருக்கிறான்.

1936ம் வருஷம் ஹிட்லருக்கும் டாக்டர் ஷுஸ்னிக்குக்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி ஆஸ்திரியாவின் பூரண சுதந்திரம் அங்கீகரிக்கப் பட்டது. ஆஸ்திரியா, தன்னை ஒரு ஜெர்மானிய நாடு என்று சொல்லிக் கொள்ளச் சம்மதித்தது. இப்படிச் சம்மதித்தது இதற்கு ஆபத்தாக முடிந்தது. ஜெர்மானியர்கள், ஆஸ்திரியாவின் உள் நாட்டு நிருவாகத்தில் தலையிட இஃதோர் ஆஸ்பதமாக ஏற்பட்டது. மெது மெதுவாக நாஜிகள் கிளர்ச்சி வலுக்கத் தொடங்கியது.

எனவே ,ஹிட்லரும் டாக்டர் ஷுஸ்நிக்கும் இந்த பிப்ரவரி மாதம் கடைசியில் மறுபடியும் சந்தித்துஒரு சமரஸத்திற்கு வந்தார்களென்று உலகத்திற்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் உண்மையிலேயே, ஆஸ்திரியாவின் சுதந்திரத்திற்கு அப்பொழுதே சாவு மணி யடித்து விட்டான் ஹிட்லர். ஆஸ்திரிய அரசாங்கம் பலாத்காரத்திற்குத் தலை குனிய வேண்டியதாயிற்று. ஏற்கனவே, ஆஸ்திரியாவில் நாஜிக் கட்சியின் மீது விதிக்கப் பட்டிருந்த தடையுத்திரவு ரத்து செய்யப் பட்டது. ஆஸ்திரிய மந்திரிச் சபையில் நாஜி கட்சியைச் சேர்ந்த இருவர் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். இதனோடு ஜெர்மனி திருப்தியடைய வில்லை. இதனை நன்கு உணர்ந்தான் ஷுஸ்னிக். ஆஸ்திரியா, சுதந்திர நாடாக இருப்பதா, அல்லது ஜெர்மானிய ஆதிக்கத்திற்குட் பட்டிருப்பதா என்பதை நிர்ணயித்து விட, பொது ஜன வாக்கெடுப்ப தென்று தீர்மானித்தான். இது ஜெர்மனிக்குப் பிடிக்க வில்லை. ஏனென்றால், டாக்டர்

டால்பஸின் நிருவாகத்திற்குப் பிறகு, ஆஸ்திரியாவில் சுதந்திரமாயிருக்க வேண்டுமென்ற கொள்கைக்கே அதிகமான ஆதரவு இருந்து கொண்டு வந்தது! ஆஸ்திரியாவிலிருந்த ஜெர்மானியர்கள் கூட—நாஜி கட்சியின் திறமையான பிரசாரம் இருந்த போதிலும்—ஹிட்லருடைய நிருவாகத்தின் கீழ் இருக்கசம்மதப்படவில்லை. எனவே, ஹிட்லர் பலாத்காரம் உபயோகிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று கண்டான். ஜெர்மானியத் துருப்புகள் ஆஸ்திரிய எல்லைக்குள் பிரவேசித்தன. எதிர்த்துப் போராடுஞ் சக்தி ஆஸ்திரியாவுக்கு இல்லை யென்று கண்ட ஷுஸ்னிக் பணிந்து விட்டான். கண் மூடித் திறப்பதற்குள், ஆஸ்திரியா ஜெர்மானிய ராஜ்யமாகி விட்டது. இதுதான் ஆஸ்திரியா, சுதந்திரமிழந்த சுருக்கமான வரலாறு.

இங்கே நாம் சில முக்கிய விஷயங்களைக் கவனிக்க வேண்டும்.

1. ஜெர்மனி இப்படி ஆக்ரமித்துக் கொண்டதற்கும், ஆஸ்திரியா சுதந்திரமிழந்ததற்கும் அடிப் படையாயிருந்தது வார் சேல் ஒப்பந்தம்; அப்பொழுதும் பிறகும் நேசக் கட்சியினர் காட்டிய மனப் பான்மை.

2. சர்வ தேச சங்கத்தின் நிர்க்கதியான நிலைமை. 1931ம் வருஷம் ஜப்பான் மஞ்சூரியாவை விழுங்கிய போதும், 1934ம் வருஷம் இத்தலி, எதியோப்பியா மீது அதர்ம யுத்தம் தொடுத்த போதும், ஸ்பெயினில் சட்டரீதியாக ஏற்பட்ட அரசாங்கத்திற்கு விரோதமாக பிராங்கோ கலகஞ் செய்த போது இத்தலியும் ஜெர்மனியும் ருஷ்யாவும் முறையே இரு கட்சியினருக்கும் உதவி செய்த காலத்திலும், இப்பொழுது சீனாவின் மீது ஜப்பான் போர் தொடுத்துள்ள நிலையிலும் சர்வ தேச சங்கம் ஒன்றுஞ் செய்யவில்லை; அதனால் ஒன்றுஞ் செய்யவும் முடியாது. பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஸ்ரீ சேம்பர்லேன் கூட, தமது 24-3-38 பேச்சில் சர்வ தேச சங்கத்தை ஒரு வியாதியஸ்தனாகவேதான் குறிப்பிடுகிறார். இதில் இப்பொழுது அங்கத்தினராயுள்ள 58 பேரும் ஒன்று சேர்ந்து இதனைப் பழைய தேகாரோக்கியத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று கோருகிறார். ஆனால் இஃது எப்பொழுதாவது தேகாரோக்கியமுடன் இருந்ததா வென்பது நமக்குச் சந்தேகமாயிருக்கிறது. பிறக்கும் போதே இது சவலைக் குழந்தையாகப் பிறந்து விட்டதென்று நாம் அஞ்சுகிறோம்

3. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கை யென்ன? இது சம்பந்தமாக ஸ்ரீ நெவில்லி சேம்பர்லேன், பார்லிமெண்டில் செய்த பிரசங்கத்தை நாம் பார்த்தோம். பிரிட்டிஷ் ராஜ தந்திரம் எவ்வளவு கீழ் நோக்கின சரிவிலே இருந்து கொண்டிருக்கிறது என்பது இந்தப் பேச்சிலிருந்து புலனாகிறது. ஸர் ஆர்ச்சிபால்ட் சிங்க்ளேர் கூறுகிற மாதிரி பிரிட்டிஷ் அரசாங்கம், யுத்தம் வேண்டாமென்று ஒதுங்க ஒதுங்க, யுத்த களத்திற்கே போய்க் கொண்டிருக்கிறது. ஸ்ரீ சேம்பர்லேன், ஆஸ்திரியாவை ஜெர்மனி விழுங்கி விட்டதற்கு எவ்வித பரிகாரமும் கூறாமல், பொருத்தமற்ற விஷயங்கள் எதெதையோ கூறி விட்டு, கடைசியில், பிரிட்டனுடைய ராணுவ பலத்தை அதிகரிக்கச் செய்ய எல்லாரும் ஆதரவு காட்ட வேண்டுமென்று முடிக்கிறார். ஆயுத பலத்தைப் பெருக்கி சமாதானத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற மனப் பான்மை, உலகத்தி

ளுள்ள வல்லரசுகளுக்கு இருக்கிற வரை, உலகத்திலே சமாதானம் ஏற்படுவது குதிரைக் கொம்புதான்,

ஜெர்மனி விஷயத்தில், மற்ற ஐரோப்பிய வல்லரசுகள் கொஞ்சம் தாராள மனப்பான்மை காட்டியிருந்தால் இந்தச் சிக்கலான நிலைமை ஏற்பட்டிராது. இவர்கள் செய்து கொடுக்காதஒரு காரியத்தை ஜெர்மனி,தானே செய்து கொண்டு விட்டது. எவ்வளவுக் கெவ்வளவு பலஹீனமான ஒரு ராஜ்யத்தை மத்திய ஐரோப்பாவில் வைத்திருத்தல் நல்லதென்று மேற்கு ஐரோப்பிய நாடுகள் கருதினவோ, அவ்வளவுக் கவ்வளவு பல முள்ள ஒரு ராஜ்யம் இப்பொழுது மத்திய ஐரோப்பாவில் தோன்றி விட்டது. இதனல் உலக வல்லரசுகளுக்கு இடையில் பரஸ்பர சந்தேகங்களும் அவநம்பிக்கைகளும் அதிகப்படும். இவை எங்கே கொண்டு செலுத்துமோ தெரியாது.

பெருக்கம்

உலகத்திலுள்ள ஒவ்வொரு வல்லரசும் தன்னுடைய கப்பற் படையை எவ்வளவு அதிகமாகப் பெருக்கிக் கொண்டு வருகிற தென்பதைத் தெரிந்து கொள்ள கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் துணை செய்யும். இங்கிலாந்து, 1935ம் வருஷம் 139, 000 டன் நிறையுள்ள யுத்தக் கப்பல்களைக் கட்டியது. 1938ம் வருஷம் 547,000 டன் எடையுள்ள கப்பல்களைக் கட்டிக் கொண் டிருக்கிறது. 1939ம் வருஷம் 677,000 டன் எடையுள்ள கப்பல்களைக் கட்டத் திட்டம் போட்டிருக்கிறது. அடுத்த வருஷத்தில் யுத்தக் கப்பல்களுக்காகப் பிரிட்டன் செலவழிக்கப் போகிற தொகை 123,707,000 பவுன். இத்தலி, 1941ம் வருஷத்திற்குள் 700,000 டன் நிறையுள்ள யுத்தக் கப்பல்களைக் கட்டத் திட்டம் போட் டிருக்கிறது. 1938—39ம் வருஷத்திற்கு மட்டும், யுத்தக் கப்பல்களுக்காக 21,680 லட்சம் லீர் செலவழிக்கத் தீர்மானித் திருக்கிறது. பிரான்ஸ், 1938ம் வருஷம், யுத்தகளவாடங்களுக் கென்று 150,000 லட்சம் பிராங்குகளைச் செலவழிக்கப் போகிறது. ஐரோப்பிய கொந்தளிப்பில் சம்பந்தப் படாத அமெரிக்கா, இந்த வருஷத்தில் மூன்று பெரிய யுத்தக் கப்பல்களைக் கட்டப்போகிறதாம். தற்கால யுத்தத்திலே ஆகாயப் படைக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட் டிருக்கிறது. கடற் படை இரண்டாம் பக்ஷந்தான். இதற்கே இவ்வளவு பணஞ் செலவழிக்கிற போது, ஆகாயப்படைக்கு ஒவ்வொரு நாடும் எவ்வளவு பணஞ் செலவழிக்க வேண்டும் என்பதை நாம் ஊகித்துக் கொள்ள வேண்டியதுதான். வல்லரசுகள், சமாதான தேவதையை எவ்வளவு பக்தி சிரத்தையுடன் பூஜித்து வருகின்றன பார்த்தீர்களா?

நன்கொடை

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ், கட்டக் நகரத்திலுள்ள தமது பெரிய மாளிகையை தேசத்திற்காகக் கொடுத்து விட்டார். இதற்காக போஸ் சகோதரர்களை நாம் வாழ்த்துகிறோம். செல்வத்திலே வறுமை கண்டு அதில் இன்பம் நுகர்வது மகா கடினம். இதில் நேருவும் போஸும் முதற் பரிசு பெற்றுவிட்டார்கள். பண்டித நேருவுக்கு அடுத்தபடியாக ஸ்ரீபோஸ் எப்படி ராஷ்ட்ரபதி ஸ்தானத்தில் அமர்ந்தாரோ அப்படியே, நேருவினுடைய தியாகத்திலும் இவர் அடுத்த ஸ்தானத்தைப் பெற்றுவிட்டார். ஒன்று சுயராஜ்ய பவனம்;

மற்ெறான்று கட்டக் மாளிகை. இவை யிரண்டும் தியாக ஜோதியாக விளங் கட்டும்!

மதுவிலக்கு

இந்தியாவிலுள்ள ஏறக்குறைய எல்லா மாகாணங்களிலும் மது விலக்குத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதைக் குறித்துநாம் மகிழ்ச்சி யடைகிறோம். இஃதொன்றுதான் ஏழைக் குடும்பங்களிலுள்ள தாய்மார்களின் வயிற்றில் பாலை வார்ப்பது. இந்தியாவில் வறுமைப் பிணியைக் குறைக்குந் தன்மையது. மத்திய மாகாணத்தில் இந்த மதுவிலக்குச் சட்டம் 1—4—38-லிருந்து அமுலுக்கு வருகிறது. இப்படியே ஐக்கிய மாகாணத்திலும், பம்பாயிலும் நடைமுறையில் வரப்போகிறது. இந்தியா முழுவதும், காங்கிரஸ்காரர் போட்டிருக்கிற திட்டப்படி இன்னும் மூன்று வருஷங்களுக்குள் 'உலர்ந்து' விட வேண்டுமென்பது நமது முழு விருப்பம்.

பாய் பயம்

இந்தியாவிலிருந்து ஏராளமான முடக்குப் பாய்களும் கயிற்றுப் பாய்களும் இங்கிலாந்தில் இறக்குமதியாகின்றனவாம். இதனால் பிரிட்டிஷ் பாய்த் தொழில் நசித்து விடுகிறதாம். ஏன் இந்தியாவிலிருந்து பாய்கள் இறக்குமதி கயாவதைத் தடை செய்யக் கூடாதென்று பார்லிமெண்டில் ஸர் ஆல்பிரட் நாக்ஸ் கேட்கிறார். இந்தக் கேள்வி கேட்பதற்கு எந்த மனப்பான்மை காரணமாயிருந்ததோ, அதுதான், அந்தப் பிரிட்டிஷ் மனப்பான்மைதான், இந்தியாவில் சுதேசி தொழில்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டி லிருந்து நாசமடையத் தொடங்கியதற்குக் காரணமாயிருந்தது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள் இங்கிலாந்தில் தடுக்கப்பட்டும், பிரிட்டிஷ் சாமான்கள் இந்தியாவில் திணிக்கப்பட்டும் வந்தன. இவை யாவும் சட்டபூர்வமாகவே செய்யப் பட்டனவென்பது குறிப்பிடத் தக்கது. உதாரணமாக 1815ம் வருஷம் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு 2 கோடி ரூபாய் பெறுமான ஜவுளி தினுசுகள் ஏற்றுமதி செய்யப் பட்டன. 17 வருஷங் கழித்து—1832ம் வருஷத்தில் —இந்த ஏற்றுமதித் தொகை 15 லட்சம் ரூபாயாகக் குறைந்து விட்டது. இப்படித் திருப்பிப் பாருங்கள். 1815ம் வருஷத்தில் இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியான ஜவுளி தினுசுகளின் தொகை 4 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ளவை. ஆனால் 1832ம் வருஷம் இது 60 லட்சமாக உயர்ந்தது. நூறு வருஷங் கழித்து இது 60 கோடியாகி யிருக்கிறது. வெளி நாட்டுச் சரக்குகள் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக இறக்குமதி யாகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு உள் நாட்டுக் கைத் தொழில்கள் க்ஷீண மடைய வேண்டியதுதானே. இந்தியாவிலிருந்து இறக்குமதி யாகும் பாய்களுக்கு மட்டும் ஸர் ஆல்பிரட் நாக்ஸ் இவ்வளவு ஆத்திரப் படுகிறார். ஆனால் இந்தியாவில், பிரிட்டிஷாருக்கு சம வியாபார உரிமை சட்ட பூர்வமாக அநுமதிக்கப் பட வேண்டுமென்று இவரோ இவருடைய சகோதரர்களோ கேட்கிறார்கள். இஃது எந்த தரும நியாயப்படி?

நிறைவேற்றாமை

இப்படி சம உரிமை வேண்டுகின்ற பிரிட்டிஷாரே, தங்கள் நாட்டில்

எல்லாருக்கும் சம உரிமை வழங்கப் படுகிறதா வென்பதைச் சிறிது கவனித்துப் பார்த்தால் நன்கு யிருக்கும். இங்கிலாந்திலேயே நிற வித்தியாசம் அதிகமாகக் காட்டப் படுகிறது. ஹோட்டல்களி லாகட்டும், பயிற்சி பெறும் தொழிற்சாலைகளி லாகட்டும், பள்ளிக்கூடங்களிலாகட்டும், இந்தியர்களும் மற்ற கறுப்பு நிறத்தவர்களும் வித்தியாசமாகவே நடத்தப் படுகிறார்கள். இங்கிலாந்தில் மட்டு மல்ல, ஐரோப்பாவின் மற்றப் பாகங்களிலும் இந்த வேற்றுமை தீவிரமாக அநுஷ்டானத்தில் கொண்டுவரப் படுகிறது. சில நாடுகளில், பொருள்களின் விலையைச் சொல்வதில் கூட, சுய நாட்டாருக் கென்றால் ஒரு விலை, அந்நிய நாட்டாருக் கென்றால் ஒரு விலை என்று நடை முறையில் இருந்து வருகிறது. இந்த நிற வித்தியாசம், பின்னொரு காலத்தில் கீழ் நாட்டையும் மேனாட்டையும் ஒரு பெரிய யுத்தத்தில் கொண்டு போய்விடுமோ வென்று சிலர் அஞ்சுவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

நல்ல சமாதானம்!

மஞ்சூரியாவை ஜப்பான் ஆக்ரமித்துக் கொண்டதற்கு ஜப்பானின் பிரதம மந்திரி கோனோயே ஒரு விநோதமான சமாதானம் கூறுகிறார். 'மேனாட்டு வல்லரசுகளுடைய கொள்ளைப் பொருளாக ஆகிவிடக் கூடிய தலைவிதி மஞ்சூரியாவுக்கு இருந்தது. இது சம்பந்தமாக மேனாட்டார் நடத்திய கடுமையான போராட்டங்களைப் பற்றியோ, அவைகளின் ஊதாரித்தனத்தைப் பற்றியோ நாம் விரிவாகச் சொல்ல வேண்டுவ தில்லை. ஏற்கனவே இவைகளுக்கு ஏராளமான நாடுகள் இருந்த போதிலும், இன்னும் நாடு பெருக்க வேண்டு மென்ற ஆசை இவைகளை விடவில்லை, இதனால்தான் ஜப்பான் தலையிட்டு, மஞ்சூரியாவைக் காப்பாற்றி அதற்கு 'சுதந்திரம்' கொடுத்தது' இந்தக் 'காப்பாற்றியது' என்பதற்கும் 'சுதந்திரம்' என்பதற்கும் என்ன அர்த்தமோ தெரியவில்லை. 'அவன் கெட்டான் குடியன்; எனக்கு இரண்டு திராம் போடு' என்று குடியர்கள் கூடு மிடத்திலே ஒரு பழமொழி வழங்கப் பெறுவதுண்டு. அதுதான் இந்தச் சமயத்திலே நமது ஞாபகத்திற்கு வருகிறது!

நன்மை என்ன?

சமீபத்தில் லண்டனில் பிரிட்டிஷ் கைத்தொழிற் பொருட் காட்சி நடைபெற்றதென்றும், அதில் இந்தியப் பொருள்கள் வைக்கப் பட்டிருக்கும் பாகத்தை இங்கிலாந்தின் அரசியார் பார்த்து அதிக மகிழ்ச்சி யடைந்தாரென்றும், நம் தேசத்து 'சட்னி' அவருக்கு நிரம்பப் பிடித்திருந்ததென்றும் பத்திரிகைகளில் படித்தோம். நமது 'சட்னி'யின் மீது ராஜ கருணை ஏற்பட்டதைக் குறித்து நாம் மகிழ்ச்சி யடைய வேண்டியதுதான். ஆனால், இந்தப் பொருட் காட்சியினால் இந்தியாவுக்கு விளைந்த பயன் என்ன? இந்தியக் கைத்தொழில்கள் ஏதேனும் அபிவிருத்தி யடைந்தனவோ? சில வருஷங்களுக்கு முன், இந்தியாவிலுள்ள குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்ய என்ன செய்யலாமென்பதைப் பற்றி விசாரிக்க ஒரு கமிஷன் நியமிக்கப் பட்டது. எத்தனையோ கமிஷன்களுடைய அறிக்கைகளைப் போல், இந்தக் கமிஷனுடைய அறிக்கையும், 'அரசாங்க தஸ்தாவேஜு அறையிலே' போய்ச் சேர்ந்து விட்டது. அந்நிய நாடுகளில் நடைபெறும் இந்தியப்பொருட்காட்சிகளெல்லாம், வெளி நாட்டாருடைய

சுரண்டும் முயற்சிகளுக்குத் துணை செய்வனவாகவே முடிகின்றன என்று நினைக்கிறபோது நம்மையறியாமலே நமக்குப் பெருமூச்சு வருகிறது.

கேலிக் கூத்தா ?

பர்மா சட்டசபை அங்கத்தினர்களிடத்தில் நமக்கு நிரம்ப மதிப்பு உண்டு. அவர்களுடைய நல்லெண்ணத்தில் நமக்குச் சிறிது கூடச் சந்தேகங் கிடையாது. ஆனால் சென்ற சில வருஷங்களாக, சட்ட சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும், தலைவரின் மீதோ, மந்திரிச் சபையின் மீதோ நம்பிக்கையில்லாத் தீர்மானங்கொண்டு வந்து அதன் மீது இவர்கள் தங்கள் 'கை வரிசை'களை யெல்லாங் காட்டுவதுதான் நமக்குத் தெரியவில்லை. இஃதென்ன கேலிக் கூத்தா வென்று நாம் உதட்டைப் பிதுக்க வேண்டியிருக்கிறது. யார் தவறு செய்தாலும் அவர்கள் திருத்தப்பட வேண்டியவர்கள்தான். நிருவாகத்தைத் திறமையாக நடத்தச் சக்தி போதாதென்று தெரிந்தால் அவர்களைக் கீழே இறக்கிவிட வேண்டியதுதான். ஆனால் எதை எதை, எந்தெந்தக் காலத்தில் எப்படி எப்படிச் செய்ய வேண்டுமோ அதை அதை அப்படி அப்படிச் செய்தால் தான் பலனுண்டு. பார்ப்பவர்களும் நம்மைப் பரிகசிக்க மாட்டார்கள். ஆனால் பர்மா சட்ட சபையிலுள்ள நமது நண்பர்கள் காலாகாலமின்றி நம்பிக்கையில்லாத் தீர்மானக் குழாயை வைத்து ஊதுகிறார்கள். அஃது அநேகமாக வெடித்தே விடுகிறது. தவிர, நம்பிக்கை யில்லாத் தீர்மானங்கள் கொண்டுவருவதற்குப் பொருத்தமான காரணங்களிருக்க வேண்டும். 'அவலை நினைத்துக்கொண்டு உரலை இடித்தால்' விளையும் பயன்தானென்னை ? மற்றும் சட்டசபையில் அங்கத்தினர்கள் ஒருவர்க் கொருவர் பரிமாறிக் கொள்ளும் பாஷையும், வரக்காளர்கள், பிரதிநிதிகளை மதிக்கிற விதமாக இருக்க வேண்டும். இவற்றை யெல்லாம் பர்மா சட்ட சபையிலுள்ள சகோதரர்கள் கவனித்து நடந்தால் சட்ட சபையின் கௌரவம் இன்னும் அதிகமாகுமல்லவா ? இன்னொரு விஷயம். பிரதிநிதிகள், தேச நன்மைக்கான விஷயங்கள் இன்னவையென்று நிர்ணயித்து அவை மீது சட்டசபையில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதில் தங்கள் காலத்தைச் செலவழிக்க எப்பொழுது முனையப் போகிறார்கள் ?

வரவு செலவு மாதம்

ஒவ்வொருவருஷத்தின் மார்ச்மாதத்தையும் 'வரவு செலவு மாதம்' என்று சொல்லலாம். ஆனால் இந்த வருஷத்து 'வரவு செலவு மாதம்' பர்மா உள்பட சுபகரமாகவே முடிந்தது. காங்கிரஸ் மந்திரிச் சபையினர் ளைத்திய வரவு செலவுத்திட்டங்கள் யாவும் பாராட்டுடன் அங்கீகரிக்கப் பட்டன. சென்னையில் ஒரு ஸர் கே. வி. ரெட்டியும், பம்பாயில் ஒரு ஜம்னுதாஸ் மேட்டாவும், மத்திய மாகாணத்தில் ஒரு ராகவேந்திரராவும் காங்கிரஸ் மந்திரிகளின் வரவுச் செலவுத் திட்டங்களில் எவ்வித நன்மையும் காணவில்லையானாலும், பொது ஜனங்களுக்கு இந்தத் திட்டங்கள் ஓரளவு நன்மை பயக்கக் கூடியனவாகவே இருக்கின்றன வென்பது ஏகோபித்த அபிப்பிராயம். இதற்காக காங்கிரஸ் மந்திரிகளைப் பாராட்ட விரும்புகிறோம். ஆனால் பாவம்! ஸர் ஜேம்ஸ் கிரிக், இந்த வருஷ வரவு செலவு திட்டம் சம்பந்தமாக யாருடைய வந்தனத்தையும், அநுதாபத்தையுங் கூடப் பெற்றுக் கொள்ள முடியவில்லையே

யென்பது நமது வருத்தம். ஆம்; கால வேகத்தை யார் தான் தடுக்க முடியும்? ஸர் கவாஸ்ஜி ஜிஹாங்கீர் முதற்கொண்டு அரசாங்கத்தை எதிர்ப்பார் என்று ஸர் ஜேம்ஸ் போன்றவர்கள் எதிர்பார்த்திருப்பார்களா?

விந்தை

சீனா, ஸ்பெயின், பாலஸ்தீனம் ஆகிய இந்த மூன்று பிரதேசங்களிலும், இன்னும் பயங்கரமான யுத்தக் காட்சிகள் நடை பெற்று வருகின்றன. இவற்றிற் கெல்லாம் பரிகாரமே கிடையாதா வென்று கேட்கிறோம். ஏகாதிபத்திய ஆசை பிடித்தவர்கள் இங்ஙனம் கொலைகள் நடை பெறுவது கண்டு மகிழ்ச்சி யடையலாமாயினும், ஒன்றுந் தெரியாத நிரபராதிகளான ஜனங்கள் எவ்வளவு காலமாகத் தான் கஷ்டப் பட்டுக் கொண்டிருப்பார்கள்? இவர்களுக்கு விமோசனமே கிடையாதா? ஸ்பெயினையும் சீனாவையும் எடுத்துக் கொண்டால், ஆயிரக் கணக்கான ஜனங்கள், ஆகாய விமானங்களிலிருந்து பொழியப் படுகிற குண்டுகளினாலும், மற்ற யுத்தக் கருவிகளினாலும் துடி துடித்துச் சாகிறார்கள். இவர்களுடைய பரிதாப மரணத்தின் மீது வெற்றிக் கோட்டை கட்டி அதில் ஏகாதிபத்திய தேவதையை வைத்து உபாசிக்க விரும்பும் ஏகாதிபத்திய தாசர்கள் மானிட தருமம் என்ப தொன்றுண்டு என்பதைச் சிறிது நேர மேனும் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

வகுப்புப் பிணக்கு

இந்தியாவில் பல இடங்களிலும் ஹிந்து முஸ்லீம் சச்சரவு ஏற்பட்டதாகப் பத்திரிகைகளில் படிக்க மிகவும் வருத்தமாக இருக்கிறது. இதில் உண்மை ஓரளவு இருந்தாலும், பத்திரிகைப் பிரசாரம் மிக அதிகமாயிருக்கிற தென்றுதான் நாம் அஞ்சுகிறோம். எங்காவது ஒரு மூலையில் ஒரு ஹிந்துவும் ஒரு முஸ்லீமும் கொஞ்சம் உரக்கப் பேசினால் ஹிந்து—முஸ்லீம் சச்சரவு ஏற்பட்டுவிட்டதாகத் தந்திச் செய்திகள் பறக்கின்றன. பீதியை உண்டு பண்ணக் கூடிய ஒரு மனப் பான்மை இரு சமூகத்தாரிட மிருந்தும் ஒழிய வேண்டும். ஆனாலும் இந்த இரு சமூகத்தாருக்கும் அடிப் படையான சில மன வேற்றுமைகள் இருக்கின்றன வென்பது வெளிப் படை. இதை மாற்றத் தலைவர்கள் முயற்சி செய்தல் அவசியம். நமது முஸ்லீம் சகோதரர்கள், முன்னொரு முறை நாம் கூறியபடி, தேசத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, அதனுடைய நன்மைக்காகச் சில்லரை வேற்றுமைகளை யெல்லாம் மறந்து விடக் கூடிய மனப் பான்மை கொண்டார்களானால், இந்த வகுப்புப் பிணக்குகள் குறையும். காங்கிரஸை விடவோ, மகாத்மா காந்தியை விடவோ சிறந்த நண்பர், முஸ்லீம்களுக்கு இல்லை யென்பதை அவர்கள் விரைவில் உணர்தல் நல்லது. இந்தச் சந்தர்ப்பத்தில் பத்திரிகைக் காரர்களுக்கும் ஒரு வார்த்தை கூற விரும்புகிறோம். வகுப்புப் பிணக்குகள் சம்பந்தமாகக் கிடைக்கும் செய்திகளைப் பீதி யுண்டு பண்ணக் கூடிய விதமாக வெளியிடாமல் சமரஸம் ஏற்படும் படியான தன்மையில் வெளியிட்டு உதவுவார்களானால் அது தேசத்திற்குச் செய்த பெரிய உபகாரமாயிருக்கும்.

பயன் உண்டா?

ஆஸ்திரியா, ஜெர்மனியோடு சேர்க்கப்பட்டு விட்ட பிறகு, ஐரோப்பாவில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலைமையில் பிரிட்டிஷ் அரசாங்கத்

தார் உறுதியாக நிற்க வேண்டு மென்றும், உலக வல்லரசுகளை அச்சுறுத்தியே ஹிட்லரும் (முஸோலினியும் ?) இங்ஙனம் நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்க ளென்றும், ஜெக்கோ-ஸ்லோவேகியாவை ஆக்ரமித்துக் கொள்ளும் முயற்சியில் ஜெர்மனி இறங்குமானால், அதைத் தடுக்க பிரான்ஸ் முற்படுகிற போது, பிரான்ஸுக்கு பிரிட்டன் ஆதரவு காட்ட வேண்டு மென்றும், ஸ்பெயினில் நடை பெறும் போராட்டத்திற்கு பிரிட்டன் எந்தவிதமான உதவி செய்வதோ ஆதரவு காட்டுவதோ கூடாதென்றும் இங்கிலாந்திலுள்ள சில பிரமுகர்கள் சேர்ந்து ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். பார்லிமெண்ட் அங்கத்தினர்களும், எந்த அரசியல் கட்சியிலும் சேராமல் உலக நன்மையை நாடுகிற பல பெரியார்களும் இதில் கை யெழுத்திட்டிருக்கிறார்கள். இந்த வேண்டு கோள் எவ்வளவு தூரம் பயன் படும் என்பது நமக்குச் சந்தேகமாயிருக்கிறது. ஐரோப்பா முழுவதும் இப்பொழுது, யுத்தத்திற்கு முஸ்தீபு செய்து கொண்டிருக்கிற ஒரு யுத்தகளமாகவும் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு பாடி வீடாகவும் இருக்கின்றன. இதிலே, அமைதி, சமாதானம் என்ற வார்த்தைகள் எங்கே கேட்கப் படப் போகின்றன? ஐரோப்பிய மகா யுத்தம் ஏற்படுவதற்கு முன்னர் கூட இதே மாதிரியான நிலைமைதான் ஐரோப்பாவில் இருந்தது. அப்பொழுது யுத்தம் வேண்டா மென்று இங்கிலாந்திலேயே ஒருசிலர் கட்சிசேர்க்க ஆரம்பித்தார்கள். காலஞ் சென்ற ஸ்ரீ ராம்ஸே மாக்டோனல்ட் இதற்குத் தலைவராயிருந்தார். ஆனால் அப்பொழுதைய யுத்த வெறியில் இவர்கள் பித்தர்களென்றும், சிறையிலே வசிப்பதற்குத் தான் யோக்கியதை யுடையவர்களென்றும் கருதப்பட்டார்கள். அதே பரிதாப நிலைமை, இந்த வேண்டு கோள் விடுத்திருக்கிறவர்களுக்கும் ஏற்படக்கூடாதென்று நாம் விரும்புகிறோம்.

சீனாவில் ஜப்பான் அரசாங்கம்

சீனாவில், ஜப்பானியர்களால் ஆக்ரமித்துக் கொள்ளப்பட்ட பிரதேசத்தில் ஒரு புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு 'சீனாவின் புதிய குடியரசு அரசாங்கம்' என்று பெயர். சுமார் எட்டு கோடி ஜனங்களைக் கொண்ட கியாங்ஸு, சேகியாங், அன்வெய் என்ற மூன்று மாகாணங்களும் இந்தப் புதிய நிருவாகத்தின் கீழ் இருக்கும். இதன் தலை நகரம் நாங்கிங். எனவே மத்திய சீனாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ள ஜப்பானியர் இந்தச் சூழ்ச்சியைச் செய்திருக்கின்றனர். இந்த அரசாங்கத்தோடு தான், இனி வெளிநாடுகள் பேச்சு வார்த்தை நடத்த வேண்டு மென்றும், சீனாவிலுள்ள மற்ற 'தனிப்பட்ட நபர்' களுடன் எந்தவிதமான ஒப்பந்தமோ உடன்படிக்கையோ செய்து கொண்டால் அவை செல்லுபடியாகா தென்றும் ஜப்பானியர் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். ஐரோப்பிய வல்லரசுகள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகின்றன? அபிஸீனியாவில் இத்தாலிய ஆக்ரமிப்பையும், ஸ்பெயினில் பிராங்கோவையும் மெது மெதுவாக அங்கீகரித்துக் கொண்டது போல் இந்தப் புதிய சீன (ஜப்பானிய?) அரசாங்கமும் அங்கீகரிக்கப் படுமோ? எப்படியாவது ஜப்பானுடைய நட்பு இருந்தால் போது மென்று ஐரோப்பிய வல்லரசுகள் நினைக்கிறபோது...........!!

உலகத்திலே என்ன நடக்கிறது?

ஊதுங்கோ! மூச்சுக் கொண்ட மட்டும் ஊதுங்கோ! யாருடைய கப்பற் படை பெருகுகிறதோ பார்க்கவேண்டும்!

ஏன் ஸார்! எவ்வளவு காலத்துக்கு இப்படி அந்தரத்திலே இருக்கப்போகிறீர்கள்?

இந்த இரண்டு பக்தர்களும் பிரிட்டானிய தேவதையை உபாசிக்கிறார்களா? அல்லது பரிகசிக்கிறார்களா?



ஹிட்லர் : சுருட்டு ஆஸ்திரியாவை! ஜெர்மனிக்குள்ளே போடு! அப்புறம் யார்?

முஸோலினி : நான் அபிசீனியாவை விழுங்கினேன். ஆனால் கொஞ்சம் சிரமப்பட்ட பிறகுதான் அது கிடைத்தது. நீ தான் கெட்டிக்கார ஆசாமி! ஓசைப் படாமல் காரியத்தைச் சாதித்துக் கொண்டு விட்டாயே!

ஏன் அம்மா, இந்த யுத்தத்திலே நாம் ஜெயித்தால்—?

ஸ்பெயினில் குடியரசு அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த ஒரு குழந்தையின் கேள்வி.

சோவியத் அரசாங்கத்திற்கு விரோதமாகச் சதியாலோசனை செய்தவர்கள் எவ்வளவு பெரியவர்களா யிருந்தாலும், எவ்வளவு முறத்துப் பார்த்தாலும் இந்தக் கதிதான். சமீபத்திலே, ருஷ்யாவில் 21 பேர் சதியாலோசனை செய்தார்களென்று குற்றஞ் சாட்டப் பட்டு 18 பேர் யமனுலகத்திற்கு அனுப்பப் பட்டார்களல்லவா? இந்தச் சதி வழக்கு 24-2-38-ல் தொடங்கி 13-3-38-ல் முடிந்தது.



சர்வாதிகாரம் பருமனடைவதற்கு விகிதாசாரமாக ஜனநாயகம் சிறுத்துக்கொண்டு வருகிறதா பார்த்துச் சொல்லுங்கள். இங்கே ஒரு விஷயம் கவனித்தீர்களா? சர்வாதி காரத்திற்கு எல்லா லட்சணங்களும் இருக்கின்றன. ஆனால் கண்மட்டுந்தான் இல்லை. ஜனநாயகத்திற்குக் கண்ணிருக்கிறது! ஆனால் அதிலிருந்து கண்ணீர் பெருகிக் கொண்டேயிருக்கிறது!

'சுக்லாம் பாதரம்' என்று தலையிலே குட்டிக் கொள்ள ஆரம்பிதது விடாதீர்கள்! விநாயகப் பெருமானல்ல இவர். இவர்தான் மிஸ்டர் நாகரீகம்! விஷப்புகைப் பிரயோகத்தினின்று நம்மை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் இப்படித்தான் உடையணிந்து கொள்ள வேண்டும். படத்திலே இருக்கிறவர் நாகரீகத்தைச் சுருட்டிக் கொண்டு போகிறாரா அல்லது இதுதான் நாகரீகம் என்று தம்மை விளம்பரப் படுத்திக் கொண்டு போகிறாரா?

மகனே! உன் கடமையைச் செய்!

——வ. பார்த்த சாரதி

ஒரு தகப்பனார், தன் மகனுக்கு எளிய முறையில் நல்ல உபதேசங்களைச் செய்கிற முறையில் இந்தக் கட்டுரை எழுதப்பட்டிருக்கிறது. வாலிப உலகம், இது போன்ற விஷயங்களைப் படித்து, தங்கள் சந்ததியார்களுக்கு வழி காட்டினால் மிகவும் நன்றாயிருக்கும். இந்த அன்பர் வாயிலாக, இன்னும் இது போன்ற கட்டுரைகள் பல எதிர் பார்க்கிறோம்.

மகனே! இந்த உலகத்திலே நீ பிறந்து விட்டாய். இறக்கவும் போகிறாய். நீ பிறந்தது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயம் நீ இறக்கப் போவதும். ஆகையால், கடவுள் உனக்குக் கொடுத்திருக்கிற ஞான விளக்கை, கொஞ்சம் உன் பக்கமே திருப்பி வைத்துக் கொண்டு பார். கடவுள் பட்சபாதமில்லாதவர். அவர், எல்லாருக்கும் ஒரே மாதிரியான விளக்கைத்தான் கொடுத்திருக்கிறார். அதை நாம் வைத்துக் கொண்டிருப்பதிலும், அதனை உபயோகப் படுத்தும் மாதிரியிலும், அதன் பிரகாசம் இருக்கிறது. சில சமயங்களில் திரியை நந்தாமல் அப்படியே விட்டு விடுகிறோம். அது தானாக எரிந்து கருகிப்போய் சாம்பலாகி விடுகிறது. இன்னும் சில சமயங்களில் எண்ணெயே ஊற்றுவதில்லை. விளக்கு எப்படி எரியும்? எண்ணெயும் திரியும் நிறைய இருக்கும். ஆனால் குத்து விளக்கைச் சுத்தப் படுத்துவதேயில்லை. அதிலுள்ள அழுக்குகளைத் துடைப்பதேயில்லை. இந்த அழுக்கின் காரணமாக விளக்கின் வெளிச்சங் கூட அநேகமாக மங்கலடைந்து போகிறது. ஆகையால் தம்பி! எண்ணெய், திரி, குத்துவிளக்கு ஆகிய மூன்றையும் எப்பொழுதும் உபயோகத்தில் வைத்துக் கொண்டிரு. அப்பொழுதுதான் நீ பிறந்திருக்கிறாய் என்று உலகம் உன்னைக் கவனிக்கும். நீ இறந்து விட்டாயானால், உலகம், உன் பொருட்டு ஒரு பொட்டு கண்ணீராவது சிந்தும்.

உனக்குச் சில வார்த்தைகள் சொல்லப் போகிறேன். கொஞ்சம் கவனமாய்க் கேள். நான் சொல்வது உனக்குப் பிடித்தமில்லாதிருக்கலாம். அல்லது உன்னால் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வர முடியாதிருக்கலாம். ஆனாலும் உன் சந்ததியார்களுக்காவது இவை பயன்படுமல்லவா?

வாழ்வதேன்?

மனிதன் தனக்காக மட்டும் வாழ்வதில்லை. மற்றவர்கள் நன்மையடைய வேண்டுமென்பதற்காகவும் வாழ்கிறான். அப்படி வாழ்வதிலே தன்னுடைய வாழ்க்கையையும் சேர்த்து நடத்துகிறான். ஒவ்வொருவனுக்கும் அவனவன் கடமையென்பதுண்டு. இதனையே நமது பெரியோர்கள் 'ஸ்வதர்மம்' என்று சொன்னார்கள். இந்தக் கடமையென்பது இன்னாருக்குத்தான் என்பது இல்லை. ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் எல்லாருக்கும் கடமையென்பதொன்றுதான். சிலருக்கு வாழ்க்கை துக்ககரமாகத் தென்படுகிறது. சிலருக்குச் சந்தோஷமாகத் தென்படுகிறது. ஆனால் உத்தம புருஷர்கள் எப்பொழுதும் வாழ்க்கையில் சந்தோஷத்தைத்தான் காண்கிறார்கள். இவர்கள், தாங்கள் சுகம் அநுபவிக்க

வேண்டு மென்பதற்காகவோ அல்லது கீர்த்தி சம்பாதிக்க வேண்டு மென்பதற்காகவோ வாழ்க்கையை நடத்துவதில்லை. தங்கள் கடமையைச் செய்து கொண்டு போவதன் மூலமாகத்தான் இவர்கள் வாழ்க்கையில் சந்தோஷம் காண்கிறார்கள். இவர்களுக்கு வாழ்க்கையில் எப்பொழுதும் நம்பிக்கை தான். அந்த நம்பிக்கை யில்லாவிட்டால் எந்த நல்ல காரியத்தையும் இவர்கள் செய்ய முடியாதல்லவா?

ஹெரோக்ளஸ் என்ற ஒரு கிரேக்க ஆசிரியன், நாம் ஒவ்வொருவரும் ஒரு வட்டத்தின் மையம் என்றும், நம்மைச் சுற்றி அடுக்கடுக்காகப் பல வட்டங்கள் சூழ்ந்திருக்கின்றன வென்றும் கூறுகிறான். நம்மைச் சுற்றியுள்ள முதலாவது வட்டம் நமது பெற்றோர்கள், மனைவி, குழந்தைகள் முதலியோர். இதற்கடுத்த வட்டம் உற்றார் உறவினர். இதற் கடுத்தது நமது நாட்டு மக்கள். இதற்குப் பிறகு மானிட ஜாதியனைத்தும். இப்படி ஒவ்வொரு வட்டமாக விரிந்துகொண்டு செல்லும் அனைத்திற்கும் மையத்திலே இருக்கிற நாம், நம்முடைய கடமையை, சேவையைச் செய்யவேண்டும்.

மனித சமூகத்திற்கும் அதன் மூலமாகக் கடவுளுக்கும் நாம் நமது கடமையை விடாமலும், ஒழுங்காகவும் செய்ய வேண்டுமானால், கடவுள் நமக்குக் கொடுத்திருக்கிற எல்லாச் சக்திகளையும் உபயோகத்திற்குக் கொண்டு வரவேண்டும். பரம கருணாநிதியான கடவுள் நமக்கு எல்லாவற்றையும் கொடுத்திருக்கிறார். அவைகளை உபயோகப்படுத்துவதிலே தான் நம்முடைய உபயோகமும் இருக்கிறது.

நாகரிக புருஷன் யார்?

கடமைக்கு எல்லை இல்லை; காலமும் இல்லை; இடமும் இல்லை. நமது வாழ்க்கைப்படிகள் ஒவ்வொன்றிலும் கடமையென்பது நம்மை அறை கூவி அழைக்கிறது. அதற்கு நாம் செவி கொடுத்துக் கேளாமற்போனால் அது நம்முடைய தவறே தவிர, கடமையின் தவறாகுமோ! நாம் பணக்காரர்களா யிருப்பதும் ஏழைகளா யிருப்பதும் நமது கைவசத்திலில்லை. அப்படியேதான் சந்தோஷமும் துக்கமும் நமது கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாயில்லை. ஆனால் எங்கு பார்த்தாலும் எப்பொழுதும் நம்மைச் சூழ்ந்திருக்கும் கடமையைச் செய்துகொண்டு போவது நமது கடமை. நாகரிகமுள்ள மனிதன் என்றால் என்ன அர்த்தம்? எவனொருவன் கடமைக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறானோ அவன் தான் நாகரிகமுள்ளவன். இந்த நாகரிக வாழ்க்கையில் என்ன இடையூறுகள் நேர்ந்தாலும், என்ன விதமான ஆபத்துகள் சம்பவித்தாலும் அவற்றை யெல்லாம் லட்சியம் செய்யாமல், நமது கருமத்திலேயே-அதாவது பிறருக்காக நாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்துகொண்டு போவதிலேயே நாம் கண்ணா யிருக்க வேண்டும். இதற்காக நாம் வாழ வேண்டும்; நம்பிக்கை கொள்ள வேண்டும்; இறக்கவும் வேண்டும்.

ராணுவத்திலே சேர்ந்திருக்கிற ஒரு சிப்பாயை எடுத்துக்கொள்வோம். அவனுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகிற முதல் உபதேசம் என்ன? 'உன் கடமையைச் செய். அப்படிச் செய்துகொண்டு போவதிலே ஏதேனும் ஆபத்து நேர்ந்தால் அதனை அசட்டை செய்துவிட்டு உன் கடமையைச் செய்.' இவ்வளவுதான்.

இது மேற்பார்வைக்கு மிகவும் சுலபமாகத் தோன்றுகிறது. ஆனால் இதனை அநுஷ்டானத்திற்குக்கொண்டு வருவதில் எவ்வளவோ சிரமம் இருக்கிறது.

சில உதாரணங்கள்

சுமார் 1850 வருஷங்களுக்கு முன்னே ரோம ராஜ்யத்தில் பாம்பேயி என்ற நகரம் மிகவும் உன்னத ஸ்திதியி லிருந்தது. அது வெசூவியஸ் என்ற எரிமலையின் அடிவாரத்தில் இருந்தது. இந்த எரிமலை திடீரென்று நெருப்பும் சாம்பலுமாகக் கக்க ஆரம்பித்தது. ஜனங்களெல்லாரும் பயந்து ஓடிப்போய்விட்டார்கள். ஆனால் நகரக் காவலன் மட்டும் ஓடவில்லை. நகரத்தைப் பாதுகாவல் செய்வது என்று தன் கடமையைச் செய்தவனாய், நின்ற இடத்திலேயே நின்றுகொண் டிருந்தான். அவனையும் நகரத்தையும் சேர்த்து, எரிமலைச் சாம்பல் மூடிவிட்டது. நகரத்தைப் பாதுகாக்கவன்றோ இவன் நியமிக்கப்பட்டான். அந்தக் கடமையிலிருந்து இவன் நழுவலாமா? இவன் தேகம் சாம்பலோடு சாம்பலாகி விட்டது. ஆனால் இவனுடைய ஞாபகம், அந்தச் சாம்பலின் பேரில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இவன் தரித்திருந்த தலையணி, கவசம், ஈட்டி முதலியனவற்றை இப்பொழுது கூட, நேபிள்ஸ் என்ற நகரத்திலேயுள்ள பொருட்காட்சி சாலையில் பார்க்கலாம்.

நூற்றிருபது வருஷங்களுக்கு முன்னே நடைபெற்ற ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன் கேள். மைசூரிலே ஆண்டு கொண்டிருந்த திப்பு சுல்தானோடு போர் புரிந்த வெல்லிங்டன் பிரபு என்பவனைப்பற்றி நீ பள்ளிக்கூடத்தில் படித்திருக்கிறாயல்லவா? இவன் ஒரு பெரிய கப்பற் படைத் தலைவன். ஒரு சமயம், இவனுடைய படையைச் சேர்ந்த 'பர்கன் ஹெட்' என்ற ஒரு கப்பல், ஆப்ரிக்காவுக்கு வடக்கேயுள்ள சமுத்திரத்தில் சத்துருக்களால் மூழ்கடிக்கப்பட்டு விட்டது. மாலுமிகள் அத்தனை பேரும், சந்தோஷமாகச் சமுத்திர ராஜனுக்குப் பலியானார்கள். அப்பொழுது வெல்லிங்டன் பிரபுவுக்கு லண்டனிலே ஒரு விருந்து நடந்துகொண்டிருந்தது. இந்தவிருந்தின் போது, கப்பல் மூழ்கிய சமாசாரம் இவனுக்குத்தெரிந்தது. அப்பொழுது, மாலுமிகளின் தைரியத்தைப் பாராட்டி ஒரு வார்த்தையாவது இவன் பேச வேண்டுமே? அவர்களுடைய கடமைக்குக் கீழ்ப்படியுஞ் சுபாவத்தைப் பற்றித்தான் சில வார்த்தைகள் பேசினான். மாலுமிகள் தைரியமாக இருப்பது இயற்கைதானே என்று இவன் நினைத்தான்போலும்.

கடமையை எப்படிச்செய்யவேண்டும்?

கடமை என்பதை எப்பொழுதும் எதிர் மறைப்பொருளில் அர்த்தம் செய்யாதே. உதாரணமாக உன்னிடத்திலே, எதற்கும் பயப்படாத ஒரு சுபாவம் இருக்கலாம். ஆனால் அப்படி யிருப்பதே உன் கடமையாகாது. அச்சப்படாமல் உனக்கிட்ட வேலையை நீ செய்து கொண்டுபோவது தான் விசேஷம். அதுதான் உன் தருமம்; உன் கடமை.

அகஸ்டைன் என்ற ஒரு ஞானி கேட்கிறான்:—நீ பெரியவனாக வேண்டுமென்று விரும்புகிறாயா? அப்படியானால் ஆரம்பத்தில் சிறியவனாயிரு. விசாலமானதும் உயரமுள்ளதுமான ஒரு கட்டிடத்தைக் கட்ட ஆசைப்

படுகிறாயா? அப்படியானால் அடக்கம் என்ற அஸ்திவாரத்தி லிருந்து ஆரம்பி. எவ்வளவுக் கெவ்வளவு உயரமான கட்டிடத்தைக் கட்டவேண்டுமென்று நீ விரும்புகிறாயோ அவ்வளவுக்கவ்வளவு ஆழமாக நீ அஸ்திவாரத்தைப்போட வேண்டும். அடக்கந்தான் அழகின் மகுடம்!

உன் கடமையை இரகசியமாகச் செய்; பொதுஜனங்கள் பார்க்க வேண்டுமென்று செய்யாதே. இரகசியத்திலேதான் கடமை சிறப்படைகிறது. கடமை தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ள எப்பொழுதுமே பிரியப்படுவதில்லை. நம்முடைய பொது வாழ்க்கை மிகவும் பகிரங்கப்பட்டதாயிருக்கலாம். ஆனால் நம்முடைய ஆத்மாவை யாருமே பார்க்க முடியாதல்லவா? இந்த ஆத்மாவுக்குச் செய்ய வேண்டிய கடமைக்கு விளம்பரமேன்? நாம் புகழின் சிகரத்தில் ஏறுவதும், அல்லது அதிலிருந்து சறுக்கி விழ்வதும், ஆத்மாவுக்கு நாம் செய்கிற கடமையைப் பொறுத்திருக்கிறது. ஆத்மாவை யாருமே அழிக்க முடியாது. வேண்டுமானால் அது தற்கொலை செய்து கொள்ளலாம். நம்மைச் சுற்றியுள்ள ஒரு சிலரையேனும் கொஞ்சம் உயரத் தூக்கிவிடுவோமானால், அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு புனிதத் தன்மையைப் புகுத்தி வைப்போமானால், உண்மையிலேயே நாம் உபயோகமுள்ளவர்களாக வாழ்ந்தவர்களாவோம்.

பணத்தினால் உபகாரம் செய்கிறவன் பெரிய மனிதனாக மாட்டான். எவன் தன்னையே ஒப்புக்கொடுத்து விடுகிறானோ அவன் தான் பெரிய மனிதன். பணத்தைக் கொடுக்கிறவன் விளம்பரப்படுத்தப்படுகிறான்; தன்னுடைய காலத்தை, தேக பலத்தை, ஆத்மாவைக் கொடுக்கிறவன் நேசிக்கப் படுகிறான். முன்னவன் சீக்கிரத்தில் மறக்கப்படுகிறான்; பின்னவன் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளப் படுகிறான். ஆனால் இருவர் விதைத்த நல்லவிதைகள் மட்டும் அழிவுபடாமல் இருக்கின்றன.

சாக்ரடீஸ் உதாரணம்

முற்காலத்திலே கிரேக்கர்கள், தங்கள் கடமையில் கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள். இவர்களில் சரித்திரப் பிரசித்தி பெற்றவன் சாக்ரடீஸ் என்பவன். இவன்தான் கிரேக்கர்களின் தத்துவ ஞானத்திற்குப் பிதாமகன் என்று இன்னும் கௌரவிக்கப்படுகிறான். இவன் ஜனங்களிடத்தில் ஒழுக்கத்தை அபிவிருத்தி செய்வதே தனது வாழ்க்கையின் கடமையென்று கொண்டான். அந்தக் காலத்தில் கிரீஸ் தேசத்திற்கு, ஏதென்ஸ் என்பது தலை நகரமாயிருந்தது. அப்பொழுது கிரீஸ் தேசத்தில் அடிக்கடி யுத்தங்கள் நடைபெற்றுக் கொண்டு வந்தன. இதனால் ஏதென்ஸ் வாசிகளெல்லாரும் யுத்தத்தில் சேர்ந்து உழைக்கவேண்டுமென்ற கட்டாயம் இருந்தது. அப்படியே சாக்ரடீஸும் ஒரு யுத்த வீரனாகப் போய்ச் சேர்ந்தான். 'எனது நாட்டவரால் என்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களுக்கு நான் இழிவு தேடித்தர மாட்டேன். பாதுகாவல் செய்யுமாறு எந்த இடம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதோ அந்த இடத்திலிருந்து பெயரவும் மாட்டேன்' என்று இவன் அப்பொழுது பிரதிக்ஞை செய்து கொண்டான். பிறகு நடைபெற்ற யுத்தங்களில் இவன் பல வீரச் செயல்களைச் செய்திருக்கிறான். க்ஜெனபன்

(Xenophon) என்ற ஒரு போர்வீரன் யுத்த களத்தில் படுகாயமடைந்து விழுந்து விட்டான். அவனை, சாக்ரடீஸ் தோளிலே தூக்கிப் போட்டுக் கொண்டு வழி நெடுகச் சத்துருக்களுடன் போரும் புரிந்து கொண்டு தன் பாடி வீட்டிற்கு வந்து சேர்ந்தான். யுத்த களத்திலே இவன் எப்படி தைரியமாகத் தன் கடமையைச் செய்து வந்தானோ அது போலவே, பொதுஜன சேவையிலும் இவன் தன் கடமையைத் தைரியமாகச் செய்து வந்தான்.

பின்னர் இவன் உபதேசகனாகவந்து அக்காலத்திற்குப் புதிதெனத் தோன்றிய பல கொள்கைகளைத் தைரியமாக எடுத்துச் சொல்லி வந்தான். கடைத் தெருக்களிலும், தொழிற்சாலைகளிலும், இன்னும் பொதுஜனங்கள் கூடுகிற மற்ற இடங்களிலும் இவன் தைரியமாகச் சென்று வெறுமனே கடவுளர்களுக்குப் பூஜை செய்வதைக் காட்டிலும், மனிதன் ஒழுக்க நிலையில் தன்னை உயர்வுபடுத்திக் கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி வலியுறுத்திப் பேசி வந்தான். அந்தக் காலத்தில் இவனுக்கு எதிர்ப்பு பலமாக இருந்தது. ஒரு சிலர் இவனுக்கு ஆதரவு காட்டி வந்தார்கள். அரிஸ்டிப்பெஸ் என்ற ஒரு பெரிய சீமான், இவனுடைய உபதேசத்தில் ஈடுபட்டு இவனுக்கு நிறையப் பணம் கொடுப்பதாகச் சொன்னான். ஆனால் சாக்ரடீஸ், பணத்திற்காகத்தான் உபதேசஞ் செய்யவில்லை யென்று சொல்லி மறுத்துவிட்டான். அரசாங்கம் இவனுக்கு விரோதமாக இருந்தது. இவனை, ஜனங்களுக்குப் பொய்யொழுக்கத்தை உபதேசித்துக் கிரேக்கப் பிரஜைகளைக் கெடுத்து விடுகிறானென்று குற்றஞ் சாட்டி விசாரணைக்குக் கொண்டு வந்தனர். அப்பொழுது இவனுக்கு 72 வயது. விசாரணை நடந்தது. விசாரணையின் போது, கொஞ்சங்கூட அஞ்சாமல் தன் கொள்கைகளை வலியுறுத்தினான். கடைசியில் நீதிபதிகள் மரண தண்டனை விதித்தார்கள். முப்பது நாள் சிறையிலே இருந்தான். அப்பொழுது இவன் தன் சீடர்களுக்குப் பல நல்ல உபதேசங்களைச் செய்தான். இந்தச் சமயத்தில், இவனிடத்திலே பெரிதும் இரக்கங்கொண்ட நண்பன் ஒருவன், இவனைச் சிறையினின்று தப்புவித்து வைப்பதாகக் கூறினான். ஆனால் சாக்ரடீஸ் இவைகளுக்கெல்லாம் இணங்கவில்லை. கடைசியில், நீதிபதிகள் உத்திரவுப்படி, சிறைக் காவலன் விஷத்தைக் கொண்டு வந்து கொடுக்க அதை அப்படியே கொஞ்சங்கூட முகஞ் சிணுங்காமல் குடித்து விட்டான். சிரித்த முகத்துடன் மரணமடைந்தான்.

மகனே! சாக்ரடீஸ், மரணத்தைக் கூட எதிர்த்து நின்று தன் கடமையைச் செய்தான் பார்த்தாயா?

நீ செய்ய வேண்டிய கடமைகள் எத்தனையோ உன் கையிலிருக்க, அவைகளை யெல்லாம் விட்டு விட்டு, புதுக் கடமைகளை எதிர் பார்த்துக் கொண்டிராதே. 'உன் கை என்னென்ன செய்ய முடிகிறதோ, அதை உடனே செய்' என்பது விவிலிய நூலில் ஒரு வாக்கியம்.

ஒழுக்கத்தின் மற்றொரு புறம்

சிறிய விஷயந்தானே என்று நாம் நமது கடமையைப் புறக்கணித்து விட முடியாது. அது கூடவும் கூடாது. சிறிய விஷயத்திலே எப்படியிருக்கிறோமோ அப்படியேதான் பெரிய விஷயங்களிலும். தனியாக இருந்தாலும், பலரோடு சேர்ந்து

போனாலும், நமது மனச் சாட்சிப்படி நாம் நமது கடமையைச் செய்து தானாகவேண்டும். கடைசி வரை, நமது லட்சியத்திலிருந்து நாம் சிறிது கூடப் பிறழக்கூடாது. நன்மை உண்டானாலும் சரி, இல்லை யானாலுஞ் சரி, நமது கடமைதான் நமக்கு முக்கியம். ஓர் அடிமை வியாபாரி, தான் விலைக்கு வாங்கப் போகிற ஓர் அடிமையைப் பார்த்து 'நான் உன்னை விலைக்கு வாங்கினால், நீ உண்மையாக நடப்பாயா?' என்று கேட்டான். 'நீ வாங்கினாலும் வாங்கா விட்டாலும் உண்மையாக நடப்பதுதான் என் வழக்கம்' என்றான் அடிமை. இவன் கடமையை உணர்ந்தவ னல்லவா? அடிமையா யிருந்தாலும் உத்தம புருஷ னல்லவா?

ஒழுக்கம் என்பது என்ன? கடமையின் மற்றொரு பகுதிதானே. அன்பு கனிந்த செயல்கள், அவை எவ்வளவு சிறியவையே யானாலும், பெரியன வல்லவா? அவைகளுக்காக நாம் எவ்வளவு கஷ்டப்பட்ட போதிலும் அது பெரிதல்லவே. அதுதான் கடமை; அதுதான் ஒழுக்கம். அன்பு விதைத்தால் அன்பு விளைகிறது. நீ நம்பிக்கையுடனும் நாணயத்துடனும் நடந்து கொண்டால், மற்றவர்களும் உன்னிடத்தில் நம்பிக்கையுடனும் நாணயத்துடனும் நடந்து கொள்வார்கள். இப்படி நடந்து கொள்வதால் நீ ஏதோ விசேஷமானதொரு காரியத்தைச் சாதித்து விட்டாய் என்று கருதிவிடாதே. உன் கடமையைத்தான் நீ செய்தாய்.

நல்ல காரியம் எப்பொழுதுமே வீணாவதில்லை. இதை நீ எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள். உன் கடமையைச் செய்.

சந்தாதார்களுக்கு —

பிரதி இங்கிலீஷ் மாதம் முதல் வாரத்தில் பத்திரிகையை நாம் தபாலில் சேர்த்து விடுகிறோம். காலா காலத்தில் பத்திரிகை வந்து சேர வில்லையானால், அன்பர்கள் உள்ளூர் தபாலாபீசில் சென்று விசாரிப்பதோடு கூட ஆங்கிலத்தில் கடிதம் எழுதி நமக்கு அனுப்புவார்களானால் அதனைக் கொண்டு தபால் இலாகா அதிகாரிகளுக்குத் தெரிவித்து சரியாகக் கிடைக்கும்படி செய்ய ஏதுவாக இருக்கும்.

மானேஜர்.

அந்திப் பரிதி

—"பால போதகர்"

அந்தி மல்லி அலருங் காலம்
அலையெறி நீரில் அழகிய பரிதி
சுந்தரத் தண்கதிர் விரித்துமே உலகை
சொல்லொணாக் களியில் ஆழ்த்திடு மே. 1.
அலையெறி நீரில் அழகொளிர் கதிர்கள்
அணைத்து இலங்கிடல் அறையற் பாலோ!
தலைநிமிர்ந் துயர்ந்த தருக்க ளெல்லாம்
தகதக வென்ன மின்னிடு மே. 2.
காயினைக் கனிந்த கனி யென்று
கருதிக் கிள்ளைகள் காலத் தையும்
ஆயா தயர்வையும் பாரா மல்
அண்டிட எண்ணங் கொண்டிடுமே. 3.
பொற்புடை மாதர்கள் தம்மெழி லும்
பொன் வெயில் தன்னில் பெருகிடு மே.
அற்புதக் கவிஞரும் ஓவிய ரும்
'ஆ' வென் றெண்ணம் உயர்த்திடு வார். 4.
சட்டெனச் சூரியன் மறைந்தது மே
சலிப்பார் மாந்தர் உளம் வருந்தி;
பட்டென நீதி தன்னையு மே
பண்ணுவான் கவிஞன் அது போழ்தே. 5.
நொடி நொடியாக அவ னெழிலும்
நுவலா தேகுதல் தனைப் போல
நொடி நொடியாக நம் நாளும்
நுவலா தேகுது சிறுவர்க ளே! 6.
அவன்தரு இன்பந் தனை யள்ளி
அருந்தும் போழ்தே நம் நாளை
அவன்தான் அள்ளிப் போவதை யும்
அறியா தெழிலில் மயங்கு கிறோம். 7.
காலையில் தண்கதிர் தனை வீசி
கடுங்கதிர் தன்னை நடுப் பகலும்
மாலை இன்பக் கதிர் விரித்தும்
மறைவான் இன்பப் பரிதியு மே. 8.
பின்னும் மறுநாள் காலையி லே
பேசரும் விதமாய்ப் பரிதியு மே
பொன்னொளி வீசிக் கீழ்த் திசையில்,
புறப்படு வானுல கோர் மகிழ. 9.
இஃதொத திறமை நம்மிடத் தில்
இல்லை யென்றன் சிறுவர்க ளே!
அஃதினை யோர்ந்து அவ்வக் காலம்
ஆவன ஆற்ற முயன்றிடு வீர். 10.

ஆஸ்திரியா

ஐரோப்பாவுக்கு மத்தியில் ஜெர்மனிக்குத் தெற்கே ஆஸ்திரியா இருக்கிறது. ஐரோப்பிய மகா யுத்தத்திற்குப் பிறகு, பழைய ஆஸ்திரியா–ஹங்கேரி ஏகாதிபத்தியத்தினின்று பிரிந்தது இது. இங்குள்ள ஜனங்களிற்பெரும்பாலோர் ஜெர்மானியர். ஹங்கேரியும், ஜெக்கோ–ஸ்லோவேகியாவும் தனித்தனி சுதந்திர நாடுகளாகப் பிரிந்துவிட்ட பிறகு, ஆஸ்திரியாவில் வசித்த ஜெர்மானியர்கள், ஆஸ்திரியாவை ஜெர்மனியுடன் சேர்த்துவிட வேண்டுமென்று கோரினார்கள். ஆனால், யுத்தத்திலே வெற்றி பெற்ற நேசக் கட்சியினர், இது கூடாதென்று தடுத்து விட்டனர். இதன் பிறகு, 1920ம் வருஷம் ஒரு புதிய அரசியல் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது. இதன்படி ஆஸ்திரியா குடியரசாகியது. முதல் சான்ஸலராயிருந்தவன் டாக்டர் ரென்னர் என்பவன். இவனுக்குப் பின்னர் சான்ஸலராயிருந்தவர்கள் (1) டாக்டர் செய்பெல், (2) டாக்டர் டால்பஸ், (3) டாக்டர் ஷூஸ்நிக்.

நிருவாக சௌகரியத்திற்காக ஆஸ்திரியா எட்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவை முறையே (1) லோயர் ஆஸ்திரியா (2) அப்பர் ஆஸ்திரியா (3) சால்ஸ்புர்க் (4) ஸ்டிரியா (5) காரின்தியா (6) டைரோல் (7) வோரரெல்பெர்க் (8) புர்கென்லாண்ட்.

ஆஸ்திரியாவின் மொத்த விஸ்தீரணம் 32,400 சதுர மைல்; ஜனத்தொகை, 1934ம் வருஷத்து ஜனகணிதப்படி 6,759,062.

ஆஸ்திரியா சம சீதோஷ்ண முடையது. ஆரோக்கிய வாசஸ்தலங்கள் பல இங்கிருக்கின்றன. உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் யாத்திரிகர் பலர் இங்கு வந்து தங்குவார்கள். ஆஸ்திரியா அரசாங்கத்தின் வருமானத்தில், இந்த யாத்திரிகர்களிடமிருந்து கிடைக்கிற தொகை மிகவும் முக்கியமானது. விண்ட்ஸர் கோமகனும், ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸூம் சுக வாசத்திற்காக ஆஸ்திரியாவில் தான் தங்கினார்கள் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

முக்கிய கைத் தொழில்கள் பியானோ முதலிய வாத்தியக் கருவிகள் செய்தல், மோட்டார் உற்பத்தி, ஜவுளி தினுசுகள் தயாரித்தல் முதலியன. விளை பொருள்களில் புகையிலை மிகவும் முக்கியமானது.

ஆஸ்திரியா தனிக்குடியரசு நாடாக அமைந்தது முதல் அடிக்கடி உள் நாட்டுக் குழப்பங்கள் நடந்து வந்தன. இந்நாட்டிலிருந்த ஜெர்மானியர்கள் அனைவரும், நாஜி இயக்கத்திற்கு ஆதரவு காட்டி வந்ததோடு, ஆஸ்திரியா அரசாங்க நிருவாகத்திலும் தங்களுக்குப் பங்கு வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வந்தனர். 1933ம் வருஷம், சான்ஸலராயிருந்த டாக்டர் டால்பஸ் என்பவன், இந்த நாஜி இயக்கத்தை அடக்கு முறைகளால் அடக்கி, ஆஸ்திரியாவின் சுதந்திரத்தை நிலை நாட்ட முயற்சி செய்தான். இதனால் 1934ம் வருஷம் ஜூலை மாதம் நாஜிகள் கலகம் செய்ய ஆரம்பித்தனர். டாக்டர் டால்பஸ் கொலை செய்யப் பட்டான். இதற்குப் பிறகு டாக்டர் ஷூஸ்நிக், நிருவாகத்தை ஏற்றுக் கொண்டு ஒரு மாதிரியாக அரசாங்கக் கப்பலைச் செலுத்திக் கொண்டு வந்தான்.

டாக்டர் வில்லியம் மிக்லாஸ்
ஜெர்மனிக்குள் ஆஸ்திரியா ஐக்கிய மாவதற்கு முன்னர், ஆஸ்திரியக் குடியரசின் பிரசிடெண்டா யிருந்தவன்.



டாக்டர் ஷூஸ்நிக்
ஆஸ்திரியாவின் கடைசி சான்ஸ்லர்.

டாக்டர் செய்ஸ் இன்குவார்ட்
ஆஸ்திரியாவின் புதிய பிரசிடெண்ட்: ஹிட்லரின் பிரதிநிதி.

இவர் ஜெர்மன் சர்வாதிகாரி மட்டுமில்லே; ஆஸ்திரியாவின் சர்வாதிகாரியுங்கூட. ஜெக்கோ-ஸ்லோவேகியா! போலந்து! உஷார்! உறுத்துப் பார்க்கிறார் ப்ஹ்ரூரர்!!

ஹரிபுரா காங்கிரஸ்—சில தோற்றங்கள்

—ராமேசநாத் கௌதமர்

B. A.,

ஹரிபுரா காங்கிரசுக்குச் சென்றிருந்த ஒவ்வொருவரும், அந்தக் காங்கிரஸ் வாரத்தில் தாங்கள் பெற்ற அனுபவத்தையும், உணர்ச்சிகளையும் தங்கள் வாழ்க்கையில் ஒரு பொக்கிஷமாகவே கருதுவார்கள். இப்படித்தான் சுருக்கமாக வித்தல் நகரத்துக் காங்கிரசைச் சொல்ல முடியும். ஏனென்றால், காங்கிரசைப் பற்றி பல மூகமாகப் பல செய்திகளை எல்லாப் பத்திரிகைகளும் வெளியிட்டிருக்கின்றன. ஆகையால், "ஜோதி" வாசகர்களுக்குப் புதிதாக நான் என்ன சொல்ல இருக்கிறது? ஹரிபுரா காங்கிரஸ் தான் அதிகமாக விளம்பரப் படுத்தப் பட்ட காங்கிரஸ். இந்தக் காங்கிரசுக்கு லட்சக் கணக்கான ஜனங்கள் வந்திருந்தார்களென்றால், அதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது! வரவேற்புக் கமிட்டியார் எதிர்பார்த்ததை விட அதிகமான ஜனங்கள் ஹரிபுரா வந்து கூடினார்கள். சென்ற சில வருஷங்களாக, சிறப்பாகக் கராச்சியில் திறந்த வெளியில் காங்கிரஸ் கூடுவதென்று தீர்மானிக்கப் பட்டது முதல், ஜனங்கள் ஏராளமாக வர வில்லையே என்ற குறை இல்லை. வரப் பட்டவர்களுக்குப் போதுமான சௌகரியம் செய்து கொடுக்க, காங்கிரஸ் நிர்வாகிகளால் முடிய வில்லையே யென்ற குறைதான் இருந்தது. முதன் முதலாக பெய்ஸ்பூர் என்ற கிராமத்தில் காங்கிரஸ் கூடுகிற போது, இந்த எண்ணந்தான் பலருக்கும் ஏற்பட்டது. காந்தியடிகள், கிராமத்தில் காங்கிரஸை நடத்திப்பார்க்க வேண்டுமென்று ஆரம்பித்தது பெய்ஸ்பூரில் தானே.

பெய்ஸ்பூரில் செய்யப்பட்ட ஏற்பாடுகள் போற்றத் தக்கனவாகவே இருந்தன. ஆனால் அவை போதுமானவையாக இல்லை. பெய்ஸ்பூருக்கு முன்னால் நடை பெற்ற காங்கிரஸ்களில் காணப் பட்ட ஓர் அமிசம், பெய்ஸ்பூரில் வற்புறுத்தப்பட்டது. அவ்வளவுதான். ஆனால் இந்த அமிசம் ஹரிபுராவில் வெற்றி கண்டதென்று சொல்ல வேண்டும். வித்தல் நகரத்தை நிர்மாணித்தவர்கள் தங்கள் கற்பனா சக்தியை ஜனங்கள் பூரணமாக அநுபவிக்கும்படி அந்தச்சக்தியைச் செயல் முறையில் ஒழுங்காகக் காட்டவும் செய்தார்கள். காங்கிரஸ் ஆரம்ப தினமாகிய 19–2–38ல் கூட, ஏனென்றால் அன்று தான் கூட்டம் மிக அதிகம்—இந்த ஏற்பாடுகள் சிறிது கூட நிலை குலையாமலிருந்தன.

அதிகப்படியாக ஒரு லட்சம் ஜனங்கள் தான் வரக் கூடும் என்று வரவேற்புக் கூட்டத்தினர் எதிர் பார்த்தார்கள். ஆனால் 19-2-38 காலை கொடியேற்ற விழாவின் போதே இரண்டு லட்சம் ஜனங்கள் கூடி விட்டார்கள். அது முதற் கொண்டு, காங்கிரஸ் முடிகிற வரை, இந்த இரண்டு லட்சம் ஜனங்கள் வித்தல் நகரத்து நிரந்தர வாசிகளா யிருந்து அங்கு மிங்கும் போவதும் வருவதுமா யிருந்தார்கள்.

'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற ஆங்கிலோ இந்தியப் பத்திரிகை கூட, 4 லட்சத்துக்கு மேல் 5 லட்சம் ஜனங்கள் காங்கிரஸுக்கு விஜயஞ் செய்திருப்பார்கள் என்று எழுதியிருந்தது. என்னுடைய அபிப்பிராயத்தில் 6 லட்சத்துக்கு மேல் 8 லட்சத்துக் குள்ளாக ஜனங்கள் வந்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

6 அல்லது 8 லட்சம் ஜனங்கள்! இரங்கூன் நகரத்து ஜனத் தொகையைவிட இரண்டு மடங்கு! இந்தப் பெரிய கூட்டத்திற் கிடையே, வித்தல் நகரத்தி லிருந்த ஒரே ரோட்டில் சுமார் ஆயிரம் பஸ்கள் சதா ஓடிக்கொண் டிருந்தன! இவ்வளவு போக்கு வரத்திலும், யாருக்கும் எவ்விதமான ஆபத்தும் ஏற்படவில்லை யென்பது ஆச்சரிய மில்லையல்லவா? மூன்று பேர்தான் மொத்தத்தில் மரண மடைந்தனர். இவர்கள் மரண மடைந்ததற்குக் காரணம் இயற்கைக் காரணங்களே தவிர, வேறு போக்கு வரத்தினால் ஏற்பட்ட மரணமல்ல. மேற்கண்ட மூவரில் இருவர், வியாதியால் மாண்டவர்கள்; ஒருவர் தொண்டர். அவர் தப்தி நதியில் மூழ்கி இறந்தார்.

ஹரிபுராவில் ஜல சப்ளை கொஞ்சங் கூடக் குறைவில்லாமல் பூரணமாயிருந்தது. சுத்தமான ஜலம், வந்திருந்தவர்களுக்கு எப்பொழுதும் கிடைத்துக் கொண்டு வந்தது.

சமையல் இலாகாவில் வேளைக்கு ஒரு லட்சம் பேர் விகிதம் நாளைக்கு இரண்டு முறை ஜனங்கள் சாப்பிட்டார்கள். இதற்கான எல்லா வசதிகளும் குறை வின்றிச் செய்யப்பட்டிருந்தன. உணவுப் பொருள் ஒவ்வொன்றும், அது உற்பத்தியாகிறது முதல் இலையிலே பரிமாறப்படுகிற வரை எல்லாம் கையினால் தயாரிக்கப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இலாகாவைத் திறம்பட நடத்தியவர்கள், குஜராத் மாகாணத்தைச் சேர்ந்த ஸ்திரீ புருஷ இளைஞர்களே.

இவ்வளவு ஜனக் கூட்டம் இருந்தும், ஹரிபுராவில் ஒரு விதமான தொத்து வியாதியும் ஏற்படாமலிருந்தது ஆச்சரிய மில்லையா?

சுகாதார ஏற்பாடுகள் மிகவும் வியக்கத் தக்கனவா யிருந்தன. நாம் பார்க்க வேண்டுமென்று விரும்பினாலும், எங்கும் ஒருவித அழுக்கோ, மற்ற அசுத்தங்களோ காண முடியாது.

இவ்வளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தும், சில குறைகள் இல்லாமலும் இல்லை. எல்லா ஸ்தாபனங்களிலும் இப்படிப் பட்ட தவிர்க்க முடியாத சில குறைகள் இருக்கத்தானே செய்யும். ஆனால் இந்தச் சில்லரைக் குறைகள் காங்கிரஸையோ, பொருட்காட்சியையோ, ஜனங்களுக்குரிய இடங்களையோ, சுகாதாரத்தையோ சிறிது கூடப் பாதிக்கவில்லை.

தொண்டர்களுக்குப் போதிய பயிற்சி அளிக்கப்பட வில்லை. டாக்டர் சந்துலால்ஷா தாம் பயிற்சி கொடுத்த சில நூறு தொண்டர்களுடன், ஏதோ சில அபிப்பிராய பேதங் காரணமாக, தொண்டர் படையுடன் கலந்து கொள்ளவேயில்லை. இதனால் பயிற்சி பெறாத தொண்டர்களினால் சில அசௌகரியங்கள் ஏற்பட்டன. முக்கியமாக சமையல் இலாகாவில் இந்தக் குறை நன்றாகத் தெரிந்தது. சில தொண்

டர்கள் முரட்டுத் தன்மைகவும், மற்ற வர்களுடைய சௌகரியங்களைக் கவனியாமலும் நடந்து கொண்டார்கள்.

விசிடர்களும் பிரதிநிதிகளும் தங்குவதற்கு ஏற்பட்டிருந்த இடம் முதலியன கொஞ்சம் சௌகரியக் குறைவாக இருந்தது என்று சொல்ல வேண்டும்.

ஜேபி யடிக்கிற பேர் வழிகளும் ஹரிபுரா காங்கிரசில் இருக்கவே செய்தார்கள். இவர்கள் தங்கள் தொழிலை மிகச் சாமர்த்தியமாகச் செய்து காட்டினார்கள். ஆனால் சர்தார் படேலினால் நியமிக்கப்பட்டிருந்த 'சி. ஐ.டி. தொண்டர்கள்' இவர்களைக் கையும் பிடியுமாகப் பிடித்து, இவர்களுடைய தொழில் நடக்க வொட்டாமல் தடுத்தார்கள்.

மிகவும் முக்கியமான குறை என்னவென்றால், தலைவர்களுடைய ஜாகைகள் ஒதுக்குப் புறமாகப் போடப் பட்டிருந்ததே யாகும். சாதாரண பிரதிநிதிகளும் தலைவர்களும் தனித் தனியாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். காங்கிரஸ் வாதி ஒவ்வொருவரும் தேசத்திற்குத் தம்மாலான தொண்டு செய்கிறவர் என்ற முறையில் இந்தப் பிரிவினையைக் காட்டியிருக்கக் கூடாது. இதனால் பல பிரதிநிதிகளுக்கு மனக் கசப் பேற்பட்டது. இதற்காகத் தலைவர்களை நாம் குறை கூற முடியாது. ஆனால் தங்களுக்குத் தனி ஏற்பாடுகள் செய்யப் படுவதற்கு அவர்கள் ஒத்துக் கொண்டிருந்தார்கள் என்ற அளவில் அவர்கள் குறை கூறப் படலாம். அவ்வளவுதான். ஆனால் வரவேற்புக் கமிட்டியார், தலைவர்களுக்கென்று தனியான ஜாகைகள் அமைத்துக் கொடுத்து, அவர்களுக்கு—மற்றப் பிரதிநிதிகளுக்குக் கிடைக்காத பல சௌகரியங்களையும் செய்து கொடுத்து, அவர்களைத் தர்ம சங்கடமான நிலைமையில் வைத்து விட்டார்கள். 'எங்கள் நண்பர்களிட மிருந்து காப்பாற்றுங்கள்' என்று தலைவர்கள் கூறியிருக்கலாம்.

ஆனால் இந்தச் சில்லரைக் குறைகள், ஹரிபுரா காங்கிரஸின் பெருமையைச் சிறிது கூடக்குறைத்து விடவில்லை. சர்தார் படேலும் குடியானவர்களும்தான் இவ்வளவு பெரிய காங்கிரசைச் சிறப்பாக நடத்தியிருக்க முடியும். இவர்களுக்கு எல்லா வாழ்த்துக்களும் அளிக்கப்பட வேண்டும். ஹரிபுராவின் ஏற்பாடுகள் சிலவற்றை காந்தியடிகள் கண்டிக்கவே செய்தார். ஆனாலும் இந்தக் கண்டனங்களைப் பொருட் படுத்தாமல் சர்தார் படேலும் அவருடைய குஜராத்திய சகோதரர்களுந் தான் இந்த மகத்தான ஏற்பாடுகளைச் செய்திருக்க முடியும்.

ஹரிபுரா காங்கிரசில் உண்டான அரசியல் பலன்களும் மகத்தானவை. முக்கியமாக, பர்மாவைப் பற்றிக் காங்கிரஸ் விதிகளில் மாற்றம் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது. ஆனால் அவைகளைப் பற்றி இங்கே விவரித்துக் கொண்டு செல்வது சந்தர்ப்பப் பொருத்தமா யிராது.

ஹரிபுரா ஏற்பாடுகள் உயர்ந்த தன்மையில் அமைந்திருந்தன. இதே தன்மையில் அடுத்த காங்கிரஸ்களும் நடை பெறுமா?

பிழைக்கும் வழி

—ஏ. மதுரம்

'என்ன ஸார் செய்யறது? ஒரு வருஷமா, இரண்டு வருஷமா, ஐந்து வருஷமாச்சு, வேலே கிடைக்க வில்லே. எத்தனே நாள் தான் என் அத்திம் பேர் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது. மானந் தான் போய் விட்டது; மனிதத் தன்மை கூடவா போய் விட வேண்டும்' என்று சொல்லிக் கொண்டே வந்து உட்கார்ந்தான் சங்கரன். பசுமையான புல் தரை. எதிரில் கூவம் ஆறு. மந்த புத்தியுள்ள வர்களின் மூளேமாதிரி மெதுவாக ஜலம் போய்க்கொண்டிருக்கிறது அதில்.

'மானம் போய்விட்ட பிறகு மனிதத் தன்மையேது' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டே 'படித்தவர்கள் இப்படித் தான் அடங்கியிருப்பார்கள்' என்று பேச்சை மாற்றினன் மஹாதேவன், சங்கரன் மனதை மாற்ற.

'படித்தவர்களெல்லாரும் இந்தக் காலத்தில் அடங்கித் தானே இருக்க வேண்டியிருக்கிறது. அரை குறைகளெல்லாம் தறி தலேகளாய்த் திரிகிற போது, படித்தவர்களெல்லாரும் பாதாளத்தில் போக வேண்டியது தானே' என்ருன் சங்கரன் சலிப்பாக.

'என்ன செய்யலாம் சங்கரா? பொறுத்தார் பூமியாள்வார்! ஐந்து வருஷம் பொறுத்தாய்; இன்னும் கொஞ்ச காலம் பொறு. நல்ல காலம் வராமல் போகுமா?' என்ருன் மஹாதேவன்.

'பொறு, பொறு என்று உபதேசம் செய்வது சுலபந்தான்; பொறுத்துப் பார்த்தா லல்லவோ தெரியும்' என்று சொல்லிக் கொண்டு விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டான் சங்கரன்.

ஃ ஃ ஃ

பாரத சமுதாயத்தின் மனே திடத்தை, கலேஞானச் செல்வத்தைத் தற்காலக் கல்வி முறை, அதன் விளேவாக ஏற்பட்ட வேலேயில்லாத் திண்டாட்டம் எவ்வளவு ஆழமாகப்பறித்து விட்டிருக்கிறது? படித்தவன், சமுதாய உணர்ச்சி யற்றவனுய், தனி மனிதனுருவனுக்கு உணவு தேடுவதிலே பொன்னுன காலத்தை மண்ணுக்கி விடுகிருன். அவன் போடுகிற போலிச் சட்டையும், உண்கிற சத்தில்லாத உணவும், பேசுகிற ஆழமில்லாத பேச்சும், இவைகள் தான் அவனே ஒரு மனித வடிவில் உலவச் செய்கின்றனவே தவிர, அவன்—அந்தப் படித்த மனிதன்—உள்ள மெல்லாம் செல்லரித்துப் போயிருக்கிறது. வாழ்க்கையில் லவலேசமும் பிரயோஜனப் படாத விஷயங்க ளெல்லாம் அவன் மூளேயில் திணிக்கப் பட்டிருக்கின்றன. எண்ணங்களேக் கோவைப் பட எண்ணுவதற்குக் கூட அவனுக்குச் சக்தியில்லே. பின், அந்த எண்ணத்தை எங்கே செயலில் கொண்டு வரப் போகிருன் அவன்? ஆ! தற்காலக் கல்வி முறை, நம் ஜன சமூகத்தை எவ்வளவு கேவலமாக்கி விட்டது? இந்தக் கல்வி முறைக்கு விதை போட்ட மெக்காலே கூட, நாம் இவ்வளவு கேவலமான மனிதப் பிராணிகளாகி விடுவோம் என்று எண்ணியிருக்க மாட்டான்.

தற்காலக் கல்வி முறையின் சீர்கேட்டிற்குப் பிரத்தியட்ச உதாரண

புருஷனாகவே இன்று சங்கரன் தோன்றினான். அவன் என்ன செய்வான்? தாயார் தகப்பனாரைக் கஷ்டப்படுத்தி, பிதிரார்ஜித சொத்தெல்லாம் இழந்து, பி. ஏ. பரீட்சையில் தேறினான். தன் பெயருக்குப் பின்னால் இந்த இரண்டு எழுத்துக்களைச் சேர்த்துக் கொள்வதற்கு இவன் எவ்வளவு எண்ணெயை எரித்திருப்பான்?' இரவிலே கண் விழித்துப் படிக்க, எத்தனை கோப்பை 'டீ' சாப்பிட்டிருப்பான்? பட்ட சிரமத்திற்காகக் கூட அவன் கண்ணீர் விட வில்லை. பலன் ஒன்று மில்லையே யென்று தான் புலம்பினான். இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில், அவனுக்கு நிஷ்காம்ய கர்மத்தைப் பற்றி உபதேசம் செய்தால், அதைத் தவிர அவனுக்கு வேறு தூக்கு மேடை வேண்டியதில்லை யல்லவா? இந்தச் சமயத்தில் மஹாதேவன், அவனுக்கு ஒரு கொலையாளியாகவே விளங்கினான்; ஆறுதல் கூறும் நண்பனாகத் தோன்றவில்லை.

ஃ ஃ ஃ

சங்கரன் சாப்பிட்டுக் கொண்டிருந்த வீடு ஒரு அக்கினி குண்டம். தினந் தோறும் இங்கு தீமிதி உற்சவம் நடக்கும். வீட்டு எஜமானராகிய இவனுடைய அத்திம்பேர் ஒரு ரிடையர்ட் டிப்டி கலெக்டர். பென்ஷனில் ஒரு தொகையை முன் பணமாக வாங்கி, சுண்ணாம்பிலும் செங் கல்லிலும் இறைத்து விட்டார். மிகுதி 90 ரூபாய் தான் பென்ஷன் வருகிறது. இதில் ஒரு பெரிய குடும்பம்—அதாவது அத்திம் பேரும் அத்தையுந் தான்—காலட்சேபஞ் செய்வதென்றால் கஷ்டந்தானே. அத்திம் பேருடைய தொந்தி வயிற்றுக்கே இந்தத் தொண்ணூறு ரூபாய் காணாதே! தவிர இவருடைய தேகத்தில் இருதயம் என்ற ஓர் அங்கம்தான் இருக்கிறது. ஆனால் அதில் மன மென்பது இல்லவே யில்லை. இந்த லட்சணத்தில் வேலையில்லாத சங்கரனுக்கு வேளா வேளை சோறு போடுவதென்றால் அவர் வயிறு பற்றி எரியாமல் வேறென்ன செய்யும்? இவர் டிப்டி கலெக்டர் உத்தியோகந்தான் பார்த்தாரே தவிர, உலகத்தைப் பார்க்க வில்லையே.

ஃ ஃ ஃ

மஹாதேவன், மேலும் சம்பாஷணையை ஆரம்பித்தான். 'ஏன் சங்கரா, உத்தியோகத்திற்கு இந்த மாதிரி அலைவதைக் காட்டிலும் பேசாமல், காங்கிரஸில் போய்ச் சேர்ந்து ஏதேனும் பொது ஜனங்களுக்கு உபகாரமான வேலையைச் செய்வது தானே. வயிற்றுச் சோற்றுக்காவது கஷ்ட மில்லாமலிருக்கும்.'

'அதையும் பிரயத்தனம் செய்து பார்த்து விட்டேன். அங்கேயும் எல்லாம் போலித் தனமாயிருக்கிறது. வெளி வேஷந்தான் அதிகமாயிருக்கிறதே தவிர, அந்தரங்கசுத்தி கொஞ்சம் கூட இல்லை. ஒரு சில மஹான்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய தன்னல மற்ற சேவையினாலேதான் இவ்வளவாவது தேசம் முன்னுக்கு வந்திருக்கிறது. எனக்கு முக ஸ்துதி செய்யவோ, வெளி வேஷம் போடவோ தெரிய வில்லை.'

'அதனால்தான் பிழைப்புக்குத் திண்டாட வேண்டி யிருக்கிறது.'

மஹா தேவனுடைய இந்த வார்த்தைகள் சங்கரன் மனத்தில் சுறுக்கென்று தைத்தன. விர்ரென்று எழுந்தான். 'நான் போய் வருகிறேன், மஹா தேவா' என்று சொல்லி விட்டு வேகமாக நடந்தான். அவன் உள்ளத்தில் எண்ணங்கள் ஒன்றன் பின்னொன்றாகத் தோன்றி மறைந்து கொண்டே யிருந்தன.

'பிழைப்பு! இந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம்? வயிற்றை நிரப்புவதா? நாய் நரிகள் கூட வயிற்றை நிரப்பிக் கொண்டு வருகின்றன. பணமுள்ளவர்களின் எதிரில் போய்நின்று பல்லிளித்து, முகஸ்துதி செய்து, அவர்கள் வீசி யெறியும் இரண்டொரு காசுகளைப் பொறுக்கி யெடுப்பது பிழைப்பா? உதைத்த காலுக்கு முத்தங் கொடுப்பது பிழைப்பா? என் பிள்ளை குட்டிகள் மட்டும் வாழ வேண்டு மென்று அதற்காக உழைப்பது பிழைப்பா? பணம் பணம் என்று பேயாய் அலைவது பிழைப்பா? மற்றவர்களுடைய உழைப்பிலே, ஊதியத்திலே வாழ்வது பிழைப்பா?'

இப்படி என் னென்னவோ எண்ணிக் கொண்டே நடந்தான் சங்கரன். ஆனால் இவன் கேள்விகளுக்குப் பதில் சொல்வார் ஒருவரு மில்லை.

ஃ ஃ ஃ

எங்கே போவது? அத்திம் பேர் வீட்டுக்குப் போக இவனுக்கு மனமில்லை. பட்டினியாகக் கிடந்து சாவது என்று உறுதி கொண்டான். மெதுவாக பிராட்வே பக்கம் வந்தான். சாயந்திர வேளை. வண்டிப் போக்கு வரவும் ஜனக் கூட்டமும் சொல்லி முடியாது. இந்த நெருக்கடியிலே ஒரு கண்ணில்லாத கபோதி, தகரக் குவளையை ஏந்தி, தடியொன்றை முன்னாலே தட்டித் தட்டிக் கொடுத்துக் கொண்டு மெதுவாக, சாக்கடை யோரமாக நடந்து வந்தான். அவனுடைய தகரக் குவளையிலே மூன்று காசுகள் இருந்தன. இந்த மூன்று காசுகள் இருப்பதனால் குவளையைக் குலுக்க, அது 'லொட்' 'லொட்' என்று ஓசைப் பட்டுக் கொண் டிருந்தது. மிகவும் பரிதாபகரமான குரலில் அந்தப் பிச்சைக்காரன் 'கண்ணில்லாதவனுக்கு ஒரு காசு கொடுங்களையா; நீங்கள் வாயிலே போட்டு கீழே உமிழ்ந்த தம்பலம் என் ஒரு வேளைச் சாப்பாட்டுக்கு ஆயிற்று ஐயா! மக்களைப் பெற்ற தாய்மார்களே, கொஞ்சம் கண் திறந்து பாருங்களேன்?' என்று வரிசையாகக் கதறிக் கொண்டு, குவளையைக் குலுக்கிக் கொண்டே போனான்.

அவன் எதிரில் இரண்டு இளைஞர்கள் போனார்கள். நிரம்ப குஷால் பேர் வழிகள் என்று அவர்கள் முகம் கூறியது. வாயிலே வெற்றிலை பாக்கு; நெற்றியிலே ஜவ்வாதுப் பொட்டு; உடம்பிலே சில்க் ஷர்ட்; காலிலே ஜப்பான் பூட்ஸ். முகத்திலுள்ள மீசையை, வாயிலிருந்து ஊறும் எச்சிலைக் கொண்டு தடவித் தடவி முறுக்கிவிட்டுக் கொண் டிருந்தார்கள். எச்சிலைக் கூட ஒய்யாரமாகத்தான் துப்பினார்கள். உலகத்தையே மறந்தவர்களாய் இந்த இரு 'கனவான்' களும் பேசிக் கொண்டு வந்து குருட்டுப் பிச்சைக்காரனை வந்து மோதினார்கள். அவன் என்ன செய்வான் பாவம்! கட்டுத் தடுமாறிப் போய்ச் சாக்கடையில் விழுந்தான். எடுப்பார் யார்? ஆறுதல் சொல்லுவார் யார்? தானே எழுந்தான். பழையபடி 'பிச்சை கொடுங்களையா' என்று குரலெடுத்துக் கத்தத் தொடங்கினான். சாக்கடையிலே விழுந்து எழுந்தானாலும், குவளையிலிருந்த மூன்று காசுகளை மட்டும் அவன் போக்கடித்துக் கொள்ளவில்லை.

பிச்சைக்காரன் மீது மோதிய இரு 'கனவான்' களுக்கும் கோபம் வந்துவிட்டது.

'ஏண்டா குருட்டுப்பயலே! எங்கள் மீது வந்து ஏன் மோதினாய்?'

'சாமி, நான் கண்ணில்லாதவன்.

நீங்கள்தானே என் மீது வந்து விழுந்தீர்கள்'.

'கண்ணில்லாதவனுக்கு இங்கென்ன வேலை?'

'பிச்சை யெடுப்பது'.

மிகவும் முடுக்காகப் பதில் சொல்கிறு னென்று 'கனவான்' கள் நினைத்து விட்டார்கள். ஆனுல் அவன் களங்க மில்லாத சுபாவத்தோடு சொன்னுன் என்பது இவர்களுக்கு எப்படித் தெரியும்? இவனைப் பழி தீர்க்க வேண்டு மென்று தீர்மானித்தார்கள். என்ன செய்யலாம்? கன்னத்திலே இரண்டு அறை கொடுக்கலா மென்ருல், ரோட்டிலே போகிற வர்கள் வருகிறவர்கள் இவர்களைத்தானே பார்த்துச் சிரிப்பார்கள். எனவே ஒரு யுக்தி செய்தார்கள்.

'ஏ பயலே, போனுல் போகிறது. கண் தெரியாதவனுய் இருக்கிருய்; தள்ளாதவனுகவு மிருக்கிருய். ஒரு அணுவுக்குச் சில்லரை இருக்கிறதா? எங்களிடத்திலே காசுகளாக இல்லை.'

'மகாராஜரா இருக்க வேண்டும் நீங்கள். என் குவளையிலே மூன்று காசு இருக்கிறது. காலையி லிருந்து இதுவரை நான் சம்பாதித்த சம்பாத்தியம் இதுதான். இந்த மூன்று காசுகளை எடுத்துக் கொண்டு ஒரு அணுவாகப் போட்டீர்களானுல் மிகவும் புண்ணியமா யிருக்கும்.'

இரண்டு கனவான்களும் ஒருவருக்கொருவர் கண் சிமிட்டினுர்கள். இரண்டு பேருடைய முகத்திலும் புன்னகை பூத்தது. ஒருவன் மட்டும் கீழே குனிந்து சிரமப் பட்டு ஒரு சிறிய பருக்காங் கல்லை எடுத்து மற்ருெருவன் கையில் கொடுத்தான். அதை அவன் வாங்கி, பிச்சைக்காரனுடைய குவளையி லிருந்த மூன்று காசுகளையும் எடுத்துக் கொண்டு, அதில் 'லொட்' டென்று நன்ருக ஓசைப் படும்படியாக, குருடனுடைய காதிலே படும்படியாக போட்டான்.

பிச்சைக்காரன், ஆயிரம் வார்த்தைகளால் அவர்களை வாழ்த்தினுன். அந்த வாழ்த்துக்களை யெல்லாம் பெற்றுக் கொள்ள அவர்களுக்கு எங்கே அவகாசம் இருக்கிறது? கம்பி நீட்டினுர்கள் 'கனவான்' கள். அன்றைய சம்பாத்தியம் அவர்களுக்கு மூன்று காசு.

ஃ ஃ ஃ

இந்தக் கண்ட்ராவிக் காட்சிகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான் சங்கரன். தன்னுடைய துர்ப்பாக்கிய நிலைமையை மறந்து விட்டான். 'இதுதான் பிழைப்பா?' என்ற வாக்கியம் இவனை அறியாமலே இவன் வாயி லிருந்து வெளி வந்தது. 'பிழைப்புக்குத் திண்டாட வேண்டியதுதான்' என்று மஹாதேவன் சொன்ன வார்த்தைகளை விட, இந்தக் காட்சி—பிழைக்கும் வழி—இவன் மனதைப் பெரிதும் உறுத்திவிட்டது.

'இனி இந்த உலகத்திலே நமக்குப் பிழைக்க வழி யுண்டா? இப்படிப் பிழைப்பதை விட, மரணத்திலே அமைதி காண்பதில் எவ்வளவோ இன்பம் இருக்கிறதே' என் றெண்ணிக் கொண்டே கடற்கரைப் பக்கமாக நடந்தான்.

மறுநாள் பத்திரிகைகளில் 'வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக சங்கரன் என்ற 25 வயதுள்ள ஓர் இளைஞன் கடலில் விழுந்து மாண்டான். இவன் பிணம் ராயபுரம் கரையில் ஒதுக்கப் பட்டு சில செம்படவர்களால் கண்டு பிடிக்கப் பட்டது' என்ற விஷயம் வெளிவந்திருந்தது.

வேலையில்லாத காரணமாக இயமனுலகு சென்ற எத்தனையோ இளைஞர்களில் ஒருவனுகச் சங்கரனும் சென்றுவிட்டான். பிழைக்கும் வழி!

ஜெர்மனியின் கூக்குரல் நியாயமா?

இப்பொழுது உலகத்திலே ஏற்பட்டிருக்கிற அரசியல் நெருக்கடிகள், பொருளாதாரக் குழப்பங்கள், வல்லரசுகளுக்குள் பரஸ்பர சந்தேகங்கள் முதலியவற்றிற் கெல்லாம் காரணம் வார்சேல் ஒப்பந்தந்தான் என்று எல்லா ராஜ தந்திரிகளும் ஒப்புக் கொள்கிருர்கள். இந்த வார்சேல் ஒப்பந் தத்தையும் இதனடியாகப் பிறந்த சர்வ தேச சங்கத்தையும், ஐரோப்பாவி லுள்ள சர்வாதிகாரிகள் சிறிது கூட மதிக்க வில்லை. இந்தச் சர்வ தேச சங்கத்தின் பரிதாப நிலையை ஆதாரமாக வைத்துக் கொண்டுதான், இப்பொழுது ஜப்பான் சைனுவில் இத்தனை காலமாக அக்கிரமமாக நடந்து கொண்டு வருகிறது. ஹிட்லர் முஸோலினி ஆகிய இரு சர்வாதிகாரிகளும், ஐரோப்பிய யுத்தத்திற்கு முன்னுல் தங்களுக்குச் சொந்தமா யிருந்த குடி யேற்ற நாடுகளை யெல்லாம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டு மென்று கேட்கிருர்கள். இந்தக் கூக்குரல் வர வர அதிகமாகக் கொண்டுவரு கிறது. கிரேட் பிரிட்டனே, இவை யனைத்தையுங் கேட்டுங் கேளாதது போல் இருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் வார்சேல் சமாதான மகாநாடு நடை பெற்ற விதம், அங்கு நிறைவேற்றப்பட்ட உடன்படிக்கையி லுள்ள ஷரத்துக்களின் முக்கிய அமிசங்கள், இவை காரணமாக ஜெர்மனி இழந்த நாடுகள் முதலியவைகளை வாசகர்களுக்கு நினைவூட்டுவது நல்ல தென்று கருதி 'ஹிட்லர்' (பிரபஞ்ச ஜோதி பிரசுரம்—3) என்ற நூலி லிருந்து ஒரு சில பாகங்களைக் கீழே தருகிறேம்.

1878ம் வருஷம் ஜனவரி மாதம் 18ந் தேதி வார்சேலில் முதலாவது வில்லியம், ஜர்மன் ஏகாதிபத்தியத் தின் சக்ரவர்த்தியாக முடி சூட்டிக் கொண்டா னல்லவா? நாற்பத்தெட்டு வருஷங்களுக்குப் பின்னுல் அதே தினத்தில்—1919ம் வருஷம் ஜனவரி மாதம் 18ந் தேதி—வார்சேலில் சமாதான மகாநாடு கூடியது. உலகத் தாருடைய கவனமெல்லாம் இங்கே திரும்பியது. யுத்தத்திலே கலந்து கொண்ட நாடுகள், கலவாமலிருந்த நாடுகள், சுதந்திரத்திற்காகப் போரா டிக் கொண்டிருக்கிற எகிப்து, ஐர் லாந்து போன்ற நாடுகள், எல்லாம் இதில் கலந்துகொண்டன. புதிய நாடு களை வகுத்துக் கொள்ள ஆவல் கொண்டிருந்த பலரும் இங்கு வந்து கூடினர். என்ன ஆர்ப்பாட்டம்! எவ்வளவு தடபுடல்! நவயுகம் பிறந்து விட்டதாகவே இவர்கள் கருதினுர்கள். ஆனுல் யாருக்கு?

இந்த மகாநாட்டிற்கு ஜெர்மன்பிரதி நிதிகள் வரவழைக்கப் பெறவில்லை. வெற்றி யடைந்தவர்கள் பங்கு போட்டுக் கொண்டிருக் கிருர்கள்; தோல்வி யடைந்தவர்கள் வந்து நிற்க என்ன உரிமை இருக்கிறது? இவர் களுடைய கையெழுத்து தேவையா யிருந்தபொழுது இவர்கள் வரவழைக் கப் பெற்ருர்கள்.

மகாநாட்டுப் பிரதிநிதிகள் அனை வரும் தினந்தோறும் ஒன்று கூடி காரியங்களைச் சரளமாக நடத்துவது அசாத்தியமா யிருந்தது. எனவே பல விஷயங்களைப்பற்றிப் பரிசீலனை செய்யத் தனித் தனிக் கமிட்டிகள் நியமிக்கப் பெற்றன. இவற்றிற்கு மேலாக நிருவாக சபை. அமெரிக்கா, கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், இத் தலி, ஜப்பான் ஆகிய ஐந்து வல்லரசு களின் பிரதிநிதிகள் அடங்கியதே இந்த நிருவாக சபை. ஒவ்வொரு வல்லரசுக்கும் இரண்டு பிரதிநிதிகள்

விதம் நிர்ணயிக்கப் பட்டிருந்தது. இவர்கள் ஒற்றுமையான முடிவுக்கு வர முடியவில்லை. எனவே இந்தப் பத்துப் பேரும் ஐந்து பேராகச் சுருங்கினர். இவர்கள் தான் மகாநாட்டின் சூத்திரக் கயிற்றைப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த ஐவராலும் ஒன்றுபட்டிழுக்க முடியவில்லை. எப்படி முடியும்? பங்கு போட்டுக் கொள்வதில் கூட சிறிது விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வேண்டாமா? சில நாட்களில், ஜப்பான் மெதுவாக நழுவி விட்டது. நால்வரே நடத்திப் பார்த்தனர். இன்னும் சிறிது காலங் கழித்து இத்தலியும் ஒதுங்கிக் கொண்டது. எனவே அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய மூன்று நாடுகளின் பிரதிநிதிகளான வில்ஸன், லாயிட் ஜார்ஜ், கிளெமென்ஷோ ஆகிய மூவராலும் ஆட்டி வைக்கப்பெற்ற பாவையாகவே மகாநாடு விளங்கியது. யுத்தத்தினால் உலகத்திற்கு ஏற்பட்ட புண்களை ஆற்றுதலும், சகோதரத்துவம், சமத்துவம், சமாதானம் நிறைந்த புதிய உலகத்தைச் சிருஷ்டித்தலும் இவர்கள் பொறுப்பாயிருந்தது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு மனித உள்ளமும் தெய்வீக சக்தியின் தொடர்பும் வேண்டுமல்லவா? ஆனால் இந்த மூன்று பேரிடத்திலும் இவையிரண்டும் சூனியமாயிருந்தன. தாங்



யுத்தத்திற்கு முன்னிருந்த ஜெர்மனியும் பின்னர் உள்ள ஜெர்மனியும்

கள் சாதாரண ராஜ தந்திரிகள் என்பதை இவர்கள் நிரூபித்து விட்டார்கள். வீழ்ந்து விட்ட ஜெர்மனியை எப்படிக் குழி வெட்டிப் புதைப்பது என்பதுதான் இவர்கள் முக்கிய நோக்கமாயிருந்தது.

இந்த மூவரும் ஒருவரை யொருவர் பிடித்திழுத்தார்கள்; இம்மூவரையும் மற்றவர்கள் பிடித் திழுத்தார்கள். வாதங்கள் நடைபெற்றன; ஊடல்கள் நிகழ்ந்தன; பிணக்குகள் குறுக்கிட்டன. கடைசியில் ஒருவிதமாகச் சமாதான உடன்படிக்கையைத் தயாரித்தார்கள். இந்த உடன்படிக்கை 440 பிரிவுகளைக் கொண்டது. இதிலே வெற்றி பெற்றவர்கள் கிளமென்ஷோவும் லாயிட் ஜார்ஜூம் தான். சர்வ தேச சங்கத்தின் சிருஷ்டிகர்த்தன் என்பதோடு வில்ஸன் திருப்தியடைந்து விட்டான். உடன்படிக்கையில் கையெழுத்திடுமாறு, பின்னரே ஜெர்மானியப் பிரதிநிதிகள் வரவழைக்கப் பெற்றார்கள்.

இந்தச் சமாதான உடன்படிக்கையில் காணப்பெற்ற நிபந்தனைகள் யாவை? இவற்றை அப்படியே இங்கு விஸ்தரித்துக் கொண்டு போதல் முடியாத காரியம். ஆதலின் இந்த நிபந்தனைகளால், பூகோள படத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் ஜெர்மனியின் மீது சுமத்தப்பெற்ற பொறுப்புக்களையும் மட்டும் இங்கு கவனிப்போம். உலக சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காக, சர்வ தேச சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. சுதந்திர நாடுகள் யாவும் இதில் அங்கத்தினராயிருக்கலாம் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஜெர்மனிக்குச் சொந்தமா யிருந்த ஆல்சேஸ்—லோரெயின் பிரதேசங்கள் பிரான்சுக்குப் போய்ச் சேர்ந்தன. யூபென், மால்மெடி ஜில்லாக்கள் பெல்ஜியத்தைச் சென்றடைந்தன. லோரெயின் ஜில்லாவுக்கு அடுத்தாற்போலிருந்த ஜார் பிரதேசம்* பதினைந்து வருஷம் வரை, சர்வ தேச சங்கத்தின் நிருவாகத்துக்குட் படுத்தப்பெற்றது. இந்தக் காலத்தில் ஜார் பிரதேசத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களின் அநுபவ பாத்தியதை பிரான்ஸைச் சேர்ந்தது. யுத்தத்தில் தலையிடாமலிருந்ததற்காக, டென் மார்க்குக்கு ஜெர்மனியின் வட பாகத்திலுள்ள ஷ்லெஸ்விக் பிரதேசம் கொடுக்கப்பெற்றது.

ஜெர்மனியின் கிழக் கெல்லையிலிருக்கிற மெமல் பிரதேசம், முதலில் சர்வ தேச சங்கத்தின் நிருவாகத்திற்குட்படுத்தப் பெற்று 1923ம் வருஷம் லிதுனியாவைப் போய்ச் சேர்ந்தது. மேற்கு ப்ரஷ்யாவின் பெரும் பாகமும் போஸன் ஜில்லாவும் போலந்து என்னும் தனி நாடாக உருக்கொண்டது. ஸிலிஷியா என்னும் பிரதேசத்தை இருதுண்டாக வெட்டி ஒன்றை போலந்துக்கும் மற்றொன்றை ஜெக்கோ ஸ்லோவேகியாவுக்கும் கொடுத்தார்கள். போலந்து நாட்டுக்குச் சமுத்திரத்தோடு தொடர்பு இருக்க வேண்டுமென்று சொல்லி, கிழக்கு ப்ரஷ்யாவுக்கும் ஜெர்மனியிலுள்ள போமெரேனியா மாகாணத்திற்குமிடையே 754 சதுர மைல் விஸ்தீரணமுள்ள டான்ஸிக் பிரதேசம் சுதந்திரப் பிரதேச மாக்கப்பட்டது. போலந்தின் துறைமுகமாக இது கருதப்பெற்று வருகிறது. கீல் வாய்க்கால், சர்வ தேசங்களுக்கும் பொதுவானதென்று நிர்ணயிக்கப் பட்டது. ஜெர்மனியினுடைய மேற் கெல்லைப்புறத்தின் பெரும் பாகத்தில் ஜெர்மானியத்

* 1935ம் வருஷம் எடுக்கப்பெற்ற பொது ஜன வாக்கின்படி இந்தப் பிரதேசம் ஜெர்மனிக்குப் போய் சேர்ந்தது.

துருப்புகள் நிரந்தரமாக இருக்கக் கூடாதென்று அறிவிக்கப்பெற்றது. ஜெர்மனிக்குச் சொந்தமாயிருந்த குடியேற்ற நாடுகள் யாவும் அதனின்றும் பிடுங்கப்பட்டன. ஆப்ரிக்கா கண்டத்திலிருந்த பிரதேசங்களை, பிரான்ஸ், பெல்ஜியம், கிரேட் பிரிட்டன் ஆகிய மூன்று வல்லரசுகளும் பங்கிட்டுக் கொண்டன. சீனவுக்குச் சமீபத்திலிருந்ததும் ஜெர்மனிக்குச் சேர்ந்திருந்தது மான ஷாண்டங், கியாசௌ பிரதேசங்கள் ஜப்பானுக்கு அளிக்கப்பட்டன. எகிப்து, சயாம், ஸிபீரியா, மொராக்கோ, சைன, துருக்கி, பல்கேரியா முதலிய நாடுகளில் ஜெர்மனிக்கென்று இருந்த உரிமைகள் யாவும் பறிமுதல் செய்யப்பட்டன. ஜெர்மனி, ஒரு லட்சம் துருப்புகள், பன்னிரண்டு நாசகாரிக் கப்பல்கள், ஆறு யுத்தக் கப்பல்கள் முதலியவைகளுக்குமேல் வைத்திருக்கக் கூடாதென்றும் ஆகாயப்படையே இருக்கக் கூடாதென்றும் வரையறுக்கப்பட்டது. யுத்தத்திற்காக ஏற்பட்ட செலவுகளையும், அதனல் உண்டான நஷ்டத்தை ஈடுபடுத்துவதற்கு வேண்டிய செலவு தொகையையும் ஜெர்மனியின் மீது சுமத்திஞர்கள். தவிர, ஜெர்மனியின் ரயில்வேக்கள், துறைமுகங்கள் முதலியவை சம்பந்தமாகவும் சில ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

இதற்குத்தான் சமாதான உடன்படிக்கை என்று பெயர். இந்த உடன்படிக்கையைத் தயாரித்தவர்கள் ஜெர்மனியின் சக்தியைப் பற்றியோ, அதன் உள்நாட்டு நிலைமையைப்பற்றியோ சிறிதும் சிந்தித்தாரில்லை. நேசக் கட்சியினர், மேற்கூறிய சமாதான உடன்படிக்கையைத் தயாரித்து வைத்துக் கொண்டு அதில் கையெழுத்திடுவதற்காக வருமாறு ஜெர்மானியப் பிரதிநிதிகளுக்குத் தாக்கீது அனுப்பிஞர்கள்.

ஃ ஃ ஃ

ஜெர்மானியப் பிரதிநிதிகள் வந்து சேர்ந்ததும், அவர்களிடம் ஏற்கனவே தயாரிக்கப் பட்டிருந்த சமாதான உடன் படிக்கையை நேசக் கட்சியார் நீட்டிஞர்கள். அதன் மீது எதேனும் 'வியாக்கியானம்' செய்வதாயிருந்தால் செய்யலாம் என்றும் கூறிஞர்கள். என்ன தாராள மனப்பான்மை! இந்தச் சடங்கு மே மாதம் 7ந் தேதி நடைபெற்றது. அப்பொழுது ஜெர்மன் பிரதிநிதிக் கூட்டத் தலைவனன கவுண்ட் ப்ராக்டார்ப் ராண்ட்ஸௌ தன் ஆசனத்தில் உட்கார்ந்திருந்த படியே பின் வருமாறு பேசினன்:—

'நாங்கள் எம்மட்டில் தோல்வியடைந்திருக்கிறேமென்பதைப் பற்றியோ, எங்களுடைய பலஹீனம் எவ்வளவில் இருக்கிறதென்பதைப் பற்றியோ எங்களுக்கு எவ்வித சந்தேகமுமில்லை. ஜெர்மனியின் ராணுவ பலம் முறியடிக்கப் பட்டுவிட்டதென்பதை அறிவோம். நாங்கள் எத்தகைய துவேஷத்தின் கொடுமையினல் வரவேற்கப் பட்டிருக்கிறேம் என்பதையும் உணர்வோம். யுத்தம் செய்த குற்றத்தின் முழுப் பொறுப்பையும் நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறுகிறீர்கள். என்னுடைய வாயிலிருந்து அத்தகைய வார்த்தைகள் வருமானல் அது பொய் சொன்னதேயாகும். யுத்தத்திற்குமுன்னர் ஜெர்மன் அரசாங்கத்தின் மனப்பான்மை, 1914ம் வருஷம் ஜுலை மாதம் அது செய்து கொண்ட தீர்மானங்கள், அது நிறைவேற்றுத காரியங்கள் ஆகிய இவையாவும் சேர்ந்து யுத்தம் ஏற்பட்டதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். ஆனல், ஜெர்மானியர்கள்

தற்காப்புக்காகவே இந்த யுத்தத்தைச் செய்ததாக நம்புகிறார்கள். ஆதலின் யுத்தத்தின் முழுப் பொறுப்பையும், ஜெர்மனியின் மீது சுமத்தக் கூடாதென்று நாங்கள் வாதிக்கிறோம். ஆஸ்திரிய இளவரசனின் கொலைக்குப் பிறகே இந்தக் கோர யுத்தம் கிளம்பியதென்று நாங்கள் கூறவில்லை. ஐம்பது வருஷ காலமாகவே ஏகாதிபத்திய எண்ணமானது ஐரோப்பிய நாடுகளின் சம்பந்தத்தை விஷப்படுத்தியிருக்கிறது. வன்ம புத்தி, நாடுகளைப் பெருக்க வேண்டுமென்ற ஆசை, சுய நிர்ணய உரிமைகளைப் புறக்கணித்தல் ஆகிய அனைத்தும், யுத்தநெருக்கடிக்குக் காரணங்களாகச் சேர்ந்தன. சில பிரதேசங்களுக்கு எங்களால் சேதம் உண்டாயிற்றென்பதை நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். அதற்கான பரிகாரங்களைச் செய்து தரவும் நாங்கள் தயார். ஆனால் ஜெர்மனி மட்டும் யுத்தத்திற்குப் பொறுப்பாளி என்று சொல்லாதீர்கள். எங்களை மட்டும் வெள்ளைக் காகிதத்திலே நிறுத்திப் பார்க்க வேண்டுமென்று விரும்புவீர்களாயின், யுத்த நிறுத்த நிபந்தனைகளை மறந்து விடாதீர்கள். 1918ம் வருஷம் நவம்பர் மாதம்



யுத்தத்திற்கு முன்னர் ஆப்ரிக்கா கண்டத்தில் ஜெர்மனிக்குச் சொந்தமாயிருந்த பிரதேசங்கள். அம்புக் கோடுகளிட்ட நாடுகளுக்கு இவை முறையே போய்ச் சேர்ந்தன,

11ந் தேதிக்குப் பிறகு கூட, ஜெர்மனிக்குள் உணவுப் பொருள்கள் செல்லக் கூடாதென்று செய்த தடையினால் லட்சக் கணக்கான ஜனங்கள் மாண்டுபோனார்கள். வெற்றி கொண்ட பிறகும் இவர்கள் கொலையே செய்யப் பட்டார்கள். குற்றம், தண்டனை என்ற வார்த்தைகளைச் சொல்லும் போது இதனை நினைத்துப் பாருங்கள். பட்ச பாதமற்ற ஒரு விசாரணை நடத்தப் பட வேண்டும். இந்தச் சம்பவத்திலே கலந்து கொண்ட எல்லாரும் ஆஜராகக் கூடிய ஒரு கமிஷன் நியமிக்கப் பட வேண்டும். இந்தக் கமிஷனருக்கு யுத்த சம்பந்தமான எல்லா தஸ்தாவேஜுகளும் கிடைக்குமாறு செய்ய வேண்டும். அப்பொழுதுதான் இந்த யுத்த நாடகத்திலே கலந்து கொண்ட நடிகர்களுடைய பொறுப்பின் அளவை நிர்ணயிக்க முடியும்.'

ஜெர்மானியர்கள் உடன் படிக்கையைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார்கள்; படித்தார்கள். பிரசிடெண்ட் வில்ஸன் கூறிய பதினான்கு தத்துவங்களுக்கும், இந்த உடன்படிக்கையிலுள்ள நிபந்தனைகளுக்கும் எவ்வித ஒற்றுமையும் காணோமே என்று பெருமூச்சு விட்டார்கள்! ஆயினும் என்ன செய்வது? தங்களுக்குள் கலந்து ஆலோசித்தார்கள். சில மாற்றங்களைச் செய்து தருமாறு கேட்டார்கள். ஆல்சேஸ்—லோரெயின் பிரதேசத்தை பிரான்ஸ் எடுத்துக்கொள்வதைப் பற்றி ஒரு பொது ஜன வாக்கு எடுக்கப் பெற வேண்டும். டான்ஸிக், மெமல், கோனிக்ஸ்பர்க் ஆகிய மூன்றும் சுதந்திரத் துறைமுகங்களாக இருக்க வேண்டும். ஜார் பிரதேசத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களின் அநுபவ பாத்தியதையை பிரான்ஸ் எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, வருஷந் தோறும் குறிப்பிட்ட ஒரு தொகையை ஜெர்மனி வசூலித்துக் கொள்ள வேண்டும். இப்படியாகச் சில மாற்றங்களை இவர்கள் கோரினார்கள். யாவும் மறுக்கப் பட்டன. சர்வதேச சங்கத்தில் ஜெர்மனியை உடனே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். நிராகரிக்கப் பட்டது. ஜெர்மனியின் ராணுவ பலத்தைக் குறைக்குமாறு கூறியுள்ளது போல், நேசக் கட்சியாருடைய ராணுவ பலத்தையும் இரண்டு வருஷத்திற்குள் குறைக்க வேண்டுமென்று கேட்டார்கள். முடியவே முடியாதென்று பதில் கிடைத்தது. இன்னும் சில மாற்றங்களைக் கேட்டுப் பார்த்தார்கள் ஜெர்மானியர்கள். அவர்களுடைய கண்ணைத் துடைப்பதற்காக அங்கும் இங்கும் சில மாறுதல்களை—முக்கியமில்லாத மாறுதல்களை—செய்து கொடுத்தார்கள் நேசக் கட்சியார். கடைசியில், ஜூன் மாதம் 16ந் தேதி திருத்தப் பட்ட இந்த உடன்படிக்கையை, ஜெர்மானியப்பிரதிநிதிக் கூட்டத்தின் தலைவனான ராண்ட்ஸௌ என்பவனிடம் கொடுத்து, இன்னும் ஒரு வாரத்திற்குள் இதனை அப்படியே அங்கீகரித்து இதில் கையெழுத்திடா விட்டால், நேசக் கட்சித் துருப்புகள், ஜெர்மனி மீது படையெடுக்கப் புறப்படும் என்ற சந்தோஷகரமான செய்தியையும் தெரிவித்தனர். ஜெர்மன் பிரதிநிதிக் கூட்டத்திற்கும், பெர்லினிலிருந்த ஜெர்மன் அரசாங்கத்திற்கும் தந்திப் போக்குவரத்து துரிதமாக நடைபெற்றது. இந்தக் கேவலமான உடன்படிக்கையில், தான் கையெழுத்திட முடியாதென்று சொல்லி, தன் பதவியை ராஜீநாமா செய்து விட்டான், பிரதிநிதிக் கூட்டத்தின் தலைவனான

ருமேனியாவில் நெருக்கடி ஏற்பட்டதேன்?

—தே. ஏகாம்பரம்

ருமேனியாவில் ஏதோ அரசியல் நெருக்கடி ஏற்பட்டதென்றும், அங்கு யூதர்கள் ஹிம்சிக்கப் படுகிறார்களென்றும் பத்திரிகைகளில் படித்திருக்கிறோம். ஆனால் இந்த நெருக்கடி ஏற்பட்டதேன், இதன் விளைவுகள் என்ன என்பவைகளைப்பற்றி "ஜோதி" வாசகர்களுக்குத் தெரிவிப்பது நலம் என்று கருதி இந்தச்சிறு வியாசத்தை எழுதலானேன்.

ருமேனியா என்ற சுதந்திர நாடு ஐரோப்பா கண்டத்தின் தென்கிழக்கு மூலையில் இருக்கிறது. கருங்கடலுக்கு மேற்கிலும், ருஷ்யா, போலந்து இவைகளுக்குத் தெற்கிலும் இந்த நாடு இருக்கிறது. ஐரோப்பிய மகாயுத்தத்தினால் விஸ்தீரணத்திலும் அரசியல் செல்வாக்கிலும் லாபமடைந்த நாடுகளுள் இதுவுமொன்று. ஐரோப்பிய யுத்தத்திற்கு முன்னர் இந்த நாட்டின் விஸ்தீரணம் 73,794 சதுர மைல். இப்பொழுது இதன் விஸ்தீரணம் 122,282 சதுர மைல். நிருவாக சௌகரியத்திற்காக ருமேனியா, ஏழு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாகாண அதிகாரிக்கும் டைரெக்டர் என்று பெயர். ருமேனியாவின் தலைநகரம் புகாரெஸ்ட் என்பது. 1861ம் வருஷம் முதற்கொண்டு, ருமேனியா சுதந்திர நாடாகவே இருந்துகொண்டு வந்திருக்கிறது.

1914ம் வருஷம் ஐரோப்பிய யுத்தம் தொடங்கப்பட்ட காலத்தில் ருமேனியா, எந்தக் கட்சியிலும் சேராமல் நடுநிலைமையே வகித்தது. ஆனால் யுத்தத்தின் மத்தியில்—அதாவது 1916ம் வருஷம் ஆகஸ்ட் மாதம்

ராண்ட்சௌ. அப்பொழுது ஜெர்மன் குடியரசின் தலைவனாயிருந்தவன், அபேதவாத ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஈபர்ட் என்பவன். இவன் ஆலோசித்தான். யுத்த நிறுத்தம் ஏற்பட்டு ஆறு மாதங்களுக்கு மேலாகியும், ஜெர்மனிக்குள் உணவுப்பொருள்கள் வரக்கூடாதென்று போட்டிருந்த தடையை இன்னும் நேசக் கட்சியார் நீக்கவில்லை. இதனால் ஜெர்மனியில் ஏற்பட்டுள்ள நஷ்டங்கள் சொல்லத் தரமன்று. இந்த நிலையில் நேசக் கட்சித் துருப்புகளும் படையெடுத்து வந்தால் என்ன செய்வது? எனவே, வேறு வழியில்லை. உடன்படிக்கையில் கையெழுத் திடுமாறு உத்திரவு செய்தான். ஜெர்மன் பிரதிநிதிகள் கடைசி முறை, 'யுத்தத்திற்கு ஜெர்மனிதான் பொறுப்பாளி' என்றிருந்த பிரிவை ரத்து செய்துவிட பிரயத்தனம் செய்து பார்த்தார்கள்; முடியவில்லை.

1919ம் வருஷம் ஜுன் மாதம் 28ந் தேதி, வார்சேலில் 'கண்ணாடி ஹாலில்' சமாதான உடன்படிக்கை கையெழுத்திடப் பெற்றது. இதில் கையெழுத் திட்டவர்கள் எல்லோரும் தங்கள் முகங்களை, அங்கிருந்த கண்ணாடிகளில் நன்கு பார்த்துக் கொண்டார்கள். ஆனால் இவர்கள் எத்தனை பேர், அதே சமயத்தில் தங்களுடைய மனச் சாட்சிகளையும் தொட்டுப் பார்த்துக் கொண்டார்களோ தெரியாது.

27ந் தேதி—ருஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு ஆஸ்திரியா—ஹங்கேரியுடன் யுத்தம் தொடுத்தது. பிறகு, 1917ம் வருஷம் ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தில் ருமேனியாவும் சேர்த்துக் கொள்ளப்பட்டு, யுத்தத்தை மேற்கொண்டு நடத்தாமல் நிறுத்தப்பட்டது. மறுபடியும் மோல்டேவியா என்ற பிரதேசத்தைத் தன்னுடன் சேர்த்துக் கொள்ளவேண்டு மென்ற ஆசையால் ருஷ்யாவுடன் போர் தொடங்கியது. ஆனால் ருஷ்யா, இதற்கு இடங்கொடுக்கவில்லை. இதனால் ஜெர்மனியுடன் சேர்ந்துகொண்டு மறுபடியும் ருஷ்யா மீது யுத்தம் ஆரம்பித்தது. இந்த யுத்தம் நீடித்து நடைபெறவில்லை. கடைசியில் வார்சேல் ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில், ருமேனியாவும் யுத்தத்தை நிறுத்திக் கொண்டது. ருமேனியாவை ஒரு சிறிது காலம் ஆக்ரமித்துக் கொண்டிருந்த ஜெர்மானியர்கள் 1919ம் வருஷம் டிசம்பர் மாதம் முதல் தேதி ருமேனியாவினின்று சென்று விட்டார்கள்.

ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்த காலத்தில் ருமேனிய அரசனாயிருந்தவன் சார்லஸ் என்பவன். இவன் 1914ம் வருஷம் அக்டோபர் மாதம் இறந்து விட்டான். இவனுக்குப் பிறகு பெர்டினந்து என்பவன் பட்டத்துக்கு வந்தான். இவன் 20—7—1927ல் இறந்து போனான். இவனுடைய மகனான காரோல் என்பவன், தனக்குப் பட்டம் வேண்டாமென்று 1925ம் வருஷத்திலேயே துறந்து விட்டான்; இதனால் தேசப்பிரஷ்டமும் செய்யப் பட்டான். இவனுடைய மகனை—அதாவது பெர்டினந்தின் பேரப் பிள்ளையான ஐந்து வயதடைந்த மைக்கேல் என்பவன் முடி சூட்டப்பட்டான். இவன் சிறுபையனாயிருந்தபடியால், ஒரு சில பிரமுகர் சேர்ந்துகொண்டு 'ரீஜன்ஸி கவுன்சில்' என்ற பெயருடன் ராஜ்ய நிருவாகத்தை நடத்தி வந்தார்கள். ஆனால், 1930ம் வருஷம் ஜூன் மாதம் 6ந் தேதி, பொதுஜன விருப்பத்திற்கிணங்க காரோல் மன்னன் மறுபடியும் நாட்டுக்குத் திரும்பி வந்து 9—6—1930ல் செங்கோல் பிடித்துக் கொண்டான். 'ரீஜன்ஸி கவுன்சிலு'ம் ராஜீநாமா செய்து விட்டது. இதன் காரணமாக அரசனாக முடி சூட்டப்பட்ட மைக்கேல் இளவரசனானான்.

ருமேனியாவில் இரண்டு அரசியல் கட்சிகள் உண்டு. ஒன்று லிபரல்கட்சி. ப்ரேடியானு (Bratianu) என்ற ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள், முதலில் இந்தக் கட்சியைத் துவக்கினார்கள். இந்தக் கட்சியினர் தான், ஐரோப்பிய மகா யுத்தத்தின் போது அரசாங்க நிருவாகத்திலிருந்தார்கள். ருமேனியாவின் நிலப்பரப்பு விஸ்தீரணமடைந்ததற்கு இந்தக் கட்சியினரே காரணர்களாயிருந்தார்கள். இப்பொழுது இந்தக் கட்சிக்குத் தலைவராயிருப்பவர், மேற்படி சகோதரர்களில் மூன்றுமவரான எம். தீனு ப்ரேடியானு (M. Dinu Bratianu) என்பவர். இந்த லிபரல் கட்சியானது, வியாபாரிகள், ராணுவ வர்க்கத்தினர், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஆகிய சமுதாயத்தின் மேற்படியிலுள்ளவர்களுடைய கட்சியாகவே எப்பொழுதும் இருந்து வந்திருக்கிறது. இதனால் நாட்டிலே தனக்கு அதிகமான செல்வாக்கு இருக்கிற தென்று காண்பித்துக் கொள்ளக்கூடிய சக்தியும் சாதனங்களும் இதற்கு இருந்தன.

இதற்கு எதிர்க் கட்சியா யுள்ளது 'தேசீய குடியானவர் கட்சி.' இதற்கு ஜாரனிஸ்ட் (Tsaranist) கட்சி என்றும் பெயர். ஐரோப்பிய யுத்தத்திற்கு முன்னிருந்த குடியானவர் கட்சியும், ருமேனியாவின் ஒரு மாகாணமாகிய டிரான்ஸில் வேனியாவிலிருந்த ருமேனிய தேசீயக் கட்சியும் சேர்ந்ததே இந்த 'தேசீய குடியானவர் கட்சி.' இந்த ஐக்கியக் கட்சியின் தற்போதைய தலைவன் எம். மேனியு (M. Maniu) என்பவன்.

ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு, இந்த இரண்டு கட்சியினருமே மாறி மாறி அரசாங்க நிருவாகத்தை ஏற்று நடத்தி வந்திருக்கிறார்கள். ஆனால், லிபரல் கட்சியினர்தான் அதிக காலம் நிருவாகத்தி லிருந்திருக்கிறார்கள். தேர்தலில் வாக்காளர்களின் பெரும்பான்மையான ஓட்டுகள் பெற்று அதன் மூலமாக அரசாங்க நிருவாகத்தை இந்த இரு கட்சியினரும் ஏற்றுக் கொண்டார்கள் என்று சொல்ல முடியாது. ருமேனியாவில், தேர்தல்களின் விளைவாக அரசாங்கம் உற்பத்தியாகிற தென்பதில்லை. அரசாங்கம்தான், தேர்தலை உற்பத்தி செய்கிறது. இரண்டு கட்சிகளிலுமுள்ள பிரமுகர்கள் கலந்தாலோசித்து, 'ஒரு கட்சியினர் மட்டும் உத்தியோக இன்பத்தை நுகர்தல் பொருந்தாது; மற்றொரு கட்சிக்கும் சிறிது காலமாவது சந்தர்ப்பம் கொடுப்போம்' என்ற பரஸ்பர சம்மதத்தின் பேரில்தான் ஒவ்வொரு கட்சியினரும் அரசாங்க நிருவாகத்திலிருந்திருக்கிறார்கள்.

காரோல் மன்னனை, தேச ப்ரஷ்டம் செய்வித்தது லிபரல் கட்சியினர்தான். அதற்குப் பிறகு இவர்கள், தேசத்தில் தங்கள் ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்ள முயற்சி செய்தனர். 1930ம் வருஷம் தேசீயக் குடியானவர் கட்சியினர் அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொண்டிருந்த போது, காரோல் மன்னனை நாட்டிற்குத் திருப்பி யழைத்தார்கள். இதன் மூலமாக, லிபரல் கட்சியின் செல்வாக்கை உடைத்து, ஜனங்களின் அபிமானத்தை அரசன் பெயரைச் சொல்லிப் பெறலாம் என்பது இந்த குடியானவர் கட்சியாரின் நோக்கம். ஆனால் இந்தக் கட்சியின் தலைவனான எம். மேனியு என்பவனுக்கும், காரோல் மன்னனுக்கும் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன. காரோல் மன்னன், ராணுவத்தின் துணை கொண்டு இராஜ்யத்தை ஆள வேண்டுமென்று தீர்மானங் கொண்டான்! இதற்காக, அரசியல் கட்சிகளிடையே பிரித்தாளும் முறையைக் கையாண்டான். மேற் கூறப்பட்ட இரண்டு கட்சிகளிலும் தலைவர்களைப் புறக்கணித்து விட்டு, சாதாரண ஒரு பேர்வழிக்குப் பொறுப்பான பதவியைக்கொடுத்து அதன் மூலமாக, கட்சியினின்று பிரிந்து வேறு கட்சியமைக்கத் தூண்டுவது போன்ற முறைகளை காரோல் மன்னன் சர்வ சாதாரணமாக அநுஷ்டித்து வந்தான். உதாரணமாக, 45 நாள் சர்வாதிகாரியாயிருந்த எம் கோகா (M. Goga) என்பவன், முன்னர் தேசீயக் குடியானவர் கட்சியைச் சேர்ந்தவன். பின்னர், அரசனுடைய ஆதரவு பெற்று ஒரு தனிக் கட்சியை ஆரம்பித்து விட்டான். இப்படியே,லிபரல்கட்சியிலிருந்து எம்.டாடரெஸ்க்யு (M. Tatarescu) என்பவனையும் தனியாகப் பிரித்துப் புதியதொரு கட்சியமைக்குமாறு செய்வித்தான்.

மேலே கூறப்பட்ட இரண்டு கட்சிகளைத் தவிர, 'இரும்புக் காவலர்

படை' (Iron Guards) என்றொரு கட்சி இருக்கிறது. ஜப்பானில் 'ப்ளாக் ட்ராகன் சொஸைடி' (Black Dragon Society) என்ற சங்கத்திற்குச் சமமாக இதனைச் சொல்லலாம். இந்த 'இரும்புக் காவலர் படை'யினர் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்குப் பலாத்காரத்தை உபயோகிக்கக் கொஞ்சமும் பின் வாங்க மாட்டார்கள்.

இவர்கள் தவிர, அரண்மனைக் கட்சி யென்றொரு கட்சி உண்டு. இது அரசு கட்டிலைச் சூழ்ந்து கொண்டு, தேச நிருவாகத்தில் அடிக்கடி தலையிட்டும், தங்களை ஸ்தோத்திரம் செய்கிறவர்களுக்கு ஆதரவு காட்டியும் வருகின்றது.

இனி சமீப சம்பவங்களைச் சிறிது கவனிப்போம். 1937ம் வருஷம் டிசம்பர் மாதம் 27ந் தேதி தேர்தல் நடைபெற்றது. இதில் லிபரல் கட்சியினர், பெரும்பான்மையான ஸ்தானங்கள் பெறாமல் தோல்வியடைந்து விட்டனர். இதனை ஏற்கனவே ஒருவாறு தெரிந்து கொண்டிருந்த தேசீயக் குடியானவர் கட்சியினர், தேர்தலுக்கு முன்னரேயே அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொள்ள விரும்பினர். ஆனால் இந்தக் கட்சியின் தலைவனான எம். மேனியு என்பவனுக்கும் காரோல் மன்னனுக்கும் பிடித்தமில்லை யல்லவா? எனவே, இந்தக் கட்சியினர் மேனியுவை நீக்கி விட்டு, எம். மிக்காலாகே (M. Michalache) என்பவனைத் தலைவனாகத் தெரிந்தெடுத்தனர். இதன் மூலமாக அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொண்டு விடலாமென்று மேற்படி தேசீயக் குடியானவர் கட்சியினர் நினைத்தனர். இவர்கள் எதிர் பார்த்தபடியே, காரோல் மன்னன், எம். மிக்காலாகாவை மந்திரிச் சபை அமைக்குமாறு கேட்டான். ஆனால் மிக்காலாகா, தன் நண்பனான வைடா ஓய்வோட் (M. Vaida-Voevod) என்பவனுக்கும் மந்திரிச் சபையில் ஓர் இடம் கொடுக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனை கேட்டான். தேசியக் குடியானவர் கட்சியினர், இந்த வைடா ஓய்வோடை, பெரிய துரோகி யென்று வெறுத்து வந்தனர். மிக்காலாகா கேட்ட நிபந்தனைக்கு அரசன் இணங்க முடியாதென்று மறுத்துவிட்டதனால், லிபரல் கட்சியைச் சேர்ந்த டாடாரெஸ்கியு என்பவனை, மந்திரிச் சபை அமைக்குமாறு அரசன் அழைப்பித்தான். டாடாரெஸ்கியு, வைடா ஓய்வோட்டின் உதவியைக் கொண்டு, மந்திரிச் சபை அமைத்து தேர்தலையும் நடத்தத் தொடங்கினான்.

முன் கூறியபடி 1937ம் வருஷம் டிசம்பர் மாதம் 27ந் தேதி தேர்தல் நடைபெற்றது. எதிர் பார்த்தபடி, லிபரல் கட்சியினருக்குப் பெரிய சறுக்கல் ஏற்பட்டது. மொத்த ஓட்டுகளிலே, 100க்கு 40 விகிதம் எந்தக் கட்சியினருக்குக் கிடைக்கிறதோ, அந்தக் கட்சியினர், மந்திரிச் சபை அமைக்கும் உரிமையுடையவர் என்பது ருமேனிய சட்டம். ஆனால் லிபரல் கட்சியினருக்கு இந்தத் தேர்தலில் 100க்கு 36 விகிதமே ஓட்டுகள் கிடைத்தன. தேசீயக் குடியானவர் கட்சியினருக்கு 100க்கு 20 விகிதமே ஓட்டுகள் கிடைத்தன. இதனால் இவர்கள் ஆத்திரமடைந்து, இரும்புக் காவலர் படைக் கட்சியினருடன் கூட்டு ஒப்பந்தம் செய்து கொண்டு, மேனியு என்பவனை மந்திரிச் சபை அமைக்குமாறு ஏற்பாடு செய்தார்கள். ஆனால் மேனியு என்பவனுக்கும் காரோலுக்கும் பகை யல்லவா? இதனால் இவ

னுடைய மந்திரிச் சபை சாத்திய மில்லாமல் போய் விட்டது. இதனுல் ஒரு கட்சிக்குத் தலைவன் என்று சொல்லிக் கொண்டு அரசனுக்கு விரோதமில்லாம விருந்தவன் எம். கோகா (M Goga) என்ற ஒருவன் தான். இவன் தேசீய கிறிஸ்தவ கட்சி என்ற ஒரு கட்சியை அமைத்துக் கொண்டு அதற்குத் தலைவனயிருந்தான். தேர்தலில் இவன் கட்சிக்கு 100க்கு பத்து ஓட்டுகளே கிடைத்தன. ஆனுலும் இவனை மந்திரிச் சபை அமைக்குமாறு அரசன் உத்திர விட்டான்.

இந்த கோகா என்பவனுடைய மந்திரிச் சபை 45 நாள் தான் நீடித்திருந்தது. இதற்குள் இவனுடைய நிருவாகத்தில் பலருக்கும் அதிருப்தி ஏற்பட்டு விட்டது. யூதர்கள் மீது இவன் தொடுத்த பாணங்களின் காரணமாக, தேசத்தின் பொருளாதார வாழ்வு ஸ்தம்பித்து விட்டது. இவன் அநுஷ்டித்த அந்நியநாட்டுக் கொள்கைகளைக் கண்டு, பிரான்ஸ், ஜெக்கோஸ்லோவேகியா, கிரேட் பிரிட்டன், ஜெர்மனி, இத்தலி ஆகிய ஏறக்குறைய எல்லா நாடுகளும் அதிருப்தி கொள்ளலாயின. ருஷ்யாவுடன் யுத்தம் ஏற்படும் போலிருந்தது. பார்க்கான் காரோல் மன்னன். கோகாவின் மந்திரிச் சபையை 10-2-38ல் கலைத்து விட்டான். கூடவே பார்லி மெண்டும் கலைந்தது. முன்னர் மந்திரிகளாயிருந்து அநுபவம் பெற்ற ஒரு சிலரைக் கொண்டு அரசாங்கத்தை நடத்துமாறு கூறினுன். பார்லி மெண்டின்றியே இந்த மந்திரிச் சபை நடைபெறுகிறது. ராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்தப் புதிய மந்திரிச் சபையில், லிபரல் கட்சிக்கு ஆதரவு காட்டுவோரே பெரும் பான்மையோராக இருக்கின்றனர். தேசீயக் குடியானவர் கட்சியைச் சேர்ந்தவர் எவரும் மந்திரிச் சபையில் இல்லையானுலும், ஒரு சிலர், மேற்படி கட்சியின் கொள்கைகளுக்கு ஆதரவு காட்டக் கூடியவர்களாக இருக்கிருர்கள். லிபரல் கட்சியைச் சேர்ந்த டாடாரெஸ்கியு என்பவன், புதிய மந்திரிச் சபையில் அந்நிய நாட்டு மந்திரியா யிருக்கிருன். மிரோன் கிறிஸ்தியா (Miron Christia) என்பவன் பிரதம மந்திரி.

இந்தப் புதிய மந்திரிச் சபையை, அரசரையே சர்வாதிகாரியாகக் கொண்டு அமைந்த ஓர் அரசாங்க சபை என்று சொல்லலாம். இந்த அரசாங்கம், தற்காலிகமாகத் தான் இருக்குமா அல்லது இப்படியே நீடித்து நடக்குமா வென்பது சொல்ல முடிய வில்லை. நிரந்தரமான ஒரு மந்திரிச் சபை அமையாததற்கு அரசியல் கட்சியினரே காரணம் என்று அரசன் கூறுகிருன். இஃதொரு வித்தில் வாஸ்தவந்தான். ஆனுல் அரசனுடைய பிரித்து ஆளும் கொள்கையும் இதற்கு ஒரு முக்கிய காரணம் என்பதைச் சொல்லவே வேண்டும். அரசியலில் இந்த மாதிரியான பிரித்து ஆளும் கொள்கைகளை அநுசரிப்பதினுலே, நாட்டின் உண்மையான நிலைமை ஒருவருக்குமே தெரியாமல் போய் விடுகிறது. ருமேனியாவில் விவசாயிகளுடைய நிலைமை மகா பரிதாபகரமானது. கைத் தொழில்கள் விசேஷமாக இல்லை. தவிர அரசாங்க நிருவாகத்தில் ஊழல்கள் அதிகம் இருக்கின்றன. இவற்றைக் களைந்தெறியும் முயற்சியில் யார் முன்னிற்கிருனே அவன் தான், ருமேனியாவின் எதிர் கால வாழ்வுக்கு அடி கோலியவனுவான்.

இத்தலியின் கைங்கரியம் என்ன?

——எச். போர்ஷ்

எப்படி ஒரு காலத்தில் ரோம ஏகாதிபத்தியம் உலகத்தில் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்ததோ, அப்படியே தற்போதைய இத்தாலிய ஏகாதிபத்தியமும் ஐரோப்பாவை ஒன்று படுத்தி உலகத்தை நாகரிகப் படுத்த முன்னிற்பதாக முஸோலினி அடிக்கடி பெருமிதத்துடன் பேசிக் கொண்டிருக்கிறூரல்லவா? உலகத்திற்கு மகத்தான நன்மையைச் செய்யவே இத்தாலிய ஏகாதிபத்தியம் தோன்றியிருக்கிறது என்ற எண்ணந்தான் இத்தாலிய இளைஞர்களுடைய மனத்தில் புகுத்தப் படுகிறது. இந்த மாதிரியான நூல்களும் எழுதப்பட்டு ஜனங்களிடையே பரப்பப் படுகின்றன. அது மட்டுமல்லாமல், இத்தலியைத் தவிர வேறெந்த நாட்டுக்கும் இந்தக் கைங்கரியம் செய்யத் தெரியாதென்றும், செய்ய உரிமை யில்லையென்றும் இத்தாலிய இளைஞர்களிடையே வற்புறுத்தப் படுகின்றன.

முஸோலினிக்கு வேண்டிய ஒரு தேசீய கவி இருக்கிறுன். இவன் பெயர் ஜியோவன்னி பாபினி. இவன் பாசிஸம் உலக மதம் என்றும், முஸோலினி, அந்த மதத்தின் குருவென்றும் போற்றிப் புகழ்கிற பேர்வழி. இவன் சமீபத்தில் ஒரு பத்திரிகைக் கட்டுரையில், ஐரோப்பாவை ஒன்று படுத்தும் கைங்கரியத்தைச் செய்ய இத்தலிக்குத்தான் உரிமை உண்டென்பதற்கு ஒன்பது காரணங்கள் கூறுகிறுன்.

1. இத்தலி இதற்கு முன்னர் 500 வருஷ காலம் (ரோம ஏகாதிபத்தியம்) ஐரோப்பாவில் ஒற்றுமையை நிலை நிறுத்தி யிருக்கிறது.

2. பத்து நூற்றுண்டுகள் வரை இத்தலிதான் ஐரோப்பாவில் மத ஒற்றுமையை (ரோமன் கத்தோலிக்க மதம்) ஸ்தாபித்திருக்கிறது.

3. ஒவ்வொரு நூற்றுண்டிலும் இத்தலிதான், மற்ற நாடுகளை விட அதிகமான ராஜ தந்திரிகளை உற்பத்தி செய்திருக்கிறது.

4. அரசாங்கம், அரசியல் முதலியன வெல்லாம் இத்தலியி லிருந்து தான் தோன்றியது. மெக்கிய வெல்லி என்ற இத்தாலியன்தான் இதற்கு மூல புருஷன்.

5. நெபோலியன் போனபார்ட் என்ற இத்தாலிய சக்ரவர்த்திதான் இதற்கு முன்னர் ஐரோப்பா முழுவதையும் ஓர் ஏகாதிபத்தியமாக்க முயன்றுன்.

6. ஐரோப்பிய மகா யுத்தத்திற்குப் பிறகு, ஐரோப்பா கண்டத்தில் ஐக்கியம் உண்டாவதற்குரிய வழிகளை இத்தலிதான் முதன் முதல் திட்டம் போட்டுக் காண்பித்தது.

7. ஐரோப்பிய நாகரிகத்தை அழிப்பதாக வுள்ள போல்ஷ்வெஸத்தை முதன் முதல் எதிர்த்தது இத்தலிதான்.

8. ஐரோப்பிய நாகரிகத்தை உலக நாகரிகமாக்கியது இத்தலிதான்.

9. அறிவுத் துறையையும் சமுதாயத் துறையையும் ஒன்று படுத்திப்

பார்க்கக் கூடிய ஆற்றல் பெற்றது இத்தலி தான்.

இதே மாதிரி இத்தலிக்கு விரோதமாகச் சொல்லப் படும் ஆட்சேபங்களுக்கெல்லாம் இந்த ஜியோவன்னி பாபினி என்பவன் பின் வருமாறு சமாதானங் கூறுகிறுன்:—

ஆட்சேபம்: இத்தலிக்கு ஏராளமான சத்துருக்கள் இருக்கிறுர்கள்.

சமாதானம்: பிறரால் நாம் துவேஷிக்கப்படுகிறோ மென்றுல் அது நமது பலத்தையே காட்டுகிறது.

ஆட்சே: ஐரோப்பாவிலுள்ள மற்ற நாடுகளை நோக்குமிடத்து, இத்தலி பெரிதுமல்ல; பணக்கார நாடுமல்ல.

சமா: முற்காலத்தில் ரோமாபுரி என்பது ஒரு சிறிய நகரமாகத்தானே இருந்தது. ஆனுல் அது ஒரு பெரிய ஏகாதிபத்தியத்தின் தலைமை ஸ்தானமாக இல்லையா?

ஆட்சே: சமீபகாலத்தில்தான் இத்தலி ஒற்றுமைப்பட்ட ஒரு நாடாக ஆயிற்றே தவிர, இதற்கு முன்னர் பல பிரிவுகளாகச் சிதறுண்டுகிடந்தது தானே.

சமா: இதனுல் தான், ஒற்றுமையின் பலத்தை இத்தாலியர்கள் அதிகமாக உணர்கிறுர்கள்.

ஆட்சே: இத்தலிக்கு ஏகாதிபத்திய ஆசை நிரம்ப இருக்கிறது. இதனுல் அது நியாயத்தைத் தேடித்தர முடியாது.

சமா: உலகத்திற்கு வழி காட்ட, தான் அவதார மெடுத்திருப்பதாக இத்தலி எப்பொழுதுமே நினைத்ததில்லை. ஒரு பெரிய கைங்கரியத்தைச் செய்யும் தொண்டனுகவே அது தன்னை மதித்து வந்திருக்கிறது.

ஆட்சே: ஐரோப்பாவில் ஒற்றுமையை உண்டாக்க இத்தலியைவிட அருகதையுள்ள நாடுகள் ஐரோப்பாவில் இன்னும் சில இருக்கின்றன.

சமா: அப்படியில்லை. எல்லா அம்சங்களிலும் இத்தலிதான் பூரணத்வம் பெற்றிருக்கிறது. உதாரணமாக இங்கிலாந்துக்கு சங்கீத ஞானமில்லை. பிரான்சுக்கு, புதிய சக்திகளைக் கண்டு பிடிக்கும் ஆற்றல் கிடையாது. ஸ்பெயினுக்கு அரசியல் நிருவாகத்திறமை கிடையாது. இப்படி ஒவ்வொரு நாட்டுக்கும் ஒவ்வொரு குறை இருக்கிறது.

ஆட்சே: பரஸ்பர ஒப்பந்தங்களின் மூலந்தான் ஐரோப்பாவில் ஒற்றுமை உண்டாகும்.

சமா: இந்த மாதிரியான ஒப்பந்தங்கள் இதுவரை ஒரு பலனையும் தரவில்லையே.

ஆட்சே: ஐரோப்பிய ஒற்றுமையை உண்டாக்க இத்தலி என்னென்ன மார்க்கங்களை அநுஷ்டிக்கப் போகிறது?

சமா: தாந்தே என்ற கலா ரஸிகனையும், மெக்கிய வல்லி என்ற கர்ம வீரனையும் உண்டுபண்ணின இத்தலி, மானச உலகத்தையும் செயல் உலகத்தையும் ஒன்று படுத்தக்கூடிய எல்லா மார்க்கங்களையும் அநுஷ்டிக்கும்.

மேற்கூறிய யாவும் ஒரு தனிப்பட்ட நபருடைய அபிப்பிராயமேயானுலும், இத்தாலியர்களுடைய பொதுவான எண்ணம் எந்தத் திக்கில் சென்று கொண்டிருக்கிற தென்பதை இதனின்றும் தெரிந்து கொள்ளலாமல்லவா?

இந்தியாவிற்கு

(சரோஜனி தேவியின் பாடல்)

மொழி பெயர்த்தவர்—சொ.

1. உன்னு தற்கரும் ஊழிதொ றூழியாய்
யுவதி யாயுறும் தாயே! எழுந்திரு
உன்னு டையிருள் தன்னின் உயிர்த்தெழு!
உயரும் கோளங்கள் தம்முடன் மாமணம்
துன்னும் பெண்மணி யென்னவே கன்னிமைத்
தூய நற்கருப் பத்தி லிருந்துமே
மன்னும் அற்புதக் கீர்த்திகள் தம்மையிம்
மாநி லம்மகி ழச்சிருஷ் டிப்பையே!

2. தளைப்ப டும்இருள் தன்னிலே தேசங்கள்
தாழ்ந்து மிக்கப் புலம்பிடு கின்றன,
விளைக்கும் நல்லுத யத்திற்கந் நாடுகள்
மேவ நீவழி காட்டென வேண்டுவம்,
துளைக்கும் ஆவலில் தோய்தரும் அன்னைநீ
துயிலுங் காரணம் என்னென் றறிந்திலோம்,
திளைத்தெ ழுந்துன் குழந்தைகட் காவது
செப்பு வாய்பதில் ஒப்புற அன்னையே!

3. வளரும் நல்மரி யாதை, சிறப்புகள்,
வரையி கந்துறு வெற்றிக ளும்பல
கிளரும் அத்தொனி சூழெதிர் காலமே
கிட்டி விட்டது பாரென் றழைக்குது;
தளரும் தூக்கத்தில் தானுறும் அன்னையே!
தயைபு ரிந்துவி ழித்தருள் செய்குவாய்
ஒளிருஞ் சக்கிர வர்த்தினி யாகவே
உலகை மீளவும் ஆளென வேண்டுவாம்.

கனகாவின் கடிதங்கள்

—"சரசா"

கடிதம் VIII

கீழவேளூர்

என் அன்புள்ள அம்மாவுக்கு அநேக நமஸ்காரம். உபயகுசலம்.

முன் கடிதத்தில் நான் எழுதியிருந்தபடி இந்த ஊரில் ஸ்திரீகள் சங்கம் ஏற்பட்டு விட்டது. என்னைத்தான் காரியதரிசியாக நியமித்திருக்கிறார்கள். கொஞ்சங் கூட ஓய்வேயில்லை. புது சங்கமானபடியால், வீடு வீடாகப் போய், சங்கத்தைப் பற்றி விஸ்தாரமாகச் சொல்லி, புது அங்கத்தினர்களைச் சேர்க்க வேண்டியிருக்கிறது. இத்தனைக்கும் வருஷத்திற்கு எட்டு அணாதான் சந்தா வைத்திருக்கிறோம். இதற்கு எவ்வளவு பேச்சு பேசுகிறார்கள் தெரியுமோ? புருஷாளுடைய கஷ்ட சுகங்கள் ஒன்றுந் தெரியாமல், அவாளைக் கசக்கிப் பிழிந்து 30 ரூபாயிலும் 40 ரூபாயிலும் புடவை வாங்குவதற்கும், வெள்ளியிலும் தங்கத்திலும் நூறு நூறாகக் கொண்டு கொட்டுவதற்குந்தான் தெரிகிறதே தவிர, இந்தப் பொம்மனாட்டிகளுக்கு நல்ல காரியம் என்றால் இரண்டணா நாலணா செலவழிக்கிறதுக்கு கண் முழி பிதுங்கிப் போறது. ஆனால் அவாளைச் சொல்லி என்ன பிரயோஜனம்? அவாளுக்குச் சொல்லிக் கொடுக்கப் பட்ட படிப்பு அவ்வளவுதான். என்னமோ பால்காரன் தயிர்க்காரன் கணக்கு பார்க்கிறதுக்கும், வண்ணான் கணக்கு எழுதுறதுக்குந்தான் தெரியுமே தவிர, விசால புத்தி, உலகத்திலே எவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டிருக்கிறது என்பதற்குத் தகுந்தாற் போல் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இவையெல்லாம் ஒன்றும், இந்தக் காலத்துப் படிப்பினால் உண்டாவதில்லையல்லவா? புருஷாளுக்கே இந்தக் காலத்துக் கல்வி முறை சரியில்லையென்று சொல்லி என்னமோ புதுசு புதுசா யோசனைகளும் ஏற்பாடுகளும் பண்ணிக்கொண்டிருக்கா. ஆனால் அதே படிப்பைத்தான் பொம்மனாட்டிகளுக்கும் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆல்ஜிப்ராவும், கிரீஸ் சரித்திரமும் எந்தத் தெய்வத்திற்குப் பிரீதி? இதனாலே என்ன ஆகிறதென்றால், நம்ம புருஷாளுக்குத்தான் அடிமைப் புத்தியும், நமது தேசத்தைப் பற்றியும் மதம், நாகரிகம் முதலியவைகளைப் பற்றியும் ஒரு தாழ்வான அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறதென்றால், பொம்மனாட்டிகளுக்கும் அதே எண்ணந்தான் உண்டாயிருக்கிறது. நம்ம பண்டிகைகள் உற்சவங்கள் இவைகளைக் கண்டால் பரிகாசம் பண்ணுகிறோம். ஆனால் கிறிஸ்மஸ் பண்டிகையென்றால், குழந்தைகளுக்குப் பொம்மைகள் வாங்கிக் கொடுப்பதிலும், புதுத் துணிகளிலும் பணத்தைத் தாராளமாகச் செலவழிக்கிறோம். எனக்குக் கூட இந்த மாதிரி பைத்தியக்கார எண்ணங்களெல்லாம் கொஞ்ச காலத்திற்கு முன் இருந்தது தானே. நாலு இடங்களைப் போய்ப் பார்த்தாலும், நாலு புஸ்தகங்களைப் படித்தாலுந்தான் புத்தியும் விசாலமடைகிறது; மற்றவர்களிடத்திலே நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்கிற மாதிரியும் நமக்குத் தெரிகிறது. இதையெல்லாம்

விட்டு விட்டு, இந்தக் காலத்துப் பொம்மனாட்டிகள், ஒன்று மில்லாத சொரைக் குடுக்கை மாதிரி, முகத்துக்குப் பவுடரும், கைக்கு ரிஸ்ட்வாட்சும், கையிலே ஒரு பையும், குதிகால் தூக்கியுள்ள பூட்ஸும் இருந்துவிட்டால் எல்லாம் தெரிந்தவர்கள் மாதிரி நினைக்கிறார்கள். இது தான் 'பாஷன்' என்கிறார்கள். இந்த மயக்கமெல்லாம் எனக்கு அடியோடு தொலைந்து விட்டது. ஸ்திரீகள் சங்கத்திற்கு மெம்பர்கள் சேர்க்கப் போய் எங்கெங்கேயோ விஷயத்தைக் கொண்டு போய் விட்டேன்.

இப்பொழுது எங்கள் சங்கத்திற்கு 45 பேர் மெம்பர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். இந்த வருஷம் முடிவதற்குள் எப்படியாவது நூறு பேராக்கி விட வேண்டுமென்பது என் ஆசை. ஊர் ஜனங்களுடைய அபிப்பிராயமும், இப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டு வருகிறது. ஏதோ நல்ல காரியம் என்று சொல்கிறார்கள். ஆனாலும் ஒரு சிலர் எதையாவது முணு முணுத்துக் கொண் டிருக்கிறார்கள். எல்லா நல்ல காரியங்களுக்கும் இந்த முணு முணுப்பு இருந்து கொண்டுதா னிருக்கும். இதைப் பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?

எங்கள் சங்கத்திற்கு எல்லா முக்கிய பத்திரிகைகளும் வருகின்றன. படிக்க முடிந்தவர்கள் படிக்கிறார்கள். படிக்கத் தெரியாதவர்களுக்கு ஓர் ஏற்பாடு செய்திருக்கிறோம். பத்திரிகைகளில் முக்கியமான விஷயங்களைச் சுருக்கஞ் சுருக்கமாக நான் எடுத்துச் சொல்கிறேன். இதில் தினம் ஒரு மணி நேரத்திற்கு மேல் செலவாகிறது. இப்பொழுது என் மாமியார் கூட என்னோடு சங்கத்திற்கு வந்து நான் உரக்கப் படிப்பதைக் கேட்கிறாள். படிக்கத் தெரியா விட்டாலும், உலகத்திலே என்ன நடைபெறுகிற தென்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசையாவது இருக்கிறதே, அது விசேஷ மல்லவா?

தவிர, எங்கள் சங்கத்தில் 'பிங்பாங்' முதலிய உள்ளேயே யிருந்து விளையாடக் கூடிய விளையாட்டுகளும் இருக்கின்றன. தவிர, இரண்டு வாத்தியாரம்மாக்களை ஏற்படுத்தி யிருக்கிறோம். ஒருத்தி ஆசை யுள்ளவர்களுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறாள். இன்னொருத்தி, கோலம் போடுதல், பின்னல், தையல் வேலை முதலியவற்றை யெல்லாம் கற்றுக் கொடுக்கிறாள். அவ்வப் பொழுது கிடைக்கிற சந்தாப் பணத்தைக் கொண்டும், இன்னும் சிலர் கொடுக்கிற நன்கொடைகளைக் கொண்டும் இவர்களுக்குச் சம்பளம் என்ற பெயர் வைத்துச் சொற்பத் தொகை கொடுக்கிறோம். இவர்களும் மிகவும் சந்தோஷமாக வேலை செய்கிறார்கள். இன்னும் கூடை பின்னுதல், பாய் முடைதல் முதலான வீட்டுத் தொழில்களையும் நமது சகோதரிகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று சங்கத்திலே ஒரு திட்டம் போட் டிருக்கிறார்கள். சீக்கிரத்தில் நிறைவேற வேண்டும். நீ அவசியம் ஒரு தடவை இந்த ஊருக்கு வந்து விட்டுப் போக வேண்டும். என்னைப் பார்க்க வராவிட்டாலும், நான் காரியதரிசியா யிருக்கிற சங்கத்தைப் பார்க்கவாவது நீ வர வேண்டாமா?

நான் ஸ்திரீகள் சங்கத்துக் காரியதரிசியா யிருக்கிறே னென்று அப்பாவுக்குச் சொல்லவும். அவரும் நீயும் ஒரு முறை அவசியம் இவ்விடம் வந்து விட்டுப் போகவும்.

உன் பிரியமுள்ள

கனகா

வீர பத்தினி

—ஸ்ரீ. ஸ்ரீ. ஆச்சார்ரியா

IV பத்தினியின் வீரம்

ஒரு நாள் இரவு த்ஸுதா பொழுதுடன் வேலைகளை முடித்துக் கொண்டு குளிர் காலமாகையால் முன் புறத்துக் கூடத்தில் நெருப்பை வைத்து அதனருகில் உட்கார்ந்திருந்தாள். குழந்தைகளும் அதைச் சுற்றிப் படுத்துறங்கின. மூன்று மாத காலமாய் தன் கணவர் வராத கவலையோடு, தகவல் கொண்டு வருவதாகப் போன கோஜென் மாமாவும் இன்னும் திரும்ப வில்லையே என்று யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

'அம்மா, அப்பா எப்போ வருவார்? எங்களுக்கு விளையாட்டுச் சாமான்கள் என்ன என்ன கொண்டு வருவார்?' என்று சிறு குழந்தைகள் அவளைக் கேட்கும் போதெல்லாம் அவள் கண்களில் நீர் ததும்பும். 'பொறுங்கள், சீக்கிரம் வந்து விடுவார். பொறுங்கள்' என்ற ஒரே பதிலைச் சொல்லித் தன் கண்களைத்துடைத்துக் கொண்டு நாட்கள் கடத்துவாள்.

பெரிய மகன் ஸோஹெய் மாத்திரம் அவள் துயரத்தின் காரணம் தெளிவாகத் தெரியா விட்டாலும் அவள் துயருற்றிருக்கிருள் என்றறிந்து அவளுக்கு வேண்டிய வேலைகளைத் தன்னால் இயன்ற மட்டும் செய்து கொடுப்பான்.

அவ்விரவு சற்று நேரங்கழித்து குழந்தைகளைப் படுக்கையில் விட்டுத் தானும் படுக்கப் போனாள். வெளியில் யாரோ அப்பொழுது வந்து கதவைத் தட்டவே அதைப்போய்த் திறந்தாள். வீட்டில் புருஷத் துணை யாருமில்லை என்றறிந்த கிராமத் தலையாரியொருவன் உள்ளே நுழைந்தான்.

த்ஸுதா அவனைப் பார்த்து 'விசேஷம் ஏதாவதுண்டோ?' என்று வினவுகையில் அவன்,

'உன் கணவன் இனி வர மாட்டான். குடியானவர்கள் செய்த குழப்பத்திற்காக அவனுக்குக் கொலை தண்டனை விதிக்கப்படும். நீ அவனை விட்டு என்னை மணந்து கொள். நான் உன்னைக் காப்பாற்றி விடுகிறேன்' என்று சொல்லி அவள் கையைத் திடீரென்று பற்றினான்.

உடல் நடுங்கும் இச் செய்தியைக் கேட்டுத்திடுக்கிட்ட த்ஸுதா அவனைக் கோபத்தோடு உதறித் தள்ளி, வெறுப்புடன், 'சீ! அறப்பயலே! வெளியே போ. நான் ஸொகோரோ மனைவி என்பதை மறந்து விட்டாயா? போ வெளியே!' என்று உரக்கக் கத்தினாள்.

அவளுக்கு உதவி யாருமில்லை என்று அவன் முரட்டுத் தனமாய் அங்கு நாற்காலியில் உட்கார்ந்தான். இப்படித் தன்னை நிர்க்கதியாய் தெய்வம் விட்டதற்கு வருந்தி, இவனை எப்படி வெளியே அனுப்புவது என்று யோசித்துக் கொண்டிருக்கையில், அவளுடைய பெரிய மகன் ஸோஹெய், 'அம்மா, அம்மா! புச்சோஜி கோவில் மாமா!' என்று உரக்கக் கத்தினான்.

இதைக் கேட்டவுடனே அந்த துஷ்டன் பயந்து போய் இனி அவளுக்கு உதவி கிடைத்து விடும்; சமயத்தில் கோஜென் வந்து விட்டானே என்று வேகமாய் வெளியே போய், 'நான் மறுபடி வருகிறேன்' என்று சொல்லிக் கொண்டே ஓடி விட்டான்.

த்ஸுதா உடனே தாளிட்டு வந்து தன் மகனைப் பார்த்து, 'புச்சோஜி கோவில் மாமாவை அழைத்து வா' என்றாள். 'புச்சோஜி கோவில் மாமா வந்ததாக நான் சொல்ல வில்லையே! அவர் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அவனே பயந்து ஓடி விட்டான்' என்று மகன் சொன்ன பதிலைக் கேட்டு, அவன் புத்தி கூர்மையைப் பெரிதும் மெச்சி, அவனை வாரியணைத்துக் கொண்டு 'அப்பா, நான் உன்னைக் காப்பதை விட அதிகமாக நீ என்னைக் காத்தாயே! உன் அருமை பெருமையை நான் என்னவென்று சொல்லுவேன்! நீ போய்ப் படுத்துக் கொள்; நேரமாய் விட்டது. இனி நான் ஜாக்கிரதையாய் இருக்கிறேன்' என்று த்ஸுதா வெகு ஆதரவோடு அவனைப் படுக்க அனுப்பிவிட்டு தன் குல தெய்வமாகிய அமிதாப புத்தருக்கு நன்றி செலுத்தப் பூஜை யறைக்குச் சென்றாள்.

சற்று நேரத்திற் கெல்லாம் பின்புறத்தில் தன்னை யாரோ அழைப்பது போல சத்தம் கேட்டது. அந்தப் பாவியே மறுபடி வந்தானோ என்று அஞ்சி அவள்,

'இந்த இரவில் யார் கூப்பிடுகிறது? என்ன வேலையாயிருந்தாலும் காலையில் பார்த்துக் கொள்ளலாம்' என்று உள்ளிருந்தபடியே உரக்கச் சொன்னாள்.

'த்ஸுதா, த்ஸுதா! நான் இவ்வளவு நாட்களாக வராதது பற்றி நீ பெருங் கவலைப் பட்டிருப்பாய், பாவம்!' என்று சொன்ன ஸொகோரோவின் குரலைக் கேட்டு விரைந்தோடி அவள் அவனைத் தழுவினாள்.

இருவரும் கூடத்தில் வந்து உட்கார்ந்த பிறகு த்ஸுதா தனக்கு இவ்வளவு காலம் ஒரு தகவலும் கிடைக்காதது பற்றி முறையிடலானாள். ஸொகோரோ அவளுக்கு நடந்ததையெல்லாம் அடியிலிருந்து விவரமாகச் சொல்லி,

'இக்குடியானவர்களைக் காக்க வேறு வழியில்லை. ஷோகனிடம் நேரில் போய் நமது மனுவைச் சேர்ப்பது ஒரே வழிதான். அதைச் செய்வதாக நண்பர்களிடம் நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். இதற்காக எனக்கு மரண தண்டனை விதிக்கவும் கூடும். இருந்தாலும் நான் பின் வாங்கப் போவதில்லை. அதிகாரிகளுக்கு என் மேல் ஏற்படும் கோபத்தை உன் மீதும் காட்டுவார்களோ என அஞ்சி அதற்கு வழி செய்யவே இங்கு வந்தேன். நமது விவாகத்தை ரத்து செய்து விட்டால் உன் மேல் வஞ்சம் தீர்க்க அவர்களுக்கு இடமிராது. இதைச் செய்ததனால் உன் மேலும் குழந்தைகள் மேலும் எனக்கு அன்பு குறைந்தது என்று எண்ண வேண்டாம். அன்பு அதிகமாயிருப்பதனாலேயே நான் இதைச் செய்கிறேன்' என்றான்.

உடனே த்ஸுதா மார்பில் சூலத்தினால் குத்துண்டவள் போலத் துடிதுடித்து,

'ஐயோ! இக் கொடுமையை நான் எப்படிச் சகிப்பேன்? என் கதி இப்படியும் ஆக வேண்டுமா! தெய்வமே! என் கணவரே என்னைத் தனக்குத் தகுந்தவளன்று என எண்ணும் போது வெளியார் என்னை எப்படி மதிப்பார்கள்? பொது நன்மைக்காக உயிர் துறக்கும் உமக்கு நான் ஏற்றவளன்று என எல்லாரும் இகழும்படி என்னை உயிர் வாழவா சொல்லுகிறீர்? நான் ஸொயெமோன் மகள்! உமது மனைவி என்று வெகு பெருமையாயிருந்தேனே! நான் நீசத்தனமாய் உயிர் வாழ ஒரு நாளும் சம்மதிக்க மாட்டேன்! நெருப்போ, நீரோ எது

வானாலும் சரி, உம்மைப் பின் தொடர்ந்து சென்றே உயிர் துறப்பேன். நம் குழந்தைகளைப் பாது காக்க கோஜென் மாமாவும் உமக்கு வேண்டிய இக் கிராமக் குடிகளும் இருக்கிறார்கள். இந்த ரத்துச் சீட்டைக் கண்டாலே என் கண் கரிக்கிறது' என்று சொல்லி அதைத் துண்டு துண்டாகக் கிழித்து நெருப்பி லிட்டுச் சாம்பலாக்கினாள்.

அவள் பெருந் தன்மையையும் வீரத் தனத்தையும் கண்டு வியந்து ஸொகோரோ,

'என்றும் போலே இன்றைக்கும் நீ என் அருமை மனைவியாகவே இருக்கிறாய். என் மனத்துக் கினியவளாகிய நீ அதிலிருந்து ஒரு பெரும் பாரத்தை எடுத்து விட்டாய். இனி நம் சிறுவர்களை எழுப்பு; அவர்களிடம் விடை பெற்று நானும் புறப்படுகிறேன்.' என்றான்.

தாய், படுக்கை யறைக்குள் போய் குழந்தைகளை எழுப்பி, அப்பா வந்திருக்கும் செய்தியைச் சொன்னவுடனே எல்லோரும் எழுந்து அவசரமாய் ஓடி வந்தார்கள். தந்தையைச் சூழ்ந்து கொண்டு மடியிலும் தோளிலும் ஏறிக் கொண்டார்கள். பெரியவன் ஸோஹெய் விழித்தே இருந்தானானையால் முதலில் வந்து தந்தையை வணங்கி நின்றான். ஸொகோரோ யாவரையும் வாரி யணைத்து முத்த மிட்டு, தான் மறுபடி போக வேண்டி இருப்பதனால் எல்லாரும் தாய் சொற்படி நடக்க வேண்டு மென்றான்.

பெரிய மகன் தாயும் தந்தையும் பேசியதை அறிந்திருந்தானானையால், கண்ணீர் விட்டுக் கொண்டு,

'அப்பா, உம்மை மறுபடி நாங்கள் காண்போமா?' என்று வாய் குழறக் கேட்டான்.

'நாஞேர் பெரிய காரியமாகப் போகும்போது நீ கண்ணீர் விடலாமா? நம் குடிகள் என்னைப் புகழ வேண்டு மென்கிறாயா? இகழ வேண்டு மென்கிறாயா?' என்று மகனைக் கேட்டான்.

அதற்கு ஸோஹெய் 'அவர்கள் எப்பொழுதும் போல உம்மைப் புகழத்தான் வேண்டும்' என்றான்.

'அப்படியானால் நான் திரும்பி வரும் வரை நீ தைரியமா யிரு' என்று ஸொகோரோ அவனைத் தேற்றிப்பின்னும் ஒரு முறை அவர்களைக் கட்டித் தழுவி கண்களில் நீர் ததும்ப, புறப்பட எழுந்தான்.

அவனைப் பிரிய முடியாது நெஞ்சு துடிக்கும் த்ஸுதா தன் இரு கைகளினால் தன் மார்பை அழுத்திக் கொண்டு,

'உங்களை வேவுகாரர்கள் தேடித் திரிகிறார்கள்; பொழுது விடிந்தால் உங்களை அவர்கள் போக விடார். ஆகையால் துரிதமாய்ப் புறப்படுவது நலம்' என்று கண்ணீர் வடியச் சொன்னாள்.

'இதோ புறப்படுகிறேன். நான் போன பிறகு குடும்ப பாரம் உன்னைச் சேர்ந்தது. நீதான் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டும்' என்று தழதழத்த குரலில் சொன்னான்.

'நாதா, அந்தக் கவலை உமக்கு வேண்டாம். குடும்ப விசாரத்தால் காரியத்தில் தவறி விட வேண்டாம். உமது கவனம் முழுவதும் அதிலேயே இருக்கட்டும். குழந்தைகளை நான் பார்த்துக் கொள்கிறேன்' என்று கணவரை உற்சாகப் படுத்த முயன்ற போது த்ஸுதாவுக்கு வாய் குழறி பேச்சுத் தடுமாறிற்று.

'என் அருமை மனைவியே, இப் பெருந் தொண்டில் நீயும் அக்கறை கொண்ட போது அதை எப்படியும் முடிப்பேன், என் கவன மெல்லாம்

அதிலேதான் இருக்கும். என் அருமைக் குழந்தைகளே! என் இனிய மனைவியாளே! நான் போய் வருகிறேன். மறுபடி இவ்வுலகில் சந்திக்காவிட்டால் மேலுலகில் சந்திக்கக் கடவுள் அருள் புரிவார்' என்று சொல்லி விட்டு மக்களும் மனைவியும் நீர் ததும்பும் கண்களோடு நோக்கி நிற்கையில் பனி இருளில் ஸோகோரோ பாய்ந்து சென்றான்.

அவன் மறைந்த சற்று நேரத்திற்கெல்லாம் வீடு முழுவதும் ஒரே அழுகையாயிருந்தது. இதை தூரத்தில் ஒளிந்திருந்த ஒரு வேவுகாரன் கேட்டு, வீட்டு எஜமானன் வந்திருக்கிறான்போ லிருக்கிறதென்றெண்ணி ஓடி வந்து பலவந்தமாய் வீட்டில் நுழைந்து, 'உன் கணவன் இங்கு வந்திருக்க வேண்டுமே, அவன் எங்கே?' என்று அதிகாரத்துடன் கேட்டான்.

அவனுடைய முரட்டுத் தனத்தைக் கண்டு கோபங் கொண்டு த்ஸுதா,

'அவர் இங்கு இல்லை' என்றாள்.

'இந்தப் புரட்டு என்னிடத்தில் செல்லாது. தோணித் துறையிலும், இங்கு வரும் வழியிலும் நான் கண்ட மனிதன் உன் கணவனேதான். அவன் இங்குதான் இருக்க வேண்டும். எங்கு ஒளிந்திருக்கிறான் என்பதைச் சொல்லி விடு' என்று அவசரத்துடன் கேட்டான்.

'அவர் இங்கு வந்தது உண்மைதான். புச்சோஜி கோவில் மாமாவைப் பார்க்க மறுபடி புறப்பட்டுப் போனார்' என்றாள்.

'அதொன்றுமில்லை. நீ என்னை ஏமாற்ற முடியாது. கோஜென் இன்னும் வந்தில்லை. கோவிலருகில் அவன் வந்தால் தெரிவிக்கும்படி ஒரு ஆளை வைத்திருக்கிறேன். இனி தாமதிக்க எனக்கு நேரமில்லை. ஸாகோரோ தோணித் துறைக்குத்தான் போயிருக்க வேண்டும். நான் போய் அவனைப் பிடித்து கைது செய்துவிடுகிறேன்' என்று அவ்வேவுகாரன் வீட்டை விட்டுப் புறப்படப் போனான்.

'இல்லை, இல்லை! நீ போகவே கூடாது!'

என்று சொல்லி த்ஸுதா குறுக்கே பாய்ந்து அவனை வழி மறித்தாள். தன் கணவர் முந்திக்கொள்ளும் பொருட்டு இவனைத் தடுத்து வைக்க வேண்டுமென்பது அவள் கருத்து.

'ஏ பெண்ணே! என்னைத் தடுக்காதே. உன் கையை எடு என்கிறேனே!' என்று அவளைப் பயமுறுத்தினான்.

'என்கையால் முடிந்தவரை உன்னை விடப்போவதில்லை' என்று அவனைப் பலமாகப்பற்றிக் கொண்டாள்.

'அப்படியா சமாசாரம்! இதற்கு இதுதான் வழி' என்று முணுமுணுத்து முஷ்டியால் அவளைக் கடுமையாகக் குத்தினான்.

அது தாங்காது அவள் பாய்மேல் விழவே அந்த துஷ்டன் ஸொகோரோவைப் பின் தொடர்ந்து ஓடினான்.

தாய் விழுந்ததைக் கண்ட சிறுவர்கள் அவளைச்சுற்றிக்கொண்டு, அம்மா அம்மா! என்று அலறியழுதார்கள். அவளுக்குச்சற்று நேரத்திற்கெல்லாம் புத்திதெளியவே வேவுகாரன் தன் கணவரைப் பின்பற்றியது ஞாபகம் வந்தது. உடனே எழுந்து தன் பெரிய மகன் ஸோஹெயை 'நீ கதவைத்தாளிட்டு உன் தம்பிமார்களைப் பார்த்துக் கொள். நான் இல்லாத போது யாரையும் உள்ளேவிட வேண்டாம்' என்று எச்சரிக்கை செய்துவிட்டுத்தன் கணவருக்கு உதவி வேண்டியிருக்குமென் றெண்ணி விரைந்தோடினாள்.

வேகமாய்ச் சென்ற வேவுகாரன் ஸொகோரோவைத் தோணித்துறைக் கருகில் கண்டு வழிமறிக்கமுயன்ருன். அதை கவனியாதவன்போல, கடந்து முன்சென்ற அவனை மறுபடி குறுக்கே போய்த்தடுத்து கைது செய்யப்போவ தாகச் சொன்னுன். தனக்கு வேவு காரன் முன்னமே தெரிந்தவனுகை யால் நல்லவார்த்தை சொல்லித் தன்னைத் தடுக்காதிருக்கும்படி வேண் டியும் கேட்காததனுல் ஸொகோரோ உடைவாளை உருவிக்கொண்டு அவன் மேல் பாய்ந்தான். ஆனுல் ஜூஜுட் ஸுவில் நன்கு பழகிய வேவுகாரனிட மிருந்து பலத்த குத்து தோள்மேல் விழவே கைப்பிடி தளர்ந்து அவ்வுடை வாள் சிதறிவிழுந்தது.

பிறகு இருவரும் கை கலந்து உறை பனிமேல்விழுந்து புரண்டார்கள். வேவு காரன் இம்மாதிரி சண்டையில் கை தேர்ந்தவனுகையால் வெகுசுலபமாய் ஸொகோரோவைக் கீழே தள்ளி தன் முழங்காலால் அமுக்கி வைத்தான். அவன் கைகளைக் கட்டப்பார்த்தான். தன்னிடம் இருக்க வேண்டிய கயிறு காணுமையால் தோணித் துறையி லிருந்த ஜிம்பெயைத்தன் உதவிக்கு அழைத்தான். இத்தோணிக்காரன் ஸொகோரோவுக்கு வேண்டியவன் என்பது அவனுக்குத் தெரியாது.

இதற்கிடையில் அங்கு த்ஸுதா ஓடி வந்து சேர்ந்தாள். தன் கணவர் நிலைமையைக் கண்டு வேவுகாரன் தலைப் பின்னலை பலமாகப்பற்றி பின் புறம் இழுத்தாள். இதனுல் அவன் பிடி தளரவே ஸொகோரோ விரை வில் எழுந்து அவனை முன்புறம் தாக்கினுன். இப்படி இரு புறமும் சிக் கிக் கொள்ளவே ஜிம்பெயை விரை வாக வரும்படிக் கூவினுன்.

தோணிக்காரக் கிழவன் அங்கு வந்து சேர்ந்ததும் விஷயம் இன்ன தென்று தெரிந்து விட்டது. அவன் தன் துடுப்பின் கூரிய முனையால் வேவுகாரன் விலாப் புறத்தில் குத் தவே அவன் அங்கேயே உயிர் துறந் தான்.

ஸொகோரோவும் த்ஸுதாவும் ஜிம் பெயிக்குத் தங்களுடைய ஆழ்ந்த நன் றியைக் கூறினுர்கள். அதற்குக் கிழ வன், 'உங்கள் குடும்பம் எனக்குச் செய்துள்ள பேருபகாரத்திற்கு இது எம்மாத்திரம்! வழியில் ஆபத்துக் கள் நிறைந்திருக்கின்றன. பொழுது வி டி ய ப் போகிறது. ஆகையால் ஸொகோரோ, நீ சீக்கிரம் ஏறு. ஏரியி லேயே எவ்வளவு தூரம் போக முடி யுமோ அவ்வளவு தூரம் உன்னைக் கொண்டு விடுகிறேன். வா சீக்கிரம்,' என்ருன்.

'நீ தள்ளாதவனுயிற்றே. உன்னுல் அது ஸாத்தியமாகுமா?' என்ருள் த்ஸுதா.

'எனக்கு வயதாயிருந்தாலும் சிறு வனைப் போல உழைக்க எனக்குச்சக்தி யிருக்கிறது. நீ யோசனை செய்யாதே. அம்மா, நான் அவனை பத்திரமாய்க் கொண்டு சேர்ப்பேன். மனைவியிடம் சீக்கிரம் விடை பெற்றுவா, ஸொகோ ரோ, போகலாம்' என்ருன் ஜிம்பெய்.

ஸொகோரோவும் தன் அருமை மனைவியிடம் மறுபடி விடை பெற்றுக் கொண்டு தோணியேறிச் சென்ருன். அவள் அது கண்ணுக்கு மறையும் வரை அதையே பார்த்திருந்து வீடு திரும்பினுள்.

V வீரத் தாயின் சாபம்

ஷோகன் வருஷத்திற் கொரு முறை 'க்வான்-ஒன்' என்னும் கிருபா தேவியை கோவிலுக்குச் சென்று வணங்குவது வழக்கம். அன்றைய தினத்தில் வழியில் போகும் போது மெய்க்காப்பாளர் சற்று விலகி இருந்த

தருணம் பார்த்து ஸொரகோரோ தன் மனுவை அவரிடம் திடீரென்று நீட்டினன். அவர் அதை எடுத்துக் கொண்ட பிறகு திடுக்கிட்ட ஆட்கள் ஓடி வந்து அவனைக் கைது செய்தார்கள்.

விஷயம் தெரிய வந்ததும் தீர்வை விஷயமாக உள்ள குறைகளைத் தீர விசாரித்து நியாயம் வழங்கும்படி ஷோகன் அம்மாகாணதிபதியாகிய மஸனேபுவுக்கு உத்தரவு அனுப்பினர். மனு கொடுத்த கைதியையும் அவன் வசமே கொடுத்து விடச் சொன்னர்.

இவ்வுத்தரவு கிடைத்ததும் மஸனேபுவுக்கு அடக்க ஒண்ணாத கோபமுண்டாயிற்று. தன் ஆட்சி திறமையற்றது என்று ஷோகன் வரை எட்டி விட்டதே. இதை விட அவமானம் வேண்டுமா? என்று மனம் புழுங்கினன். மேல் உத்தரவு கிடைத்ததுமே அதிக தீர்வைகள் யாவற்றையும் எடுத்து விட்டான். அது விதித்தவர்களையும் தீர விசாரித்துத் தக்கபடி தண்டித்தான்.

ஆனல் அவன் கோபம் முழுவதும் மனு கொடுத்தவன் மேல் விடிந்தது. நாட்டின் அதிபதியாகிய ஷோகன் வரை இதை எட்ட வைத்தவன் துணிச்சலை நினைக்க அவனுள் ஆத்திரம் பொங்கி எழுந்தது. தன் பழி பூராவும் அவன் மேல் தீர்த்துக் கொள்வதென்று உறுதி செய்து கொண்டான். தன் கௌரவத்திற்கு ஹானி செய்தவனை எவ்வளவு சித்திரவதை செய்தாலும் போதாதென நிச்சயித்து ஸொரகோரோவை சிலுவையிலிடுவதோடு அவன் மனைவிக்கும் அதே தண்டனை விதிக்க வேண்டும். அவன் மக்களைக் கூட உயிரோடு விடப் போவதில்லை. குழந்தை முதல் சிறு பையன் வரை எல்லாரையும் சிரச்சேதம் செய்ய உத்தரவு அனுப்ப வேண்டும் என்று தனக்குள்ளே முணு முணுத்துக் கொண்டு அருகிலிருந்தவர்களோடும் கூறினன்.

மஸனேபுவிடம் உயர்ந்த உத்தியோகத்திலிருந்த இக்கேயுரா என்பவரும் மற்றுமுள்ள சில பெரியோர்களும் அப்படிச் செய்யலாகாதென்று வெகு தூரம் தடுத்தார்கள். அவன் சிறிதும் கேட்கவில்லை. தன் வஞ்சம் தீர்த்துக்கொள்ள இது கூடப் போதாதென்று ஸொரகோரோவையும் த்ஸூதாவையும் சிலுவையிலிடுவதென்றும் குழந்தை நால்வரையும் சிரச்சேதம் செய்வதென்றும் உத்தரவனுப்பி விட்டான்.

கொட்ஜூ கிராமத்தின் ஒரு புறத்திலுள்ள விசாலமான மேய்ச்சல் தரை நடுவில் இரண்டு பெரிய சிலுவைகளை நாட்டி அவைகளைச் சுற்றி பத்தடி தூரத்திற்கு மூங்கிற் கழிகளால் ஜனங்கள் கிட்ட நெருங்காதபடி அடைத்திருந்தார்கள். அதிகாலையில் அங்கு ஆயிரக் கணக்கான ஜனங்கள் தம் மனைவி மக்களோடு வந்து கூடியிருந்தார்கள். மாகாணத்தைச் சேர்ந்த நானூறு கிராமங்களிலிருந்தும் எல்லாக் குடிகளும் திரண்டு வந்தது போலிருந்தது.

இவ்வளவு ஜனங்கள் அங்கு வந்து கூடியிருந்தது வெறும் வேடிக்கை பார்க்க விரும்பியன்று. இரத்த வெள்ளம் பெருகப் போவதைக் கண்டு களிக்கவுமன்று. பொது நன்மைக்காகப் பாடுபட்டுத் தமது வரிப்பளுவைப் போக்கின மகானைக் கொடுங்கோன்மைக்குப் பலியிடுமுன் ஒரு முறை கண்ணாரக் காண வேண்டுமென்ற ஒரு அவாதான் அவர்களை அங்கு இழுத்தது.

த்ஸூதாவையும் குழந்தைகளையும் கூட வெட்டப் போகிருர்கள் என்ற பேச்சை அவர்கள் நம்பவில்லை. ஆனுல் அங்கு இரண்டு சிலுவைகளி ருப்பதைக் கண்டதும், 'ஐயோ, இந்தக் கொடுமையை தெய்வம் சகிக்குமா' என்று ஏங்கிஞர்கள்.

கொலைக் களத்தில் ஸொகோரோ, த்ஸூதா, நாலு குழந்தைகள் வந்து நின்றபோது கூட்டத்திலிருந்த ஸ்திரீ களும் சிறுவர்களும் 'கோ' வென்று கதறியழுதார்கள். 'ஐயோ! அறி யாக் குழந்தைகளையும் பின் கட்டுக் கட்டி அழைத்து வந்தீர்களே, பாவி களா! நீங்கள் நாசமாய்ப்போக!' என்று சபித்தார்கள்.

அங்குக் கூடியிருந்த புருஷர்கள் ஸொகோரோவின் பெருமையையும் கம்பீரத்தையும் வாயார வாழ்த்திஞர் களாஞலும் த்ஸூதாவின் வீரத் தன் மைதான் அவர்கள் மனதைப் பெரி தும் உருக்கிற்று. 'இப்படிப் பட்ட பெரிய ஆபத்து தனக்கு நேரும் என்று தன் கணவர் சொல்லியும் அவர் கொடுத்த விவாக ரத்து சீட் டைக் கிழித் தெறிந்த புண்யவதி யல்லவா இவள்! முன் நாட்களில் உடன் கட்டை ஏறிய மகா ஸதிக ளுக்கு இவள் சிறிதும் குறைந்தவ ளன்று. 'இக்குழந்தைகள் கொலைக் களத்தில் இருப்பது எங்களுக்குச் சகிக்க வில்லையே! உனக்கு எப்படித் தான் இருக்குமோ! ஹே கற்புக்கரசி!' என்று வருந்திஞர்கள்.

மூங்கிற் கழிகளின் உட் புறத்தில் பதின் மூன்று புத்தர் கோவில்களி னின்று பல சன்னியாசிகளை கோஜென் அழைத்து வந்து நிறுத்திஞன். கொலை யாளிகள் தம் கொடிய வேலையைச் செய்யத் தயாராயிருந்த போது த்ஸூதா அவர்களைப் பார்த்து,

'நீங்கள் எப்படியும் எங்களெல்லா ரையும் கொல்லப் போகிறீர்கள். எங் கள் குழந்தைகளைக் கொல்வதற்கு முன் எங்களிருவரையும் கொன்று விடுங்கள். ஏனெனில் அக்குழந்தை கள் துடிப்பதை நாங்கள் கண்டு சகிக்க மாட்டோம்' என்று வெகு தூரம் நயந்து கேட்டுக் கொண்டாள்.

கொலையாளிகள் அதற்கு இணங் காது, 'அதிக குற்றம் செய்தவர் களைக் கடைசியிலும் மற்றவர்களை முந்தியும் கொல்லும்படிதான் எங்க ளுக்கு உத்தரவு. நாங்கள் அதன் படிதான் செய்ய வேண்டும்' என்று அவர்கள் சிறு குழந்தையி லிருந்து பெரிய மகன் வரை ஒவ்வொன்ருகச் சிரச்சேதம் செய்தார்கள்.

இதைக் கண்டு த்ஸூதா உடல் சிலிர்த்து, குழம்பிய தம் செங்கண் களைப் பரக்கத் திறந்து பயங்கரமான காளியைப் போலத் தோன்றிஞள்.

'அட கொலை பாதகர்களே! குற்ற மற்ற என் அருமைச் செல்வர்களைச் சிறிதும் இரக்கமின்றிக் கொன்றீர் கள்! அதையும் என் கண் எதிரில் கடும் நெஞ்சோடு செய்தீர்கள்! உங்களைத் தெய்வம் சும்மா விடுமா? எப்படியும் பழி வாங்கியே தீரும்! நீங்கள் ஒருவன்கூட அதிலிருந்து தப்பமாட்டீர்கள்! இதில் சம்பந்தப் பட்ட எவனையும் என் சாபம் விடாது தொடர்ந்து பீடிக்கும்!' என்ற சொற் கள் புண்பட்ட அவள் நெஞ்சிலி ருந்து வெளிவந்தன.

—'ஹா! என் வீர பத்தினி! நன்ருகச் சொன்ஞய்! இச் சட்டம் கொடி யதே யாஞலும் அதை அறிந்தே நாங்கள் இக் காரியத்தில் தலையிட் டோம். அதஞல் நாங்கள் இறப்ப தற்கு வருந்த வில்லை. ஒன்று மறியாத குற்ற மற்ற இக் குழந்தைகளைக் கொன்றீர்களே! இந்தப் பாவம் உங்களை விடாது. ஏமஸஞேபு! உன்

புராதன இந்தியா

—ச. மு.

பாரத நாடு பழம் பெரு நாடு. இதன் சரித்திரம் மிகவும் புராதன சரித்திரம். ஞானக் களஞ்சியங்களாகிய சமய தத்துவ மானத சாஸ்திரங்கள் அனைத்தும் ஆதியில் நம் பாரத வர்ஷத்திலே தான் தோன்றின. பீஜ தசாம்ச கணிதங்கள் ஆதியில் தோன்றியதும் நம் ஆரியாவர்த்தத்திலேயே. உடுக்க உடையின்றி மரப்பட்டைகளையும், பெருந்தழைகளையும் சுற்றிக்கொண்டு பாதாதி கேசம்வரை பல வர்ணங்களைப் பூசிக் கொண்டு, பிறர் பார்ப்பதற்குப் பயங்கரமான ரூபத்துடன் உலகின் ஏனைய பாகத்தார் காடுகளில் திரிந்த காலத்திலுங் கூட இந்த நாவலந் தீவினர் உயர்ந்த மெல்லிய ஆடைகளைத் தரித்துக் கொண்டு வீடுகளில் வசித்தனராம்.

மேலும் நம் நாட்டிலே கட்டப் பெற்றுள்ள அரிய வேலைப் பாடமைந்த கூட கோபுரங்களை நேரில் கண்ட 'பேஹியான்' என்ற சீனன், இவை தெய்வ சிருஷ்டியோ என்று ஆச்சரியப் பட்டானும்.

எகிப்து தேசத்திலுள்ள 'கூர்துதிக்' கோபுரச் சிலைகளைச் சுற்றி நம் நாட்டு 'டாக்கா மஸ்லின்' துணிகளைச் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அத்தேசத்தார் கட்டியலங்கரித்து இன்புற்றதாகப் பழைய நூல்கள் பகர்கின்றன. 'விழுப்புண் படாத நாளெல்லாம் நாளல்ல' எனக்கருதிய வீர தீர சூர பராக்கிரமர்களும், மன்னுயிர் அனைத்தையும் தன்னுயிரெனக் கருதி ஆறிலொரு விளை பொருளையே திறையாகக் கொண்டு செங்கோல் ஓச்சிய சீரிய மன்னர்களும், கொழுநனையே தெய்வமெனக் கருதி யொழுகிய உத்தமக் கற்பரசிகளும், ஆச்சாரியர்களும், பக்த சிரோமணிகளும் மல்கியிருந்த மகாநாடு நம் பாரத நாடே.

பௌதிக சாஸ்திரத்தை நம் முன்னோர்களிடம் இருந்து அரேபியர்கள் கற்றுப் பின் ஐரோப்பியர்கள் அறிந்ததாக மூதறிவுடையோர் மொழிகின்றனர். மெகஸ்தீனீஸ் (Megasthenes) என்ற யௌவனன் 'இந்தியர்களுக்குப் பொய்யே தெரியாது. சண்டை சச்சரவுகளை அவர்கள் அறியமாட்டார்கள்' என்று எழுதி வைத்திருக்கிறுன்.

அயல் நாட்டினர் பொன்னையும் வெள்ளியையும் கொணர்ந்து கொட்டிவிட்டுப் பிரதியாக நம் வாசனைப் பண்டங்களையும், முத்து வைடூரியங்களையும் தத்தம் நாடுகளுக்கு எடுத்துச் செல்வது வழக்கமாம். உரோமாபுரி

வம்சம் இதோடு நாசம்! நீயும் உன் குடும்பத்தில் சம்பந்தப் பட்டவர்களும் இனி ஒரு க்ஷணம் கூட மனச் சாந்தி காண மாட்டீர்கள்! நான் பிசாசாக வந்தாவது உங்களைக் கடைசி வரை பிடிப்பேன்!' என்று ஸொகோரோ மெய் மறந்து தொலைவில் பார்த்துக் கொண்டு சொன்னுன்.

இதற்குள் இருவரையும் சிறுவைகளில் பிணைத்துக் கொலையாளிகள் ஈட்டிகளால் குத்திக் கொன்றூர்கள். கோஜென் இக் காட்சியைக் காணச் சகியாது ஓடி 'இன்பா' ஏரியில் விழுந்து மாண்டான்.

யில் உள்ளவர்கள் நம் நாட்டுப் பண்டிதர்களை அழைத்து வைத்துக் கொண்டு பேராவலுடன் ஆரியமும் செந்தமிழும் பயின்றதாக அவர்களுடைய சரித்திரங்களும், நம் இலக்கியங்களும் கூறுகின்றன.

'இராய்லி' என்ற வெள்ளையன், வைத்திய சாஸ்திரத்தை இந்தியர்களிடமிருந்தே தெரிந்து கொண்டோம் என்று கூறுவதைக் கேட்க நம் மனம் சந்தோஷத்தாற் பூரிக்கின்றது. சுரங்கத் தொழிலை முதன் முதலாக அறிந்து கொண்டவர்களும் நம்மவர்களே. இரண்டு லட்சத்து இருபதாயிரம் வரிகளுடைய மகா பாரதம் போன்ற மகா காவியம் வேறு எத்தேசத்திலும் கிடையாது. பாணினியின் இலக்கணமே ஆதி யிலக்கணம் என்று சிறந்த ஐரோப்பிய பண்டிதர்களும் அபிப்பிராயப் படுகின்றனர்.

ஸ்வாமி தயானந்த சரஸ்வதி, அக்காலத்தில் புகை ரதங்கள் கூட நம் நாட்டில் ஓடியதாக வேதத்தினின்றும் சில ஆதாரங்களை யெடுத்துக் காட்டி நிரூபிக்கின்றார். புஷ்பகவிமானங்களாகிய ஆகாயக் கப்பல்கள் விண்ணும் மண்ணும் ஒன்று சேரப் பறந் துலவியதாகப் பழங்காவியங்களிற் காண்கின்றோம்.

அரசியல் விஷயமாக எழுதப்பட்டுள்ள மநு தர்ம சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், சுக்ர நீதி, திருக்குறள் போன்ற கிரந்தங்களை யுற்று நோக்கி ஆராயப் புகுவோமாகில் அக்காலத்திய ராஜீய முறைகளின் அருமையை மிகவும் நன்கறியலாம்.

சுருங்கச் சொன்னால் பொதுவாக இந்தியன் என்ற நாமமே ஒரு திரு நாம மாகவும், கௌரவப் பெயராகவும் ஆதியில் உலகத்தாரால் கருதப் பெற்றது. இவை நம் புராதனப் பெருமை; பழைய காலச் சரிதம்; நம்முன்னோர் வாழ்க்கை.

மாக்ஸ்முல்லர், சகோதரி நிவேதிதா, மேரி அந்தன் அம்மை முதலான அன்னியர்களுங் கூட நம் நாட்டைப் பொன்னே போற் போற்றி வியந்து புகழ்ந்து பாடியதும் இதனாற்றான் போலும்! அம்மவோ! இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த நம் பாரத நாட்டின் தற்கால நிலைமையை என்னென்று சொல்வோம்?

ஐரோப்பாவில் வாழை மரம் முதன் முதலாகப் பயிர் செய்யப் பட்டது 1623ம் வருஷத்தில் தான்.

ஃ ஃ ஃ

கனம் ஆகாகானுக்குக் குதிரைப் பந்தயத்தில் மட்டும் வருஷத்தில் 70,000 பவுன் வருமானம் கிடைக்கிறதாம்.

ஃ ஃ ஃ

வேட்டை நாய்களை வைத்துக் கொண்டு வேட்டை யாடுகிறார்களே அவர்கள் மட்டும் வருஷத்தில் 7,000,000 பவுன் செலவழிக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

இங்கிலாந்தில் குதிரைப் பந்தயங்களில் ஓடும் குதிரைகளுக்கு மட்டும் வருஷத்தில் 250,000,000 பவுன் செலவழிக்கப் படுகிறது.

ஃ ஃ ஃ

கிரேட் பிரிட்டனிலுள்ள பெண்கள் தங்களை அழகு படுத்திக் கொள்வதற்காகத் தினசரி 340,000 பவுன் செலவழிக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

நூறு வயதுக்கு மேற்பட்டவர்கள் பல்கேரியாவில் 426 பேர்; கொலம்பியாவில் 311; ப்ரேஜில் 140; ஸ்வீடன் 65; பெல்ஜியம் 65; ஜெர்மனி 2.

ஃ ஃ ஃ

அமெரிக்காவில் ஒருகுழந்தைக்குவயது ஆறுமாதந் தானுகிறது. இது, இதற்குள் சுருட்டுப் பிடிக்கிறது; புகையிலையை மென்று தின்கிறதாம்.

இறந்தோர் நகை

(ஹரீந்திர நாத் சட்டோபாத்யாயா)

மொழி பெயர்த்தவர்:—பொ. திரிகூட சுந்தரம்
M. A., B. L.,

1. சாவு என்று பயப்படுத்துகிறீர்களா?
அதைக் கேட்டுச் சிரிப்பதா, ஆச்சர்யப் படுவதா?
சாவா? நாங்கள் ஒரு பொழுதும் ஜீவித்ததில்லையே!

2. விலங்கும் சிறையும் என்று பயப்படுத்துகிறீர்களா?
அதைக் கேட்க விநோதமாயிருக்கிறதே.
எங்கள் நரம்பு ஒவ்வொன்றும் ஒரு விலங்குதானே.
எங்கள் உடல் முழுவதும் துன்பம் நிறைந்த சிறைதானே.

3. எங்களைச் சுட்டு வீழ்த்துவீர்களா?
சுட்டால் உயிரைக் காணமாட்டீர்களே.
உறங்கிக் கிடக்கும் சாவையல்லவோ எழுப்புவீர்கள்.
நீங்கள் விரும்புவது போல் அச்சத்தை எழுப்ப முடியாதே.

4. முட்டாள்களே! உங்கள் அக்கிரமம் கண்டு சிரிக்கிறோம்.
இனிமேல் எங்களிடம் உங்கள் எண்ணம் பலிக்காது.

5. எங்கள் நகையின் பலம் அறிவீர்களா?
உங்கள் ராஜ்யங்கள் உறுதியற்றவை என்று உணர்த்தும்
"இறந்தோர் நகை"—வாழ்வோர் மத்தியில் எழுந்து
அற்புதங்கள் ஆக்கும் ஆற்றலாகும், அறிவீர்.

6. ஜாக்கிரதை! இறந்தோர் நகை என்று எண்ணற்க.
இறுமாப்புக் கொண்ட இராஜ்யங்களை
இயமனுலகு அனுப்ப இயலும்.
என்ன சொல்கிறீர்? இஷ்டம் என்ன?

அடுத்த சர்வாதிகாரிகள் யார்?

—பா

சென்ற மாத "ஜோதி" யில் 'மகாத்மாவுக்கு அடுத்தபடி யார்?' என்ற கட்டுரையில், இந்தியாவின் எதிர்காலத் தலைவர் யாரென்பதைப் பற்றி ஓர் அன்பர் சர்ச்சை செய்திருந்தார். அதற்குப் பொருத்தமாக, ஐரோப்பாவில் சர்வாதிகாரிகளாயிருக்கும் மூன்று பேருக்குப்பின்னால் யார் யார் என்பதைப் பற்றி ஆங்கிலப் பத்திரிகை யொன்றில் வெளிவந் திருப்பதை மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். ஒவ்வொரு நாட்டின் தலைவிதி யாரார் கையில் இருக்கிற தென்பதைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டுவது அவசிய மில்லையா?

உலகத்திலேயுள்ள எல்லாரும் இப்பொழுது ஐரோப்பாவிலுள்ள மூன்று நாடுகளின் மீது கவனஞ்செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த மூன்று நாடுகள்தான் இத்தலி, ஜெர்மனி, ருஷ்யா. இம்மூன்றையும் ஆட்டிவைக்கிறவர்கள் மூன்று சர்வாதிகாரிகள். பெனிடோ முஸோலினி (வயது 55) அடோல்ப் ஹிட்லர் (வயது 49) ஜோஸப் ஸ்டாலின் (வயது 59) ஆகிய மூவரைப் பற்றியுமே இப்பொழுது பத்திரிகைகளின் செய்திப் பத்திகள் நிரம்பி யிருக்கின்றன. இவர்கள் காலத்திலே ஒற்றுமை யாகவும் பலமாகவும் காணப்படுகிற மேற்படி மூன்று நாடுகளும் இவர்களுக்குப்பின்னும் இப்படியே இருக்குமா? அல்லது சிதறி உடைந்து போகுமா? இந்த மூன்று பேருடைய வார்சுகள் யார்? இப்பொழுதுள்ள மூன்று சர்வாதிகாரிகளும், தங்களுக்குப்பின்னால் இன்னார் இன்னார்தான் தலைவர்களாக வர வேண்டுமென்பதைப்பற்றி ஏதேனும் திட்டம் போட்டிருக்கிறார்களா? இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லக் கூடிய சந்தர்ப்பம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லலாம்.

இத்தலி, ஜெர்மனி, ருஷ்யா ஆகிய மூன்று நாடுகளிலும் இப்பொழுதே சர்வாதிகாரிகள் பொறுக்கி யெடுக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்கள், இப்பொழுதைய சர்வாதிகாரிகளின் அடிச்சுவடுகளை அப்படியே பின்பற்று வார்கள்.

இத்தலி

இத்தலியில், முஸோலினிக்கு அடுத்தபடியாக அவருடைய மருமகப் பிள்ளையான கவுண்ட் சியானோ (Count Galeazzo Ciano de Cortellazo) என்பவர் சர்வாதிகாரியாக வரக்கூடும். இவர் முஸோலினியின் மூத்த பெண்ணான எட்டா என்பவளை விவாகம் செய்து கொண்டிருக்கிறார். இப்பொழுது இத்தலியின் அந்நிய நாட்டு மந்திரி. ஆகாய விமானங்களை வேகமாகச் செலுத்துவதில் மகா நிபுணர்.

1927ம் வருஷம் முஸோலினி ஒரு பிரசங்கம் செய்கிறபோது, தனக்குப் பின்னர் வரவேண்டிய சர்வாதிகாரி இன்னும் பிறக்கவில்லை யென்று கூறினார். அப்பொழுது கவுண்ட் சியானோவின் பெயர் ஒருவருக்குமே தெரியாது. இதற்குப் பிறகு ஆறு வருஷங் கழித்துத்தான்—அதாவது 1933ம் வருஷத்தில்—சியானோ அரசியல் அரங்கத்திற்கே வந்தார். ஆனால் வெகு சீக்கிரத்தில் முன்னேற்றத்தையடைந்தார்.

சியானோ பரம்பரையான ஒரு செல்வக் குடும்பத்தில் பிறந்தவர். இவ

ருடைய தகப்பனார் பெரிய பணக்காரர். ஆனால் தேசீய வாதி. முஸோலினி, தமது வாழ்க்கையின் ஆதியில் பத்திரிகாசிரியராக இருந்து சங்கடப்பட்டுக் கொண்டிருந்த போது அவருக்கு உதவி செய்தார். அதைப் போலவே அவர் மகனும் சிறு வயதிலேயே முஸோலினி தோற்றுவித்த பாசிஸ்ட் இயக்கத்தில் ஈடுபட்டார். சியானோ சட்டப் பரீட்சைக்குப்படித்துத் தேறினார். பிறகு, பாசிஸ்ட் கட்சிப் பத்திரிகையாகிய 'நவ்வோ பைஸே' என்பதில், புஸ்தகம், நாடகம் முதலியனவற்றை விமரிசனம் செய்யும் தொழிலை ஏற்றுக் கொண்டு அதனைச் செவ்வனே செய்தார்.

1925ம் வருஷம் இவர் அரசாங்க அந்நிய நாட்டு இலாகாவில் ஒரு சாதாரண உத்தியோகஸ்தராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். முதலில் தென்னமெரிக்காவிலுள்ள இத்தாலிய ஸ்தானீகருடைய காரியாலயத்தில் வேலை பார்க்கும்படி அனுப்பப் பட்டு அங்கே சில வருஷ காலம் இருந்தார். பிறகு சீனாவில் பீகிங் நகரிற்கு அனுப்பப் பட்டு அங்கே இத்தாலிய ஸ்தானீகராயிருந்த டேனியல் வாரே என்ற பிரபல ராஜ தந்திரியிடம் வேலை பழகினார். பின்னர், போப்பரசருக்கும் இத்தாலிய அரசாங்கத்திற்கும் சமரஸ ஒப்பந்தம் ஏற்பட்ட காலத்தில், போப்பரசருடைய இத்தாலிய ஸ்தானீகர் காரியாலயத்தில் பிரதம காரியதரிசியாக நியமிக்கப் பட்டார். இந்தக் காலத்தில் தான் இவருக்கும், முஸோலினியின் மகள் எட்டாவுக்கும் காதல் ஏற்பட்டு விவாகம் நடைபெற்றது. விவாகமானவுடனேயே தம்பதிகள் சைனாவுக்குப் போக வேண்டியிருந்தது. அங்கே போன பிறகு இவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது. இந்தக் காலத்தில் கவுண்ட் சியானோ மிகத் திறமையானவரென்றும் தீவிர அறிவு படைத்தவரென்றும் பெயரெடுத்தார். பின்னர், இவர் பிரசார மந்திரியாக நியமிக்கப் பட்டார்.

1935ம் வருஷம் அபிசீனிய யுத்தம் தொடங்கியதும், கவுண்ட் சியானோ இத்தாலிய ஆகாயப் படையின் ஒரு பகுதிக்குத் தலைவராக நியமிக்கப் பட்டு, அங்கே அநேக சேதத்தை உண்டு பண்ணினார். மகா துணிச்சலுள்ளவர் என்று பெயரெடுத்தார்.

முஸோலினிக்கு இவரிடத்தில் அதிக நம்பிக்கை இருப்பதாகச் சொல்லப் படுகிறது. தினந்தோறும் மாலை ஆறரை மணிக்கு மருமகப் பிள்ளை மாமனாரைச் சந்தித்து, உலக நிலையைச் சுருக்கமாகக் கூறிவிட்டுச் செல்வார். குணத்திலும் மற்ற பழக்க வழக்கங்களிலும், முஸோலினிக்கும் சியானோவுக்கும் அதிக வேற்றுமையில்லையென்று சொல்கிறார்கள். இரண்டு பேருடைய உருவம் கூட ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறது. முஸோலினி பேசுகிற மாதிரியே சியானோவும் பேசக் கற்றுக் கொண்டிருக்கிறார். இவர்தான், முஸோலினிக்குப் பிறகு சர்வாதிகாரியாக வரக் கூடும்.

ஜெர்மனி

ஹிட்லர், ஜெர்மனியின் அரசியல் வாழ்வில் நேரடியான சம்பந்தம் வைத்துக்கொள்ளாமல், ஜெர்மனியின் பிரசிடெண்டாக மட்டும் இருக்கப்போகிறார் என்ற ஒரு வதந்தி சமீபகாலமாக உலவியது. இஃதெவ்வளவுதூரம் உண்மையோ தெரியாது. ஆனால் சமீபத்தில் நடைபெற்ற சம்பவங்களைக் கொண்டு இவற்றை நம்ப முடியவில்லை.

ஜெர்மனியில் இப்பொழுது திரிமூர்த்திகள் ஆட்சிபுரிகிறார்கள் என்று சொல்ல வேண்டும். அவர்கள் முறை

யே, ஹிட்லர், கோரிங், கோப்பல்ஸ் ஆகியவர்களே. இவர்கள் மூவரையும் பிரித்துச் சொல்ல முடியாது. ஆனால், ஹிட்லருக்கு அடுத்த சர்வாதிகாரி கோரிங் தான் என்று எல்லாரும் உறுதியாக நம்புகிறார்கள். கோரிங், ஐரோப்பிய யுத்தத்தின் போது ஜெர்மன் ஆகாய விமானப் படையில் ஒரு முக்கிய உத்தியோகஸ்தராக இருந்தார். இவருக்கு இளமையிலிருந்தே யூதர்களைக் கண்டால் பிடிக்காது. சர்வாதிகாரியாக வருவதற்கு அஃதொரு முக்கிய தகுதியல்லவா? இவர் சிறுபிள்ளையாயிருக்கும்போது, தமது நாயை, ஆரியரல்லாதாரைக் கடிக்கும்படி ஏவி விடுவாராம்.

கோரிங் தினம் காலையில் ஏழு மணிக்கு எழுந்திருந்து குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்கிறார். கொஞ்சம் ஆகாரமெடுத்துக் கொண்டு உடனே வேலையைத் தொடங்கி விடுவார். கொஞ்சம் சோர்வாக இருக்கிறாரென்று தென்பட்டால் இவருடைய வேலைக்காரன், கிராமபோன் பிளேட்டுகள் வைத்து இவரை உற்சாகப் படுத்துவான்.

கோரிங் மகா தைரியசாலி; ஆபத்திலே உற்சாகங் காண்கிறவர். ஒரு சிங்கக் குட்டியை வளர்க்கிறார். ஹிட்லருக்கும் இவருக்கும் அநேக குண வேறுபாடுகள் உண்டு. ஹிட்லர், தான் பிடித்ததைச் சாதிக்க வேண்டுமென்பதில் உறுதியாக நிற்பவர். எளிய வாழ்க்கையை விரும்புகிறவர். ஆடம்பரத்தை வெறுக்கிறவர். மற்றவர்களோடு கலந்து பேசுவதில் கொஞ்சம் சங்கோஜமேபடுவார். ஆனால் கோரிங்கோ ஆடம்பர வாழ்க்கையில் பிரியமுள்ளவர். தான் உயர்பதவியில் இருப்பவர் என்பதை உணர்ந்து நடப்பவர். தற்புகழ்ச்சி செய்து கொள்வதிலும் ஆர்வமுடையவர். ஆனால் நகைச்சுவை நிரம்பியவர். தமது தேகப் பருமனைப் பற்றி யாரேனும் வேடிக்கையாகச் சொன்னால் அதனைத் தாமே முதலில் அநுபவித்து உரக்கச் சிரிப்பார்.

இப்பொழுது, இவர் அநேக உத்தியோகங்களை ஒன்றாகச் சேர்த்துப் பார்த்து வருகிறார். ப்ரஷ்யாவின் மந்திரி, ஜெர்மன் ஆகாயப் படைத் தலைவர், ஜெர்மன் தரைப் படையின் தலைவர், ப்ரஷ்ய போலீஸின் தலைவர், ஜெர்மன் பார்லிமெண்டின் தலைவர், ப்ரஷ்ய ஸ்டேட் கவுன்சில் தலைவர், காட்டிலாகா தலைவர், நான்கு வருஷ திட்டத்திற்கு அதிகாரி ஆக இத்தனை வேலைகளையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்து வருகிறார். இவர்தான், ஹிட்லருக்குப் பின்னால் ஜெர்மன் சர்வாதிகாரியாக வரக்கூடுமென்று சொல்லப் படுகிறது.

ருஷ்யா

ருஷ்யாவில் ஸ்டாலினுக்குப் பிறகு, தற்போது யுத்த மந்திரியா யிருக்கும் கிளிமெண்டி வோரோஷிலோவ் என்பவர்தான் சர்வாதிகாரியாக வரக்கூடுமென்று சொல்லப் படுகிறது. இவரை 'கிளிம்' என்று எல்லோரும் அழைப்பர். இவர் 1881ம் வருஷம் பிறந்தவர். இவருடைய தகப்பனார் ஜார் காலத்தில் ஒரு போர் வீரராக உழைத்தவர். ஆனால் இவருடைய பட்டாளம் கலைக்கப்பட்டு விட்ட பிறகு, பெரிய தோட்டங்களில் சென்று கூலி வேலை செய்து பிழைத்தார். இதனால் 'கிளிம்'மும் இவருடைய சகோதரியான சிறுமியும் வயிற்றுப்பாட்டுக்காக பல இடங்களிலும் சென்று பிச்சை யெடுக்க வேண்டியதாயிற்று. ஏழு வயதிலேயே கிளிம் ஒரு சுரங்கத்திற்குள் சென்று கூலி வேலை செய்யத்தொடங்கினார். தினம் மூன்றணா கூலி.

பிறகு பத்து வயதில் ஆடு மேய்த்து ஜீவிக்கலானார். அதற்குப் பிறகு ஒரு தொழிற் சாலையில் கூலியாளாக அமர்ந்தார். பன்னிரண்டு வயது வரையில் இவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் பின்னர் புரட்சி இயக்கங்களில் சம்பந்தப் பட்டு சிறை வாசத்தை அநுபவித்த போது, அங்கே எழுதவும் படிக்கவும் கற்றுக் கொண்டு நல்ல படிப்பாளியாகி விட்டார். ஞாபக சக்தி இவருக்கு அதிகம். ஒரு முறை பார்த்து விட்டால் அதனை அப்படியே பாராமல் ஒப்புவிப்பார்.

தொழிலாளர் புரட்சிகள் பலவற்றிற்கு இவர் தலைமை பூண்டு நடத்தியிருக்கிறார். 1918 ம் வருஷம் சோவியத் புரட்சி நடைபெற்றபோது இவர் ஸ்டாலினுடன் சேர்ந்து கொண்டு ட்ரோட்ஸ்கிக்கு விரோதியானார். பின்னர், போலந்துக்கும் காக்கஸஸ் மலைப் பிராந்தியத்திற்கும் சென்று ருஷ்ய ஆதிக்கத்தை ஸ்தாபித்தார்.

1924 ம் வருஷம் லெனின் இறந்து, ஸ்டாலின் சர்வாதிகாரியாக வந்த பிறகு, கிளிம் சேனாதிபதியாக நியமிக்கப்பட்டார். இப்பொழுது இவர் யுத்த மந்திரி அல்லது பாதுகாப்பு மந்திரி என்ற உத்தியோகத்தை வகிக்கிறார்.

தனக்குப் பின்னால் தன்னைப் போன்ற ஒருவர் தலைவராக வர வேண்டுமென்று ஸ்டாலின் விரும்புகிறார். கிளிம், ஸ்டாலின் நினைப்பது போல் இருக்கிறார் என்று சொல்லப் படுகிறது.

ஸ்டாலினுக்கும் கிளிம்முக்கும் ஒரே ஒரு வித்தியாசம் உண்டு. ஸ்டாலின் சந்தேகப் பேர்வழி. அடுத்தது இன்னது என்பதை ஊகித்தோ சந்தேகித்தோ எதிரிகளுக்கு இடங் கொடாமல் பந்தோபஸ்து செய்து விடுவார். ஆனால் கிளிம் அப்படி சந்தேகிக்க மாட்டார். இதுதான் வித்தியாசம். இந்த ஒரு காரணத்திற்காக, ஸ்டாலின், தனக்குப் பின்னால் கிளிம்மை சர்வாதிகாரியாக நியமிக்காமல் போவாரா என்று எல்லாரும் கேட்கிறார்கள்.

மஞ்சூரியாவில் ஜப்பான் ஆதிக்கம்

மஞ்சூரியா, ஜப்பானுடைய ஆதிக்கத்திற்குட்பட்ட பிறகு, அந்த நாட்டில் சென்ற ஆறு வருஷ காலமாக ஜப்பானியருடைய வியாபாரச் செல்வாக்கு எவ்வளவு தூரம் பரவியிருக்கிற தென்பதைப் பின் கண்ட புள்ளி விவரங்களினால் தெரிந்து கொள்ளலாம்:—

சென்ற ஆறு வருஷ காலத்தில் 248 புதிய வியாபார கம்பெனிகள் மஞ்சூரியாவில் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. இவற்றில் 171 கம்பெனிகள் ஜப்பானியருடைய நிருவாகத்திலிருக்கின்றன. மிகுதியுள்ளவற்றில் 77 கம்பெனிகள் மஞ்சூரியர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டிருக்கின்றன. ஜப்பானியர்களுடைய வியாபார ஆதிக்கத்தின் பயனாக, பல வருஷங்களாகத் தொழில் நடத்திக் கொண்டு வந்த அமெரிக்க ஐரோப்பிய கம்பெனிகள் பலவும் தொழில் செய்யாமல் நின்று விட்டன.

பர்மாவின் முக்கிய ஜாதிகள்

——கு. கோ. கிருஷ்ணன்
B. Sc. (Hons)

மான் (தலேய்ங்) என்பவர்களும், ஷான் என்பவர்களும் திபேத்து தேசத்திலிருந்து வந்தவர்களென்று முன் கூறியுள்ளோம். இவர்கள் பர்மாவுக்குள் வருமுன் வங்காளத்தின் கீழ் பாகத்தில் சிறிது காலம் வசித்து வந்திருக்கிறார்கள். இதன் காரணமாய் இந்தியர்களின் பழக்க வழக்கங்களைக் கையாடி வந்திருக்கிறார்கள். முக்கியமாய் மோண்டா அல்லது கோல் என்ற இந்தியக் குடும்பத்தினர்களுக்கும் இவர்களுக்கும் பாஷைகளில் அதிகப் பொருத்தங்களிருந்தன. வடகிழக்கு வங்காளத்தில் வசித்த இம் மோண்டா ஜாதியின் பெயர்கள் தலேய்ங் ஜாதியர்களின் பெயர்களை ஒத்திருந்தன. இவர்களுக்குள் ஏற்பட்ட கலப்பாலேயே தலேய்ங் ஜாதியார் மங்கோலியர் வம்சத்தினர்களைப் போலல்லாமல் மிகவும் உயரமாகவும், அழகாகவும், சிறிது கருமையான நிறமாகவுமிருந்தனர். தாட்டுனிலிருந்த முற்காலத்துப் புத்தர் ஆலயத்திலெழுதியிருந்த தலேய்ங் ஜாதியாரின் உருவங்களைக்கவனித்தால் அவர்கள் இந்தியர்களைப் போலவே தங்கள் மயிர்களைக் கோதித் தலைக்குப் பின் புறமாய் முடியிட்டிருந்தனர். (இப்பொழுது தலையின் உச்சியில் முடிபோடுகின்றனர்.) இவர்கள் சால்வீன் நதிக் கணவாய் வழியாகத் தெற்கு நோக்கி வந்து ஐராவதி, சால்வீன், சிட்டாங் நதி முகத்துவாரங்களில் குடியேறிப் பிறகு சயாம், தெனசரீம் மாகாணங்களிலும் பரவி நிற்கின்றனர்.

இச்சமயத்தில் தென்னிந்தியாவில் தெலுங்கானா வென்ற பாகத்திலிருந்து அநேக இந்தியர் மோல்மேனுக்கருகில் வியாபாரிகளாகக் குடியேறினர். இவ்வாறு குடியேறிய இந்தியர்களின் சம்பந்தத்தால் மான் என்பவர்கள் தலேய்ங் என்று பர்மிய ஜாதியரால் அழைக்கப்பட்டனர்.* இவ்விந்தியர்களுக்கும், மான் ஜாதியார்களுக்கும் அதிக சம்பந்தம் ஏற்பட்டதாலேயே தலேய்ங் பரம்பரைக் கதைகளில் 5—ம், 6—ம் நூற்றாண்டில் இந்தியாவில் காஞ்சிபுரத்தை யாண்ட தர்ம பாலனையும் அவன் தேசத்தையும் பற்றி பல குறிப்புகள் காணப்பட்டதோடு காஞ்சிபுரத்தில் வசித்த பல்லவ ஜாதியாரின் எழுத்துக்களை தலேய்ங் எழுத்துக்கள் பெரும்பாலும் ஒத்திருந்தன. இவர்கள் இப்பொழுது பர்மிய ஜாதியோடு சேர்ந்து மாறிவருகிறார்கள்.

பர்மியர்கள் முதலாவதாககன்ரான், பியு, தெட் என்றழைக்கப் பட்டு பிறகு கன்ரான் என்பவர் அரக்கான் ஜாதியினர்களாகவும், தெட் என்பவர்கள் சின் ஜாதியினர்களாகவும், பியு என்பவர்கள் பலவித கலப்பால் பர்மியர்களெனவும் இப்பொழுது திகழுகின்றனர். பர்மியர்கள் சாக்கியர் வம்சத்தினர்களென்று தங்களை கூறிக்கொள்வர். இது முற்றிலுந் தவறு. இவர்கள் தலேய்ங் ஜாதியைப்போல மங்கோலியர் வம்சத்தினர். இவர்களும் திபேத் வழியாக பர்மா தேசத்தினுட் பிரவேசித்தனர். பர்மா தேசத்தின் பெயர் 'பர்மா' என்பது 'பிரம்மா' என்ற நாமத்திலிருந்து திரிந்தது. வெகு காலத்திற்கு முன் குடியேறிய இந்தியர்கள் இதனை 'பிரம்ம தேசம்' என அழைத்தனர். பின்பு 'மிரம்மா' என்றும் அதின் பின் 'மியம்மா' என்றும் கடைசியாக 'பர்மா' வென்றும் மாறி

* Sir. A. Phayre—"Burma"

யது. இந்தியர்களைக் கொண்டே அநேக பட்டணங்களுக்குப் பெயர்களும் உண்டாயிருந்தன. ஆகவே பர்மிய ஜாதியினருக்குப் பின்னால் பர்மாவுக்குப் பெயர் ஏற்பட்டதில்லை என்பது துணிபு.

முதலாவது பர்மியர்களின் இராஜ்ஜியம் டகாங் என்ற இடத்தில் அபிரத்ஜா என்ற இந்திய அரசனால் உண்டாக்கப்பட்டது. அதன் வரலாறு பின் வருமாறு:—

கௌதமர் வருகைக்கு வெகு காலத்திற்கு முன் கோசலம், அஸ்தினாபுரம், பாஞ்சாலம் முதலிய தேசங்களின் அரசன் கௌலிய தேசத்து அரசன் குமாரத்தியை விரும்பிக் கேட்க, தான் தாழ்ந்த ஜாதி அரசனெனக் கேட்டுச் சீற்றங் கொண்டு அவ்வரசன் மீது போருக்குப் புறப்பட்டான். யுத்தத்தில் சாக்கிய ஜாதியினர்களால் ஆளப்பட்டு வந்த கௌலிய, தீவாதகா, கபிலவாஸ்து முதலிய நகரங்கள் கொள்ளையடித்து நாசஞ் செய்யப் பட்டன. அப்பொழுது கபிலவாஸ்து நகரையாண்ட அபிரத்ஜா என்பவன் தனது யுத்த வீரர்களுடன் வெளியேறி பர்மாவினுட் பிரவேசித்து 'தெங்கதரதா, தெங்கதனகோ' என்றழைக்கப்பட்டு வந்தவிடத்தில் 'டகாங்' என்ற பெயருடன் ஓர் நகரைக் கட்டி ஆண்டு வந்தான். இதனை வலியுறுத்தவே நாம் முன்பு கூறிய 1894ல் பூரெர் என்ற ஐரோப்பியர் இவ் விடத்தில் கண்டு பிடித்த கல்துண்டு அருந்துணையா யிருக்கிறது.

அபிரத்ஜா அரசனுக்கு கன்ரத்ஜாஜீ, கன்ரத்ஜாநே என இரு புதல்வர்களிருந்தனர். அபிரத்ஜா மறைந்த பிறகு இரு சகோதரர்களுக்குள் யார் அரசனாய் வருவதென்பதைப்பற்றித் தர்க்கம் ஏற்பட்டது. இவர்கள் வழக்கைத் தீர்த்து வைக்கப் பெரியோர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து இருவரையும் ஒரே இரவில் ஓர் ஆலயம் கட்டும்படி கட்டளையிட்டனர். அதி காலையில் யாருடைய கட்டடம் பூர்த்தி பெற்று விளங்குகிறதோ அவனே இராஜனாவானெனக் கூறினர். இளைய குமாரன் புத்திசாலியாக விருந்ததால் மரங்களை உபயோகப்படுத்தி ஓர் ஆலயங்கட்டி, அதனை வெள்ளைத் துணியால் மூடி அதின்மேல் வெள்ளையடித்து முழுவதும் பார்வைக்குப்புதிய கட்டடமாகத் தோன்றும் படி ஒரே இரவில் முடித்தான். மூத்த சகோதரன், கன்ரத்ஜாஜீக்கு ஒன்றும் புலனாகாமல் அதிகாலையில் தன்சகோதரன் கட்டியிருந்ததைக்கண்டு தன்னைப்பின் பற்றுவோர்களை அழைத்துக்கொண்டு வெளியேறினான். இவன் ஐராவதி ஆற்றின் வழியாகவந்து அரக்கான் தேசத்தில் புகுந்து அப்பொழுது அங்கு வசித்து வந்த 'மிரு' என்ற ஜாதியார்களின் இராஜ குமாரத்திகள் இருவரையும் மணந்து கொண்டு அரக்கான் இராஜ்ஜியத்தை உண்டாக்கினான். இவனுக்குப் பின்னால்தான் இப்பொழுதுள்ள அரக்கான் ஜாதியினர் 'கன்றுன்' என அப்பொழுது விளங்கினர். இவர்கள் பர்மியர் 'வம்சத்தின்' மூத்த கிளையினடியாய்த் தோன்றியவர்க ளென்று 'பிரம்பக்ரீ' அல்லது 'மூத்த பர்மியர்கள்' என்று அழைத்துக் கொள்ளுகிறார்கள். இவ்விரண்டு (பர்மியர் அரக்கானியர்) வகையினரின் பரம்பரைக்கதைகள் பல முக்கிய விஷயங்களில் ஒற்றுமைப்படுவதால் இவர்களின் சம்பந்தம் உண்மையென உரைப்பதற் கேதுவுண்டு.

இப்பொழுது, சிட்டகாங் முதலிய பாகங்களிலிருந்து இந்திய முஸ்லீம்கள் பிரவேசத்தால் அரக்கான் ஜாதியினர் கலப்பு மணம் செய்து பலர் முஸ்லீம்களா யிருந்து வருகின்றனர்.



அறிவுத்துறை

பூலோகத்தின் முடிவு காலம் எப்பொழுது?

——"விஞ்ஞான போதகர்"

"ஜோதி"யில் முன்பு பூமியை நிறுத்துப் பார்த்தோம். பின்பு அது உண்டாகிக் கடந்துபோன வயதைக் கணித்தோம். இப்பொழுது அதன் முடிவு காலத்தையுங் கூறிவிட வேண்டியது அவசிய மல்லவா?

இப் பிரபஞ்சத்தில் அந்தரமாய் நிற்கும் ஒவ்வொரு விண்மீனிலும் உயிர்கள் வசிக்க ஏது வுண்டென்னும் பழைய நம்பிக்கையைத் தற்கால வான சாஸ்திரம் அடியோடு அகற்றி விடுகிறது. விண்மீன்களின் உஷ்ணம் சுமார் 1000 டிகிரியிலிருந்து 30,000 டிகிரிவரை யுண்டு. பொதுவாக உயிர் வாழ்க்கைக்கு நட்சத்திரங்கள் அதிக உஷ்ணமாயிருத்தலுங்கூடாது; அதிகக் குளிர்ச்சியாக யிருத்தலுங்கூடாது. சூரியனைச் சுற்றிவரும் விண்மீன்களில் புதன் (Mercury) வெகு சமீபத்திலும் அதாவது சுமார் 36,000,000 மைல் தூரத்திலும், ப்லூடோ (Pluto) என்றகிரகம் வெகு தூரத்திலும் அதாவது சுமார் 3,600,000,000 மைல்தூரத்திலுமிருக்கின்றன. புதன், சூரியன் சமீபத்தி லிருப்பதால் அது திராவகங்கள் கொதிக்கும் அவ்வளவு உஷ்ணம் பொருந்தியதாகவும், நேப்ட்யூன் (Neptune) அல்லது புலூடோ என்ற கிரகங்கள் வெகுதூரத்தி லிருப்ப

தால் அவைகளில் திராவகங்கள் கட்டியாகத்திரளும் அவ்வளவுகுளிர்ச்சியாகவிருப்பதாகவுந் தெரிகிறது. பூமி சூரியனிலிருந்து சுமார் 93,000,000 மைல் தூரத்திலிருக்கிறது. பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் புதன் இருக்கிறது. புளூடோ என்ற கிரகம் வெகு தூரத்திலிருப்பதால் சூரிய வெப்பம் வந்து சேராமல் மிகவும் குளிர்ச்சியாயிருக்க ஏற்படுகிறது. ஆகவே கிரகங்கள் சூரியனுக்கு வெகு சமீபத்திலிருந்தாலும் வெகு தூரத்திலிருந்தாலும் ஜீவ ஜெந்துக்கள் வாழ்வது மிக அரிதாம்.

வேறு எந்தக் கிரகத்திலாவது ஜீவ வாழ்க்கை கூடுமாவென்று பார்த்தாலும், நாம் வாழும் உலகத்தைப்போல மண், வாயு, உஷ்ணம் முதலியவைகள் அவ்வளவு தகுதியானவைகளாயில்லை .யென்பதே வான சாஸ்திர ஆராய்ச்சிக்காரர்களின் நம்பிக்கை. சூரியனிலிருந்து பிரிந்து ஆறி அமர்ந்த சாம்பல்களில் நாம் வாழும் உலகமே உயிர்நலனுக்குஇடந்தருகிறது. அப்படியானால் இப்பிரபஞ்சத்தின் ஓர் அற்ப அணுப்போன்ற பாகத்தில் தான் ஜீவராசிகள் வாழ்கின்றனவென்று அறியக் கிடக்கிறது.

சந்திரனில் உயிர்களுண்டா ?

பூமிக்கு அருகாமையில் சுமார் 239,000 மைல் தூரத்திலுள்ள சந்திரனிலுங் கூட ஜீவராசிகளில்லையெனத் தெரிகிறது. நாம் இங்கிருந்து சந்திரனைத் தூரதிருஷ்டிக் கண்ணாடி கொண்டு பார்த்தால் அங்கு தண்ணீரிருக்கும் எவ்வித அறிகுறியையுங் காண முடியாது. படத்தில் சூரியனும், சந்திரனும் சமீபத்தில் பார்க்கும் அமைப்பைக் காட்டுகிறது. சந்திரனில் இருட்டான பாகங்களைக் கவனமாய் நோக்கினால் அவைகள் சிற்சிறு பள்ளங்களையும், பாறைகளையுமுடைய வனாந்தரங்களாயிருக்கின்றன. அங்கே சமுத்திரங்களாவது, ஏரிகளாவது, ஆறுகளாவது, மேகங்க



சூரியன்



சந்திரன

ளாவது இல்லை யென்று தூரதிருஷ்டிக் கண்ணாடி சந்தேகமின்றித் தெரிவிக்கிறது. மேலும் நாமறிந்த காற்றும் சந்திரனில் இல்லை யென்றும் புலனாகிறது. வாயு மண்டலம் சுமார் 200 மைல் உயரம் வரை பூமியைச் சுற்றிப் பரவி யிருக்கிறது. அதற்கப்பால் நாமறிந்த காற்றில்லை யென்பது நிச்சயம். காற்றும் தண்ணீரும் இல்லாத காரணத்தால் சந்திரன், கரடு முரடான வனாந்தரமாகத் தோன்றுகிறது. பூமியில் காற்று மழை பனி



மேலே யுள்ளது சந்திரன். கீழே யுள்ளது பூமி. இரண்டுக்கு முள்ள பரிமாண வித்தியாசத்தை இந்தப் படம் காண்பிக்கிறது.

முதலியவைகள், கரடு முரடாய் ஆகாயம் அளாவி நிற்கும் இடங்களின் உக்கிரத்தைக் குறைத்துக் கொண்டே வருகின்றன வென்பது கண்கூடு. அவ்வாறான செய்கைகள் யாதொன்றும் சந்திரனில் காணப்படுவதில்லை. சந்திரனிலுள்ள எரிமலைச் சிகரங்கள் வெகுகாலமாகக் கொந்தளிப்புஅடங்கி யிருந்தும் அவைகள் இப்பொழுது தான் உண்டானவைகள் போல புதிதாகக் காணப்படுகின்றன. இதனால் அவைகளின் உக்கிரத்தைக் குறைத்துப் பழைமையாக்கும் மழை, காற்று, பனி முதலியவைகள் அங்கு இல்லை யெனத் திட்டமாகக் கூறலாம். ஆகவே சந்திரனில் நாமறிந்த உயிர்கள் வாழ்வது முடியாது என்று அறியக் கிடக்கிறது. பூமிக்கு வெகு சமீபத்திலுள்ள சந்திரனில் உயிர் வாழ்க்கை அரிதெனத் தெரியும் போது வேறு எந்தக் கிரகத்திலாவது உயிர்கள் வசிக்கலாமென்று ஊகிப்பதற் கிடமில்லை.

சூரியக் கிரகங்கள் யாவை?

சூரியனை மத்திய நட்சத்திரமாக வைத்து பல கிரகங்கள் சுற்றி வருகின்றன. சூரியன் பூமியைவிட 109 பங்கு குறுக்களவில் அதிகமானது. அதாவது 864,000 மைல். அதன் கனம் 2×10^{33} டன். பூமியைவிட உருவத்தில் 1,300,000 பங்கு பெரியது. சூரியன் ஜ்வாலை விட்டெரியும் பெரிய பந்தம் போலிருந்து தன்னைத் தானே வேகமாகச் சுற்றிக் கொள்கிறது. அதன் மேல் பரப்பு ஜல பதார்த்தம் அல்லது வாயு பதார்த்தமாக இருக்க வேண்டும். சூரியனின் மேற் பரப்பு அவ்வளவு தழல் பொருந்தியதாயிருப்பதால் அதில் சமயா சமயம் தழல் சுழற்சி புயல் காற்று போல் உண்டாகிக் கொண்டிருக்கிறது. (Sun Spot) சில வெளிச்சக் கருவிகளைக் கொண்டு ஆராயும் போது சூரியனில் பூமியிலுள்ள பெரும்பாலான வஸ்துக்களிருப்பதாகக் காணப்

சூரிய கிரகங்களின் உருவத்தன்மை



1 சூரியன், 2 புதன் (Mercury), 3 சுக்கிரன் (Venus), 4 பூமி 5 செவ்வாய் (Mars), 6 கூட்ட நட்சத்திரங்கள் (Asteroids) 7 வியாழன் (Jupiter), 8 சனி (Saturn), 9 யுரேனஸ் (Uranus), 10 நெப்ட்யூன் (Neptune), 11 புளூடோ (Pluto).



சுக்கிரன் பூமி



பூமி புதன்

படுகிறது. சூரியனின் மத்தியில் 20,000,000 C. டிகிரி உஷ்ணமாயிருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. சூரியனின் வெப்பக் கதிரால் வெளியில் வினாடிக்குச் சுமார் 50×10^{21} குதிரை வேக சக்தி வெளிப்போந்து செல்லுகிறது. அதில் 250×10^{12} குதிரை வேக அளவுள்ள சக்தி பூமியை வந்து சேர்கிறது. சூரியனில் இயற்கை உஷ்ணம் இருப்பதோடு அதன் பல அணுக்களின் சேர்க்கை, பிரிவுகளாலுண்டாகும் உஷ்ணமுமுளதுவென ஆராய்ச்சிக்காரர் கூறுகின்றனர்.

சூரியனைச் சுற்றி வருங் கிரகங்களில் சுக்கிரன் (Venus) என்ற கிரகமே பூமிக்கு அருகாமையிலிருக்கிறது. சூரியனுக்கு ஒரே பக்கத்திலிருக்கும்போது பூமிக்கும் சுக்கிரனுக்கும் உள்ள தூரம் சுமார் 26,000,000 மைல். சூரியன் உதயமாகு முன் எல்லா நட்சத்திரங்களையும் விடப் பெரியதாய்க் காலை நட்சத்திரம் போலவும், சூரியன் அஸ்தமிக்கும்போது மாலை நட்சத்திரம் போலவும் தோன்றுவது இக்கிரகமே.

சுக்கிரன் பூமியை விட உருவத்தில் சிறியது. ஆனால் சந்திரனை விட



மேலே சிறிதாயிருப்பது பூமி. கீழே பெரிதாயிருப்பது வியாழன்.

எத்தனையோ பங்கு பெரியது. இது சூரியனை 224 நாட்களுக்கொருமுறை சுற்றி வருகிறது.

சூரியனுக்கு வெகு சமீபத்தி லிருந்து வருவது புதன் (Mercury). அது சூரியனி லிருந்து சுமார் 36,000,000 மைல் தூரத்தி லிருந்து சூரியனை 88 நாட்களுக்கொருமுறை சுற்றி வருகிறது. புதன் சூரியனுக் கருகாமையில்தான் காண முடியும். இது சூரியனுக் கருகாமையி லிருப்ப தால் இதன் உஷ்ணம் துத்தநாகம் போன்ற உலோகத்தை உருக வைக்க வும், ரசம் போன்ற திராவகத்தைக் கொதிக்க வைக்கவுங் கூடிய அவ்வ ளவு வெப்பம் பொருந்தியது.

சேவ்வாய் (Mars) என்ற கிரகம் பூமிக்கு அப்பா லிருந்து சூரியனை 1 வருஷம், 322 நாட்களுக் கொரு முறை சுற்றி வருகிறது. இது சூரியனி லிருந்து 142,000,000 மைல் தூரத்தி லிருக்கிறது. இதன் உஷ்ணம் பகலில் 50 டிகிரியும், இரவில்—112 டிகிரியுமா யிருப்பதால் உயிர் வாழ்க்கைக்கு வெகு குளிரா யிருக்கும்.

செவ்வாய்க் கப்பால் 'ஆஸ்டெ ராய்ட்' என்ற நட்சத்திரக் கூட்டங் கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. இவைகளின் தொகை சுமார் 1,200. இவைகள் ஒரு காலத்தில் ஒரே கிரகமா யிருந்து பின்பு தகர்ந்து போனதாகக் கருதப் படுகிறது. இக் கூட்டத்தின் பெரிய நட்சத்திரத்தின் குறுக்களவு சுமார் 500 மைல்.

வியாழன் (Jupiter) என்ற கிரகம் மற்றவைகள் யாவையும் விடப் பெரி யது. இதன் குறுக்களவு பூமியை விடப் பதின் மடங்கும், நிறுவை சுமார் 317 பங்கும், உருவம் சுமார் 1300 பங்கும் அதிகமானது. இது சூரியனி லிருந்து சுமார் 483, 000,000 மைல் தூரத்தி லிருந்து 11 வருடம், 10 மாதங்களுக் கொரு முறை சூரியனைச் சுற்றி வருகிறது. இது சுமார்—180 டிகிரி வெப்ப முடையதா யிருப்பதால் மிகவும் குளிர்ச்சியான கிரகம்.

சனி (Saturn) என்ற கிரகம் சூரியனி லிருந்து 886,000,000 மைல் தூரத்தி லிருந்து அதனை $29\frac{1}{2}$ வருஷங்களுக் கொரு முறை சுற்றி வருகிறது. இது உருவத்தில் பூமியை விட 760பங்கு அதிகமாக வும், நிறுவையில் சுமார் 95 பங்கு அதிகமாகவு முள்ளது. இக் கிரகத்தைச்சுற்றி வட்டமாக அதி அற்புத மூன்று வித மோதிரக் கோடுகளுண்டு. இவைகள் ஆயிரக் கணக் கான வெகு அற்ப நட் சத்திரக் கூட்டங்களடங் கியவை யெனக் கருதப் படுகிறது.



நெப்ட்யூன் பூமி

யுரேனஸ் (Uranus) என்ற கிரகம் சூரியனி

லிருந்து 1,771,000,000 மைல் தூரத்தி லிருந்து சூரியனை $83\frac{3}{4}$ வருடங்களுக் கொரு முறை சுற்றி வருகிறது. இதன் குறுக்களவு சுமார் 31,000 மைல்.

நெப்ட்யூன் (Neptune) என்ற கிரகம் சூரியனிலிருந்து 2,775,000,000 மைல் தூரத்தி லிருந்து அதனை $164\frac{3}{4}$ வருஷங்களுக் கொரு முறை சுற்றி வருகிறது. இது 33,000 மைல் குறுக்களா வுள்ளது. தூரதிருஷ்டிக் கண்ணாடியால் மேற் பரப்புகளை நன் கறிந்த கிரகங்களில் இதுவே கடைசியானது.

1930-ம் வருஷத்தில் கண்டு பிடித்த புதிய புளூடோ (Pluto) என்ற கிரகம் சூரியனி லிருந்து 3,600,000,000 மைல் தூரத்தி லிருந்து சுற்றி வருகிறது. கடைசி மூன்று கிரகங்களும் சூரியனுக்கு வெகு தூரத்தி லிருப்பதால் அவைகளில் சூரிய வெப்பம் வந்து சேராமல் வெகு குளிர்ச்சியாய் ஜலபதார்த்தங்கள் திரண்டு திடபதார்த்தமாகவே யிருக்கும்.

நமது பூமியைச் சுற்றி சந்திரன் வருவது போலவே மேற் கூறிய கிரகங்களையும் பல சந்திரன்கள் சுற்றி வருகின்றன.

சர்வ சக்திகளின் உறைவிடம் யாது?

உலகத்தின் ஜீவராசிகள் யாவும் சூரியன் வெப்பத்தையும் வெளிச்சத்தையும் பொறுத்தே யிருக்கின்றன வென்பதுண்மை. ஜீவஜெந்துக்களும், மற்ற இயந்திரங்களும் தங்கள் தங்கள் காரியங்களைச் செய்வதற்கான சக்தி (Energy)யைச் சூரியனிடமிருந்தே பெறுகின்றன. வெகு சுருக்கமாகப் பார்க்கும் போது சூரிய வெப்பத்தினாலன்றி தாவர வர்க்கங்களும் மற்றவைகளு முண்டாகி மானிடருக்கும் மற்றினங்களுக்கும் ஆகார முண்டாக்க முடியாது. எண்ணெய், நிலக்கரி, தானியம் முதலியவைகள் சூரிய வெப்பத்தின் உதவி கொண்டு தான் உலகத்தில் உண்டாகின்றன. முக்கியமாக இந்தஆகாரங்களால்தான்ஜீவராசிகளுக்கும், மற்றும் பலவித வாகனங்களுக்கும் சக்தி என்னும் வலிமை உண்டாகிறது. ஆகவே சகல சக்திக்கும் ஆதி உறைவிடம் சூரியனே யென்பதை மறுக்க முடியாது. சூரிய வெப்பம் குறைந்து குளிர்ந்து போய் விட்டால் வெப்பமும் வெளிச்சமுமின்றி உலகத்திலேயே சக்தியாவுங் குறைந்து தாவர வர்க்கங்களும், மற்றும் ஊர்வன, பறப்பன, நடப்பன யாவும் அசைவற்று நின்று விடுமென்பதில் ஐயமில்லை.

இப்பூவுலகம் சூரியனிட மிருந்து பிரிந்து வெகு சூடாயிருந்து நாளடைவில் மேற்பாகம் குளிர்ந்து தற்போது மத்திய பாகம் மாத்திரம் ஜ்வாலை விட்டெறிந்து கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. ஆகவே பூமி சூரியனிடமிருந்து பெறும் உஷ்ணத்தைத் தவிர்த்து வேறு வழியில் பெறுவதில்லை யென்றே கூறலாம். பகலெல்லாம் பூமி சூரியனிடமிருந்து உஷ்ணத்தைப் பெற்று பின்பு இரவெல்லாம், தான் பெற்ற உஷ்ணத்தைத் திரும்பவும் வெளியே போக்கி விடுகிறது. ஆகவே வேறு வழியில் ஏதாவது மாறுதலேற்படா விட்டால் பூமியின் உஷ்ணத்தில் மாறுதலொன்றும் ஏற்பட வழியில்லை. ஆனால் பூமிக்கு வெளியே அனேக மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. பூமியின் நிறுவை சுமார் 66×10^{30} டன் என்றும், சூரியனின் நிறுவை சுமார் 4×10^{20} டன் என்றும் கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது. சூரியன், சதா வெப்பத்தை வெளியில் போக்கிக் கொண்டேயிருப்பதால் அதன் நிறுவை இருவித

மாறுதல்களை யடைய வேண்டும். ஒன்று சூரியனின் கனம் குறைய வேண்டும்; அல்லது அது வெளியில் போக்கும் வெப்பம் குறைய வேண்டும். இவ்விரு முக்கிய மாறுதல்களால் நமது பூலோகத்திற்கு எவ்வித நஷ்டமேற்படுகிறதென்று பார்ப்போம்.

பூமியில் உஷ்ணமே அற்றுப் போகும் காலம் எது?

இப்பூவுலகமானது பிரமாண்டமான சூரியனின் இழுக்குஞ் சக்தியால் அந்தரத்தில் நின்று சுழன்று வருகிறது. இவ்வாறிருக்கும் போது சூரியனின் கனம் குறைந்தால் அதன் இழுக்குஞ் சக்தியும் குறைகிறது. அதனால் பூமி சூரியனை விட்டுச் சிறிது தூரமாகச் செல்ல ஏற்படு மல்லவா? 100 வருடங்களில் பூமி சுமார் ஒரு கெஜ தூரத்திற்கப்பால் செல்லுகிறது. அவ்வாறுனால் சுமார் பதினாயிரம் கோடி வருஷங்களுக்குப் பிறகு பூமி 100க்கு 10 வீதம் சூரியனின்று வெகு தூரமாக விலகி நிற்கும். சூரியன் அப்பொழுதும் இப்பொழுது போலவே வெப்பம் கொடுத்துக் கொண்டே யிருக்குமென வைத்துப் பார்த்தாலும் பூமி 100க்கு 20 விகிதம் குறைவான சூரிய வெப்பத்தையே அடைகிறது. அதாவது இப்பொழுதைவிட சுமார் 15டிகிரி உஷ்ணம் குறைவாக பூமியை வந்தடைகிறது. இது இவ்வாறிருக்க பதினாயிரங் கோடி வருஷங்களுக்குப் பின் சூரியன் தற்போது வெளிப்படுத்தும் அளவுடன் கூடிய வெப்பத்தையும் வெளிச்சத்தையும் அளிக்க முடியாதல்லவா? சூரியனின் சக்தி 100க்கு 20 வீதம் குறைந்து விடும். இவ்வகையிலும் சூரிய வெப்பம் பூமியில் சுமார் 15 டிகிரி குறைந்து விடும். ஆகவே இரு வகையிலும் மொத்தம் சுமார் 30 டிகிரி உஷ்ணம் குறைந்து விடுமெனத் தெரிகிற தல்லவா? அதாவது சுமார் பதினாயிரங் கோடி வருஷங்களுக்குப் பின் பூமியில் வெப்பமே யின்றி பனிக்கட்டி போல் குளிர்ந்து போய் விடுமெனத் தெரிகிறது. இக்குளிர்ச்சியில் சகல ஜீவராசிகளும் வசிக்க முடியுமா வென்பது சந்தேகமே. எனினும் நாளடைவில் ஜீவராசிகள் உஷ்ணக் குறைவுக்குத் தகுந்தவாறு இசைவாக்கப் பெற்று வாழ்ந்து வரவுங் கூடும். ஆனால் உலகத்தில் ஏற்படும் சக்தி முழுதும் குறைந்தே போய் விடும். மேலும் இத்தனை வருடங்களுக்குப் பின் மழை, காற்று முதலிய இயற்கைப் பொருட்களால் உயர்ந்த சிகரங்கள் யாவும் தரையோடு தரையாக்கப் பெற்று விடும் என்பது திண்ணம். ஆறு, ஏரி, சமுத்திரங்கள் யாவும் பனிக் கட்டியாக உறைந்து விடும். இந்நிலையில் உலகம் எவ்வாறு நடை பெறும்? உலகத்தில் யாவும் அசைவற்று நின்று விடுமென்பதைக் கூறத் தேவையில்லை. அதாவது தற்போது யுரேனஸ், நெப்ட்யூன் என்ற கிரகங்கள் எந்த நிலையில் குளிர்ச்சியா யிருக்கின்றனவோ அந்த நிலைக்குப் பூமி வந்து விடலாம்.

சுக்கிரன் பூமியை விட சூரியனுக்குச் சமீபத்திலிருப்பதால் பூமி குளிர்ந்து உறைந்து போன போது அதில் (சுக்கிரனில்) போதுமான வெப்ப மிருந்து ஜீவராசிகள் எவ்வகையிலாவது உற்பத்தியாகி புதியதோர் உலகம் போலாகி விடலாம். சுக்கிரனும் வெகு காலத்திற்குப் பின் பூமியைப் போலவே குளிர்ந்து போய் விட்டால் அதைவிட சூரியனுக்கருகிலிருக்கும் புதன் என்ற கிரகத்தில் உயிர்கள் உண்டாகலாம். ஆனால் இக்கிரகங்களைச் சுற்றி வாயு மண்டலமே

யில்லாதிருப்பதால் நாமறிந்த உயிர்கள் போல் வாழ முடியா தென்பது நமது நம்பிக்கை.

இது வரை உலகத்திற்கு இயற்கையாக ஏற்படும் ஆபத்தைக் கவனித்தோம். ஆனால் எதிர் பாராமல் திடீரென்று ஏற்படும் பிறிதொரு ஆபத்துமுண்டு. சூரியனைச் சுற்றி பூமி முதலிய பல கிரகங்கள் சுழன்று வருவது போல நட்சத்திரமாகிய ஒவ்வொரு சூரியனையும் பல புவனங்கள் சுற்றியோடுகின்றன. இவ்வாறு சுற்றிச் செல்லும் போது திடீரென்று அண்ட அடுக்குகள் குலைந்து ஒன்றோடொன்று மோதிச் சூரிய மண்டலம் சந்திர மண்டலத்திலும், சந்திர மண்டலம் பூ மண்டலத்தின் மேலும் விழுந்து சின்னா பின்னமாய்ச் சிதறுண்டு போமென்பதும் நம்பத் தக்கதே!

சமீபத்தில் ஏதோ ஒரு கரிய நட்சத்திரம் ஏற்பட்டு இருப்பதாகவும் அது நம் பூமியை நெருங்கி வந்ததும் பிரபஞ்சமே அழிந்து நாசமாய்ப் போகத் தொடங்கி விடு மெனவும் கூற, சில வான சாஸ்திர நிபுணர்கள் முன் வந்திருக்கின்றனர். அவ் விபத்து 1941ல் ஆரம்பித்து 1957ல் பெருத்த அழிவை உண்டாக்கலாம் எனவும் ஜோசியம் கூற முற்படுகின்றனர்!

இஃதிவ்வாறிருக்க மற்றொரு ஆபத்து முண்டு. தற்சமயம் சில நட்சத்திரங்கள் திடீரென்று இருந்தாற் போலிருக்க சுருங்கிப் போவதை வான சாஸ்திர நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர். அதே போல் சூரியனும் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சுருங்கி விட ஏது வுண்டு. அவ்வாறு சுருங்கி விட்டால் அதன் வெப்பமும், வெளிச்சமும் வெகு கொஞ்சமாகி விடும். அதனால் பூமியில் சமுத்திரம் யாவும் பனிக் கட்டியாகவும், வாயு வெல்லாம் ஜல மய மாகவும் மாறி விடும்.

இவ்வித அனர்த்தங்களைக் கண்டு நாம் திடுக்கிட்டு அஞ்ச வேண்டியதாயிருந்தாலும் அவைகள், ஏற்பட விருக்கும் வெகு தூரமான காலத்தை யறிந்து ஒருவாறு பயந் தெளியலாம். சூரியனின் பிரகாசத்தில் 100க்கு 3 வீதம் குறைவதற்கு சுமார் ஆயிரங் கோடி வருஷங்கள் செல்ல வேண்டியதாயிருக்கிறது. இக்காலம் ஜீவராசிகள் பூமியில் தோன்றி ஏற்பட்ட வருஷங்களை விட சுமார் 20 லட்சம் தடவை அதிகமாக விருப்பதால் இயற்கையான ஆபத்துகள் உண்டாவதற்கு எத்தனையோ தலை முறைகளும், எத்தனையோ நாகரிக மாறுதல்களும், ஆக வேண்டும். ஆனால் எதிர் பாராமல் திடீரென்று ஆபத்துகள் ஏற்படும் காலத்தை நிர்ணயிப்பது கஷ்டமாயிருப்பது போலவே இவைகளினால் ஏற்படும் அனர்த்தங்களை நினைப்பதும் கஷ்டமாயிருக்கிறது.

ஆல்ப்ரெட் வெப்

—"ஒரு காங்கிரஸ் வாதி"

காங்கிரஸினுடைய வளர்ச்சியில் ஐரிஷ்காரர் பலரும் ஆதியிலிருந்தே ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களிலே ஆல்ப்ரெட் வெப் என்பவர் முதலாவதாவர். இவர் 1894ம் வருஷம் சென்னையில் கூடிய பத்தாவது காங்கிரஸுக்குத் தலைமை வகித்தார். இவருடைய வாழ்க்கை வரலாறு ஒன்றும் விவரமாகத் தெரியவில்லை. தாதாபாய் நௌரோஜி முதலியோர் இங்கிலாந்திலிருந்த காலத்தில் அவருடன் இவர் நெருங்கிப் பழகி வந்தாரென்றும், அது காலத்திலிருந்தே இவர் இந்தியா விஷயத்தில் அதிக அக்கரை பாராட்டி வந்தாரென்றும் தெரிகின்றன.

இவரைப்பற்றி விரிவான தகவல்கள் ஒன்றும் தெரியவில்லை. ஆனால் இவர் தமது வாழ்க்கை பூராவும், இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்காக, கொஞ்சங்கூட களங்கமில்லாத உள்ளத்துடன் உழைத்து வந்தார் என்று மட்டுந் தெரிகிறது. காங்கிரஸின் லண்டன் கிளையில் இவர் ஆரம்ப முதல் உழைத்து வந்தார். 1905ம் வருஷம் இறந்து போனார்.

ஆல்ப்ரெட் வெப் சிறந்த நாவலர். தமது வாக்கு சாதுரியத்தினால் எப்படிப்பட்டவரையும் தம் கட்சியில் இழுத்துக் கொண்டுவிடுவார். பத்தாவது காங்கிரஸில் இவருடைய தலைமையுரை முடிந்ததும், அப்பொழுதிருந்த ராமநாதபுரம் ராஜா, காங்கிரஸுக்கென்று பதினாயிரம் ரூபாய் நன்கொடை யளித்தார்.

காங்கிரஸ் என்பது என்ன? மனித சமூகத்தின் பெரும்பாலானவருக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன், ஒற்றுமையோடு அமைதியாகச் செய்யப் படுகிற ஒரு முயற்சி. இதைப் போன்ற ஸ்தாபனம், இதுவரை எந்தச் சரித்திரத்திலும் குறிப்பிடப்படவில்லை.

—ஆல்ப்ரெட் வெப்

பொதுவுடமை இயக்க வளர்ச்சி

பொதுவுடமை இயக்கத்தைப் பற்றிப் பேசுகிறபோது, 'மூன்ருவது சர்வதேச இயக்கம்' என்ற பொருளில் வரும் 'தர்ட் இண்டர்நேஷனல்' (Third International) என்ற சொற்ருெடரை உபயோகிக்கிருேம். மூன்ருவது இயக்கம் என்ருல், இதற்கு முன்னர் இரண்டு இயக்கங்கள் இருந்ததாகவல்லவோ அர்த்தமாகிறது. ஆம்; இதற்கு முன்னர் இரண்டு இயக்கங்கள் இருந்தன. முதல் இண்டர்நேஷனல் என்பது 1864-ம் வருஷம் லண்டனில் கார்ல் மார்க்ஸினுலேயே ஸ்தாபிக்கப்பட்டது. இது 1874-ம் வருஷத்தோடு முடிவடைந்து விட்டது. இரண்டாவது இண்டர்நேஷனல் 1888-ம் வருஷத்திலிருந்து 1914-ம் வருஷம் வரை இருந்தது. மூன்ருவது இண்டர்நேஷனல் இயக்கம், உலகத்திலுள்ள பொதுவுடமைச் சக்திகளையெல்லாம் சேர்த்து 1919-ம் வருஷம் மாஸ்கோ நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கு இப்பொழுது ஜார்ஜ் டிமிட்ரோவ் (George Dimitrov) என்பவன் காரியதரிசி. இவன் 1933-ம் வருஷம் ஜெர்மனியில் ரீச்ஸ்டாக் சபையின் கட்டிடம் எரிந்து போனபோது அதில்குற்றவாளியாகச் சம்பந்தப் பட்டிருந்தவன். ஆனுல் ஜெர்மனியிலிருந்து தப்பியோடி விட்டான். இந்த மூன்ருவது இண்டர்நேஷனலின் நிருவாக சபையில் பலருடன் எர்ல் ப்ரௌடர், பில் பாஸ்டர், கில் க்ரீன் என்ற மூன்று அமெரிக்கர்களும், ஜேம்ஸ் போர்ட் என்ற நீக்ரோவும் அங்கத்தினர்களாயிருக்கிருர்கள். 30 லட்சம் சந்தா செலுத்தும் அங்கத்தினர்கள் இதற்கு இருக்கிருர்கள். இவர்களில் 22½ லட்சம் பேர் ருஷ்யாவிலுள்ளவர்கள். மற்றவர்கள் உலகத்தின் பல பாகங்களிலும் இருக்கிருர்கள்.

பொய்யர்களின் சங்கம்

அமெரிக்காவில் நாகரிகம் மிக வேகமாக முற்றிக்கொண்டு வருகிறது. விஸ்கோன்ஸின் மாகாணத்திலுள்ள பர்லிங்க்டன் என்ற ஊரில் ஒரு சங்கம் இருக்கிறது. இதற்கு 'பொய்யர்கள் சங்கம்' என்று பெயர். பொய் பேசுவோர் தான் இதில் அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இதில் இப்பொழுது நாற்பதினுயிரம் அங்கத்தினர்கள் இருக்கிருர்கள். ஒரு பொய் எழுதி அதனுடன் சுமார் ஐந்தணு சந்தாத் தொகையையும் சேர்த்து அனுப்பினுல் யார்வேண்டுமானுலும் இதில் அங்கத்தினராகச் சேரலாம். இந்தச் சங்கம், வருஷத்திற் கொரு முறை ஒரு போட்டிப் பந்தயம் நடத்துகிறது. இதில் யார் பெரிய பொய் சொல்கிருர்களோ அவர்களுக்கு முதற் பரிசு அளிக்கப் படுகிறது.

அறுபத்து நான்கு கலைகள்

—"கலா ரஸிகன்"

சாதாரணமாக நாம் பேசுகிற போது, இந்தியாவில் முற்காலத்தில் அறுபத்து நான்கு கலைகள் இருந்தனவென்று பெருமையாகப் பேசிக் கொள்கிறோம். ஆனால், ஒரு சிலர், இவையெல்லாம் வீண்புரளியென்றும், 64 கலைகளாவது இருந்ததாவது என்றும் பரிகாசஞ் செய்கிறார்கள். உண்மையிலேயே நமது பெரியோர்கள், மனிதனுடைய அறிவிற்கு எட்டக் கூடிய எல்லா விஷயங்களையும் அறுபத்து நான்கு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கலையென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். கீழே, பழைய நூல் ஒன்றில் காணப்படும் அறுபத்து நான்கு கலைகளையும் அப்படியே வாசகர்களுக்குத்தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நீதிநூல் வல்லார் பலர் இந்த அறுபத்து நான்கு கலைகளையும் வேறு வேறு விதமாகவும் பிரித்துக் கூறுவர் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

1. கீதம் — *பாட்டு.*
2. வாத்தியம் — *கருவிகளில் வாசித்தல்.*
3. நிருத்தியம் — *ஆடல்.*
4. ஆலேக்கியம் — *சித்திரம் வரைதல்.*
5. விசேஷகச் சேத்தியம் — *உருவங்கள் அமையுமாறு இலைகளைக் கத்தரித்தல்—இவைகளை நெற்றியில் அணிந்து கொள்ளும் வழக்கம் பண்டைக் காலத்தில் உண்டு.*
6. தண்டுல குசுமாவளி விகாரம் — *பல வர்ணங்கள் தீட்டப் பெற்ற அரிசி, புஷ்பம் இவைகளை பல உருவங்களாக வகுத்துக் காட்டல். இவை பூஜை காலங்களில் செய்யப்படுவதுண்டு.*
7. புஷ்ப ஸ்தானம் — *ஒரு மண்டபத்தையோ, அல்லது ஒரு சிறு அறையையோ புஷ்பங்களினால் அலங்கரித்தல்.*
8. தசனவஸனங்கராகம் — *பற்கள், துணிகள், தேகம் இவைகளுக்குச் சாய மேற்றுதல்.*
9. மணி பூமிகா கர்மம் — *பூமியின் மீது வைர மாதிய கற்களைப் பதிப்பித்தல். வீட்டின் சில பாகங்களை இம் மாதிரி அலங்கரிக்கும் வழக்கம் முற் காலத்தில் இருந்தது.*
10. சயனரசனம் — படுக்கையை ஒழுங்கு படுத்தல்.

11. உதக வாத்தியம் — தண்ணீர் மீது அடித்து, இசைக் கருவியினின்றெழுப்பும் ஒலியைப் போல் உண்டாக்குதல். தற்காலத்து ஜலதரங்கம் போலும்!

12. உதக காடம் — தண்ணீரைக் கொண்டு பிறரைத் தாக்குதல்.

13. சித்திரஸ்ச யோகம் — பலவித மூலிகைகளை ஒன்று கலத்தல்; அல்லது சத்துருக்களை அங்கஹீனர்களாக்கும் பொருட்டு வசிய மருந்துகள் தயாரித்தல்.

14. மால்யகிரதனவிகல்பம்— பூ மாலை தொடுத்தல்.

15. சேகராபீட யோகம் — சேகரம், ஆபீடம் என்கிற இரண்டு தலை யணிகள் மாதிரி புஷ்பங்கள் தொடுத்தல்.

16. நேபத்தியப் பிரயோகம்— ஆடைகளாலும் ஆபரணங்களாலும் அலங்கரித்தல்.

17. கர்ண பத்ர பங்கம் — தந்தம், சங்கு இவைகளினால் காதணிகள் செய்யல்.

18. கந்த யுக்தி — வாசனைச் சரக்குகள் தயாரித்தல்.

19. பூஷணயோஜனம் — புதிய நகைகளைச் செய்தல்; அல்லது பழைய நகைகளைப் புதுக்குதல்; அல்லது ஆபரணங்களை அணியும் வகை தெரிதல்.

20. இந்திர ஜால யோகம்— ஜால வித்தை.

21. கஞ்சுமர்ஷஸ்ச யோகம்— தேக புஷ்டி மருந்துகள் தயாரித்தல்.

22. ஹஸ்த லாகவம் — கையினாலாகக் கூடிய காரியங்களைச் சுலபமாகவும் சீக்கிரமாகவும்செய்து கொள்ளும் திறமை பெறல்.

23. விசித்ரசாகயுஷ பக்ஷ்ய கிரியை — ஆகார வகைகள் தயாரித்தல்.

24. பனகரஸரகவயோஜனம்— மதுபான வகைகள் தயாரித்தல்.

25. சுசீவன கர்மணம் — தையல் வேலை முதலியன.

26. சூத்திர கிருதை — பொம்மலாட்ட வகைகளைக் கற்றல்.

27. வீணை தமருக வாத்தியாணி — வீணை, தமருகம் முதலியவைகளில் வாசிக்கத் தெரிதல்.

28. ப்ரஹேலிகை — புதிர் (விடுகதை)களைத் தெளிதல்.

29. பிரதிமாலை — அந்தாதி பாடக் கற்றுக்கொள்ளல்.

30. துர்வாசகயோகம் — கடின உச்சரிப்பு, கடின அர்த்தம் இவைகளையுடைய சுலோகங்களைச் சொல்லத் தெரிதல்.

31. புஸ்தக வசனம் — நூல்களை ஒழுங்காகப் படிக்கத் தெரிதல்.

32. நாடகாக்கியாயிக தர்சனம் — நாடகம், கதை இவைகளைத் தெரிதல்.

33. காவ்யசமஸ்யாபூரணம் — ஈற்றடி பெற்று மற்ற அடிகளைப் பாடுதல்.

34. பட்டிகவேத்ரவன விகல்பம் — பிரம்பு முதலியவற்ருல் பலவகை ஆசனங்கள், கட்டில்கள் முதலியன செய்யத் தெரிதல்.

35. தக்ஷகர்மணம் — மரத்திலுைம் உலோக வகைகளிலுைம் பலவகை உருவங்கள் செய்தல்.

36. தக்ஷணம் — தச்சு வேலை.

37. வஸ்து வித்தை — வீடுகளமைக்கும் முறைகளைக் கற்றல்.

38. ரூப்யரத்ன பரீக்ஷை — நவரத்தினங்களை மதிப்பிடல்.

39. தாது வாதம் — உலோகங்களைச் சுத்தப் படுத்துதல்; கீழான பொருள்களை மேலான பொருள்களாக மாற்றுதல். உதாரணமாக இரும்பைப் பொன்னுக்குதல் போன்றன.

40. மணீ ராககர ஞானம்— நவரத்தினங்களுக்குச் சாய மேற்றல், சுரங்கங்களைக் கண்டு பிடித்தல் முதலியன.

41. விருக்ஷ ஆயுர்வேதம்— மரங்கள், செடி கொடிகளைப் பற்றிய அறிவு.

42. மேஷ குக்குட லாகவ யுத்தானி — ஆடு, கோழி முதலியவைகளைச் சண்டைக்குப் பயிற்றல்.

43. சுகசாரீரக பிரலாபனம்— கிளிகளுக்குப் பேசக் கற்றுக் கொடுத்தலும் அவைகள் மூலமாகச் செய்திகள் அனுப்பித்தலும்.

44. உத்ஸாதனேசம்வாஹனே கேசமர்த்தனேச கௌசலம் — தேகத்தினின்று அழுக்கெடுத்தல், தேகத்தைப் பிடித்தல், தலை—மயிரை ஒழுங்கு படுத்தல் முதலியன.

45. அக்ஷரமுஷ்டிக கதனம்- விரிவான பொருளைச் சுருங்க எழுதல்.

46. மிலேச்சித விகல்பம்— ஒரு சிலருக்கு மட்டும் தெரிந்து கொள்ளக் கூடிய பாஷை கற்றல். தற்காலத்து தந்தி கோட் மாதிரி.

47. தேசபாஷா விஞ்ஞானம்—பல நாட்டு மொழிகளைக் கற்றல்.

48. நிமித்த ஞானம் — சகுனம் பார்த்தலைப் பற்றிய அறிவு.

49. புஷ்ப சகாடிகா — புஷ்பங்களினால் வண்டி, பல்லக்கு, யானை, குதிரை போன்ற உருவங்கள் அமைத்தல்.

50. யந்திர மாத்திரிகை — பலவகையான இயந்திரங்களைச் செய்யும் அறிவு.

51. தாரண மாத்திரிகை — ஞாபக சக்தியை விருத்தி செய்யக் கற்றல்.

52. சபத்தியம் — ஒரு கவியை ஒருவன் ஒப்புவிக்க, அக் கவியைத் தெரியாத மற்றொருவன், அவன் கூடவே ஒப்பு வித்துக் கொண்டு வரல்.

53. மானஸி — ஒரு கவியிலோ, வாக்கியத்திலோ விடுபட்டுப் போன இடங்களைப் பூர்த்தி செய்தல்.

54. காவியக்கிரியை — செய்யுள் பாடக் கற்றல்.

55. அபிதானகோசசந்தோ பிஞ்ஞானம் — அகராதி, சந்தம் முதலியவைகளைப் பற்றிய அறிவு.

56. கிரியாகல்பம் — காவியம், அலங்காரம், யாப்பு இவைகளைப் பற்றிய அறிவு.

57. சலிலாக யோகம் — பிறரைப் போல் குரலையும் வேடத்தையும் மாற்றிக் கொள்ளல்.

58. வஸ்திரகோபனம் — அங்கங்களைத் தெரிய வொட்டாமல் மறைக்கும் பயிற்சி.

59. த்யூத விசேஷம் — சூதாட்டங்களைப் பற்றிய அறிவு.

60. அக்ர்ஷக்ரீடை — சொக்கட்டா னாட்டம்.

61. பாலக்ரீடானகானி — குழந்தைகளைப் பற்றிய விளையாட்டு.

62. வைனயிகாஞம்வித்யா ஞம்ஞானம் — நன்னடக்கைகளில் பயிலுதல்.

63. வைஜயிகாஞம்வித்தியா ஞம்ஞானம் — சத்துருக்களின் மீது வெற்றி கொள்ளும் அறிவு.

64. வியாயாமிகாஞம்வித்யா ஞம்ஞானம் — தேகப் பயிற்சியைப் பற்றிய அறிவு.

அசோகன் சாஸனங்கள்

—"மௌத்கல்யன்"

சிறிய பாறைச் சாஸனம்

(சார நாதத்து வாசகம்)

பிளவு உண்டு பண்ணினால் தண்டனை

தேவப்ரிய பிரியதர்சி மகாராஜர் கூறுகிறார்:—

பாடலி புத்திரத்திலும் மற்ற மாகாணங்களிலும், சங்கத்தில் எவ்விதமான பிளவையும் உண்டு பண்ணக் கூடாதென்று சக்ரவர்த்தி உத்தியோகஸ்தர்களுக்கு உத்தரவிடுகிறார். சங்கத்தின் ஒற்றுமையைக் குலைக்கிற எந்த பிட்சுவும் அல்லது பிட்சுணியும், வெண்மை உடை உடுத்து, பிட்சுக்களும் பிட்சுணிகளும் வசிக்கிற இடத்திற்கு அப்புறப் பட்டதோர் இடத்தில் வசிக்க வேண்டும்.

தேவப்ரிய பிரியதர்சி மகாராஜர் பின் வருமாறு கூறுகிறார்:—

இந்தச் சாஸனத்தின் ஒரு பிரதி உங்கள் காரியாலயத்தில் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. மற்றொரு பிரதியை சங்கத்தைச் சேர்ந்த சாதாரண ஜனங்களுக்குப் பகிரங்கப்படுத்த உபயோகிக்க வேண்டும். அப்பொழுது தான் சாதாரண ஜனங்கள் ஒவ்வோர் உபவாசதினத்தன்று இதை ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும். உபவாச தினங்களில், ஒவ்வோர் உயர்தர உத்தியோகஸ்தரும், உபவாசப் பிரார்த்தனையில் ஆஜராக வேண்டுமென்றும் இந்தச் சாஸனத்தை அவர்கள் அந்தச் சமயத்தில் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் சக்ரவர்த்தி கூறுகிறார்.

உங்களுடைய எல்லை எவ்வளவு தூரம் விஸ்தரித்துச் செல்கிறதோ அங்கும், படை ஸ்தலங்களிலும், ஜில்லாக்களிலும், இந்தச் சாஸனத்தின் பிரதிகளை ஒவ்வோர் அதிகாரியும் அனுப்ப வேண்டும்.

கௌசாம்பி வாசகம்

(முன் சாஸனத்து விஷயம்)

தேவப்ரியரான மஹாராஜர் கௌசாம்பியிலுள்ள உயர்தர உத்தியோகஸ்தர்களுக்குப் பின் வருமாறு உத்தரவிடுகிறார்:—

"* * * சங்கத்தின் மார்க்கத்தை எவரும் வேறு படுத்தக் கூடாது. எந்த பிக்ஷுவாவது, பிக்ஷுணியாவது (பௌத்த) சங்கத்தின் ஒற்றுமையைக் குலைத்தால் அவர்கள் வெண்மையான உடையைத் தரித்து (பௌத்த) சங்கத்தினர்கள் வசிப்பதற்கென்று பிரத்தியேகப் படுத்தாத இடத்தில் வசிக்க வேண்டும்.

சாஞ்சி வாசகம்

(முன் சாஸனத்து விஷயம்)

'பௌத்த சங்கத்தின் மார்க்கமானது * * * செய்யப்பட்டிருக்கிறது. எந்த பிக்ஷுவாவது பிக்ஷுணியாவது (பௌத்த) சங்கத்தின் ஒற்றுமையைக் குலைத்தால் அவர்கள் வெண்மையான உடையைத் தரித்து (பௌத்த) சங்கத்தினர்கள் வசிப்பதற்கென்று பிரத்தியேகப் படுத்தாத இடத்தில் வசிக்க வேண்டும்.

கலிங்கத்து சாஸனங்கள்

(1)

எல்லைப்புறமாயுள்ளவர்களுக்காக விடுக்கப் பட்ட சாஸனம்

தேவப்ரியரான மஹாராஜர் பின் வருமாறு கூறுகிறார்:—

சமாபாவிலுள்ள உயர்தர உத்தி யோகஸ்தர்கள், மஹாராஜாவினுடைய வார்த்தைகளைக் கொண்டு பின் வருமாறு கூறப்பட வேண்டும்:—

என்னுடைய அபிப்பிராயங்கள் எவைகளாயிருக்கட்டும், அவைகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து, அவைகளின்படி உத்தரவு செய்வது தான் நல்ல மார்க்கம் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

'எல்லா ஜனங்களும் என்னுடைய குழந்தைகளே.' என்னுடைய குழந்தைகள் இம்மையிலும் மறுமையிலும் நன்மையையும் சந்தோஷத்தையும் அடைய வேண்டுமென்று நான் எப்படி விரும்புகின்றேனோ அது போல் எல்லா ஜனங்களும் அடைய வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

'எல்லைப் புறத்தில் இருக்கும் அடக்கப் படாத ஜாதியார் விஷயமாக அரசருடைய கட்டளை என்ன?' எல்லைப் புற ஜாதியார் எந்த விதமான உண்மையை கிரகிக்க வேண்டுமென்று நான் (அரசன்) விரும்புகிறேன்?' என்று நீங்கள் கேட்டால் அதற்கு விடை 'அவர்கள் என்னை (அரசனை)ப் பார்த்துப் பயப்பட வேண்டியதில்லை; அவர்கள் என்னை நம்ப வேண்டும்; என்னிடத்திலிருந்து அவர்கள் சந்தோஷத்தையே பெற வேண்டும்; துக்கத்தைப் பெறக் கூடாது.' என்று கூற வேண்டும். 'நம்மை எவ்வளவு பொறுமையுடன் ஆள முடியுமோ அவ்வளவு பொறுமையுடனும் அரசர் ஆள்கிறார்' என்ற உண்மையை அவர்கள் உணர வேண்டும். அவர்கள் எனக்காகவாவது தர்மத்தை அநுசரித்து இந்த உலகத்தையும் அடுத்த உலகத்தையும் பெற வேண்டும்.'

இதற்காக நான் இந்தச் சங்கதிகளைக் கூறுகிறேன். உங்களுக்கு இதைச் சொல்லி என் அபிப்பிராயத்தையும், என் உறுதியான தீர்மானத்தையும் உறுதி மொழியையும் தெரிவித்து விட்டதால் என் கடமையைச் செய்து விட்டவனாகிறேன்.

இப்பொழுது நீங்கள் இதன் பிரகாரம் நடந்து உங்கள் வேலையைச் செய்ய வேண்டும். இந்த ஜனங்கள் என்னை நம்பும்படி செய்ய வேண்டும். 'அரசர் நமக்குத் தகப்பனார் போல் இருக்கிறார்; அவர் தம்மை நேசிப்பது போல் நம்மையும் நேசிக்கிறார்; நாம் அரசருக்குக் குழந்தைகள் போலாவோம்' என்ற உண்மையை அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

உங்களுக்கு இதைச் சொல்லி என் அபிப்பிராயத்தையும் உறுதியான தீர்மானத்தையும் உறுதி மொழியையும் தெரிவித்து விட்டதால் இந்த வேலைக்கென்று பழக்கப்பட்ட உத்தியோகஸ்தர்களை நியமிப்பேன். ஏனென்றால் இந்த ஜனங்கள் எல்லைப் புறத்து ஜாதியார், என்னை நம்பும்படி செய்யவும் இந்த உலகத்திலும் அடுத்த உலகத்திலும் அவர்களுடைய நன்மையையும் சந்தோஷத்தையும் உண்டாக்கும் படியான நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள். இப்படிச் செய்வதனால் நீங்கள் மோக்ஷத்தை அடைவதுமன்றி எனக்குச் செய்ய வேண்டிய கடமையையும் செய்தவர்களாவீர்கள். எல்லைப் புற ஜாதியாருடைய நம்பிக்கையைப் பெற, விடாமுயற்சி செய்வதற்காகவும் அவர்களை தர்ம மார்க்கத்தில் செலுத்தவுமே இந்தச் சாஸனம் இங்குப் பொறிக்கப் பட்டது.

இந்தச் சாஸனமானது நான்கு மாதத்திற்கொரு முறை உண்டாகும் ருதுக்களின் ஆரம்பத்தில் திஷ்ய நாளில் கேட்டவர் ஒருவராயிருந்தாலும் கூட இதைப் படனம் செய்யலாம். என் நோக்கங்களைப் பூர்த்தி

செய்ய இங்ஙனம் முயற்சி செய்ய வேண்டும்.

நகரத்தாருக்காக ஏற்பட்ட சாஸனம்

தேவப்ரியரான ப்ரியதர்சி மஹாராஜருடைய உத்தரவு வருமாறு:—

தோசாலியிலுள்ள நகரத்தை நிருவாகம் செய்யும் உயர்தர உத்தியோகஸ்தர்கள் பின் வருமாறு கூறப்பட வேண்டும்:—

என்னுடைய அபிப்பிராயங்கள் எவைகளாயிருக்கட்டும், அவைகளை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து அவைகளின்படி எந்த வழியாலாவது நடக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இந்த வழியை அடைவதற்கு உங்களுக்குத் தக்கபடி உத்தரவு செய்வதுதான் நல்ல மார்க்கம் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஏனென்றால், நீங்கள் ஜனங்களின் அன்பைப் பெறும் பொருட்டு அநேக ஆயிரம் பேரை நிருவாகம் செய்ய விடப்பட்டிருக்கிறீர்கள்.

'எல்லா ஜனங்களும் என்னுடைய குழந்தைகளே.' என்னுடைய குழந்தைகள் இம்மையிலும் மறுமையிலும் நன்மையையும் சந்தோஷத்தையும் அடைய வேண்டுமென்று எப்படி விரும்புகிறேனோ அதுபோல் எல்லா ஜனங்களும் அடைய வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்.

ஆனபோதிலும், இந்த உண்மையின் முழு அமிசத்தையும் நீங்கள் கிரகிக்கவில்லை. யாராவது ஒருவர், யதேச்சையாய் [இதன் மீது] கவனம் செலுத்துகிறார். ஆனால் ஒரு பாகத்தின் மீதுதான் கவனம் செலுத்துகிறாரே தவிர முழு அமிசத்தின் மீதும் கவனம் செலுத்தவில்லை. ஆகையால் இதனைப் பாருங்கள்; இதில் அந்த உண்மையின் தத்துவம் நன்கு அடங்கியிருக்கிறது.

மேலும் யாராவது ஒருவர் சிறைவாசமாவது அல்லது வேறு தீமையையாவது அடைகிறார். அவர் தகுந்த காரணமின்றி, தம்முடைய வாழ்க்கையை சிறைவாசத்தின் மூலமாகவே முடித்துக் கொண்டால், அதனால் பலர் ஆழ்ந்த விசனத்தை அடைகின்றனர். இப்படிப்பட்ட விஷயங்களில் நீங்கள் நியாயத்தைச் செய்ய வேண்டும். சில இயற்கையான துர்க்குணங்களினால் உதாரணமாக பொறாமை, முயற்சியின்மை, கொடுந்தன்மை, பொறுமையின்மை, பிரயோஜனப்படுத்திக் கொள்வதில் குறைவு, சோம்பேறித்தன்மை, சுறுசுறுப்பின்மை முதலியவைகளினால் வெற்றி பெறுவது முடியாத காரியந்தான். இந்தத் துர்க்குணங்கள் உங்களுடையன அல்லாதனவாக நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். மேற்கூறப்பட்ட உண்மையை அநுபவத்திற்குக் கொண்டு வருவதற்கு அடிப்படையாக உள்ளது விடா முயற்சியும் பொறுமையுமே யாகும். சுறுசுறுப்பில்லாத மனிதன், எழுச்சி கொண்டவனாய் நகர முடியாது. ஆனால் ஒருவன் எழுச்சி கொண்டு நடந்து முன் செல்ல வேண்டும்.

இதேமாதிரியே நீங்கள் உங்கள் கடமையைக் கவனிக்க வேண்டும். 'என்னுடைய கட்டளைகளைப் பாருங்கள்; இன்னின்னவைகள் தேவப்ரியரான மஹாராஜருடைய உத்தரவுகளாகும்' என்று அடிக்கடி ஞாபகப்படுத்த வேண்டும். இவைகளை நிறைவேற்றினால் அதிக பயன் உண்டு; நிறைவேற்றாதிருந்தால் பெரிய துன்பங்கள் உண்டாகும். மோக்ஷத்தை விரும்புகிறவர்களாலும் இந்தக் காரியம் ஜெயிக்க முடியும். இந்தக் கடமையைத் தவறாகச் செய்தவர்கள் ஒருபோதும் என்னுடைய அன்பைப்

பெற முடியாது. என்னுடைய கட்டளைகளை நிறைவேற்றினால் நீங்கள் மோக்ஷத்தையும் அடைவீர்கள்; எனக்குச் செய்ய வேண்டிய கடமையையும் செய்தவர்களாவீர்கள்.

ஒவ்வொரு திஷ்ய நாளிலும் இந்தச் சாஸனம் படனம் செய்யப் படவேண்டும். தக்க காலங்களிலும் கேட்பவர் ஒருவராயிருந்த போதிலும் கூட இதைப் படனம் செய்யலாம். இதற்காகவும், நகர நிருவாகிகள், தக்க காரண மின்றி நகர ஜனங்களை சிறைப் படுத்தவாவது, வேறு தீப் பழக்கங்களையாவது அநுசரியாமல் இருக்க, விடா முயற்சி செய்யவும் இந்தச் சாஸனம் எழுதப் பட்டது.

இந்தக் காரணத்திற்காக, (பௌத்த) தர்மப்படி அமைதியுள்ளவர்களாயும் நற்குணமுள்ளவர்களாயும் யாரார் இருக்கிறார்களோ அவர்களை அவர்களுடைய வாழ்க்கை நிலையை அறிந்து, உத்தியோகஸ்தர்களாகத் தெரிந்தெடுத்து ஐந்து வருஷத்திற்கொரு முறை சுற்றுப் பிரயாணம் செய்து வர நியமிக்கப் படுவார்கள். இப்படி நியமிக்கப் பட்ட உத்தியோகஸ்தர்கள் என்னுடைய நோக்கத்தை யறிந்து என் கட்டளைப்படி நடக்கக் கூடியவர்களா யிருப்பார்கள்.

உஜ்ஜயினிலிருந்து அரசர் இதே மாதிரியானவர்களைப் பொறுக்கி எடுத்து இதே காரணத்திற்காக சுற்றுப் பிரயாணம் செய்ய அனுப்புவார். ஆனால் இவர்கள் மூன்று வருஷத்திற்கொரு முறை சுற்றுப் பிரயாணம் செய்வார்கள்.

இதே உத்தரவு தக்ஷசைலத்திற்கும் செல்லும். மேற் கூறப்பட்ட உத்தியோகஸ்தர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யுங் காலத்தில் தங்களுக்கு இயற்கையாக ஏற்படுத்தப் பட்டுள்ள வேலைகளுடன் இந்த வேலையையும் கவனித்து, அரசருடைய உத்தரவுப் படி நடப்பார்கள்.

பொது சாஸனங்கள்

பராபர் மலையிலுள்ள குகைச் சாஸனங்கள்

1. சுதாமா அல்லது ஆலமரத்துக் குகை.

மஹாராஜா ராஜ்யாபிஷேகம் செய்து கொண்ட பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு அவருடைய அருளால் இந்த ஆலமரத்துக் குகை ஆஜீவிகர்களுக்காக விடப்பட்டது.

2. விசுவஜோப்ரி அல்லது கலதிகை மலைக் குகை.

மஹாராஜா ராஜ்யாபிஷேகம்செய்து கொண்ட பன்னிரண்டு வருஷங்களுக்குப் பிறகு அவருடைய அருளால் கலதிகை மலையிலுள்ள இந்தக் குகை ஆஜீவிகர்களுக்காக விடப்பட்டது.

3. கர்னசௌபாரம் அல்லது சுபீயா குகை.

மஹாராஜா ராஜ்யாபிஷேகம்செய்து கொண்ட பத்தொன்பது வருஷங்களுக்குப் பிறகு அவருடைய அருளால் கலதிகை மலையிலுள்ள சுபியா குகை, சந்திராதித்தர் இருக்குமளவும் விடப் பட்டது.

ரும்மிண்டேய் ஸ்தம்ப சாஸனம்

தேவப்ரியரான ப்ரியதர்சி மஹாராஜர், ராஜ்யாபிஷேகம் செய்து கொண்ட இருபது வருஷங்களுக்குப் பிறகு நேரேயே இவ்விடத்திற்கு வந்து வணங்கினார். ஏன்? சாக்கிய முனியாகிய புத்தர் இங்கேதான் பிறந்தார். அதனால் இங்கே ஒரு சிலையும் ஒரு ஸ்தம்பமும் நிருமாணிக்கப் படுகிறது.

வணங்கத்தக்க பெரியவர் (புத்தர்) இங்கேதான் பிறந்தாராகலின், இந்த

லும்பினி கிராமமானது மத சம்பந்தமான எந்த விதமான வரியும் கட்ட வேண்டாமென்றும், மொத்த விளைவில் அரசாங்கத்திற்குச் செல்ல வேண்டிய எட்டில் ஒரு பாகமும் இந்தக் கிராமமே எடுத்துக் கொள்ளலாமென்றும் தீர்மானிக்கப் பட்டன.

நிக்லீவா ஸ்தம்ப சாஸனம்

தேவப்ரியரான ப்ரியதர்சி மஹாராஜர், ராஜ்யாபிஷேகம் செய்து கொண்ட பதினான்கு வருஷங்கள் கழித்து கனக முனியின் ஸ்தூபத்தை இரண்டாம் முறை விசாலப் படுத்தினர். ராஜ்யாபிஷேகம் செய்து கொண்ட இருபது வருஷத்திற்குப் பிறகு தாமே நேரில் வந்து இந்த ஸ்தூபத்திற்கு வணக்கம் செய்து, இங்கே ஒரு சிலா ஸ்தம்பத்தையும் நிருமாணித்தார்.

நாகார் ஜுனி மலையிலுள்ள தசரதனுடைய குகைச் சாஸனங்கள்

1. வஹியகா குகை.

தேவப்ரியரான தசரத மஹாராஜர், ராஜ்யாபிஷேகம் செய்து கொண்டவுடன், இந்த வஹியகா குகை, வணங்கத்தக்க ஆஜீவிகர்களுக்கு வாசஸ்தானமாக உபயோகமாகும்படி சந்திராதித்தர் இருக்குமளவும் விடப்பட்டது.

2. கோபிகா குகை.

தேவப்ரியரான ப்ரியதர்சி மஹாராஜர், ராஜ்யாபிஷேகம் செய்து கொண்டவுடன், இந்த கோபிகா குகை, வணங்கத்தக்க ஆஜீவிகர்களுக்கு வாசஸ்தானமாக உபயோகமாகும்படி சந்திராதித்தர் இருக்குமளவும் விடப்பட்டது.

3. வததிகா குகை.

தேவப்ரியரான ப்ரியதர்சி மஹாராஜர், ராஜ்யாபிஷேகம் செய்து கொண்டவுடன் இந்த வததிகா குகை வணங்கத்தக்க ஆஜீவிகர்களுக்கு வாசஸ்தானமாக உபயோக மாகும்படி சந்திராதித்தர் இருக்குமளவும் விடப்பட்டது.

மஹாராணியின் சாஸனம்

தேவப்ரியரான மஹாராஜருடைய உத்தரவைக் கொண்டு, எங்கும் உள்ள உயர்தர உத்தியோகஸ்தர்கள் பின் வருமாறு கட்டளை யிடப்படுகிறார்கள்:—

இரண்டாவது மஹாராணியார் எந்த விதமான தானம் செய்தபோதிலும்—அல்லது ஒரு மாந்தோப்பா யிருந்தாலும், உத்யான வனமாயிருந்தாலும், தான சாலையாக இருந்தபோதிலும், வேறு எதுவா யிருந்தாலும்—அந்த மஹா ராணியின் தானமென்றே எண்ணப்பட வேண்டும். இது போன்ற சம்பவங்கள் எல்லாம் தீவரனின் தாயாராகிய காருவாகி என்ற இரண்டாவது மஹாராணியால் செய்யப்பட்டவைகளே யாகும்.

உலகத்திலேயே மிகவும் உயரமுள்ள மனிதனும் மிகவும் குள்ளமான ஸ்திரீயும் எகிப்தில் இருக்கிறார்கள். அபுல் சையத் என்பவனுக்கு 14 வயது. 10 அடி 2 அங்குலம் உயரமுடையவன். ஜெடையா என்ற ஸ்திரீ 1 அடி 7½ அங்குலம் உயரமுடையவள். வயது நாற்பதாகிறது.

ஃ ஃ ஃ

ஸ்விட்ஜர்லாந்தில் லெய்ஸின் என்ற ஊர் இருக்கிறது. இது க்ஷய ரோக நிவாரண ஸ்தலமாக ஸ்விஸ் அரசாங்கத்தார் பாதுகாத்து வருகின்றனர். இதனால் இந்த ஊரில் யாருமே சுருட்டு முதலியவை பிடித்து சுற்றுப் புறமுள்ள காற்றைக் கெடுத்து விடக்கூடாதென்று தடுத்திருக்கின்றனர்.

நமது அரசியல் டைரி

19-2-38லிருந்து 21-2-38வரை ஹரிபுராவில் கூடிய 51வது இந்திய தேசீய காங்கிரஸில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வருமாறு:—

1. ஸ்ரீமதி ஸ்வரூபராணி நேரு, ஸர் ஜகதீச சந்திர போஸ், டாக்டர் சரத் சந்திர சட்டர்ஜி, ஸ்ரீ மணிலால் கோதாரி, ஸ்ரீமதி பார்வதி தேவி ஆகியோர் இறந்து போனதைக் குறித்து இந்தக் காங்கிரஸ் தன் துக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

2. 1932ம் வருஷம் அஸ்ஸாம் காட்டுப் பிரதேசங்களில் சுதந்திரக் கொடி தூக்கியவரும், ஆறு வருஷத்திற்கதிகமாகச் சிறைவாசத்தை அநுபவித்துக் கொண்டிருப்பவருமாகிய நாககன்னிகை கைடல்லோ என்பவளை உடனே விடுதலை செய்ய வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் கோருகிறது.

3. தென்னமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் கயானா பிரதேசத்தில் இந்தியர்கள் குடியேறி நூறு வருஷங்களாகிறபடியால், அந்த நூறாவது வருஷக் கொண்டாட்டத்தைக் கொண்டாடும் மேற்படி பிரிட்டிஷ் கயானா இந்தியர்களுக்கு இந்தக் காங்கிரஸ் தன் சந்தோஷத்தை தெரிவித்துக் கொள்கிறது.

4. கென்யா, உகாண்டா, தாங்கநிகா, ஜான்ஸிபார் முதலிய பிரதேசங்கள் உள்பட்ட தென் ஆப்ரிக்காவிலும், கிழக்கு ஆப்ரிக்காவிலும், மோரீசு தீவிலும், பிஜி தீவிலும் உள்ள இந்தியர்களின் அந்தஸ்து, நிலைமை, உரிமை முதலியன குறைந்து கொண்டு வருவதைக் கண்டு இந்தக் காங்கிரஸ் பெரிதும் அஞ்சுகிறது.

தனது குடியேற்ற நாடுகளையும் தனது ஆதிக்கத்திற்குட்பட்ட மற்ற நாடுகளையும் சுரண்டுவதற்கு, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் செய்து வரும் முயற்சிகள் இன்னும் வலுப்படுவதை இந்தக் காங்கிரஸ் கண்டிக்கிறது. ஜான்ஸிபார் கிராம்பு உற்பத்திக் காரர் சங்கமென்று ஏற்படுத்திக் கொண்டிருப்பதனாலும், தாங்கநிகா சுதேசி உற்பத்தி மசோதாவினாலும், கிழக்கு ஆப்ரிக்கா போக்கு வரவு ஏற்பாடுகளினாலும், கெனியாவில் மேட்டுப் பாங்கான பிரதேசங்களை வெள்ளையர்களுக்கு ஒதுக்கி வைத்திருப்பதனாலும், மோரீசிலும் பிஜியிலும் இந்தியர்கள் இழிவாக நடத்தப்படுவதினாலும், இந்தச் சுரண்டும் முயற்சியின் வலிவு தெளிவாகிறது.

வெளி நாடுகளில் குடியேறியுள்ள இந்தியர்கள், அந்த நாடுகளிலே தாங்கள் பெற்றுள்ள அந்தஸ்து, நிலைமை இவைகளை ஸ்தாபித்துக் கொள்வதற்காகச் செய்து வரும் போராட்டத்தில் இந்தக் காங்கிரஸ் தன் ஆதரவைக் காட்டுகிறது.

தென்னாப்பிரிக்காவிலும் கிழக்காப்பிரிக்காவிலும் குடியேறியுள்ள இந்தியர்கள், அந்தப் பிரதேசங்களிலுள்ள சுதேசிகளுக்குப் போட்டியாகவோ, விரோதமாகவோ, உரிமைகள் கோரவில்லையென்றும், இந்தியர்களையும் சுதேசிகளையும் பிரிட்டிஷார் சுரண்டுவதைத் தடுக்கவே இந்த உரிமைகள் கோரப்படுகின்றனவென்றும் சுதேசிகளுக்கு இந்தக் காங்கிரஸ் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.

5. காங்கிரசின் வேண்டுகோளுக்கிணங்க வியாபாரிகளும் தேச மகா ஜனங்களும் ஜான்ஸிபார் கிராம்புகளை பகிஷ்கரித்துள்ளது குறித்து இந்தக் காங்கிரஸ் மகிழ்ச்சியடைகின்றது. ஜான்ஸிபார் தனது நியாயப் பிசகான தீர்ப்புகளை மாற்றிக் கொள்கிற வரையில் கிராம்பு பகிஷ்காரத்தை நடத்துமாறு பொது மக்களை இந்தக் காங்கிரஸ் வேண்டிக் கொள்கிறது.

6. இலங்கை அரசாங்கத்தாரின் போக்கு, இலங்கையின் வளர்ச்சியில் பேருதவி செய்

துள்ள இலங்கையில் வாழும் இந்தியர்களுக்கும் இலங்கை வாசிகளுக்கும் இடையே துவேஷத்தை வளர்ப்பதாயும், இந்தியர்களின் நியாய உரிமைகளைப் பறிப்பதாயும், அவர்களுக்குப் பிரஜா உரிமையை மறுப்பதாயும் உள்ளது கண்டு இந்தக் காங்கிரஸ் கவலையடைகின்றது. இலங்கை அரசியலும் இந்தியா அரசியலும் வேறு வேருகப் பிரிக்கப் பட்டிருப்பினும் பிரஜைகள் சம்பந்தப் பட்ட மட்டில் பிரிக்க முடியாத சமூகம் என்பதை இலங்கை அரசாங்கத்தார் உணர்ந்து அதற்குத் தக்கவாறு நடந்து கொள்வார்களென்று இந்தக் காங்கிரஸ் நம்புகிறது.

7. சீனாவின் மீது அக்கிரமமாகப் படையெடுத்து அட்டூழியம் புரியும் ஜப்பானின் ஏகாதிபத்தியத் திமிரை இந்தக் காங்கிரஸ் கண்டிக்கிறது, ஏகாதிபத்திய மமதை கொண்ட ஜப்பானின் கொடுஞ் செயல்களுக்கு ஆட்பட்டுள்ள சீன மக்களிடம் இந்தக் காங்கிரஸ் அனுதாபங் காட்டுவதுடன் அந் நாட்டு மக்களின் தேசாபிமானத்தையும், தீரத்தையும் மெச்சுகின்றது, ஜப்பானின் சரக்குகளை இந்திய மக்கள் பகிஷ்கரிக்குமாறு காங்கிரஸ் வேண்டிக் கொள்ளுகிறது.

8. பாலஸ்தீனத்தை மேற்பார்வை செய்யும் அரசாங்கம் என்ற முறையில், பாலஸ்தீனத்தைப்பிரிவினை செய்ய கிரேட் பிரிட்டன் அராபியர்களுடைய எதிர்ப்புக் கிடையே முடிவு கட்டியிருப்பதையும், இந்த முடிவை நடைமுறையில் கொணர ஒரு கமிஷன் நியமிக்கப் பட்டிருப்பதையும் இந்தக் காங்கிரஸ் கண்டிக்கிறது.

பிரிவினையை விரும்பாத அராபியர்களின் மீது இந்தப் பிரிவினை முடிவைத் திணிக்க, பாலஸ்தீனத்தில் பயங்கர ஆட்சி நடைபெறுவதை இந்தக் காங்கிரஸ் பலமாகக் கண்டிக்கிறது.

தேசிய சுதந்திரத்திற்காகவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொள்கைக்கு விரோதமாகவும் போராடுகிற அராபியர்களிடத்தில் இந்தக் காங்கிரஸ் பூரண அநுதாபஞ் செலுத்துகிறது.

பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கும் அராபியர்களுக்கு மிடையில் ஏற்பட்டுள்ள பிரச்னை தீர வேண்டுமானால், இவர்களுக்குள்ளேயே ஒரு சமரஸ ஏற்பாடு நடைபெற வேண்டுமென்றும், இவர்கள் பிரிட்டிஷ் பாது காப்பின் நிழலில் நிற்க வேண்டாமென்றும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நன்மைக்குத் தாங்கள் சுரண்டப் படும்படி இடங் கொடுத்துக் கொள்ள வேண்டாமென்றும் இந்தக் காங்கிரஸ் அபிப்பிராயப் படுகிறது.

9. இந்தியாவின் வெளி நாட்டுப் பிரச்னை விஷயத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவின் நன்மையை உத்தேசித்து எதுவும் செய்வதில்லை. மறைமுகமாக ஜெர்மனியின் நாஜி கொள்கையையும் ஆதரிப்பதா யிருக்கின்றது. யுத்தத்தில் வெறுப்புத் தட்டினாற் போல் பிரிட்டிஷ் அரசாங்கம் நடந்து வந்தாலும், யுத்தத்துக்கான ஆயத்தங்கள் இந்தியாவில் செய்யப் பெறுகின்றன. ஆனால் ஏகாதிபத்திய நலனுக்கான எந்த யுத்தத்திலும் இனி இந்தியர்கள் ஒத்துழைக்கப் போவதில்லை. இந்தியாவையும் யுத்தத்தில் இழுத்து விட முயற்சி செய்யப் படுமாகில் அந்த முயற்சி எதிர்க்கப் படும்.

10. இந்தியா அரசாங்கச் சட்டத்தின் கீழ் சுமார்206,900 சதுரமைல் விஸ்தீரணமும், 130 லட்சம்ஜனத்தொகையும்கொண்டபிரதேசங்களை பிரிட்டிஷ் பலுசிஸ்தானம் உள்பட ஒதுக்கப் பட்ட பிரதேசங்களென்றும், பிரதம கமிஷனர்கள் மாகாணங்களென்றும், தனியாகப் பிரித்து வைத்திருப்பது இந்தியாவில் ஜன நாயக ஸ்தாபனங்கள் ஒரு படித்தாக வளர்ச்சி பெறுவதற்குத் தடையாயிருக்கிறதென்று இந்தக் காங்கிரஸ் தன் அபிப்பிராயத்தை வலியுறுத்திக் கூறியிருக்கிறது. இந்திய ஜன சமூகத்தைத் தனித் தனிப் பிரிவினராகப் பிரித்து ஒரு பிரிவினரைப் பட்சபாதமாகவும் அநீதமாகவும் நடத்தி அவர்களுடைய உரிமைகளைக் குறைத்து அவாகள் முன்னேற்றத்தைத் தடை செய்து வைப்பதற்குச் செய்யப்பட்டுள்ள முயற்சி என்று இதனை இந்தக் காங்கிரஸ் கண்டிக்கிறது. இப்படி ஒதுக்கி வைப்பதனால் மேற்படி பிரதேசங்களிலுள்ள காட்டுப் பொருள்களையும் உலோகப் பொருள்களையும் சுரண்டுவதற்கு, பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குச் சுவாதீனம் கொடுத்ததாகுமென்று இந்தக் காங்கிரஸ் தன் அபிப்பிராயத்தை வலியுறுத்திக் கூறுகிறது. இந்தியாவின் எல்லாப் பாகங்களிலும் ஒரே படித்தான ஜன நாயக சுய ஆட்சி ஸ்தாபனங்கள் நிறுவப் பட வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் கோருகிறது.

11, ஆஜ்மீர்-மீர்வாரா பிரதேச வாசிகளின் விருப்பப்படி, மேற்படி பிரதேசம், இப்பொழுதுள்ள ஒரு பிரதம கமிஷனருடைய நிருவாகத்திலிருந்து விடுவிக்கப் பட்டு, ஐக்கிய மாகாணத்தோடு இணைத்து விட வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் கோருகிறது.

12. பிரஜா உரிமைகளை அடக்கியும், அதிகமான நிலவரி முதலிய வரிகளை விதித்தும், இன்னும் இது போன்ற முறைகளை அநுஷ்டித்

தும் டெல்லி நிருவாகம் பொறுப்பற்ற முறையிலும் பிற்போக்கான முறையிலும் நடைபெறுவதை இந்தக் காங்கிரஸ் கண்டிக்கிறது. பின்னால் ஜோத்பூர் சமஸ்தானத்திற்கும் உதயபுரி சமஸ்தானத்திற்கும் கொடுக்கப் பட வேண்டுமென்ற நோக்கத்திற்காக ஆஜ்மீர்-மீர்வாரா மாகாணத்தைச் சேர்ந்த 150 கிராமங்களைத் தனியாகப் பிரித்து இப்பொழுது தற்காலிகமாகத் தனிப்பட்ட ஒரு நிருவாகத்தின் கீழ் வைக்கப்பட்டிருப்பதை இந்தக் காங்கிரஸ் கண்டிக்கிறது. மேற்படி கிராமங்களின் ஜனங்கள், இந்தப் பிரிவினையை எதிர்த்தும், அரசாங்கத்தார் இந்தப் பிரதேசங்களைப் பிரித்து, ஜனங்களின் ஒற்றுமையைக் குலைக்கச் செய்துள்ள செயலை இந்தக் காங்கிரஸ் கண்டிக்கிறது.

13. காங்கிரஸானது புதிய அரசியல் சட்டத்தை நிராகரித்து விட்டது. இந்தியாவுக்கென்று இந்திய மகா ஜனங்களால் அங்கீகரிக்கப் பட வேண்டிய அரசியல் சட்டமானது, பூர்ண சுதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அந்நிய அதிகாரத்தின் எவ்வித தலையீடுமின்றி, ஜனங்களால் தெரிந்தெடுக்கப் படுகிற ஜனப் பிரதிநிதி சபையே இந்த அரசியல் சட்டத்தைத் தயாரிக்க வேண்டும். புதிய சட்டத்தை நிராகரிக்கிறது என்ற கொள்கையை விட்டுக் கொடாமல், காங்கிரஸானது, தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை வலுப்படுத்த, மாகாணங்களில் காங்கிரஸ் கட்சியினர் மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொள்ளுமாறு அநுமதித்திருக்கிறது. சமஷ்டியைப் பொறுத்த மட்டில், தற்காலிகமாக உத்தியோகங்களை ஏற்றுக் கொள்ளலாமென்ற பிரச்னை கூட வரவில்லை. இந்தச் சமஷ்டியானது, இந்தியாவுக்குப் பல தீங்குகளை விளைவிக்கும் என்றும், ஏகாதிபத்திய ஆக்ரமிப்பை இன்னும் வலுப்படுத்துமென்றும் காங்கிரஸ் கருதுகிறது. ஓர் அரசாங்கம் செய்ய வேண்டிய முக்கியமான கடமைகளையெல்லாம், இந்தச் சமஷ்டி திட்டமானது, தன் பொறுப்பிலிருந்து கழித்து விட்டிருக்கிறது.

சமஷ்டி தத்துவத்தை இந்தக் காங்கிரஸ் எதிர்க்கவில்லை. ஆனால் உண்மையான சமஷ்டி எப்படி இருக்க வேண்டுமென்றால், ஜன நாயக முறைப்படி தெரிந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளடங்கியதாயும், சம அந்தஸ்தும் சம உரிமையும் உடைய சுதந்திரப் பிரதேசங்கள் ஒன்று சேர்ந்ததாயும் இருக்க வேண்டும். சமஷ்டியிலே சேருகிற சுதேச சமஸ்தானங்கள், ஜனப் பிரதிநிதி ஸ்தாபனங்களையும் பொறுப்பாட்சியையும் பிரஜா உரிமையையும் கொண்டிருப்பதோடு, சமஷ்டி சட்ட சபைக்கு ஜன நாயக முறையில் பிரதிநிதிகளை அனுப்பக் கூடியனவாகவும் இருக்க வேண்டும். அப்படிக்கின்றி, இப்பொழுது யோசிக்கப் படுவது போல் சமஷ்டி திட்டம் புகுத்தப்படுமானால், இந்தியாவில் ஒற்றுமை ஏற்படுவதற்குப் பதிலாக வேற்றுமை உணர்ச்சிகள் ஏற்படுவதோடு, தேசத்திற்கு உள்ளும் புறம்பும் பல போராட்டங்கள் ஏற்படும்.

ஆதலின், சமஷ்டியைக் காங்கிரஸ் நிராகரிக்கிறது என்பதை இந்தக் கமிட்டி மீண்டும் வலியுறுத்துகிறது.

இதனை நடை முறையில் கொணராதபடி தடுக்கவேண்டுமென்று மாகாண, ஸ்தல, காங்கிரஸ் கமிட்டிகளுக்கும், பொதுவாக ஜனங்களுக்கும், மாகாண அரசாங்கங்களுக்கும். மந்திரிகளுக்கும் கூறுகிறது.

ஜன சக்தியைப் புறக்கணித்து அப்படி இந்தச் சமஷ்டியைத் திணிக்க முயற்சிசெய்யப் படுமானால், அந்த முயற்சியை எல்லா வகையிலும் எதிர்க்க வேண்டும். மாகாண அரசாங்கங்களும், மந்திரிச் சபைகளும் அதனுடன் ஒத்துழைக்க மறுக்க வேண்டும்.

அப்படிப்பட்ட நிலைமை ஏற்படுமானால், அப்பொழுது எந்த மாதிரி நடந்து கொள்ள வேண்டுமென்பதை நிர்ணயித்து நடத்த அ. இ. கா. கமிட்டிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.'

14. கெனியாவில் உள்ள மேட்டுப் பாங்கான பிரதேசங்களில் உள்ள நிலங்களை பிரிட்டிஷ் இந்தியர்கள் சுவாதீனப்படுத்திக் கொள்ளக் கூடாதென்றும், ஆனால் எந்த நாட்டு ஐரோப்பிய பிரஜையும் நிலங்களை சுவாதீனப் படுத்திக் கொள்ளலாமென்றும் இருக்கிற வழக்கம் மேற்படி கெனியாவில் குடியேறியிருக்கும் இந்தியர்களுக்கு அவமானம் தரத்தக்கதாயிருக்கிறதென்றும் அது இந்திய ஜனங்களையே அவமானப்படுத்துவதாகுமென்றும் இந்தக் காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது.

வெள்ளையர்கள் குடியேறக்கூடிய மேட்டுப் பாங்கான பிரதேசங்களின் எல்லையை ஓர் அரசாங்க உத்திரவின் மூலம் வரையறுத்துவிடுவதென்று செய்யப்பட்டிருக்கும் யோசனையானது மேற்படி பழக்கத்தைச் சட்டரீதியாக ஊர்ஜிதப்படுத்துவதாகுமென்று இந்தக் காங்கிரஸ் கருதி அதைக் கண்டிக்கிறது. 1923ம் வருஷத்தில் இந்தியா அரசாங்கத்தார் வெளி

யிட்ட அறிக்கைப்படி இந்தப் பழக்கம் முன்ன
ரேயே நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். மேற்படி
அரசாங்க உத்தரவு அமுலுக்குக் கொண்டுவரப்
படுமானால் இந்தப் பிரச்னையைப்பற்றி மீண்டும்
சர்ச்சை செய்வதாக இந்தியா அரசாங்கத்தார்
சொன்ன வாக்குறுதி பயனற்றதாகி விடுமென்
றும் இந்தக் காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது.

15. வங்காள மாகாணத்திலுள்ள மிதுனபுரி
ஜில்லாவில் இருக்கும் சுமார் 110 காங்கிரஸ்
ஸ்தாபனங்களின் மீது வங்காள அரசாங்கத்தி
னரால் விதிக்கப்பட்டிருக்கும் தடை உத்தரவை
இந்தக் காங்கிரஸ் கண்டிப்பதோடு இந்தக் காங்
கிரஸ் கமிட்டிகள் பலாத்கார இயக்கங்களின்
அங்கங்கள் என்று சொல்லப்படுவதையும்
ஆட்சேபிக்கிறது.

16. 1906ம்வருஷத்திலிருந்து தேசியக்கல்வி
யின் அவசியத்தை காங்கிரஸ் வலியுறுத்திக்
கொண்டு வந்திருக்கிறது. ஒத்துழையாமைக்
காலத்தில் காங்கிரஸ் ஆதரவில் பல தேசியக்
கல்வி ஸ்தாபனங்கள் ஆரம்பிக்கப் பட்டன.
பொது ஜனக் கல்வியை ஒழுங்காக திட்டப்
படுத்த வேண்டுமென்றும் ஜனங்களுக்குப் புகட்
டப் படும் கல்வியின் முறை, விஷயங்கள்,
லட்சியம் இவைகளைப் பொறுத்து தேசிய
அபிவிருத்தி இருக்கிற தென்றும் காங்கிரஸ்
கருதுகிறது. இந்தியாவின் தற்போதைய கல்வி
முறை பயன் தரவில்லை என்பதை எல்லாரும்
அங்கீகரித்திருக்கின்றனர். இதன் லட்சியங்கள்
தேசியத்துக்கு விரோதமாகவும் இதன் முறை
கள் சமுதாயத்தில் பெரும்பாலோரை நிரட்
சர குட்சிகளாக்கி ஒரு சிலருக்கே பயன் படுவ
தாகவும் இருக்கிறனவென்று அங்கீகரிக்கப் பட்
டிருக்கிறது. ஆதலின் புதிய அஸ்திவாரத்தின்
மேல் தேசம் அனைத்திற்கும் பொதுவான ஒரு
தேசிய கல்வித் திட்டத்தை அமைக்க வேண்டு
வது அவசியமாயிருக்கிறது. தேசத்தின் கல்வி
முறையை நிருவகிக்கவும் அதனிடத்தில் தன்
செல்வாக்கை உபயோகிக்கவும் காங்கிரசுக்கு
புதிய சந்தர்ப்பங்கள் கிடைத்திருப்பதால்
தேசிய கல்வி திட்டத்திற்கு இன்னின்னவை
அடிப் படையான கொள்கைகளா யிருக்க
வேண்டுமென்று நிர்ணயிப்பது அவசியமா
யிருக்கிறது.

ஆரம்பக் கல்விக்கும் செக்கண்டரி கல்விக்
கும் அடிப்படையாகக் கீழ்க்கண்ட அம்சங்
கள் இருக்க வேண்டுமென்று காங்கிரஸ் கருது
கிறது:—

1. தேசம் அனைத்திற்கும் பொதுவாக இருக்
கக் கூடிய முறையில் இலவசக் கட்டாயக்
கல்வி ஏழு வருஷம் போதிக்கப் பட வேண்டும்.

2. தாய் மொழியின் மூலமாகவே கல்வி
போதிக்கப் பட வேண்டும்.

3. இந்தப் படிப்புக் காலத்தில் பயன் தரத்
தக்க ஏதேனும் ஒரு கைத்தொழிலையோ அல்
லது குழந்தைகளின் சுபாவப்படி சுலபமாக
கற்றுக் கொள்ளக் கூடிய வேறு ஏதேனும் ஒரு
தொழிலையோ தழுவியதாகக் கல்வி முறை
அமைக்கப் பட வேண்டும்.

ஆதலின் மேற்படி அடிப்படையான கொள்
கைகளைக் கவனித்து நடத்துவதற்கு அகில
இந்திய கல்வி ஸ்தாபனம் ஒன்று நிறுவப் பட
வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் அபிப்பிரா
யப் படுகிறது. காந்தி அடிகளின் ஆலோசனைப்
படி இந்த ஸ்தாபன சம்பந்தமாக வேண்டிய
நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள டாக்
டர் ஜாக்கீர் உசேனுக்கும் ஸ்ரீமான். இ. அரிய
நாயகம் அவர்களுக்கும் இந்தக் காங்கிரஸ்
அதிகாரம் அளிக்கிறது. இவர்கள் தேசியக்
கல்வியை அஸ்திவாரமாகக் கொண்ட ஒரு
வேலைத் திட்டத்தைத் தயாரித்து கல்வி நிர்வா
கம் செய்யும் அரசாங்கங்களுக்கோ தனிப்
பட்ட நபர்களுக்கோ சிபார்சு செய்து அங்கீ
கரிக்கச் செய்ய வேண்டுமென்றும் இவர்களை
இந்தக் காங்கிரஸ் கேட்டுக் கொள்கிறது.
மேற்படி அகில இந்திய ஸ்தாபனமானது
தனக்கு வேண்டிய விதிகளைத் தயாரித்துக்
கொள்ளவும் நிதி வசூலிக்கவும் தனது லட்சியங்
கள் நிறைவேற மற்ற எல்லா நடவடிக்கை
களும் எடுத்துக் கொள்ளவும் அதிகாரம் அளிக்
கப் பட்டிருக்கிறது.

17. ஏகாதிபத்தியத்திற்கு விரோதமான உணர்
ச்சி இந்தியாவிலுள்ள முஸ்லீம்களிடையிலும்,
மற்றச் சிறு பான்மை சமூகத்தினரிடையிலும்
பரவி வருவதையும், இந்தியாவின் சுதந்திரப்போ
ராட்டத்தில் எல்லா வகுப்பினரும் ஐக்கிய
மாகிவருவதையும் இத்தக்காங்கிரஸ் நல்வரவேற்
கிறது.

தேசிய ஒற்றுமையை அடிப்படையாகக்
கொண்டுதான் காங்கிரஸ் இந்தப் போராட்
டத்தை நடத்த முடியும் என்று காங்கிரஸ்
கருதுகிறது. முக்கியமாகச் சென்ற வருஷத்
தில், சிறு பான்மைச் சமூகத்தினரில் பெரும்
பான்மையோர், காங்கிரசில் சேர்ந்து பொது
ஜனப் போராட்டத்திற்கும், இந்தியப் பாமர
மக்களைச் சுரண்டும் முயற்சியைத் தடுப்பதற்
கும் ஆக்கம் அளித்திருப்பதைக் குறித்து
இந்தக் காங்கிரஸ் சந்தோஷப் படுகிறது.

1937ம் வருஷம் கல்கத்தாவில் கூடிய காரி
யக் கமிட்டி சிறு பான்மையோர் உரிமைகள்
சம்பந்தமாக நிறைவேற்றிய தீர்மானத்

தை இந்தக் காங்கிரஸ் அங்கீகரித்து உறுதி செய்கிறது. காங்கிரஸ் சம்பந்தப்பட்ட எந்த அரசாங்கத்திலும், சிறு பான்மையோருடைய மத, பாஷா, கலைகளான உரிமைகள் முதலியன கௌரவிக்கப் படுமென்றும், தேசத்தின் அரசியல், பொருளாதார கலைஞான வாழ்வில் அவர்களுக்குப் பூரண பங்கெடுத்துக் கொள்ளவும் வளர்ச்சி பெறவும் சந்தர்ப்பம் இருக்கிறதென்றும் இந்தக் காங்கிரஸ் வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

18 இந்திய சமஸ்தானங்களில் பொதுவாழ்வு விருத்தி அடைந்து வருவதன் காரணமாகவும் சுதந்தரம் வேண்டுமென்ற கோரிக்கை வலுத்து வருவதன் காரணமாகவும் புதிய பிரச்னைகள் வளர்ந்து வருகின்றன. புதிய நெருக்கடிகள் தோன்றி வருகின்றன. ஆதலின் சமஸ்தானங்களைப் பொறுத்த மட்டில் தன்னுடைய கொள்கை இன்னதென்று சொல்லி விடவேண்டுமென்று காங்கிரஸ் கருதுகிறது. இந்தியாவின் மற்ற பாகங்களைப் போல் சமஸ்தானங்களும் அரசியல் பொருளாதார சமுதாய உரிமைகள் தர வேண்டுமென்றும் இந்தியாவினின்றும் பிரிக்க முடியாத அம்சங்களாகவே சமஸ்தானங்கள் இருக்கின்றனவென்றும் காங்கிரஸ் அபிப்பிராயப் படுகிறது. காங்கிரசின் லட்சியமாகிற பூரண ஸ்வராஜ்யம் சமஸ்தானங்கள் உள்பட்ட இந்தியா அனைத்திற்குந் தான். எப்படி அடிமைத் தனத்தில் ஒன்று படுத்தப் பட்டிருந்ததோ அப்படியே சுதந்திரத்திலும் இந்தியாவின் ஒற்றுமையும் கட்டுப்பாடும் குலைக்கவும் கலைக்கவும் படாமல் இருக்க வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் அபிப்பிராயப் படுகிறது. இந்தியாவின் மற்றப் பாகங்கள் எப்படி ஜனநாயக சுதந்தரத்தை அநுபவிக்கின்றனவோ அப்படியே சுதேச சமஸ்தானங்களும் அநுபவிக்க விட்டு அப்படி சம உரிமையுள்ள பல பிரதேசங்கள் அடங்கிய ஒரு சமஷ்டியையே காங்கிரஸ் ஏற்றுக் கொள்ளக் கூடியதா யிருக்கும்.

பூரண பொறுப்பாட்சியும் சமஸ்தானங்களில் பிரஜா உரிமையும் வேண்டுமென்று காங்கிரஸ் கோருகிறது. தற்போது பல சமஸ்தானங்களில் சுதந்தரமின்மையையும் பிரஜா உரிமைகள் நசுக்கப் பட்டிருப்பதையும் கண்டு இந்தக் காங்கிரஸ் வருந்துகிறது. மேற் கூறப்பட்ட லட்சியத்தை சமஸ்தானங்கள் அடைய வேண்டுமென்பதற்காக வேலை செய்ய வேண்டுவது தனது கடமை என்றும் உரிமை என்றும் காங்கிரஸ் கருதுகிறது. ஆனால் தற்போதைய நிலையில் இந்த லட்சியத்திற்காக சமஸ்தானங்களில் காங்கிரஸ் வேலை செய்ய முடியவில்லை. ஏனென்றால் காங்கிரசின் வேலைகளுக்கு சமஸ்தானாதிபதிகளால் உண்டாக்கப்படும் நிர்ப்பந்தங்களாலும் அல்லது அவர்கள்மூலமாக பிரிட்டிஷ் அதிகாரிகளால் ஏற்படுத்தப் படும் தடைகளாலும் காங்கிரஸ் வேலைக்குக் குந்தகம் ஏற்படுகிறது. இதனால் காங்கிரஸ் சரியானபடி சமஸ்தானங்களில் வேலை செய்ய முடியவில்லை. ஆகவே சமஸ்தான பிரஜைகள் காங்கிரஸிடத்திலே கொண்டிருக்கும் நம்பிக்கையும் அதன் மீது வைத்திருக்கும் பக்தியும் செயல் அளவில் பயன் பெறாமல் போகின்றன.

சமஸ்தானங்களில் உள்ள காங்கிரஸ் கமிட்டிகள் சரியானபடி வேலை செய்யாமலிருப்பதும் தேசியக் கொடிக்கு அவமானம் ஏற்படக் கூடிய சம்பவங்கள் நடைபெறுவதும் காங்கிரசின் கவுரவத்துக்குக் குறைவாயிருக்கிறது. காங்கிரஸினிடத்தில் நம்பிக்கை வைத்துள்ள சமஸ்தான பிரஜைகளுக்கு பாதுகாப்போ தகுந்தபடி உதவியோ செய்ய முடியாமலிருப்பதனால் சமஸ்தான பிரஜைகளிடத்தில் அவநம்பிக்கை ஏற்படுவதோடு கூட அங்கு சுதந்தர இயக்கங்கள் வளர்ச்சி பெறாமல் தடைப் படவும் ஆகின்றன.

சமஸ்தானங்களிலும் இந்தியாவின் மற்றப் பாகங்களிலும் பல திறப்பட்ட நிலைமைகள் இருக்கிற படியால், காங்கிரசின் பொதுக் கொள்கையானது, சமஸ்தானங்களின் நிலைமைக்குத் தகுதியுடையதாக இல்லை. அப்படிக் காங்கிரஸ் கொள்கையைப் புகுத்துவதனால் சமஸ்தானங்களில் சுதந்திர இயக்கம் தடைப் பட்டு விடுகிறது. சமஸ்தானங்களில் தோன்றும் சுதந்திர இயக்கங்கள், சமஸ்தானப் பிரஜைகளிடமிருந்தே வலிமை பெறுமானால், அவர்களுக்கு ஒரு தன்னம்பிக்கை உண்டுபண்ணி வெளியுதவியையோ அல்லது காங்கிரஸின் செல்வாக்கையோ எதிர் பாராமல் அந்தந்தச் சமஸ்தானங்களின் நிலைமைக்குத் தகுந்தபடி அமைத்துக் கொள்ளுமானால், அவை வளர்ச்சியடையும். இந்த மாதிரியான இயக்கங்களைக் காங்கிரஸ் வரவேற்கிறது. ஆனால் இப்பொழுதுள்ள நிலைமையில் சுதந்திரப் போராட்டத்தை நடத்தும் பொறுப்பு சமஸ்தானப் பிரஜைகளையே சேர்ந்ததாயிருக்கிறது. ஒழுங்காகவும் நியாயமாகவும் நடத்துகிற எந்தப் போராட்டத்திற்கும் காங்கிரஸ் தன் ஆதரவையும் நல்லெண்ணத்தையும் அளிக்கத் தயாராயிருக்கிறது. ஆனால் இப்பொழுதுள்ள சந்தர்ப்பத்தில் காங்கிரஸானது, ஆத்மார்த்த ஆதரவைத்தான் மேற்படி போராட்டங்களுக்

குக் கொடுக்க முடியும். தனிப்பட்ட காங்கிரஸ் வாதிகள், தங்களுடைய சொந்த ஹோதாவில் சமஸ்தானங்களிலுள்ள இயக்கங்களுக்கு உதவி செய்யலாம். இந்த முறையில் சமஸ்தானங்களிலுள்ள இயக்கமானது வளர்ச்சி பெறுவதோடு, வெளியுதவியையும் எதிர் பார்ப்பதாயிராது.

ஆதலின், தற்போது சமஸ்தானங்களிலுள்ள காங்கிரஸ் கமிட்டிகள், காரியக் கமிட்டியின் நிருபர்கள், காரியக் கமிட்டியின் நிருவாகத்தின் கீழும் மேற் பார்வையிலும் வேலை செய்ய வேண்டு மென்றும், காங்கிரஸ் பெயரால் எந்த விதமான பார்லிமெண்டரி வேலைகளையும் செய்ய வேண்டாமென்றும், காங்கிரஸின் பெயரால் எவ்விதப்போராட்டத்தையும் நடத்த வேண்டாமென்றும் காங்கிரஸ் கோருகிறது. இதற்காக, அந்தந்த சமஸ்தானங்களில் தனிப்பட்ட ஸ்தாபனங்கள் தோன்ற வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் கோருகிறது.

சமஸ்தானங்களில் நடைபெறுகிற சுதந்திர இயக்கங்களில் காங்கிரஸுக்குப் பூரண ஆதரவு இருக்கிறதென்று இந்தக் காங்கிரஸ் உறுதி கூறுகிறது. சமஸ்தானப் பிரஜைகளின் விடுதலை வெகு தூரத்திலில்லையென்று காங்கிரஸ் நம்புகிறது.

இப்பொழுது சமஸ்தானங்களில் வேலை செய்யும் காங்கிரஸ் கமிட்டிகளைப் பற்றி காரியக் கமிட்டி தனித்தனியாக ஒவ்வொன்றின் நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து, அவைகள் வேலைசெய்ய வேண்டுமாவென்பதை நிர்ணயிக்க வேண்டுமென்றும் அப்படி வேலை செய்வதாயிருந்தால் இந்தத் தீர்மானத்தின் கொள்கைகளுக்கிணங்க வேலை செய்யுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் இந்தக் காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது.

19. கிருஷிகர் ஸ்தாபனங்களைப் பற்றியும், இன்னும் மற்ற ஸ்தாபனங்களைப்பற்றியும் இந்தியாவின் பல இடங்களில் சில கஷ்டங்கள் ஏற்பட்டுள்ள படியால், காங்கிரஸ், இது விஷயமாகத்தன் கருத்தைத் தெளிவு படுத்த விரும்புகிறது.

விவசாயிகள், தங்களை விவசாயிகள் சங்கங்களாக அமைத்துக் கொள்வதைக் காங்கிரஸ் ஏற்கனவே அங்கீகரித்திருக்கிறது. காங்கிரஸே, ஒரு விவசாயிகளின் ஸ்தாபனமாக இருக்கிறது. பாமர ஜனங்களுடன் அதனுடைய தொடர்பு அதிகரித்திருக்கிறது. காங்கிரஸில் ஏராளமான விவசாயிகள் சேர்ந்திருக்கிறார்கள். காங்கிரஸானது, இந்தக் கிருஷிகர்களுடைய உரிமைகளுக்காகவே போராடியிருக்கிறது. இனியும் அப்படித்தான் போராட வேண்டும். நமது ஜனங்கள் பிறரால் சுரண்டப் படக் கூடாதென்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்ட சுதந்திரத்திற்காகவே காங்கிரஸ் போராடி வருகிறது. இந்தச் சுதந்திரத்தையடையவும், கிருஷிகர்களுடைய கோரிக்கைகளை நிறைவேறும்படி செய்யவும், கிருஷிகர்களை அதிகமாகக் காங்கிரஸில் வந்து சேருமாறு கேட்க வேண்டுமென்றும், காங்கிரஸ் கொடியின் கீழ் அவர்களைப் போராடச் செய்ய வேண்டுமென்றும் இந்தக் காங்கிரஸ் கோருகிறது. ஆகையினால் ஒவ்வொரு கிராமத்திலும் காங்கிரஸ் சபையை ஏற்படுத்துமாறும், இந்தச் சபைகளுக்கு எவ்வித பலஹீனமும் ஏற்படாதபடி பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் ஒவ்வொரு காங்கிரஸ் வாதியையும் இந்தக் காங்கிரஸ் கேட்டுக் கொள்கிறது.

கிருஷிகர்கள், கிருஷிகர் ஸ்தாபனங்களை அமைத்துக் கொள்ள எவ்வித உரிமை உண்டேயாயினும், காங்கிரஸின் அடிப்படையான கொள்கைக்கு முரணாக உள்ள எந்த ஸ்தாபனத்தின் நடவடிக்கைகளிலும் காங்கிரஸ் கலந்து கொள்ள முடியாதென்றும், கிருஷிகர் சங்கங்களில் சேர்ந்து காங்கிரஸுக்கு விரோதமாக வேலை செய்யும் எந்தக் காங்கிரஸ்காரருடைய வேலைகளையும் ஆதரிக்க முடியாதென்றும் இந்தக் காங்கிரஸ் தீர்மானிக்கிறது. மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகள் இதனை மனத்தில் வைத்துக் கொண்டு, சந்தர்ப்பம் வருகிறபோது தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் தீர்மானிக்கிறது.

20. பிரிட்டிஷ் அரசாங்கத்தார் சில உறுதி மொழிகள் கொடுத்தால், மாகாணங்களில் காங்கிரஸ் கட்சியினர் மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொள்ளலா மென்று பெய்ஸ்பூர் காங்கிரஸ் செய்த தீர்மானப்படி, 1937ம் வருஷம் மார்ச் மாதம் கூடிய அ.இ.கா. கமிட்டி கூட்டம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. மேற்படி உறுதி மொழிகள் கிடைக்கப் பெறாமையால் காங்கிரஸ் கட்சியினர் மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள். இதற்குப் பிறகு பல வாதங்கள் நடை பெற்றன. கடைசியில், பொறுப்புள்ள மந்திரிகளின் அன்றாட வேலைகளில் எவ்விதத் தலை யீடும் இராது என்று கண்டிப்பாகக் கூறப்பட்டது.

உத்தியோகங்களை ஏற்றுக் கொண்ட காங்கிரஸ் மந்திரிகளின் அநுபவத்தில், இரண்டு

மாகாணங்களில்-அதாவது பீஹார்-ஐக்கிய மாகாணங்களில்-மந்திரிகளின் வேலையில் கவர்னர்கள் தலையிடுவதாகத் தெரிகிறது. காங்கிரஸ்காரர்களுடைய தேர்தல் அறிக்கையில், அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டுமென்பது ஒரு முக்கியமான பிரச்னையென்பது, மேற்படி காங்கிரஸ் கட்சியினரை மந்திரிச் சபை அமைக்குமாறு கவர்னர்கள் அழைத்தபோதே அவர்களுக்குத் தெரியும். தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடி, மந்திரிகள், அரசியல் கைதிகளை விடுதலை செய்ய ஆரம்பித்தனர். இந்த விடுதலை உத்திரவை அங்கீகரிக்கிறபோது, கவர்னர்கள் அதிக தாமதம் செய்தனர், இது விஷயத்தில் மந்திரிகள் மிகவும் பொறுமையையே காட்டினர். மந்திரிகளின் அன்றாட வேலைகளில் அந்த அரசியல் கைதிகளின் விடுதலைப் பிரச்னையும் ஒன்று என்பது காங்கிரசின் கருத்து. மந்திரிகளின் அன்றாட வேலைகளில் வழி காட்டுவதும் உதவுவதுமே கவர்னர்களின் வேலையேயன்றி, மந்திரிகளின் வேலைகளில் தலையிடுவதன்று. வருஷாந்த காங்கிரஸின் போது, பொது ஜனங்களுக்குத் தாங்கள் செய்த வேலைகளைப்பற்றித் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளவர்கள் என்ற முறையில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறும், அப்படி விடுதலை செய்யும் விஷயத்தில் கவர்னர்கள் தலையிட்டால் உடனே ராஜீநாமா செய்யுமாறும் காரியக் கமிட்டி, மந்திரிகளுக்குச் சொல்ல வேண்டியதாயிற்று, பீஹார், ஐ. மாகாண மந்திரிகள் இது சம்பந்தமாக நடந்து கொண்ட மாதிரிக்கு அவர்களைக் காங்கிரஸ் பாராட்டுவதோடு அவர்களுடைய செயலை ஆதரிக்கவும் செய்கிறது.

இது விஷயத்தில் கவர்னர்-ஜெனரல் தலையிட்டது, மேலே கூறப்பட்ட உறுதி மொழிக்கு விரோதமாவதுந் தவிர, இந்தியா அரசாங்கத்தின் 126 (5) பிரிவுக்கு விரோதமானதென்றும் காங்கிரஸ் அபிப்பிராயப் படுகிறது. தேசத்தில் அமைதிப் பங்கம் ஏற்படும் என்ற பிரச்னையே இங்கு எழவில்லை. மேற்படி இரண்டு மாகாணத்துப் பிரதம மந்திரிகளும், சிறையிலிருக்கும் கைதிகளிடமிருந்து அவர்கள் அஹிம்சா தர்மத்தைப் பின்பற்றிக் காங்கிரஸ் வழி நடப்பதாக உறுதிமொழி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். கவர்னர்-ஜெனரலின் தலையீடு தான் அமைதிப் பங்கம் ஏற்படும் படியான ஒரு நிலைமையை உண்டு பண்ணி விட்டது.

பொருளாதார சம்பந்தமாகவும் சமுதாய சம்பந்தமாகவும் காங்கிரஸ் மந்திரிகள் பல சீர்திருத்தங்களைச் செய்து, தங்களுடைய நிருவாகத்திறமையைக் காட்டியிருக்கிறார்கள். மந்திரிகளுக்குக் கவர்னர்களின் ஒத்துழைப்பு ஓரளவு இருந்ததென்பதைக் காங்கிரஸ் அங்கீகரித்துக் கொள்கிறது. இந்தியா அரசாங்கச் சட்டத்தை ஜனங்களுடைய நன்மைக்காக உபயோகிக்க வேண்டுமென்பதே காங்கிரசின் கருத்து. அப்படி உபயோகிப்பதன் மூலமாக காங்கிரசின் பரிபூர்ண லட்சியத்திற்குச் செல்லும் பாதையை வலுப்படுத்துவதாகவும், இந்திய மக்களை ஏகாதிபத்தியச் சுரண்டுதலுக்கு உபயோகிக்கக் கூடாதபடி தடுத்துக் கொள்வதாகவும் இருக்க வேண்டுமென்பதே காங்கிரஸின் நோக்கம்.

பலாத்கார மற்ற ஒத்துழையா இயக்கத்தை நடத்த வேண்டிய அவசியம் உண்டாகும்படியான ஒரு நெருக்கடியை உண்டு பண்ணக் காங்கிரஸ் விரும்பவில்லை. கவர்னர்-ஜெனரலின் தலையீட்டை வியாஜமாகக் கொண்டு, மற்ற மாகாணங்களிலுள்ள காங்கிரஸ் மந்திரிச் சபைகள் ராஜீநாமா செய்ய வேண்டுமென்று காங்கிரஸ் கூற விரும்பவில்லை. சட்ட வரம்புக்குட்பட்டுக் கவர்னர்கள் நடக்குமாறு சொல்லும்படி கவர்னர்-ஜெனரலுக்கு இந்தக் காங்கிரஸ் கூறுகிறது.

பொறுப்பற்ற மந்திரிச் சபைகள் சில மாகாணங்களில் ஏற்பட்டிருப்பது, உள்நாட்டுச் சண்டைகளை அதிகப் படுத்துவதாயிருப்பதோடு, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீதுள்ள பொறுப்பையும் அதிகப் படுத்துவதாயிருக்கிறது. மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொள்வதாகக் காங்கிரஸ் தீர்மானித்தபோது, இந்தியா அரசாங்கச் சட்டத்தின் உண்மையான நிலைமையை அஃது அறிந்து கொள்ளாமல் இல்லை. கவர்னர்-ஜெனரல் சமீபத்தில் தலையிட்டது, இந்த உண்மையான நிலைமையைத் தெளிவு படுத்தி விட்டதோடு, ஜனங்களுக்கு உண்மையான சுதந்திரம் அதனால் ஏற்படாதென்பதும் தெளிவாவதோடு, இருக்கப் பட்ட சுதந்திரத்தையும் அஃது அழித்து விடக்கூடியதாய் இருக்கிறதென்றும் தெளிவு படுத்தி விட்டது. தற்போதைய நெருக்கடி எந்த விதமான முடிவுக்கு வந்த போதிலும், இந்தச் சட்டத்தை அடியோடு தகர்த்தெறியாதவரை உண்மையான சுதந்திரம் கிடையாதென்றும், ஜனப்பிரதிநிதி சபையின் மூலமாகத் தயாரிக்கப் படும் ஒரு சட்டத்தின் படியே தான் அந்தச் சுதந்திரம் ஏற்படுமென்றும் காங்கிரஸ் மகாசபை கருதுகிறது. ஆகவே, எல்லாக் காங்கிரஸ்காரருடைய வேலையும் மேற்படி லட்சியத்தை அடைவது தான்.

ஐக்கிய மாகாணத்தில் காகோரி கைதிகள் விடுதலை செய்யப் பட்டபோது அவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பும் அச்சமயத்தில் மேற்படி விடுதலை யடைந்தவர்கள் பேசியதும், கைதிகளை மென்மேலும் விடுதலை செய்ய விடாதபடி தடை செய்ததென்று ஐ. மாகாண கவர்னரின் சார்பாகச் சொல்லப் பட்டது. ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளைக் காங்கிரஸ் எப்பொழுதுமே கண்டித்து 'வந்திருக்கிறது. ஐ. மா. கவர்னர் குறிப்பிடுகிற மேற்படி நடவடிக்கைகளை மகாத்மா காந்தி கண்டித்திருக்கிறார். மந்திரிகளும் இதைக் கவனியாமலில்லை, இதன் பயனாக பொதுஜன அபிப்பிராயம் மாற்றமடைந்ததோடு கூட ஆர்ப்பாட்டங்களில் சம்பந்தப் பட்டவர்களும் தங்கள் பிழைகளை உணர்ந்தார்கள். இதற்குப் பிறகு ஆறு கைதிகள் விடுதலை செய்யப் பெற்றபோது, எவ்வித ஆர்ப்பாட்டமும் நடைபெறவில்லை. இதற்குப் பிறகு நான்கு மாதங்கள் கழித்து. இன்னும் பாக்கியுள்ள பதினைந்து கைதிகளை விடுதலை செய்யும் விஷயத்தில் மேற்படி ஆர்ப்பாட்டங்களைக் காரணமாக வைத்துக் கொண்டு தாமதம் ஏற்படுத்துவது சரியானதாகாது.

மாகாணத்தின் சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் பொறுப்பானவர்கள் மந்திரிமார்கள். தங்கள் இஷ்டப்படி காரியங்களை நடத்த அவர்களுக்கு உரிமை உண்டு.

அஹிம்சா தர்மத்திற்கு விரோதமாக நடக்கிறவர்கள் மீது காங்கிரஸ் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளச் சித்தமாயிருக்கிற தென்பதைச் சென்ற சில மாத நடவடிக்கைகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். ஆனாலும், அஹிம்ஸா தர்மத்திற்குவிரோதமாகப் பேசுவதோ, செய்வதோ கூடாதென்று எல்லாக் காங்கிரஸ் காரருக்கும் இந்தக் காங்கிரஸ் எச்சரிக்கை செய்கிறது.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதென்கிற விஷயத்தில் காங்கிரஸானது, உத்தியோகத்தை இழக்கவும், நன்மை பயக்கும் சட்டங்களைச் செய்யவும் பின் வாங்கவில்லை. ஆனால் விடுதலைக்காக, உண்ணாவிரதமனுஷ்டிப்பதைக் காங்கிரஸ் கண்டிக்கிறது. இந்த உண்ணாவிரதங்கள், காங்கிரஸின் நிலைமையைத் தீணறச் செய்கின்றன. ஆதலின் பஞ்சாப் மாகாணத்தில் உண்ணாவிரதத்தை அனுஷ்டிக்கும் கைதிகள் உடனே தங்கள் உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொள்ளவேண்டுமென்றும், காங்கிரஸ் மந்திரிச் சபையினர் நிருவாகத்தை நடத்தும் மாகாணங்களிலும் மற்ற மாகாணங்களிலும் உள்ள அரசியல் கைதிகளை உடனே விடுதலை செய்ய எல்லாக் காங்கிரஸ்காரரும் முயற்சி செய்ய வேண்டுமென்றும் இந்தக் காங்கிரஸ் கேட்டுக் கொள்கிறது.

தேசத்திலே ஏற்பட்டுள்ள நிலைமைக்குத் தக்கபடி காரியக் கமிட்டி, அவ்வப்பொழுது தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் இவ்விஷயத்தில் அ. இ. கா. கமிட்டி உத்திரவுப்படி நடக்க வேண்டுமென்றும் காங்கிரஸ் கூறுகிறது.

21. காங்கிரஸ் விதிகளில் கீழ்க்கண்ட ஒரு புது விதியும் சேர்க்கப்பட வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் தீர்மானிக்கிறது:—

காரியக் கமிட்டியினால் அங்கீகரிக்கப் பட்ட விதிகளைத் தயாரித்துக் கொண்டு, அதன்படி உபகமிட்டிகளை அமைத்துக் கொள்ளும் அதிகாரம் பெற்ற ஒரு காங்கிரஸ் கமிட்டி பர்மாவில் இருக்க வேண்டும். இந்தக் கமிட்டி பர்மாவின் விடுதலைக்கு வேலை செய்யும்.

22. கீழ்க்கண்ட விஷயங்களைப் பற்றி ஆலோசித்து அவசியமானால் தகுந்த விதிகளைத் தயாரிக்க, ஸ்ரீமான்கள் சுபாஷ் சந்திர போஸ், பண்டித ஜவஹர்லால் நேரு, ஜெயராம் தாஸ் தௌலத்ராம், புலாபாய் தேசாய், பட்டாபி சீதாராமய்யா, அச்சுத பட்டவர்த்தன், எஸ். ஏ. ப்ரெல்வி, கிரான் சங்கர ராய், எம். அனந்த சயனம் ஐயங்கார், ஜே. பி. கிருபாலனி ஆகியோர் அடங்கிய ஒரு கமிட்டியை இந்தக் காங்கிரஸ் நியமிக்கிறது:—

(அ) காங்கிரஸ் பிரதிநிதிகள் மறைமுகமாகத் தெரிந்தெடுக்கப் படலாமா வென்பது.

(ஆ) உண்மையான அங்கத்தினர்கள் என்று அறிவது; சரியானபடி தேர்தல் நடத்துவது.

(இ) அ. இ. கா. கமிட்டிக்கு ஸ்தலவாரியாகப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்தல்.

(ஈ) அ. இ. கா. கமிட்டிக்குப் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கும் போது, விகிதாசாரப்படி தனி மாற்று ஓட்டு முறையினால் தெரிந்தெடுப்பது என்கிற முறையை அனுஷ்டித்தல்.

(உ) காங்கிரஸ் 6 (இ) என்ற விதியின் சம்பந்தமாக வேறு ஏதேனும் மாற்றங்கள் செய்ய வேண்டுமானால் அவற்றைச் செய்வது.

இந்தக் கமிட்டியாருடைய சிபார்சுகள், அ. இ. கா. கமிட்டியினால் அங்கீகரிக்கப் பட்ட பிறகு அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

விசுவ விசித்திரம்



அமெரிக்காவில் போர்டேஜ் என்ற ஓர் ஊர் இருக்கிறது. அதிலுள்ள அன்னெட்டி அவெர்ஸ் என்ற இந்த நான்கு வயதுப்பெண் பாம்பு முதலிய விஷ ஜந்துக்களோடு தான் அதிக சிநேகம் வைத்துக் கொண்டிருக்கிருள். எவ்வளவு சந்தோஷமாக இந்தப் பாம்புடன் கொஞ்சுகிருள்! இவள் ஆறுமாதக் குழந்தையாயிருந்த போதே பாம்புகளுடன் பழகுவாளாம்!

இஃதென்ன தெரிகிறதா? நமது மூளை. 'உன் மூளை எப்படி யிருக்கிறது' என்று யாராவது உங்களைக் கேட்டால் 'இப்படித்தான் ஸார்' என்று இதனைக் காட்டுங்கள்.

தூங்கு மூஞ்சுப் பேர்வழி கவை எழுப்புகிற பேர்வழி. இவன் காவலையில் சைகிளில் ஏறிக்கொண்டு தன் வாடிக்கைக்காரர்களின் வீட்டுக்குச் சென்று மணி யடிப்பான். எழுப்புகிற பேர்வழி வந்துவிட்டானென்று தூங்கு மூஞ்சிப் பேர்வழிகளும் எழுந்துவிடுவார்கள். இந்த மாதிரி தினந்தோறும் வந்து எழுப்புவதற்காக இவனுக்குச் சம்பளம் உண்டு. இங்கிலாந்தில் பலர் இப்படிப் பிழைக்கிருர்கள்.

ஆஸ்திரியாவில் டைரோல் என்ற ஒரு பிரதேசம் இருக்கிறது. இந்தப் பிரதேசத்திலுள்ள வாத்தியக்காரர் சிலர், மரப்பட்டையினுல் மேற்கண்டவிதமாக வாத்தியம் செய்து அதில் இனிமையான கீதங்கவை வாசிக்கிருர்கள்,

இது யாருடைய குறும்பு, ஹிட்லருடைய மீசையை முஸோலினிக்கு ஒட்டவைத்து விட்டது ! முஸோலினிக்கு தாடி மீசைகவைக் கண்டால் பிடிக்கவே பிடிக்காது என்பது நண்பர்களுடைய ஞாபகத்தில் இருக்கட்டும்.

இங்கிலாந்தில் 1509ம் வருஷம் முதல் 1547ம் வருஷம் வரையில் ஆண்ட எட்டாவது ஹென்ரி மன்னன் இப்படித்தான் இருந்தார். நிஜமான ஹென்ரி மன்னன் என்று நினைத்து விடாதீர்கள் இந்தப் படத்தைப் பார்த்து. ஒரு பெண் இப்படி வேஷம் போட்டுக் கொண்டு நடிக்கிருள் இங்கிலாந்தில்.

ராக்வெல் என்பது இந்த ஆசாமியினுடைய பெயர். தன் பெயரை, நாற்பது பாஷைகளில் காலில் பச்சை குத்திக் கொண்டிருக்கிருன். எங்கேயாவது பிரயாணம் செய்தால், தன் பெயர் புரியாமலோ தெரியாமலோ போய் விடப்போகிறதே என்ற பயம் போலிருக்கிறது இவனுக்கு!

நமது நிருபர்களுடன்—

இரண்டு அரசியல் கட்சிகள்

ஐயா,

உலக கவன மனைத்தும் சீனு-ஜப்பான் யுத்தத்திலிருக்கும் இது சமயம், 'கோமிங்டாங் கட்சி' என்ற சீனக் கட்சியைப் பற்றியும் 'கரும் பறவை நாகம்' என்ற ஜப்பானியக் கட்சியைப் பற்றியும், தயவு செய்து "ஜோதி"யில் விளக்குவீர்களாக; அதாவது அக் கட்சிகளின் கொள்கை, ராஜீய அந்தஸ்து இவைகளே.

'சொக்கு'

கோமிண்டாங் என்ற சீன தேசீயக் கட்சி, சீனுவுக்குக் குடியரசு தேவை என்பதை லட்சியமாகக் கொண்டு டாக்டர் ஸன்-யாட்-ஸேனுல் **1911**ம் வருஷம் ஸ்தாபிக்கப் பட்டது. இந்த கோமிண்டாங் கட்சிக்கு அடிப் படையா யிருந்தது சீன இளைஞர் இயக்கம். **1894**ம் வருஷம் ஸன்—யாட்—ஸேன், புனருத்தாரண சங்கம் (ஷிங்-சுங்—ஹ் வெய்) என்ற தொரு சங்கத்தை ஸ்தாபித்தான். இது **1905**ம் வருஷம் திருத்தி யமைக்கப் பட்டது. இதுவே **1911**ம் வருஷம் கோமிண்டாங் என்ற பெயராக மாறியது. டாக்டர் ஸன்-யாட்-ஸேனுக்குப் பிறகு, இந்தக் கட்சி வலிகுன்றி சிதறிப் போய் விட்டதென்றே சொல்ல வேண்டும். சியாங்—கை—ஷேக், கோமிண்டாங் கட்சித் தலைவராகப் பின்னர் ஏற்றுக் கொள்ளப் பட்டாலும், அவர், கட்சியின் மூலக் கொள்கையின் படி நடக்கவில்லை யென்றே சொல்ல வேண்டும். இது சம்பந்தமான விவரங்களை அன்பர் 'சீனு ஜப்பான்' (நவயுகப் பிரசுரம்-**3**-விலை எட்டு அணு) என்ற புத்தகத்தில் பார்த்துக் கொள்ளலாம்.

'ப்ளாக் ட்ராகன் சொஸைடி' (Black Dragon Society) என்பதைத் தான் 'கரும் பறவை நாகக் கட்சி' என்று அன்பர் அழைக்கிருர் என்று கருதுகிறோம். இதனை ஒரு கட்சி என்று சொல்ல முடியுமா வென்று நாம் சந்தேகிக்கிறோம். சுய தேசத்திற்காக எதையும் செய்யத் தயாராயிருக்கிற ஒரு கூட்டம் என்று சொல்லலாம். இந்தக் கூட்டத்தாருக்குச் செல்வாக்கு உண்டு என்று சொன்னுல், அது இந்தக் கூட்டத்தாரிடம் ஜனங்கள் கொண்டுள்ள அச்சந் தான் காரணம். இத்தலி—அபிசீனிய யுத்தத்தின் போது கூட, இவர்கள், இத்தலியைக் கொஞ்சம் பயமுறுத்திப் பார்த்தார்கள். பிறகு, இத்தலியின் நட்பு இருப்பது நல்ல தென்று கருதி அதற்குச் சாதகமான பிரசாரஞ் செய்ய வாரம்பித்தார்கள். 'அத்து மீறிய தேச பக்தர் கூட்டம்' என்று வியங்கமாக இவர்களை அழைக்கலாம். சமீபத்திலே கூட, இந்தச் சங்கத்தின் மாஜி தலைவனை மிட்ஸுரு டோயாமா என்பவன், ஜப்பானிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்று சேர வேண்டுமென்று ஒரு வேண்டு கோள் விடுத்திருக்கிறன்.

—ஆசிரியர்

நோக்க மென்ன ?

ஐயா,

சுவாமியின் பால் அன்புள்ள பக்த கோடிகள் செல்லாத சில்லரைகளைக் காணிக்கையாக உண்டிகளில் செலுத்துவதின் நோக்கமென்ன?

—K. V. *நரதன்*

இதற்கு நாமென்ன நோக்கங் கூற முடியும்? சுவாமிக்குக் கண்ணில்லை

என்று இந்தப் 'பக்த கோடிகள்' நினைக்கலாம். அல்லது செல்லாக் காசுகளை கர்ரன்ஸி ஆபீஸில்தான் திருப்பி எடுத்துக் கொள்ள மாட்டார்களே, எல்லாம் வல்ல கடவுளுக்கு இவற்றை வாங்கிக் கொள்கிற சக்தி இருக்கிறதா இல்லையா வென்று பரிசோதனை செய்து பார்க்கும் நோக்கமும் இருக்கலாம். அல்லது சுவாமி பெயரைச் சொல்லி யாருக்கோ போகிற பணந்தானே என்ற நினைப்பும் இருக்கலாம்.எப்படியும் இந்தச் சந்தேகத்தைத் தெளிந்து கொண்டு விட வேண்டுமென்ற எண்ணம் அன்பருக்கு ஏற்பட்டிருக்குமானால் தயை செய்து, செல்லாக் காசுகளை உண்டியிலே போடுகிற பக்த கோடிகளையே' பார்த்துக் கேட்கலாமே.

—ஆசிரியர்

தராஸணு இயக்கம்

ஐயா,

கம்பீரமாக, வெற்றிகரமாக நடந்தேறிய 51வது காங்கிரஸின் இறுதியில் ஸ்ரீமதி சரோஜினி தேவியார் குஜராத் மாகாணத்தில் ஏற்பட்ட 'தார சேனு' இயக்கத்தோடு தம்மைச் சம்பந்தப் படுத்திப் பேசி யுள்ளார்களே. தயவு செய்து அந்தத் தார சேனு இயக்கம் குறித்த அனைத்தையும் நமது "ஜோதி"யில் விளக்கித் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

—*சொக்கலிங்கன்*

குஜராத் மாகாணத்தில் சூரத் ஜில்லாவில் தாரசேனு(தராஸணு) என்றொரு கிராமம் இருக்கிறது. இங்கே ஏராளமான உப்பளங்கள் இருக்கின்றன. இவற்றைக் கைப்பற்ற **1930–31**ம் வருஷத்து உப்புச்சத்தியாக்கிரகத்தின் போது தொண்டர்கள் முயற்சி செய்தார்கள். போலீஸார், இந்த உப்பளங்களைச் சூழ்ந்து காவல் புரிந்து தொண்டர்களைத் தாக்கிவந்தார்கள். இந்தத் தொண்டர் படையை ஸ்ரீமதி சரோஜனி தேவியார் தலைமை பூண்டு நடத்தினார். உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது, தமிழ் நாட்டில் எப்படி வேதாரணியம் பெயர் பெற்றதோ அதைப் போல் பம்பாயில் வடாலா என்ற ஊரும், குஜராத்தில் தராஸணு என்ற ஊரும் பெயர் பெற்றவை. இங்கே நடை பெற்ற போராட்டங்களை, இந்தஊர்ப்பெயரிட்டு அழைப்பது சாதாரண வழக்கம். உதாரணமாக வேதாரணியத்திலே நடை பெற்ற போராட்டத்தை வேதாரணிய இயக்கம் என்று சொல்வது போல. இந்த தராஸணு இயக்கத்தையே ஸ்ரீமதி சரோஜனி தேவியார் குறிப்பிட்டிருக்கிறார்.

—ஆசிரியர்

தானம்

ஐயா,

தானத்தில் பெரிது எது என்பதை விளக்குமாறு வேண்டுகிறேன்.

எஸ். சுப்பிரமணியம்

தானத்திலே சிறந்தது வித்தியா தானம். சந்தேகமென்ன இதில்? அன்னதானத்திற்கு இரண்டாம் 'பிரைஸ்' தான்.

—ஆசிரியர்

ஸ்ரீ போஸின் தாயார்

அன்புள்ள ஐயா,

ஸ்ரீமான் அரு. காந்தி அண்ணாமலையவர்கள் எழுதிய ராஷ்ட்ரபதி சுபாஷ் சந்திர போஸ் என்னும் நூலில் பதினொருவது அத்தியாயத்தில் 'சுபாஷ்

போஸ் தம் தாயாரின் இறுதிக்காலத்திலும் அன்னவள் தெரிசனம் கிடைக்கப் பெற்றாரில்லை' என்று எழுதியிருப்பதைப் படித்துப் பார்த்ததும் எனக்கு சந்தேகம் தோன்றலாயிற்று. ஸ்ரீ போஸின் அன்னை, ஹரிபுராவில் தம் தனையனைக் கண்டு இறும்பூதெய்தினதாகப் பத்திரிகையில் பார்த்தோமே. அது என்ன கனவா என்று ஓர் எண்ணம் தோன்றவும் மார்ச்சுமாத "ஜோதி"யைப் புரட்டிப் பார்த்தேன். அது கனவல்ல; நனவுதான் என்று கண்டேன். அதே இதழில் ஷி அண்ணாமலையவர்கள் எழுதிய ஸ்ரீ போஸின் சரித்திரத்துக்கு மதிப்புரை வெளிவந்திருப்பதைப் படித்துப் பார்த்தேன். அதில், ஸ்ரீ சுபாஷின் அன்னை மாண்டதாகக் குறிப்பிடப் பெற்றிருப்பதைப் பற்றி ஒன்றும் எழுதப் பெறவில்லை. எனது சந்தேகம் வலுத்தது. பத்திரிகையில் ஸ்ரீ போஸின் அன்னை உயிர் வாழ்ந்திருப்பதாக எழுதப்பெற்றுள்ளது; ஆனால், புஸ்தகத்திலோ உயிர் நீத்ததாக வரையப் பெற்றுள்ளது. இவைகளிரண்டையும் ஒருங்கே வைத்துப் பார்த்தால் இவற்றில் ஏதோ இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. அதாவது உயிர் நீத்தது ஸ்ரீ சுபாஷின் சிற்றன்னையாக இருக்கலாமோ என்பதுதான். ஆனால் இந்த எண்ணம் நிலையாக நின்று விடவில்லை. என் மனதில் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. அக் குழப்பத்தை நீக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

'உண்மை விரும்பி'

தாயார் இறந்து போனதாக எழுதியுள்ளது தவறு. இதை எடுத்துக்காட்டிய 'உண்மைவிரும்பி'க்கு வந்தனம். போஸ் பிரசுராலயத்தார், இதைக் கவனித்துத் தங்கள் அடுத்த பதிப்பில் திருத்தி விடுவார்களென்று நம்புகிறோம். ஸ்ரீ போஸின் தாயார் இன்னும் நீடூழி காலம் வாழ்ந்து, தம் மக்களுக்கும் வாழ்வு நல்குமாறு ஆண்டவனைப் பிரார்த்திப்போமாக.

—ஆசிரியர்

திருநீறு

அன்புமிக்க ஆசிரியரவர்களே!

1. உலகம் ஸத்தா, அஸத்தா, அதாவது உலகம் பொய்யா, மெய்யா?

2. நெற்றியில் திருநீறு அதாவது விபூதி இட்டுக் கொள்வது எதற்கு? திருநீறு தரிப்பது பக்திக்கு அறிகுறி என்கிறார்களே அது உண்மையா? அப்படியானால் திருநீறு தரிப்பவர்கள் சிவ பக்தர்கள்; திருநீறு தரியாதவர்களெல்லாம்நாஸ்திகர்களா? என்றுபல சந்தேகங்களை நண்பர்கள் கிளப்பினார்கள். அதற்கு நான் விபூதி தரிப்பதும் பொட்டு வைப்பதும் நெற்றியின் அழகுக்குத்தான் என்றுமுடிவு செய்தேன், இதனை யறிந்த சில பெரியோர்கள் அவ்வாறு உரைப்பது சரியல்லவென்றும், அது பக்திக்கே அறிகுறியென்றும், நெற்றியில் இட்டுக் கொள்ளும் திருநீறு கடவுளின் திருவடிகள் என்றும் அப்படி திருவடிகளை நெற்றியில் வைத்துக் கொண்டிருப்போர் கடவுளின் அடிகளுக்குக் கீழ்ப்படிந்த பக்தர் என்றும் செப்பினார்கள். அதற்கு நான் கடவுள் நெற்றியில் வைக்கிறார்களே, அது யாருடைய திருவடிகள் என வினவ பலர் அது அர்ச்சகர்களின் புரட்டென்றனர். மற்றும் சிலர் கடவுளுக்கு அடியும் முடியும் ஒன்றென்றனர். அதற்கு உங்களுடைய அபிப்பிராயமென்ன?

ஜி. இராமநாதன்

1. உலகக் மெய்யர் பொய்யா என்று நாம் தர்க்கம் செய்து கொண்டிருந் தோமானால் நாம் ஒன்றுமே செய்ய முடியாது. இந்தச் சந்தேகங்களை யெல்லாம், நாம் சுதந்திரம் பெறுகிற வரையிலாவது கொஞ்சம் கட்டிப் போட்டு வைத்தல் நல்லது.

2. திரு நீறு, நாமம் முதலியன தரிப்பதெல்லாம் அவரவர்களுடைய நம்பிக்கையைப்பொறுத்திருக்கிறது. விபூதிதரிப்பவர்கள் மட்டும் மோட்ச வாசலில் நுழைய அநுமதிக்கப் படுகிறார்களென்று சொன்னால் அதை நாம் ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. திரு நீறு பூசுவது முதலியனவெல்லாம் சுகாதாரத்தை யொட்டியே நமது பெரியோர்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள் என்று நாம் கருதுகிறோம். இந்தத் திருஷ்டியில் தான் இந்தப் பிரச்னையை நாம் கவனிக்கிறோம். இதற் கெல்லாம் கடவுளைப் பிடித் திழுப்பது அவ்வளவு பொருத்தமாகத் தோன்றவில்லை.

—ஆசிரியர்

எம். என். ராய்

ஐய,

ஸ்ரீ எம். என் ராயைப் பற்றி தின சரி பத்திரிகைகளில் சிற்சில சமயம் அதிகமாகப் புகழ்ப்படுகிறது. மார்ச்சு மாத "ஜோதி"யில் கூட அவரைப் பற்றி ஒரு கட்டுரையில் பிரமாதமாகப் புகழப்பட்டிருக்கிறது. அவருடைய சுய சரிதம் இன்னும் தெளிவாக வெளிவரவில்லை. அவர் பெரிய தீவிர வாதி என்றும் ரஷ்ய பொது உடமை இயக்கத்திலிருந்து வேலை செய்தவ ரென்றும் அவர் இந்தியா வந்த சமயம் சொல்லப் பட்டது. சென்ற காங்கிரசுக்குப் பிறகு அவர் பெயர் அவ்வளவாக வெளிவரக் கூடக் காணோம். பழைய பொது உடமைக் கொள்கைகளை எல்லாம் விட்டு விட்டு காங்கிரசில் இரண்டறக் கலந்து விட்டாரென்று சொல்லப் பட்டது. வானமளாவப்புகழப்படும் இவர் அந்நிய நாட்டிலிருந்து வந்ததிலிருந்து ஒரு வேலையிலும் கலந்துழைக்கக் காணோமே. இந்த நிலையில் அவரைப் பற்றிய உங்கள் அபிப்பிராயத்தை தயவு செய்து விளக்குவீர்களாக.

"சொக்த"

அன்பர் நம்மிடமிருந்து என்ன விதமான அபிப்பிராயத்தை எதிர் பார்க்கிறரென்பது நமக்குத் தெரிய வில்லை. ஸ்ரீ ராயை, யாரும் 'வானமளாவப் புகழ்ந்த'தாகவும் நமக்குத் தென்பட வில்லை. யாருக்குமே ஒரு சந்தர்ப்பம் கொடுத்தால்தான் அவர்களுடைய பெயர் வெளிவரக் கூடும். ஸ்ரீ ராய்க்கு அத்தகைய சந்தர்ப்பம் இன்னும் கிடைக்க வில்லை போலும்.

—ஆசிரியர்

ஹிந்தி புத்தகங்கள்

ஐயன்மீர்

ஹிந்தி மொழிக்கு இன்னுயி ரூட்டிய ப்ரேம் சந்த், எழுதியுள்ள நூல்கள் எவ்வெவை இப்பொழுது ஹிந்தியில் புத்தக ரூபமாய்க் கிடைக்குமென்பதை "ஜோதி"யிலே காண விரும்புகிறேன்.

பால கணேசன்

கல்கத்தா புஸ்தக பண்டார், 18-ஏ, ஹாரிஸன் ரோட், கல்கத்தா என்ற விலாசத்திற்காவது அல்லது வேறு எந்த ஹிந்தி புஸ்தக வியாபாரக் கம்பெனிக் காவது எழுதிக் கேட்டால் சுலபமாக இந்த விபரத்தை அன்பர் தெரிந்து கொள்ளலாமே.

—ஆசிரியர்



மைக்கேல் காலின்ஸ்

ஆசிரியர்: ப. ராமஸ்வாமி; வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம், 55, அரண்மனைக்காரத் தெரு, சென்னை; விலை: எட்டு அணா; டபிள் பூல்ஸ்காப் அளவு 1 x 16; பக்கம் 306.

டிவேலரா, ஆர்தர் கிரிப்பித், மைக்கேல் காலின்ஸ் ஆகிய மூன்று பேருடைய சரித்திரத்தைத் தெரிந்து கொண்டு விட்டோமானால், ஐரிஷ் சுதந்திரப் போராட்டத்தின் சரித்திரத்தைத் தெரிந்து கொண்டவர்களாவோம். இந்த மூவரில் மைக்கேல் இளையவன். 31-வயதுக்குள்ளேயே, தன் தாய்நாட்டுக்குச் செய்ய வேண்டிய பணிகளையெல்லாம் செய்துவிட்டு வீரஸ்வர்க்கத்திற்குச் சென்று விட்டான். இவனுடைய வாழ்க்கையைப் படிக்கிறவர்கள் 'இப்படிக்கூட நடந்திருக்குமா? ஏதோ துப்பறியும் நாவல் போலிருக்கிறதே' என்று சந்தேகிக்கலாம். அவ்வளவு போராட்டம் ஐர்லாந்தில் நடந்திருக்கிறது. மைக்கேல் காலின்ஸின் வாழ்க்கையில் நடைபெற்ற ஒவ்வொரு சம்பவமும் உண்மையானதுதான். இவையனைத்தையும் அழகாகக் கொண்டு வந்து காட்டுகிறார் ஸ்ரீமான் ப. ராமஸ்வாமி இந்த நூலில். கதாநாயகனுடைய சரித்திரத்தோடு, தேசியப் போராட்டத்தின் சரித்திரத்தையும் இணைத்து, வாசகர்களுக்குச் சிறிதுகூட சோர்வு உண்டாகாமல் எழுதிக் கொண்டு போவதில் ஸ்ரீ ராமஸ்வாமி வெற்றி பெற்றிருக்கிறார். இந்த வெற்றிக்கு, காலின்ஸின் வாழ்க்கையே அவ்வளவு ருசிகரமான சம்பவங்கள் நிறைந்ததாயிருப்பது ஒரு காரணமாகக் கூறலாமாயினும், ஸ்ரீ ராமஸ்வாமியின் லாகவமான நடைக்கும், விஷயங்களை வரிசைப்படுத்திக்கூறும் திறமைக்கும் நாம்உரியமதிப்புக்கொடுக்கவே வேண்டும். இந்த மதிப்பை அவர் நம்மிடத்திலிருந்து பூரணமாகப் பெறுகிறார்.

ஆனால் ஒரு வார்த்தை. புஸ்தகத்தின் கடைசி அத்தியாயங்களை எழுதிக் கொண்டு வருகிறபோது, 'பக்கங்கள் அதிகமாகி விட்டன; ஏதோ ஒருவகையாக முடிக்க வேண்டும்' என்ற எண்ணம், ஆசிரியரின் மனதில் முக்கியத்துவம் பெற்றுவிட்டதாகவே நாம் ஊகிக்க வேண்டி யிருக்கிறது. இல்லாவிட்டால் காலின்ஸ், அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொண்ட காலத்தில் செய்த வேலைகள், அவன் நடந்து கொண்ட மாதிரி முதலியவைகளும், சமாதான மகாநாட்டில் அவன் செய்த காரியங்களும் இவ்வளவு அவசரமாகவும் சுருக்கமாகவும் கூறப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை. ஒருகால், இவற்றை யெல்லாம் விவரித்து வேறொரு தனிப்புத்

தகமாக வெளியிட வேண்டுமென்ற நோக்கம் ஆசிரியருக்கு இருக்கலாமோ என்னவோ?

பொதுவாக, இந்த நூல் நமது தமிழ் மக்களின் தேசீய விழிப்புக்குப் பெரிதுந்துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.

---

1. இந்திய விவசாயிகளின் கடன்—அணா 8.
2. அயல் நாடுகளில் கடன் ஒழிப்பு—அணா 12.
3. கடன் நிவாரணச் சட்டமும், அதைப் பற்றிய முழு விவரங்களும்—அணா 12.

இம்மூன்று நூல்களையும் எழுதியவர்: ஸ்ரீமான் ஏ. முத்தையா, எம். ஏ; யாவும் டபிள் கிரவுன் அளவு 1x16; கிடைக்குமிடம்—தேசீய வித்யா சங்கம், 17-செம்புதாஸ் தெரு, சென்னை.

தமிழ் மொழியில் பொருளாதார நூல்கள் யாரும் வெளியிட மாட்டார்களா என்று ஏங்கி யிருந்த தமிழன்பர்கட்கு, சென்னை பச்சையப்பன் காலேஜ் பொருளாதார உதவிப் பேராசிரியர் திரு. அ. முத்தையா அவர்கள் எழுதி வெளியிட்டுள்ள மேற்படி மூன்று புத்தகங்கள் அதிக மகிழ்ச்சி யளிக்கும். இம் மூன்று புத்தகங்களும் ஒன்றுக் கொன்று அதிக சம்பந்த முடையன. கண்கவர் வனப்பு வாய்ந்த சித்திர அட்டைகளுடன் சீரியமுறையில் அச்சிடப்பட்டிருக்கின்றன.

எனது மேஜை மேலிருந்த இப் புத்தகங்களைக் கண்டு வியந்த வங்காளி நண்ப ரொருவர், 'தமிழ் மொழியில் எழுத்துக்கள் கிடையாவோ? **A.** முத்தையா என்று போட்டிருக்கிறதே, அதற்குத் தமிழ் இல்லையோ?' என்றார். இவை ஆசிரியரின் குற்ற மல்ல. வங்காளிகளைப் போல தமிழ் மக்கள் 'மொழி வைராக்கியம்' இல்லாமல் இருப்பதுதான் காரணம் போலும்!

இந்திய நாட்டிலும் தமிழ் நாட்டிலும் தோன்றி யிருக்கும் இலக்கியப் புது மலர்ச்சியின் வேகத்தால், சில பிரசுராலயத்தார் மேனாட்டுப் புத்தகங்கட்கு எவ்விதத்திலும் குறைவு படாத அழகிய பல புத்தகங்களை வெளியிட்டு வருகின்றனர். இம் மூன்று புத்தகங்களும் அவ் வினத்தைச் சார்ந்தவை.

'இந்திய விவசாயிகளின் கடன்' எனும் புத்தகத்தின் முதல் அத்தியாயத்தில் 'இந்திய விவசாயி' யின் நிலை வெகு நன்றாக சித்திரிக்கப்பட்டிருக்கிறது. 'எவ்வளவு நன்றாகப் பயிர் செய்தாலும் விவசாயத்திற்காகச் செலவு செய்யும் பணத்திற்கு நூற்றுக்கு இரண்டு முதல் ஐந்து வீதந்தான் ஊதியம் கிடைக்கும்'. ஆனால் அவன் வாங்கிய கடன் தொகைக்கோ, 'ஆறு ரூபாய் முதல் இருபத்து நான்கு அல்லது முப்பத்தாறு ரூபாய் வரையில் கூட' வட்டி கொடுக்க வேண்டிய திருக்கும். இந்நிலையில் 'விவசாயி கடைத் தேறுவ தெப்படி?' கடன் வாங்கிப் புது நிலம் வாங்கிய ஓர் விவசாயி 'கடன் அதிகமாக ஆகப் புதிதாக வாங்கிய நிலத்தை அல்லாமல் பூர்வீகமாக இருந்த சொத்தையும் அவன் இழந்து போகிறான். 'புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் அடித்துக் கொண்டு போவதைப் போல இருக்கிறது.'

இரண்டாவது அதிகாரம், 'விவசாயிகள் கடனாளிகளே!' 'பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் நிலைப்பதற்கு முன்பு விவசாயிகள் அதிகமாகக் கடன் வாங்கியதில்லை' யாம். ஆகவே இந்தியாவிற்கு பிரிட்டிஷார் செய்த நன்மைகளில் இதனையும் சேர்த்துப் பள்ளிப் பிள்ளைகளுக்குப் போதிக்கலாமே!

கடனுக் குரிய பதினைந்து காரணங்களை புள்ளி விவரங்களோடு அடுத்த இரண்டு அத்தியாயங்கள் கூறுகின்றன. அதன் முடிவில் உழைப்பினால் வாரா உறுதிகள் இல்லை யென்பது வற்புறுத்தப் படுகிறது; திண்ணைத் தூங்கி சித்தாந்தம் தலையி லடிக்கப் படுகிறது.

அபேதவாதிகளுக்கும், சம தர்ம வாதிகளுக்கும் இவ்வத்தியாயத்தில் ஓர் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'முன் காலத்தில் கிராம வாசி எவனுக்கும் நிலத்தில் தனிப்பட்ட உரிமைகள் இல்லை'யாம். பண்டைய பெருமையை சதா பேசுபவர்களும் இதனைக் குறித்து வைத்துக் கொள்ளலாம்.

வட்டிக்கு வட்டிபோட்டு, அதற்குக் குட்டி போட்டு நாற்பது ரூபாய் கொடுத்து விட்டு ஆயிர ரூபாய் நிலத்தை எப்படி யெடுத்துக் கொள்கிறது என்று உங்கட்குத் தெரியுமா? அல்லது ஆள் அடிமைத் திட்டம் விவசாய உலகில் இருப்பதுதான் தெரியுமா? லேவாதேவிக்காரா என்ற அத்தியாயத்தைப் படித்துப் பாருங்கள்.

இக் கடன் பளுவை நிவர்த்தி செய்வதற்காக பல மாகாணங்களிலும் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் அவைகள் பூரண பரிகாரம் தரத் தவறியதும் மற்றொரு அத்தியாயம் கூறுகிறது. கடைசியில் சமய சஞ்சீவியாக காங்கிரஸ்கவர்ன்மெண்டாரால் அளிக்கப்பட்டிருப்பது கடன் நிவாரணச் சட்ட மாகும்.

பெரிய வியாதிக்குப் பெரிய மருந்து கொடுக்க வேண்டியது நியாயந் தானே. நாலைந்து வருட வியாபார மந்த காலத்தில் சென்னை மாகாணத்தில் மாத்திரம், '32, 67, 537, சிறு விவசாயிகள் தங்கள் நிலத்தையும் உடைமையையும் இழந்து விட்டார்கள்'. '1931 முதல் 1934 வரையிலுள்ள வருடங்களிலே சென்னை மாகாணத்தில் (மலையாளம் தென் கன்னடம் நீங்கலாக) சிறு விவசாயிகளின் கையிலிருந்து 1,03, 51,000 ஏக்கர் நிலம் மற்றவர்கள் கைகட்கு மாறிப் போயிருக்கின்றதென'க் கணக்கிடப் பட்டிருக்கிறது. நம் தேசத்தில் முன்னேற்பட்ட தக்காணத்துக் கலகம் போல்—பிரஞ்சு புரட்சி போல்—ஒன்றும் நிகழாமைக்கு நம்மவர்களின் அளவிறந்த பொறுமைக்குத் தேங்காயுடைக்க வேணும். இவ்வித கொடிய வியாதியை நீக்குவதற்கு கொஞ்சம் பலமான மருந்தை ராஜாஜி கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளார். அச் சட்டத்தின் விருத்தாந்தம், தமிழ் ஷரத்துக்கள், ஆங்கில ஷரத்துக்கள், குடிவாரப் பாக்கி, குத்தகைப் பாக்கி விஷயங்கள், இவைகளனைத்தும் அனைவரும் அறியுமாறு, எளிய தமிழில், கடன் நிவாரணச் சட்டமும், அதைப்பற்றிய முழு விவரங்களும் என்ற நூலில் திரு. முத்தையா எழுதியுள்ளார். 1932 ஆம் வருடத்திற்கு முந்திய கடன்களுக்கு வட்டி யில்லை என்று தீர்மானித்திருப்பதற்கு ஏற்ற பொருளாதாரக் காரணம் கூறப்பட்டிருப்பது படித்து, சிந்தித்து ரசிக்கத் தக்கது. அதைப் படித்து விட்டால், வட்டி போனால்

போகிறது; முதலேயாவது விட்டார்களே என்று நாம் நன்றி செலுத்துவோம். ஏனெனில் அயல் நாடுகளில் கடன் ஒழிப்பு என்ற புத்தகத்தைப் படித்தால், சென்னை சட்டத்தை விட கடுமையான சட்டங்கள் இதர நாடுகளில் கையாளப் பட்டிருப்பதைக் காணலாம். சென்னை சட்டமும் காலங் கடந்த சட்டமாகும். சில வருடங்களுக்கு முன் காங்கிரஸ் ஆட்சி வந்திருந்தால்—இவ்வித சட்டம் வந்திருந்தால்—விவசாயிகளின் நிலை இன்றைய அளவு மோசமாகி யிரா தென்று தோன்றும்.

இவ்வித உயர்ந்த புத்தகங்களைக் கால மறிந்து தமிழ் நாட்டுக்கு உதவிய திரு. முத்தையாவுக்கு தமிழர்கள் மிகவும் கடமைப் பட்டிருக்கிறார்கள். அவருக்கு ஆதரவளித்துத் தங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளத் தமிழர்கள் பின் வாங்க மாட்டார்கள்.

ஒரு வார்த்தை. அடுத்த பதிப்பில் மிலியன் என்று போடாமல் புள்ளிகளை லட்சக் கணக்கிலும் கோடிக் கணக்கிலும் தந்தால் தமிழ் மக்களுக்கு அதிக பயன் படும். மிலியன் கணக்கு ஆங்கிலம் படியாதவர்கட்குத் தெரியா தல்லவா?

ரா. ப. ரா.

ஸ்ரீ ரமண சந்நிதி முறை

இயற்றியவர்: பாரத்வாஜி முகவைக் கண்ண முருகனார்; புத்தகம் கிடைக்குமிடம்: A. R. கிருஷ்ணசாமி அண்ட் கோ, 47, அரண்மனைக் காரன் தெரு, சென்னை; விலை; ஒரு ரூபாய்; டபிள் கிரவுன் அளவு 1x16; பக்கம் 351.

ரமண பக்தர் ஒருவரால் பாடப் பெற்ற செய்யுள் நூல் இது. தேவாரம், திருவாசகம், அருட்பா முதலியவற்றைப்பின்பற்றி எழுந்த இந்தப் பாடல் தொகுதியில் கீழ்க்கண்ட பாட்டு நமக்கு நிரம்பவும் பிடித்திருக்கிறது:—

காரிய கோன்புங் கவினிய கற்புங்
கலங்கிடச் செயுங்கடுங் கோலென்
றூரிய நாட்டிலரசியல் வழிக்கே
யமைதியாய்ப் பற்பல சமயா
சாரிய ரொருங்கே சார்ந்துழைத் திடுதல்
சற்றுமஃ தறிந்திலே கொல்லோ
சீரிய வதற்கென் செய்துளே கொல்லோ
தேசிக ரமணமா தேவே.

MAHA-YOGA

By 'Who'; Publishers: The New Light Publishing House, Pudukotah, S. I. Ry. Price: Re. One; D. C. 1x16; P. P. 119.

இந்த ஆங்கில நூல் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் உபதேசத்தை அத்வைத பரமாக விரித்துக் கூறுகிறது. ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 'மௌன வாக்கை'த் தெளிவு படத் தெரிந்து கொள்ள விரும்பும் ஆங்கில மறிந்த அத்வைதிகளுக்கு இது பயன்படும்.

புக்கர் வாஷிங்டனுடைய கல்வி ஸ்தாபனம்

—ரா. ராமசுப்பு

புக்கர்—டீ—வாஷிங்டன் ஒரு அமெரிக்க நீக்ரோ. 1859-ல் மிகவும் எளிய குடும்பத்தில் பிறந்தவர். நீக்ரோக்களை வெள்ளையர்கள், ஆப்ரிக்காவிலிருந்து ஏராளமாகக் கப்பலில் கொண்டுவந்து அமெரிக்காவில் தள்ளினார்கள். நீக்ரோக்களில்லாவிட்டால் அமெரிக்க ஐக்கிய ராஜ்யங்கள் இப்பொழுதிருக்கும் நிலையை அடைந்திருக்க ஒருக்காலும் சாத்தியமில்லை. கோதுமை நிலங்களிலும், பருத்திக் காடுகளிலும், இருளடர்ந்த சுரங்கங்களிலும் பாடுபட்டவர்கள் நீக்ரோக்கள். முதலாளிகளாக வாழ்ந்தவர்கள் வெள்ளையர்கள். அமெரிக்க ஐக்கிய ராஜ்யத்தின் ஜனத்தொகையில் 10 சத வீதம் நீக்ரோக்கள். ஆனால் அவர்களுக்குப் படிப்பு வாசனையே கிடையாது. ரெயில் வண்டிகளில் போக வேண்டுமெனில் சாமான்கள் வண்டியில் செல்லவேண்டும். அவர்களிருக்கும் சிறு குடிசைக்கு ஆங்கிலத்தில் 'கேபின்' (Cabin) என்று சொல்லுவார்கள். புக்கர்—டீ—வாஷிங்டன் பிறந்த குடிசையின் நீளம் 16 அடி. அகலம் 14 அடி. அதில் புக்கரின் தாயார், அண்ணன், தங்கை, இன்னொருவன்-ஆக ஐவர் குடியிருந்தனர். புக்கர் தன் இளம் பிராயத்திலேயே வேலை செய்ய ஆரம்பித்தார். ஒரு தடவை சுரங்கத்தில் வேலை செய்யும்பொழுது 'ஹாம்டன்' கல்வி ஸ்தாபனமென்று நீக்ரோக்களுக்கென ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டிருப்பதாகவும் அங்குத் தொழிற் கல்வி கற்பிக்கப் படுவதாகவும் சிலர் பேசிக்கொண்டதைக் கேள்விப் பட்டார். புக்கர் படிக்க வேண்டுமென்று பல தடவை பிரயத்தனப்பட்டார். சொல்லிக்கொடுப்பார் யாருமில்லை. ஹாம்டனுக்குப் போனால்தான் கல்வி கற்க முடியுமென்று ஒரே தீர்மானமாகக் கையிலிருந்த கொஞ்சம் பணத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். போதிய பணமில்லாததால் பல தடவை உணவின்றிச் சந்துகளில் படுத்துறங்குவார். இப்படியாகக் கஷ்டப்பட்டுப் பதினைந்து நாட்களுக்கப்பால் ஹாம்டன் போய்ச் சேர்ந்தார். அங்கு ஒரு வீட்டில் கதவுகளைத் துடைத்து சுத்தமாக வைத்துக்கொள்ளும் வேலை கிடைத்தது. நாள் பூராவும் வேலை செய்வார். இரவில் இரண்டு மணி நேரம் படிப்பார். இப்படிப் படித்து ஊருக்கு வந்து சேர்ந்து தன்னுடைய அண்ணனுக்கும் அக்கம் பக்கத்திலுள்ளோர்க்கும் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தார்.

மறுபடியும் ஹாம்டனுக்குப் போனார். அங்கு சிவப்பு இந்தியர்களுக்குப் படிப்புக் கற்றுக்கொடுக்கும் பொறுப்பு இவருக்குக் கிடைத்தது. அச்சமயம் 'அலபாமா' ராஜ்யத்திலுள்ள 'டஸ்கஜீ' என்ற கிராமத்தார்கள் ஹாம்டன் பள்ளிக்கூடத்திலிருந்து ஒரு உபாத்தியாயர் வேண்டுமெனக் கேட்டிருந்தார்கள். அதற்கு தகுதி வாய்ந்தவர் புக்கர்தானென்று 'டஸ்கஜீ'க்கு அனுப்பப்பட்டார்.

'அலபாமா' ராஜ்யத்திலுள்ளவர்களில் பாதி பேர் நீக்ரோக்கள். பருத்திக் காடுகளில் வேலை செய்ப

வர்கள். 'டஸ்கஜீ' கிராமத்தில் 2000 பேர்கள் இருந்தார்கள். ஆனால் ஒரு பள்ளிக்கூடமுங் கிடையாது. அக்கிராமத்தில் முதல் உபாத்தியாயர் நமது புக்கர்-டீ-வாஷிங்டன். இக் கிராமத்தார்கள் உணவுப் பொருள் களனைத்தையும்பட்டணங்களிலிருந்து வாங்கிக் கொண்டு வருவார்கள். அவர்களுடைய குடிசைக் கருகாமை யில் பருத்திச் செடிகள் காணப்படுமே யொழிய அவர்களுக்குத் தேவை யான காய்கறித் தோட்டங்கள் கிடையா. ஓய்வு நேரங்களை வீணுகக் கழிப்பார்கள். வீட்டையும் தங்களி டத்தையும் செப்பனிடமாட்டார்கள். அப்படிச் செப்பனிட வேண்டுமானு லும், வெளியாட்களைக் கூப்பிடுவார் கள். இந்நிலைமைகளை யெல்லாம் கவனித்து வாழ்க்கைக்குப் பிரயோஜ னமாகக் கூடிய கல்வியைத்தான் ஜனங்கட்குப் புகட்ட வேண்டு மென்று கங்கணங் கட்டிக்கொண் டார் புக்கர்.

'டஸ்கஜீ'க்கருகாமையிலுள்ள ஒரு நிலச்சுவான்தார் தன்னுடைய 100 ஏக்ரா நிலத்தை 1500 ரூபாய்க்குக் கொடுப்பதாகச் சொன்னார். புக்க ருக்கு அதை வாங்க வேண்டுமென்ற ஆசை. ஆனால் பணமில்லை. ஹாம்ட னிலுள்ள பொக்கிஷதாரருக்கு ஒரு கடிதமெழுதினார். 750 ரூபாய் கிடைத்தது. மீதிப் பணத்தைப் பல ஊர்களுக்குச் சென்று நீக்ரோக்களு டனும், வெள்ளையர்களுடனும் அளவ ளாவி வசூல் செய்தார். பல ஏழை ஜனங்கள் பணம், பொருள் உதவி செய்தார்கள். கிழவி ஒருத்தி தன் னிடமிருந்த கோழிக் குஞ்சைக் கொடுத்தாள். ஒரு ஏழைக் குடி யானவன் தான் வெகு நாளாக அரு மையுடன் வளர்த்து வந்த ஒரு பன் றிக் குட்டியைக் கொடுத்தான். இப்படியாகப் புக்கர் 'டஸ்கஜீ' சுற்றி யுமுள்ள கிராமத்தார்களின் நன்மதிப் பைப் பெற்றார்.

பிறகு கட்டிடம் தேவையாயிருந் தது. தோட்டங்களில் ஆள் வைத்து வேலை செய்வதற்குப் பணம் கிடை யாது. இவருடைய மாணவர்களில் அநேகர் வயது சென்றவர்கள். சிலருக்கு 30-லிருந்து 40 வரைக்கும், சிலருக்கு 40 வயதுக்கு மேலும், பெரும்பான்மையோர் 20 வயதிற்கு மேற்பட்டவர்களாயு மிருந்தார்கள். அவர்கள் விரும்பியதெல்லாம் புத்தகப் படிப்பே. ஈஜிப்டின் தலைநகரம், எலிஜபெத் ஆண்ட வருடங்கள், இலக்கண விதிகள் முதலிய விஷயங்க ளுக்குப் பதில் சொல்லத் தயங்க மாட்டார்கள். அப்படிப் பட்டவர்க ளிலொருவனை, ஒரு அறையைக் கூட் டச் சொன்னால் அவ்வேலையை அவன் இழிவாக நினைப்பது மாத்திரமின்றிச் சரியாகவும் செய்யமாட்டான். ஒரு சமயம் வாஷிங்டன், 25 வயது சென்ற ஒரு மாணவியைக் கூப்பிட்டு மேஜையின் மேலுள்ள 10 தட்டுகளை அழகாக அடுக்கி வைக்கச் சொன்னார். அவள் 6 தட் டுகளை உடைத்துப் போட்டு மீதித் தட்டுகளை அலங்கோலமாக வைத்து விட்டுப் போனாள். இந்நிலையிலி ருந்த மாணவர்களுக்கு புக்கர் கற்றுக் கொடுக்க வேண்டியதா யிருந்தது. கற்பிக்கும் நேரம் தவிர மற்ற நேரத் தில் தான்மாத்திரம் தோட்ட வேலை செய்வார். முதலில் மாணவர்கள் தன்னுடன் சேர்ந்து வேலை செய்ய வரவில்லை. நாள் செல்லச் செல்ல அவர்களும் பங்கெடுக்க ஆரம்பித் தனர்.

கட்டிடத்திற்கு வேண்டிய மரக் கட்டைகளை ஒரு தனவந்தர் கொடுத்

துதவுவதாக ஒப்புக் கொண்டார். செங்கல் ஏராளமாக வேண்டியிருந்தது. ஆகவே ஒரு காளவாய் வைப்பதாகத் தீர்மானித்தார் புக்கர். சேற்றில் சில மாணவர்கள் வேலை செய்வதை வெறுத்தார்கள். 'நாங்கள் படிக்க வந்தோமா, கட்டிடங் கட்ட வந்தோமா?' என்று குறை கூற ஆரம்பித்தனர் சிலர். சில சோம்பேறிகள் பள்ளிக்கூடத்தையே விட்டுச் சென்றனர். பெற்றோர்கள் புக்கர்மீது கடிதங்கள் மூலமாகவும், நேராக வந்தும் தங்களுடைய கோபத்தைக் காட்டிச் சென்றார்கள். எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு தன் காரியத்தில் கண்ணுங் கருத்துமாய் இருந்து வந்தார் புக்கர். முதல் காளவாய்க்கு நெருப்பு மூட்டப்பட்டது. கடைசியில் பார்க்கும்பொழுது ஒரு செங்கல்கூட சரிவர வேகவில்லை. மறுபடியும் காளவாய் வைக்கவே அதுவும் கெட்டுப் போயது. இப்படி மூன்று முறையாகத் தோல்வி உண்டாக நான்காவது தடவை வைத்த காளவாய் தான் வெற்றிகரமாய் முடிந்தது. இவ்விதமான மறக்க முடியாத அனுபவங்களை வைத்துக்கொண்டு இப்போது இந்தக் கல்வி ஸ்தாபனத்தில் சிறந்த ஓடுகள், செங்கற்கள் செய்யப்பட்டு பல விடங்களுக்கு அனுப்பப் படுகின்றன. அக் கைத்தொழிலைக் கற்பதற்கென்றே பலர் வந்து படிக்கின்றார்கள்.

கட்டிடத்திற்கு வேண்டிய பலவித வண்டிகள், மரச் சாமான்களனைத்தும் மாணவர்களாலேயே செய்யப்பட்டன. இவ்வித முயற்சிகளில் புக்கருக்குப் பல இன்னல்கள் விளைந்தன. அவைகளைப் பொருட் படுத்தாது வேலை செய்ததனால்தான் இப்பொழுது ஒரு சிறந்த ஸ்தாபனமாக அது விளங்குகின்றது. இவர் இறப்பதற்கு முன்னாலேயே 1000 மாணவர்கள் ஒரு வருடத்தில் படித்தார்களென்றால் அதன் முழுப் பெயரும் 'புக்கர்—டீ—வாஷிங்டனை'ச் சார்ந்ததென்றே சொல்ல வேண்டும். 'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித் தாழாது உஞற்றுபவர்.'

காந்திஜீயும், புக்கர்—டீ—வாஷிங்டனும் தங்களுடைய வாழ்நாளில் பலவித கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு பையனின் பிற்கால வாழ்க்கை எப்படி அமைய வேண்டிய தென்பது தெரியும். ஒரு தேச முன்னேற்றத்திற்குக் கைத்தொழில் மிகவும் இன்றியமையாத தென்ற விஷயம் அவர்களுக்குப் பட்டதினால்தான் பள்ளிக்கூடத்திலேயே அவ் வனுபவத்தைச் சாத்தியமாகும்படி செய்ய முயலுகின்றார்கள். சிலர் டூயி (Dewey) ப்ரோபெல் Froebel) மாண்டிஸோரி (Montessori) முதலியவர்கள் எழுதின புஸ்தகத்தைப் படித்த மாத்திரத்தில் பெரிய கல்வி நிபுணர் ஆகி விடுகின்றனர். கல்வி யென்பது புத்தகத்தி லிருந்து மாத்திரம் தெரிந்து கொள்ளும் விஷயமல்ல. வாழ்க்கை அநுபவத்திலிருந்தும் கற்றுக் கொள்ளும் விஷயங்களே சிறந்த கல்விக்கு அடி கோலுகின்றன.

ஒரு சிறந்த நூல், அதன் ஆசிரியன் இறந்த பிறகு கூட பிரசித்தியுடன் இருக்கிறது. இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே எழுதப் பட்ட ஒரு புஸ்தகம், இப்பொழுது கூட நமது வாழ்க்கையில் ஒரு திசையறி கருவியைப் போல் இருக்கும்.

ஓர் அறிஞன்.



1938

பிப்ரவரி

27 பீஹார், ஐக்கிய மாகாண மந்திரிச் சபையினர், மீண்டும் தங்கள் பதவிகளை ஏற்றுக் கொண்ட பின்னர், அரசியல் கைதிகள் பலரை விடுதலை செய்தனர்.

வட சீனாவில், இரண்டு லட்சம் சீனத் துருப்புகளை ஜப்பானியர் எதிர்த்துப் போராடுகின்றனர்.

28 ஹிட்லர், இத்தலிக்கு விஜயஞ் செய்வார் என்று பெர்லினில் இன்று அறிவிக்கப் பட்டது.

ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமையைப் பலப் படுத்துவதற்காக, மூர்ஷிதாபாத்தில், மூர்ஷிதாபாத் நவாபின் தலைமையில் ஒரு மகாநாடு கூடியது.

துருக்கிக்கும் கிரீஸுக்கும் இன்று ஒரு சமரஸ ஒப்பந்தம் ஏற்பட்டது.

பாலஸ்தீனப் பிரிவினை சம்பந்தமாக ஆலோசனை செய்ய நால்வரடங்கிய ஒரு கமிஷன் நியமனம் செய்யப் பட்டது.

க்ரீஸ், யூகோஸ்லேவியா, ருமேனியா, துருக்கி ஆகிய நான்கு நாடுகளும், அபிசீனியாவில் இத்தாலிய ஆக்ரமிப்பை அங்கீகரித்துக் கொண்டன.

பீஹார், ஐ. மாகாண மந்திரிச் சபைகளைப் பற்றிக் காமன்ஸ் சபையில் கேள்விகள் கேட்கப் பட்டன.

சீன-ஜப்பானிய யுத்தத்தில் ஸின்பென் என்ற ஊரை ஜப்பானியர் கைப்பற்றினர்.

மார்ச்சு

1 சென்னை அரசாங்கத்து 1938—39ம் வருஷத்து வரவு செலவுத் திட்டம் இன்று சென்னைக் கீழ்ச்சபையில் ஆஜர் படுத்தப் பட்டது.

ஐக்கிய மாகாணச் சட்ட சபை முன்னர் 50 ஆயிரம் விவசாயிகள் கூடி தங்களுடைய குறைகளை நிவர்த்திக்க வேண்டுமென்று கூறினார்கள், பிரதம மந்திரி இவர்களுக்குச் சமாதானங் கூறியனுப்பினார்.

எல்லைப்புற மாகாணத்திலுள்ள டேரா இஸ்மெயில்கான் ஜில்லாவில் 1-4-38 முதல் பூரண மதுவிலக்கு அநுஷ்டிக்கப் படுமென்று தீர்மானிக்கப்பட்டது.

டி அனன்ஸியோ என்ற பிரபல இத்தாலிய தேசிய கவி இறந்து விட்டார்.

வங்காளத்திலுள்ள மூன்று ஜில்லாக்களில் இலவச ஆரம்பக் கல்வி இன்று அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

மிதுனபுரி ஜில்லாவில் உள்ள சில காங்கிரஸ் ஸ்தாபனங்கள் மீது விதித்திருந்த தடையுத்திரவு ரத்து செய்யப் பட்டு விட்டது.

2 தபால்களை எடுத்துச் செல்வதற்காக பி. அண்ட் ஓ. கம்பெனிக்கு 1937ம் வருஷம் இந்தியா அரசாங்கத்தார் 38,000 பவுன் கொடுத்ததாக இந்தியா சட்டசபையில் இன்று தெரிவிக்கப் பட்டது.

ஐக்கிய மாகாண மந்திரிச் சபையில் கல்வி மந்திரியாக இருந்த பண்டித பியாரிலால் சர்மாவுக்குப் பதிலாக சுவாமி சம்பூரணானந்தர் நியமிக்கப் பட்டு இன்று வேலையை ஒப்புக் கொண்டார்.

மத்திய மாகாண சட்ட சபையில் 1938-39ம் வருஷத்து வரவு செலவுத் திட்டம் ஆஜர் படுத்தப் பெற்றது.

கல்கத்தா கவர்னருடன் மகாத்மா காந்தி சம்பாஷணை செய்ததன் பயனாக இன்று வரை 1301 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப் பட்டிருப்பதாக இன்று வங்காளச் சட்ட சபையில் உள் நாட்டு மந்திரி கூறினார்.

எதியோப்பியாவின் இத்தாலிய ஆக்ரமிப்பை இன்று கிரேட் பிரிட்டன் அங்கீகரித்துக் கொண்டது.

ஒரிஸா, எல்லைப்புற மாகாணம், பஞ்சாப் ஆகிய மாகாண சட்ட சபைகளில் இன்று 1938-39ம் வரவு செலவுத் திட்டம் ஆஜர்படுத்தப் பெற்றது.

3 ஐக்கிய மாகாண சட்ட சபையில் 1938-39ம் வருஷத்து வருஷத்து வரவு செலவுத் திட்டம் ஆஜர் படுத்தப் பெற்றது.

ஆஸ்திரியாவில் ஷூஷ்னிக் அரசாங்கத்திற்கும் நாஜிகளுக்கும் சில காலமாகவே மனஸ்தாபம் இருந்து வந்தது. நாஜிகள், தங்கள் தனிமுறையில் நாஜி கட்சிச் சின்னங்களை அணிந்து கொள்ளலாமென்று முதலில் அரசாங்க அதிகாரிகள் கூறினார்கள். இன்று அந்த உத்திரவு ரத்து செய்யப் பட்டது.

எல்லைப்புற மாகாணச் சட்டசபை இன்று சில அடக்கு முறைச் சட்டங்களை ரத்து செய்து விடுவதாக ஒரு மசோதாவை நிறைவேற்றியிருக்கிறது.

4 1938ம் வருஷம் பிப்ரவரி மாதத்தோடு முடிகிற மூன்று மாதத்தில் எதியோப்பியாவில் இத்தாலிய தளகர்த்தர்கள் 29பேர் எதியோப்பியர்களுடன் போர் செய்ததன் காரணமாகக் கொல்லப் பட்டிருக்கிறார்கள்.

ஜப்பானை எந்த விதத்திலும் முறியடிக்க முடியாதென்பதை சீனா விரைவில் உணர்வது நல்லதென்று இன்று ஜப்பானிய பார்லிமெண்டில் அந்நிய நாட்டு மந்திரி கூறினார்.

5 பத்தாவது வகுப்பு வரையில் தாய் மொழியிலேயே பாடங்கள் கற்பிக்கப் படுதல் நல்லதென்று சென்னை அரசாங்கத்தார் ஓர் அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

தென்னாப்பிரிக்காவில் இந்தியா அரசாங்க ஏஜண்டாயிருந்த ஸர் சையத் ரிஸா அலி இன்று பம்பாய் வந்து சேர்ந்தார். இவர் ஸ்தானத்திற்கு பி. ராமராவ் ஐ. ஸி. எஸ். நியமிக்கப் பட்டார்.

ஸ்பெயின் யுத்தத்தில் அல்காளிஸ் என்ற ஊரில் இன்று கலகப் படையினர் ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகளைப் பொழிந்து ஏராளமான சேதத்தை உண்டு பண்ணினர்.

பம்பாயில் பத்து நாட்களுக்கு மேல் தங்கி விட்டு இன்று ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் கல்கத்தா பிரயாணமானார்.

மதுரை தேசபக்தரான ஸ்ரீஜார்ஜ் ஜோஸப் இன்று காலமானார்.

6 பஸிபிக் மகா சமுத்திரத்தின் மத்தியில் சிறிய தீவுகள் பல இருக்கின்றன. இவற்றில் காண்டன், எண்டர் பரி என்ற இரண்டு தீவுகள் தனக்குச் சொந்தமென்று அமெரிக்கா, தன் ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டது.

7 1934ம் வருஷத்திலிருந்து 1936ம் வருஷம் வரை எகிப்தின் பிரதம மந்திரியாயிருந்த நெஸ்ஸிம் பாஷா என்பவர் இறந்து விட்டார்.

வடமேற்கு எல்லைப் புற மாகாணத்தில் வசிக்கும் சில மலை ஜாதியார்களுக்கு வருஷா வருஷம் இந்தியா அரசாங்கத்தார் சில தொகைகளைக் கொடுத்துச் சமாதானத்தைக் காத்து வருகின்றனரல்லவா? 1936-37ம் வருஷத்தில் 688,197 ரூபாய் கொடுக்கப் பட்டதென்று இந்தியா சட்ட சபையில் இன்று அறிவிக்கப் பட்டது.

பிரயாணிகளையும் தபால்களையும் ஏற்றிச் சென்ற ஓர் பிரஞ்சு ஆகாய விமானம் இன்று பாடியா சமஸ்தானத்தில் விழுந்து எரிந்து விட்டது. மூன்று பிரயாணிகளும் இறந்து விட்டார்கள்.

8 புதுக்கோட்டைசமஸ்தான அட்மினிஸ்ட்ரேட்டராக ஸர் அலெக்ஸாண்டர் டாட்டன் ஹாமுக்குப் பதில் எச். ஆர். பார்ட்லெவல் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

கிரேட் பிரிட்டனுடைய ஆயுத பலத்தைப் பெருக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி இன்று பார்லிமெண்டில் பிரதம மந்திரி விஸ்தரித்துப் பேசினார்.

இத்தலியின் எதியோப்பிய ஆக்ரமிப்பை போலந்து அங்கீகரித்து விட்டது.

9 13-3-38ல் ஆஸ்திரியாவில் பொது ஜன வாக்கு எடுக்கப் படுமென்று டாக்டர் ஷூஸ்னிக் அறிவித்தார்.

10 இந்தியா சட்ட சபையினால் நிராகரிக்கப் பட்ட வரவு செலவு மசோதாவை கவர்னர்-ஜெனரல் 'சர்டிபை' செய்து மீண்டும் இந்தியா சட்டசபைக்கு அனுப்பினார். இன்று அது மறுபடியும் நிராகரிக்கப் பட்டது.

இந்தோர் சமஸ்தானத்தில் ஹரிஜனங்கள் சமஸ்தான ஆலயத்திற்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்தார்கள்.

இன்று ஸ்ரீபோஸ் கல்கத்தா வந்து சேர்ந்தார்.

கோடை கால வாசத்திற்கு மஹாபலேசுவரம் போவதில்லையென்று பம்பாய் அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கின்றனர்.

சௌடெம்பஸ் என்பவரைப் பிரதம மந்திரியாகக் கொண்ட பிரெஞ்சு மந்திரிச் சபை ராஜிநாமா செய்து விட்டது.

பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் இருக்க வேண்டிய உறவு சம்பந்தமாக இன்று லண்டனில் ஜர்மன் தூதரான ரிப்பெண்ட்ராப்பும், அந்நிய நாட்டு மந்திரியான லார்ட் ஹாலிபாக்ஸூம் கலந்து பேசினார்கள்.

மத்திய மாகாணச் சட்டசபையில் மதுவிலக்கு மசோதா நிறைவேற்றப்பட்டது.

11 ஸ்ரீமதி புன்னன் லூகோஸ் என்ற அம்மையார் திருவாங்கூர் சமஸ்தான வைத்திய இலாகா அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஆஸ்திரிய எல்லைக்குள் ஜெர்மன் துருப்புகள் பிரவேசித்தன. ஆஸ்திரியா, ஜெர்மானிய ஆதிக்கத்துக்குட் படுத்தப் பெற்றது. டாக்டர் ஷூஸ்னிக் ராஜிநாமா செய்து விட்டார்.

13 திரு. ப்ளம்மைப் பிரதம மந்திரியாகக் கொண்ட புதிய மந்திரிச் சபை இன்று பிரான்சில் அமைக்கப்பட்டது.

ஆஸ்திரியா, ஜெர்மனியுடன் இணைக்கப் பட்டு விட்டது என்ற சட்டம் இன்று அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

ஆஸ்திரியத் துருப்புகளனைத்தும் ஹிட்லருக்கு, சேனாதிபதி என்ற முறையில் வணக்கஞ் செலுத்த வேண்டுமென்று இன்று விளம்பரப் படுத்தப் பெற்றது.

14 சென்னை கடன் பளு நிவாரண சட்டத்தை கவர்னர்-ஜெனரல் அங்கீகரித்து விட்டார்.

ஹைதராபாத் சமஸ்தானத்திலுள்ள சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கத்தில் ஒரு பெரிய விபத்தேற்பட்டு 45 பேர் கொல்லப் பட்டனர்.

ஆஸ்திரியாவை ஜெர்மனி ஆக்ரமித்துக் கொண்டதன் சம்பந்தமாக ஹிட்லரை, முஸோலினி பாராட்டி ஒரு செய்தியனுப்பினார்.

ஆஸ்திரியாவில் ஜெர்மன் ஆதிக்கம் ஏற்பட்டதைப் பற்றி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கை யென்னவென்பதை விளக்கி இன்று பார்லிமெண்டில் பிரதம மந்திரி ஒரு பிரசங்கம் செய்தார்.

ஹிட்லர், இன்று வியன்னாவில் மிகக் கோலாகலத்துடன் பிரவேசித்தார்.

15 மகாத்மா காந்தி இன்று தமது பரிவாரங்களுடன் வார்தாவிலிருந்து கல்கத்தாவுக்குப் புறப்பட்டார்.

சீன-ஜப்பான் யுத்தத்தில், ஆயிரக் கணக்கான சீனர்கள் ஒரு முகமாக நின்று ஜப்பானியப் படையெடுப்பை எதிர்ப்பதாகச் சங்கற்பம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டத்தின் விளைவாக ஒரு முடிவு ஏற்பட்டு விடும் என்று சொல்லப் படுகிறது.

அஸ்ஸாம் மாகாணத்தின் சில பாகங்களில் வெள்ளச் சேதம்.

இந்தியாவுக்கும் பர்மாவுக்குமுள்ள தபால் விகிதத்தைக் குறைக்க முடியாதென்று பர்மா அரசாங்கத்தார் இந்தியா அரசாங்

கத்தாருக்குத் தெரிவித்து விட்டதாகத் தெரிகிறது.

16 மகாத்மா காந்தி இன்று கல்கத்தா வந்து சேர்ந்தார்.

17 ஜெர்மனி, ஆஸ்திரியாவை ஆக்ரமித்துக் கொண்டதன் சம்பந்தமாக எல்லா ஐரோப்பிய வல்லரசுகளும் ஒன்று சேர்ந்து நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சோவியத் அரசாங்கப் பிரதிநிதி இன்று பிரிட்டிஷ் அரசாங்கத்தாரிடம் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

18 இங்கிலாந்துக்கும் இத்தலிக்கும் இன்று வியாபார ஒப்பந்தம் கையெழுத்திடப் பெற்றது.

பிரேஜிலில் அரசாங்கத்திற்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்தார்கள் என்பதற்காக ஆயிரம் பசுஞ் சட்டைப் படையினர் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.

ஸ்பெயின் சண்டையில், பார்சிலோனா நகரத்தின் மீது இன்று பிராங்கோ படையினர் ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகளைப் பொழிந்தனர். பலத்த சேதம்.

ஆஸ்திரியாவைத் தான் கைப்பற்றிக் கொண்டதன் பயனாக லட்சக் கணக்கான ஆஸ்திரியர்களைத் தான் காப்பாற்றியதாக இன்று ஜெர்மன் பார்லிமெண்டில் ஹிட்லர் பேசினான்.

19 சீன-ஜப்பானிய யுத்தத்தில் டீன்ஸ்டீன்-பூகோ ரெயில்வே முனையில் பெரிய போராட்டம் நடத்த இருதரப்பினரும் ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள்.

21 ஸர் குலாம் ஹிதாயதுல்லாவைப் பிரதம மந்திரியாகக் கொண்ட சிந்து மாகாண மந்திரிச் சபை இன்று ராஜீநாமா செய்து விட்டது.

ஆஸ்திரியா இனி, தனி ஒரு நாடாக இல்லையாதலினால், அதனைச் சர்வதேச சங்கத்தின் அங்கத்தினர் பதவியிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று ஜெர்மனி, சர்வதேச சங்கத்திற்கு இன்று ஓர் அறிக்கை அனுப்பியிருக்கிறது.

கடற்படை அதிகரிப்பு மசோதாவை இன்று அமெரிக்க காங்கிரஸ் அங்கீகரித்திருக்கிறது.

22 இன்று வங்காள கவர்னர் லார்ட் பிராபோர்னும் மகாத்மா காந்தியும் சந்தித்து இரண்டு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

23 பாடியாலா மஹாராஜா இன்று காலமாகி விட்டார்.

25 லிதுவேனியா மந்திரிச் சபை இன்று ராஜீநாமா செய்து விட்டது.

பர்மா அரசாங்கத்தார், கோடை கால வாசத்திற்கு மேய்மியோவுக்குச் செல்வதில்லையென்று தீர்மானித்தனர்.

ஜெர்மனியில் புதிய தேர்தல் நடைபெறப் போவதை முன்னிட்டு இன்று ஹிட்லர் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார்.

27 உலகத்திலே பலமான ஆகாயப் படையுள்ளது ஜெர்மனி யென்று தளபதி கோயரிங் இன்று பேசினார்.

சீன-ஜப்பானிய யுத்தத்தில் சீனப் படைகள், ஹன்ச்வாங், டெயர்ச்வாங் என்ற இரண்டு ஊர்களையும் கைப்பற்றிக் கொண்டனர். ஜப்பானியப் படை பின்னடைந்து செல்கிறது.

ஸ்பெயின் யுத்தத்தில், பிராங்கோ படைகள் பல மைல் தூரம் முன்னேறிச் சென்று சில நகரங்களைக் கைப்பற்றிக் கொண்டன.

28 ஜெக்கோஸ்லோவேகியாவின் பிரதம மந்திரி இன்று பேசுகையில், ஜெக்கோஸ்லோவேகியாவிலுள்ள ஜெர்மானியர்களின் பாதுகாப்பு சம்பந்தமாக உள்ள எல்லாச் சட்டங்களையும் ஒன்று திரட்டி ஒரே சட்டமாக்க ஏற்பாடு செய்யப் போவதாகக் கூறினார்.

யுத்த தளவாடங்களை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்பதை முன்னிட்டு, தொழிற்சாலை முதலாளிகள் பலருடன் பிரிட்டிஷ் மந்திரி இன்று கலந்து பேசினார்,

29 கடைசிவரை நாங்கள் பணியப் போவதில்லையென்று இன்று ஸ்பெயின் குடியரசு அரசாங்கத்தின் பிரதம மந்திரி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

புதுக்கோட்டையின் பாலிய மன்னர், பிரான்சில் ஒரு மோட்டார் விபத்தில் காயமடைந்தார்.

மேமியோ கூர்க்கா டைரி.

தலைமை ஆபீஸ் :—மேமியோ

தேக ஆரோக்கியமே சிறந்த செல்வம்!

எப்பொழுதும் எங்களுடைய சுத்தமான புதிய வெண்ணெய், நெய், கிரீம், பால் முதலிய வற்றையே உபயோகிங்கள்.

எங்கள் பெயர் பிரசித்தமானதற்குக் காரணம், வாடிக்கைக்காரர்களுக்குப் பூரண திருப்தியைக் கொடுக்கிறோம் என்பதே.

நாங்கள் தயாரிப்பவை நூற்றுக்கு நூறு சுத்தமானவை; உத்திரவாதம்.

ஒரு முறை ஆர்டர் கொடுத்து பரீக்ஷியுங்கள்.

டசு வெண்ணெய் (டேபிள்)	பவுண்டு	1 0	பசுவின் நெய்	வீசை	4 0
,, (சமயல்)	,,	0 12	,, கிரீம்	பவுண்டு	1 0

எந்த நேரத்திலும் உங்கள் வீட்டில் எவ்வித செலவுமின்றி சப்ளை செய்யப்படும்.

MAYMYO GURKHA DAIRY,

Telephone No. **No 229, Lewis Street, Rangoon.**

171 மேமியோ கூர்க்கா டைரி,

டெலிபோன் நம்பர் பிராஞ்சு:-229, லூயில் வீதி, இரங்கூன்.

Head Office :–**Maymyo.**

கருத்து நிரம்பிய—ருசிகரமான கதைகள் நிறைந்தது

பல பாஷைகளிலும் உள்ள சிறந்த கதைகளைத் தமிழில் திரட்டித் தருவது

கதை படிப்பது வீண் பொழுது போக்கு என்று கருதும் அறிஞர்களும் விரும்பிப்படிக்கும் கதை நிறைந்திருப்பது

எது?

அதுதான்

'மணிக் கொடி'

மாதம் இருமுறை (இங்கிலீஷ் மாதம், 1, 15தேதிகளில்) வெளிவருவது

	வருஷச் சந்தா	தனிப்பிரதி
உள்நாடு	3—0—0	0—2—0
வெளிநாடு	4—8—0	0—4—0

மானேஜர்:— **'மணிக் கொடி' ஆபீஸ்,**

55, அரமனைக்காரத் தெரு, ஜி. டி. மதருஸ்.